

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மு.பெ. சாமிநாதன்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 03/05/2022

அணிந்துரை

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தமிழக மக்கள் நலனை தனது பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுகின்றது நமது முதல்வரின் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

"உழைப்பு உழைப்பு உழைப்பு - அதுதான் ஸ்டாலின்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழாரம் சூட்டியதற்கிணங்க, நித்தமும் தனது ஆற்றல்மிகு செயல்பாடுகளால் புத்தொளி ஏற்படுத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மகத்தான தலைமையின் கீழ் தமிழ்நாடு அரசு ஓராண்டில் ஆற்றியிருக்கும் திட்டங்களின் தொகுப்பே செய்தித்துறையின் சிறப்பு வெளியீடான "கடைக்கோடி தமிழரின் கனவுகளைத் தாங்கி... நிறைவான வளர்ச்சியில் நிலையானப் பயணம்" எனும் சாதனை மலர் தொகுப்பு.

வளமான தமிழ்நாடு என்பது வளரும் வாய்ப்புகள், மகிழும் விவசாயி, மக்களுக்கு குறையாத தண்ணீர், அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்தர மருத்துவம், எழில்மிகு மாநகரங்கள், உயர்தர ஊரகக் கட்டமைப்பு மற்றும் வாழ்க்கைத்தரம் என அனைவருக்கும் அனைத்துமான தமிழகம் என நமது முதல்வர் அவர்கள் ஏழு பெரும் இலக்குகளை வகுத்தளித்து, அவற்றை அடையும் பொருட்டு பொறுப்பேற்ற நாள் முதல் திறம்பட அரசை வழிநடத்தி, எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

ஓராண்டில் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் முத்தாய்ப்பான திட்டங்கள் துறைவாரியாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு வெளியீட்டினைத் தொகுத்தளிக்க தங்களது பங்களிப்பை நல்கிய செய்த்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிற அகமகிழ்வுடன் கூடிய தருணம் இது.

அனைவரும் படித்து, அறிந்து பயன்பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

3/5/2022
மு.பெ. சாமிநாதன்,
செய்தித்துறை அமைச்சர்.

மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

நயனுரை

நூற்றாண்டுகள் பேசும் சாதனைகள் - ஓராண்டில்!

நமது மாநிலத்தின் நலனுக்காக உழைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான அரசின், பெருமைக்கும் போற்றுதலுக்கும், பாராட்டுக்கும் உரித்தான ஓராண்டு ஆட்சியின் மாட்சியைச் செய்தித்துறையின் சிறப்பிதழாகக் "கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம்" எனும் தலைப்பில் இந்த மாமலரைத் தொகுத்தளிப்பதில், செய்தித் துறை செழித்த மகிழ்ச்சி கொள்கிறது.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

- என்ற திருக்குறள் நெறியில் மக்கள் வாழ்வை மேம்படுத்தும் பொருட்டுத் தன் சீர்மிகு செயற்பாடுகளால் தமிழக மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திட, அனைத்துத் தரப்பினரும் கொண்டாடும் ஒப்பற்ற நாயகனாக நமது முதலமைச்சர் திகழ்கின்றார்.

இந்தச் சிறப்பு வெளியீட்டினைத் தொகுத்தளிக்கத் தங்களது பங்களிப்பை அனைத்துத் துறையிலும் நல்கிய செய்தித் துறையின் அலுவலர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவரும் படித்து நற்பயன் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

4/5/22

(மகேசன் காசிராஜன்)

தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009. மின்னஞ்சல்: tdinfosec@tn.gov.in
தொலைபேசி (அலுவலகம்) : 044-25672887, நிகரி : 044-25672021

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்த்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் : சித்திரை – வைகாசி
மே 2022

கடைக்கோடித் தமிழரின்
கனவுகளைத் தாங்கி...
நிறைவான வளர்ச்சியில்
நிலையான பயணம்...

சிறப்பு வெளியீடு எண் : 52

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
அ. சுகுமார்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணைய தளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.



முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். - குறள்: 388

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

- திருக்குறள் கலைஞர் உரையிலிருந்து...

துறைதோறும்... துறைதோறும்...

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 57-62

2. மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்** அவர்கள் 63-66

3. மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. **கே.என்.நேரு** அவர்கள் 67-80

4. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **இ.பெரியசாமி** அவர்கள் 81-84

5. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. **க.பொன்முடி** அவர்கள் 85-88

6. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. **எ.வ.வேலு** அவர்கள் 89-92

7. மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்
திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள் 93-104

8. மாண்புமிகு வருவாய் மற்றும்
பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்** அவர்கள் 105-110

9. மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள் 111-116

10. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.இரகுபதி** அவர்கள் 117-118

11. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும்
நகர்ப்புர வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **சு.முத்துசாமி** அவர்கள் 119-122

12. மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. **கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள் 123-124

13. மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் 125-128

14. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் 129-132

15. மாண்புமிகு சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் 133-136

16. மாண்புமிகு மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் 137-140

17. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் 141-142

18. மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு. கா.ராமச்சந்திரன் அவர்கள் 143-144

19. மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்
திரு. அர.சக்கரபாணி அவர்கள் 145-146

20. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்
திரு. வி.செந்தில் பாலாஜி அவர்கள் 147-150

21. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்
திரு. ஆர்.காந்தி அவர்கள் 151-154

22. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் 155-164

23. மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
திரு. பி.மூர்த்தி அவர்கள் 165-168

24. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் 169-172

25. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் 173-176

26. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் 177-182

27. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. சா.மு.நாசர் அவர்கள் 183-184

28. மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் 185-188

29. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் 189-192

30. மாண்புமிகு சுற்றுச் சூழல் - காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் 193-196

31. மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. சி.வி.கணேசன் அவர்கள் 197-202

32. மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர்
திரு. த.மனோ தங்கராஜ் அவர்கள் 203-206

33. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
டாக்டர் மா.மதிவேந்தன் அவர்கள் 207-210

34. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் 211-214

அஞ்சுகச் செல்வர் பிறந்தநாள் அரசு விழா



"தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைக் கடலில் தூக்கி எறிந்தாலும், கட்டுமரமாகத்தான் மிதப்பேன். அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம்; கவிழ்ந்து விடமாட்டேன்!

தமிழர்களே! தமிழர்களே! என்னை நீங்கள் நெருப்பில் தூக்கிப் போட்டாலும், அதிலே நான் விறகாகத்தான் வீழ்வேன்; அடுப்பெரித்து நீங்கள் சமைத்துச் சாப்பிடலாம்!

தமிழர்களே! தமிழர்களே! நீங்கள் என்னைப் பாறையில் மோதினாலும், சிதறுத் தேங்காயாகத்தான் உடைவேன்! நீங்கள் என்னை எடுத்துத் தின்று மகிழலாம்!" என்ற வைர வரிகளுக்குச் சொந்தக்காரர் மட்டுமல்ல; தன்னுடைய வாழ்க்கையை அப்படியே வாழ்ந்து காட்டியவர்தான் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், அஞ்சுகச் செல்வர்; நம்மையெல்லாம் ஆளாக்கி விட்டு விட்டு, வங்கக் கடலோரம், தன் அன்பு அண்ணன் அருகே வாஞ்சை மிகு தென்றலின் தாலாட்டிலிருந்தபடி தமிழ்ச் சமுதாயத்தின் மகிழ்ச்சியைக் கண்ணுற்று வரும் கலைஞர் அவர்கள்.

நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் உண்டென்றால், அவர் ஒருவர்தான். 1957 முதல் 2016 வரை நடந்த தேர்தல்களில் எல்லாம் வென்றவர் அவர் மட்டும்தான். 1957இல் குளித்தலை;

1962இல் தஞ்சாவூர்; 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் சைதாப்பேட்டை; 1977, 1980 ஆகிய ஆண்டுகளில் அண்ணா நகர்; 1989, 1991 ஆகிய ஆண்டுகளில் துறைமுகம்; 1996,



2001, 2006 ஆகிய ஆண்டுகளில் சேப்பாக்கம்; 2011, 2016 ஆகிய ஆண்டுகளில் திருவாரூர் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றார். 13 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து, 60 ஆண்டுகள் இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.



1984 ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார்கள். தமிழ்நாட்டை ஐந்து முறை ஆண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 10.2.1969 அன்று முதன்முறையாக; 15.03.1971 அன்று இரண்டாவது முறையாக; 27.01.1989 அன்று மூன்றாவது முறையாக; 13.05.1996 அன்று நான்காவது முறையாக; 13.05.2006 அன்று ஐந்தாவது முறையாக என ஐந்து முறை இந்த நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 19 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஐந்து முறை ஆட்சியிலிருந்த காலத்தில் முதலமைச்சர் கலைஞர் உருவாக்கியதுதான் இன்று நாம் கண்ணுக்கு முன்னால் பார்க்கக்கூடிய நவீன தமிழகம். அன்னைத் தமிழ் மொழிக்குச் செம்மொழித் தகுதி! ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு உயர்வு! அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம்! மகளிருக்கும் சொத்திலே பங்குண்டு என்ற சட்டம்! பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களுக்கான சமூகநீதி உரிமைகள்! உழவர்களுக்கு இலவச மின்சாரம்! கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்ட 7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி! சென்னை தரமணியில் டைடல் பார்க்! சென்னைக்கு மெட்ரோ இரயில் திட்டம்! சிப்காட், சிட்கோ தொழில் வளாகங்கள் உருவாக்கம்! தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியது! நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள்!

அவசர ஆம்புலன்ஸ் 108 சேவை அறிமுகம்! இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்! சிற்றுந்துகளைக் கொண்டு வந்தது! உழவர் சந்தைகள் அமைத்தது! கைம்பெண் மறுமண நிதி உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி ஆகிய திட்டங்கள்! அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு! பெண்களுக்காக 33 விழுக்காடு இட ஒதுக்கீடு! இலவச எரிவாயு இணைப்புடன்கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குதல்! மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைத்தல்! அனைவரும் இணைந்து வாழ தந்தைப் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்! இஸ்லாமியச் சமூகத்தினருக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியது! உருது பேசும் இஸ்லாமியர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைத்தது! நுழைவுத் தேர்வு இரத்து! மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்கியது! சேலம் உருக்காலை, சேலம் புதிய இரயில்வே மண்டலம், நெம்மேலி கடல்நீரைக் குடிநீராக்கக்கூடிய திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆசியாவிலேயே பெரிய அண்ணா நூலகம் ஆகியவை உருவாக்கம்! மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு மறுவாழ்வு வழங்குதல்! ஏராளமான பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள், கலை–அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியது!

இப்படி நான் சொல்லத் தொடங்கினால் இன்று முழுவதும் என்னால் சொல்லிக் கொண்டேயிருக்க முடியும். இவைதான் தமிழகத்தின் அடையாளங்கள் என்றால், அந்த அடையாளங்களை எல்லாம் உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர்களோடு தலைவர்களாக வாழ்ந்த தலைவர்தான் கலைஞர் அவர்கள்! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத், பாவேந்தர் பாரதிதாசன், பெரியவர் பக்தவத்சலம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கவியரசு கண்ணதாசன், திருமுருக கிருபானந்தவாரியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தமிழகத்தில் மட்டுமல்ல; பரந்து விரிந்த இந்த இந்திய அரசியலுக்கே வழிகாட்டியாக இருந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவின் குடியரசுத் தலைவர்களாக இருந்த நீலம் சஞ்சீவிரெட்டி, கியானி ஜெயில்சிங், வி.வி.கிரி, சங்கர் தயாள் சர்மா, ஆர். வெங்கட்ராமன், கே.ஆர். நாராயணன், ஏ.பி.ஜெ. அப்துல்கலாம், பிரதிபா பாட்டீல் ஆகியோரால் பாராட்டப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவின் தலைமை அமைச்சர்களாக இருந்த அம்மையார் இந்திராகாந்தி, சரண்சிங், வி.பி.சிங், தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால், வாஜ்பாய், மன்மோகன்சிங் ஆகியோரால் போற்றப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத தலைவர் கலைஞருடைய மறைவிற்குத்தான் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முழுவதுமாக ஒத்திவைக்கப்பட்டன. இப்படி எல்லைகளைத் தாண்டி எல்லோரையும் வசப்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

படைப்பாளிகளோடு போட்டியிடும் படைப்பாளி; கவிஞர்களில் தலைசிறந்த கவிச்சக்கரவர்த்தி; திரையுலகத்தினரில் மூத்த கலையுலகவாதி; அரசியல் உலகில் தலைசிறந்த அரசியல் ஆளுமை; நிருவாகத் திறனில் நுணுக்கமான திறமைசாலி; மேடை ஏறினால் வெல்லும் சொல்லுக்கு அவர்தான் சொந்தக்காரர்; அவையில் ஏறினால் அவர்தான் வெற்றிச் சூத்திரம் அறிந்தவர் என எல்லாவற்றிலும் முதல்வராக வாழ்ந்த முதல்வர் அவர்.

'என்னிடம் இருந்து செங்கோலைப் பறிக்கலாம்; எழுதுகோலைப் பறிக்க முடியாது' என்று அவர் சொல்லிக்கொண்டார். செங்கோல் பறிக்கப்பட்டாலும், செங்கோலை வழிநடத்தும் எழுதுகோலை அவர்தான் வைத்திருந்தார். அரசு என்பது பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ள முடியாமல் போனாலும், அவரிடம்தான் இருந்தது. அரசும் அரசியலும் அவரை இயக்கின. அரசையும், அரசியலையும் அவரே இயக்கினார். இத்தகைய அரசு இயலின், அரசியலின் மாபெரும் தலைவருக்கு இந்த அரசு தனது வரலாற்றுக் கடமையைச் செய்ய நினைக்கிறது.

திருவாரூரில் முத்துவேலர் –அஞ்சுகம் அம்மையாருக்கு மகனாகக் கலைஞர் அவர்கள் பிறந்து உதித்த நாளான ஜூன் 3ஆம் நாள், அரசு விழாவாக இனி கொண்டாடப்படும் என்பதை இம்மாமன்றத்தில் நெஞ்சில் விம்மக்கூடிய மகிழ்ச்சியால், இதயத்தில் துடிக்கக்கூடிய எழுச்சியால், சிந்தை அணுக்களில் வெளிப்படும் நன்றி உணர்வால் நான் இதை இந்த அவைக்கு அறிவிக்கிறேன்.

வரும் ஜூன் 3 அன்று சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கம்பீரக் கலைஞரின் கலைமிகு சிலை நிறுவப்படும் என்பதையும் அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

'நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்று அடிக்கடிச் சொல்வார் தலைவர் கலைஞர் அவர்கள். நீண்ட தூரம் இந்த தமிழினத்துக்காக ஓடியவர் கலைஞர் அவர்கள். அவரை அதிக அதிக உயரத்தில் உயர்த்திப் பார்ப்பதைத் தனது கடமையாகக் கருதுகிறது தமிழ்நாடு அரசு. ●

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவிப்பு.

தமிழ்த் தொண்டாற்றும் நமது முதலமைச்சர்



மனித இனம் தோன்றிய இடமாகக் கருதப்படும் குமரிக்கண்டமே தமிழ்மொழியும் தோன்றிய நிலப்பகுதியாக அறியப்படுகிறது. இந்தியாவின் தென்பகுதியாகிய குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழ்மொழி, இந்திய நிலப்பரப்பையும் கடந்து உலகெங்கும் பேசப்படும் மொழியாக உள்ளது.

தமிழ்மொழி கருத்துப் பரிமாற்ற ஊடகம் என்ற அடிப்படைப் பண்பைக் கடந்து, ஓர் இனத்தின் வளர்ந்த செழிப்புற்ற ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது. காலத்தால் அழியாச் சிறப்புப் பெற்றுள்ள தமிழ்மொழி, காலத்தின் வளர்ச்சிக்கும் அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்களுக்கும் ஏற்ப தன்னை தகவமைத்துக்கொண்டு பன்மைத்துவம் கொண்ட, தனித்தமிழாகவே வளர்ந்து வருகிறது.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற பாரதியின் வாக்கிற்கு ஏற்ப, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற உணர்வோடு "வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற உணர்வை ஏற்படுத்திய தமிழினத் தலைவர் அவர்களின் வழியில் தமிழ்மொழியின் பெருமையையும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், அயல்நாடுகளிலும், வெளிமாநிலங்களிலும் வாழும் தமிழர்களிடையே தமிழ்ப் பண்பாட்டினைப் பரவலாக்கும் வகையில் புதிய முயற்சிகளையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

- தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் முகத்தான், "தகைசால் தமிழர்" என்ற புதிய விருது.
- ஜெர்மனியில் அமைந்துள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தொடர்ந்து, தொய்வின்றி இயங்க ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி.



- ‘‘எங்கும் தமிழ், எதிலும் தமிழ்’’ எனும் கொள்கையில் திளைத்த தமிழ் அறிந்த பெருமக்கள் மற்றும் பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க, தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய ஏதுவாக 12 இறைவன் போற்றிப் பாடல் நூல்கள் வெளியீடு.
- சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்குப் புத்துயிர்.
- தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒருங்குறி எழுத்துரு அனைத்து அரசுத் துறைகளிலும் பயன்பாடு.
- உலகப்புகழ் பெற்ற செவ்வியல் இலக்கியப் படைப்புகள் தமிழில் மொழிபெயர்ப்பு.
- பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாட்டை, உலகம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், அகழ்வாராய்ச்சிப் பணிக்காகவும், ஆழ்கடல் அகழாய்வுக்காகவும் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு.
- திருநெல்வேலியில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு அருங்காட்சியகம்.
- பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகள்.
- மகாகவி பாரதியின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள் மகாகவி நாள்.
- குறள் அமிர்தம் ‘‘திருக்குறள் தமிழிசைப் பாடல்கள்’’ மற்றும் ‘‘திருக்குறள் வாழ்த்துப்பா’’ குறுந்தகடு வெளியீடு.
- ‘‘இ–முன்னேற்றம்’’, ‘‘தகவல் தொழில்நுட்ப நண்பன்’’ ஆகிய வலைத்தளங்கள் மற்றும் ‘‘கீழடி– தமிழிணைய விசைப்பலகை’’, ‘‘தமிழி– தமிழிணைய ஒருங்குறி மாற்றி’’ ஆகிய இரு தமிழ் மென்பொருள்கள் அறிமுகம்.
- கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களின் 150ஆவது ஆண்டு பிறந்தநாள் கொண்டாட்டத்தின் முன்னெடுப்பாக, வ.உ.சி. பன்னூல் திரட்டு மற்றும் வ.உ.சி. திருக்குறள் உரை ஆகிய நூல்கள் வெளியீடு.



- தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவிகிதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமையால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடத்தாள் தகுதித் தேர்வு கட்டாயம்.

- தமிழ் அறிஞர்களான சிலம்பொலி சு.செல்லப்பன், முனைவர் தொ.பரமசிவன், புலவர் இளங்குமரனார், திரு.முருகேச பாகவதர், திரு. சங்கரவள்ளி நாயகம் மற்றும் புலவர் செ.இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கம்.

- ''மகாகவி பாரதியார்'' மூத்த ஆய்வாளர்கள் இருவருக்கும், மறைந்த நான்கு மூத்த ஆய்வாளர்களின் குடும்பத்தாருக்கும் ''பாரதி நினைவு நூற்றாண்டு விருது'' மற்றும் விருதுத்தொகையான தலா ரூ.3 இலட்சம்.

- திருக்குறளின் 1,330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்து, குறள் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்ட 219 மாணாக்கர்களுக்குப் பரிசு.

- நவிமும்பை தமிழ்ச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட தமிழ்நாடு அரசின் நிதியுதவியாக ரூ.25 இலட்சம்.

- தமிழ்த்தாய் வாழ்த்து – தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிப்பு.

- பாடல் பாடப்படும்போது அனைவரும் எழுந்து நிற்க அரசாணை வெளியீடு.

- 2010 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்.

- ''கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும்'' என்ற இணையவழிப் பன்னாட்டு மாநாட்டின்



வாயிலாகப் பெறப்பட்ட சிறந்த அய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுப் பன்னாட்டுத்தரப் புத்தக எண்ணுடன்கூடிய இரு தொகுதிகளாக வெளியீடு.

- ❖ "குறளோவியம்" என்ற தலைப்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் 365 ஓவியங்கள் தெரிவுசெய்யப்பட்டு, தினசரி மேசை நாட்காட்டியாக காலப்பேழை புத்தகமாக வெளியீடு.

என காலத்தால் அழியா சிறப்புப் பெற்றுள்ள தமிழ்மொழிக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரும்பணியாற்றி வருகிறார்.

> எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்ற பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு நடைபோடும் நமது அரசு, தமிழை ஆட்சிமொழியாகவும் வழக்காடு மொழியாகவும் மேலும் உயர்த்திட தொடர்ந்து குரல் கொடுக்கும்.
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

செம்மொழி காக்கும் நமது முதலமைச்சர்



தமிழர்களின் நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியை உலகின் மூத்த மொழியாம், சொல் வளமும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ்மொழிக்குப் பெற்றுத்தந்தவர் **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள்.

தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுவுநிலைமை, தாய்மைத்தன்மை, மொழிக்கோட்பாடு, இலக்கிய வளம், உயர் சிந்தனை, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு ஆகிய தகுதிகள் மட்டுமின்றி மேன்மையான தகுதிகளையும் பெற்றுள்ள தமிழ்மொழி செம்மொழியே என முதன்முதலில் குரல் கொடுத்தவர் தமிழறிஞர் நாராயண சாஸ்திரி எனும் பரிதிமாற்கலைஞர் அவர்கள். அயர்லாந்து நாட்டில் "ஷெப்பர்ட்ஸ் காலனி" என்ற இடத்தில் பிறந்து, தமிழ்மொழி பற்று காரணமாக நெல்லை மாவட்டம், இடையான்குடி என்ற ஊரில் வாழ்ந்த அறிஞர் இராபர்ட் கால்டுவெல், சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம், கரந்தைத்தமிழ்ச்சங்கம், தலைநகர்த்தமிழ்ச் சங்கங்கள் போன்ற அமைப்புகளும்; தமிழக பல்கலைக்கழகங்கள், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் உள்ளிட்ட தமிழறிஞர்களும் வெளி மாநில, வெளிநாட்டு அறிஞர்களும் தொடர்ந்து செம்மொழிக்காகக் குரல் கொடுத்தனர்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாகத் தமிழகத்தில் ஓங்கி ஒலித்து வந்த அந்தக் குரல்; காட்டில் காய்ந்த நிலவாய், கடலில் பெய்த மழையாய் கவனிப்பாரற்றுப் போயிற்று. ஆனால், அரசியல் வானில் துருவநட்சத்திரம் போன்று, திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியில் தமிழைச் செம்மொழியெனப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, 12.10.2004 அன்று தமிழ், செம்மொழி என்ற பிரகடன அறிவிக்கை மத்திய அரசால் வெளியிடப்பட்டது.



“உலகத் தமிழ்ச் செம்மொழி” என்பதில் உள்ள மூன்று சொற்களும் பொருள் பொதிந்தவை மட்டுமல்ல; பொருத்தமானவையும் ஆகும். தமிழ் உலகமொழி மட்டுமல்ல; உலக மொழிகளுக்கெல்லாம் தாய் போன்றது. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், ஞாலமுதல்மொழி தமிழே என்று நிறுவிக் காட்டியிருக்கிறார்.

மூலத் தாய்மொழிச் சொற்கள் உலக மொழிகளில், சொல் வடிவில், உருத்திரிந்து, பொருள் அளவில் உருத்திரியாமல் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக உலக மொழிகளில் உள்ள அம்மா, அப்பா எனும் உறவுப் பெயர்கள்; நான், நீ, அவன் எனும் மூவிடப் பெயர்கள், நீர், நெருப்பு, காற்று போன்ற இயற்கைப் பெயர்கள் தமிழோடு மிகவும் தொடர்பு கொண்டவையாக உள்ளன. தமிழோடு தொடர்பில்லாத அடிப்படைச் சொற்கள் எவையும், உலகமொழிகளில் நெருக்கம் இல்லாததால் தமிழே உலக முதல் தாய்மொழி எனும் தகுதியைப் பெறுகிறது.

உலக மொழிகளில் மிகத் தொன்மைக் காலம் முதலே இயல், இசை, கூத்து என்னும் முத்தமிழ்; வளர்ச்சியை எய்தியதால், தமிழ் நிலையான தன்மையை அடைந்தது. இலக்கியம் தழுவிய கலை வளர்ச்சி, தமிழுக்கு நிலைத்து நிற்கும் ஆற்றலைத் தந்திருப்பதால், தமிழைத் தாய்மொழி என அறியலாம்.

தாய்மொழியாம் தமிழ் செம்மொழிக்குக் கோவையில் 2010ஆம் ஆண்டு உலக செம்மொழி மாநாடு நடத்தி பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். செம்மொழித் தமிழுக்கெனத் தனித்தன்மையுடன் கூடிய ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவினை நிறைவேற்ற, ஒன்றிய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில் 2006ஆம் ஆண்டு இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனத்தின் ஒரு அங்கமாக நிறுவப்பட்ட செம்மொழி நிறுவனம், 2008ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் எனத் தன்னாட்சி பெற்ற நிறுவனமாகச் சென்னையில் அமையப்பெற்றது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம்



வழங்கி வருகிறது. செம்மொழித் தமிழின் தொன்மையையும், தனித் தன்மையையும், அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கொண்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007ஆம் ஆண்டு சென்னைக்கு அருகில் உள்ள பெரும்பாக்கத்தில் 16.86 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசின் சார்பில் செம்மொழி நிறுவனத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்நிலத்தில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனக் கட்டடம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக்குழுத் தலைவரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் 12.01.2022 அன்று காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

பெரும்பாக்கத்தில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 07.01.2022 அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில், செம்மொழி நிறுவனத்தின் தொல்காப்பிய ஆய்வு, தெய்வச்சிலையார் உரைநெறி, ஐங்குறுநூறு குறிஞ்சி, ஐங்குறுநூறு பாலை, வாய்மொழி வாய்ப்பாடுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், புதிய நோக்கில் களப்பிரர்வரலாறு, Dravidian Comparative Grammar-II, A Historical Grammar of Tamil ஆகிய எட்டு புதிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முக்கியத்துவம் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 24.07.2008 அன்று தம் சொந்த நிதி ஒரு கோடி ரூபாயை வைப்புத் தொகையாக அளித்து 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை'யை நிறுவினார்.

இந்த அறக்கட்டளையின் மூலமாக ஆண்டுதோறும் 'கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' தமிழாய்வுக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ள ஆய்வாளருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது இந்தியாவிலேயே மிக உயரிய வகையில் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், வெண்கலத்தாலான கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச்சிலையும் அடங்கியதாகும்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிறுவனத்தின் 8ஆவது ஆட்சிக் குழுக் கூட்டத்தில் 2010ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளுக்குரிய கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளுக்கான விருதாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டு, 22.01.2022 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளை விருதாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் சோழிங்கநல்லூர் இணைப்புச்சாலை இனி "செம்மொழிச்சாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.

செம்மொழிச் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாகத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் 'செம்மொழித் தமிழ் இருக்கைகள்' அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனச் செம்மொழி காக்கும் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்.

> **தமிழுக்குச் செம்மொழித் தகுதி ஏற்பட வேண்டும் என்பது தமிழறிஞர்களின் நூற்றாண்டுக் கனவு. அந்தக் கனவை நிறைவேற்றிய தலைவர்தான் நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

அயலகத் தமிழர்களையும் அரவணைக்கும் நமது முதலமைச்சர்



திரை கடல் ஓடியும் திரவியம் தேடு

– என்றார் ஔவை பாட்டி

வணிகம் செய்வதற்காக, வாழ்வதற்காக, வேலைகளைத் தேடி, புதிய இடங்களை அறிவதற்காக, கடல் கடந்து சென்றான் பழந்தமிழன். ஒரு நிலத்தில், ஒரு நாட்டில் மட்டுமே வாழ்ந்த இனம் தமிழினம் அல்ல. 30க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். உலகளாவிய இனம் ஒன்று உண்டென்றால் அது தமிழினம்தான்.

இன்றைக்கு நவீனத் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. இவை எதுவும் இல்லாத காலத்தில் தன்னம்பிக்கையும் தணியாத தாகமும் கொண்ட தமிழர்கள் எல்லா நாடுகளுக்கும் சென்றார்கள். பழம்பெருமை மட்டுமே பேசிக்கொண்டு உள்ளூரிலேயே இருந்துவிடாமல் தனது திறமையை உலகம் மதிக்கும் என்ற நம்பிக்கையோடு சென்றார்கள்.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்குத் தாய்வீடு தமிழ்நாடுதான்.

ஒரு தமிழன் இன்னொரு தமிழனைச் சந்திக்கும்போது தமிழைச் சொல்லி வாழ்த்து தெரிவிக்க வேண்டும் அப்படிச் செய்தால்தான், மற்ற வேறுபாடுகள் எதற்கும் முக்கியத்துவம் தரக் கூடாது என்ற எண்ணம் தோன்றும் என்றார் இலக்கிய மேதை மு.வரதராசனார் அவர்கள்.

“வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்” என்பதைத் தமிழ் மண்ணில் விதைத்து மொழிப்பற்றும், “தமிழா இன உணர்வு கொள்” என்று முழங்கி இனமான உணர்வும் ஊட்டிய இயக்கம்தான் திராவிட இயக்கம். மொழிக்காகப் போராடிய, வாதாடிய இயக்கம் மட்டுமல்ல, மொழிகாக்கத் தனது தேகத்தைத் தீக்குத் தின்னத் தந்த தீரர்களின் இயக்கம்.

தமிழ்நாட்டில் கழக ஆட்சி அமையும்போதெல்லாம், அது இங்குள்ள தமிழர்களின் ஆட்சியாக மட்டுமில்லாமல், உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் அனைத்து தமிழ் மக்களின் அரசாக அமைகிறது.

தமிழ், தமிழர் என்ற உணர்வோடு நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளிநாடுவாழ் தமிழர்கள் மீது அன்பு செலுத்துவது மட்டுமல்ல, அரவணைப்பதும், பாதுகாப்பதும், தாய்த்தமிழ்நாட்டின் கடமை என்பதால் பல்வேறு நாட்டில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், உதவிகள் செய்யவும் புலம் பெயர் தமிழர் நலவாரியம் என்ற புதிய வாரியம் தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்தார்.

மேலும், அரசு மற்றும் புலம் பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் 13 பேரைக்கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும் எனவும், ரூ.5 கோடி அரசு முன்பணத்தைக்கொண்டு புலம் பெயர் தமிழர் நல நிதி உருவாக்கப்படும் எனவும், மூலதனச் செலவினமாக ரூ.1.40 கோடி மற்றும் தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவித்தார்.

- ❖ வெளிநாடு வாழ் தமிழர் குறித்த தரவுத் தளம்.
- ❖ விபத்து, ஆயுள் காப்பீட்டுத் திட்டம், மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மற்றும் அடையாள அட்டை.
- ❖ பணியின்போது இறக்க நேரிட்டால், குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை மற்றும் திருமண உதவித்தொகை.
- ❖ கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காகப் புலம் பெயரும்போது பயணப் புத்தாக்கப் பயிற்சி.
- ❖ ஆலோசனைகளைப் பெறக் கட்டணமில்லாத் தொலைப்பேசி வசதி மற்றும் வலைதளம், கைப்பேசி செயலி.
- ❖ தனியாகச் சட்ட உதவி மையம்.
- ❖ கோவிட்–19 காரணமாகத் தாயகம் திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக ரூ.2.5 இலட்சம் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்க ரூ.6 கோடி ஒதுக்கீடு.
- ❖ வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்யத் தேவையான உதவிகள்.
- ❖ சொந்த ஊருக்கு நன்மைகள் செய்ய ‘‘எனது கிராமம்’’ திட்டம்.
- ❖ தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாகத் தமிழ் கற்க வசதி.
- ❖ அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, கலை இலக்கிய பண்பாடு பரிமாற்றங்களுக்காக ரூ. 4 கோடி ஒதுக்கீடு.





❖ ஜனவரி 12ஆம் நாள் புலம் பெயர்ந்த உலகத் தமிழர் நாளாகக் கொண்டாடப்படும் என அறிவித்தார்.

வெளிநாடு வாழ் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மறுவாழ்வுத்துறையில், வெளிநாடு வாழ் தமிழர் நலனுக்கென தனியாக ஒரு நிருவாகப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, மறுவாழ்வுத் துறையானது மறுவாழ்வு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நல ஆணையரகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்த ஆணையரகம், பல்வேறு இந்தியத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து வெளிநாடுகளில் இன்னலுக்கு உள்ளாகும் தமிழர்களை தாயகம் மீட்டு வருதல், இறந்த தமிழர்களின் உடல்களைத் தாயகம் கொண்டு வருதல், இழப்பீடு பெற்றுத் தருதல் போன்ற இனங்களில் வெளிநாடு வாழ் தமிழர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கிறது.

ஆணையரகம் சார்பில் 12.01.2022 அன்று நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக உரையாற்றும்போது, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்லாயிரம் மைல் கடந்தும் இன்று நாம் ஒன்றாகக் கூடி இருக்கிறோம் என்றால் – தமிழன் என்ற உணர்வோடு நாம் கூடி இருக்கிறோம். நம்மை நாடுகள் பிரிக்கிறது நிலங்கள் பிரிக்கிறது. ஆனாலும் மொழி இணைக்கிறது. அந்த வல்லமை தமிழ்மொழிக்கு உண்டு.



“தமிழால் இணைவோம்” என்ற அடிப்படையில் நாம் ஒன்று சேர்ந்துள்ளோம்.

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் மற்றும் தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணுங்கள். எவ்வளவு உயரமாக மரம் வளர்ந்தாலும், அது தன்னுடைய வேரை விட்டு விடுவதில்லை என்பதைப் போல, தமிழை, தமிழ்நாட்டை அரவணைத்து வாழுங்கள். தமிழர்களுக்கு எல்லாமுமாய் இந்த அரசு இருப்பதைப் போலவே, அயலகத் தமிழ் மக்களுக்கு எல்லாமுமாக இந்த அரசு தொடர்ந்து இருக்கும் என்றார்.

> “எங்கே தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களுக்கு தமிழ்நாடுதான் தாய் வீடு. அவர்கள் மீது அன்பு செலுத்துவது மட்டுமல்ல, அரவணைப்பதும் பாதுகாப்பதும் தாய்த் தமிழ்நாட்டின் கடமையாகும்.”
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

இலங்கைத் தமிழர் நலம் பேணும் நமது முதலமைச்சர்



"**க**டல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால்,

கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்"

என்றார் **பேரறிஞர் பெருந்தகை அண்ணா** அவர்கள்.

கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் துயர் துடைக்க, தமிழர்களின் நலனில் எப்போதும் தனி அக்கறை கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 7 ஆயிரத்து 420 புதிய வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் செலவில் மேம்படுத்தினார்.

மேலும், "இலங்கை அகதிகள் முகாமில் உள்ள அடிப்படைத் தேவைகள்" குறித்த ஒரு ஆய்வினை நடத்தி, இலங்கை அகதிகள் முகாம்களில் இருக்கும் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான 14 அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிக் கொடுத்தவர் **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள்.

இலங்கை நாட்டில் வாழும் தமிழ் மக்கள் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக் கலவரத்திற்குப் பிறகு, கடல் கடந்து தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கினார்கள். இதுவரை அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளவர்களில், 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சார்ந்த 58 ஆயிரத்து 547 பேர், 29 மாவட்டங்களில் அமைந்துள்ள 106 முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், 13 ஆயிரத்து 540 குடும்பங்களைச் சார்ந்த 34 ஆயிரத்து 122 நபர்கள் காவல் நிலையங்களில் பதிவுசெய்து, முகாமிற்கு வெளியேயும் வசித்து வருகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், முகாம்களில் முறையான

அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துவரக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தரப்படும் எனச் சட்டமன்றப் பேரவையில் 27.08.2021 அன்று அறிவித்தார்.

- ❖ 231 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் 7 ஆயிரத்து 469 வீடுகள்.
- ❖ முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 30 கோடி ரூபாய் நிதி.
- ❖ இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய் நிதி.
- ❖ பிள்ளைகளின் கல்வி மேம்பட, பொறியியல் படிப்பு பயிலுவதற்கு, மதிப்பெண் அடிப்படையில், முதல் 50 மாணவர்கள் வேளாண், வேளாண் பொறியியல் பட்டப் படிப்பிற்கு முதல் 5 மாணவர்கள் முதுநிலைப் பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து முகாம்வாழ் மாணவர்களுக்கும் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்கும் வகையில் ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு.
- ❖ முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் பிள்ளைகள், அரசு மற்றும் பிற கல்லூரிகளில் கலை, அறிவியல் மற்றும் பட்டயம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் படிப்பதற்கு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை பாலிடெக்னிக் படிப்பிற்கு 10 ஆயிரம் ரூபாய்; இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பிற்கு 12 ஆயிரம் ரூபாய்; இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 20 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்க 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு.
- ❖ ஐந்தாயிரம் முகாம்வாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு.
- ❖ வாழ்வாதாரத்தை மேம்படுத்திட முகாம்களில் உள்ள 300 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதியாக, தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய், கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 சுயஉதவிக் குழுக்களுக்கு, மேலும் ரூபாய் 75 ஆயிரம்.
- ❖ மாதந்தோறும் வாழ்வாதாரத்திற்காகப் பணக்கொடை. குடும்பத் தலைவருக்கு 1,500 ரூபாய், இதர பெரியவர்களுக்கு 1,000 ரூபாய் மற்றும் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 500 ரூபாய் என்று உயர்த்தி வழங்க ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூபாய் 21 கோடியே 49 இலட்சம்.
- ❖ ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கக் கூடுதலாக 7 கோடி ரூபாய். குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளைக்கு மானியத் தொகை வழங்க 3 கோடியே 80 இலட்சம் ரூபாய்.
- ❖ முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்க ரூபாய் 19 இலட்சம்.
- ❖ கோ–ஆப்டெக்ஸ் மூலம் ஒவ்வொரு ஆண்டும் இலவச ஆடைகளும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இலவசப் போர்வைகளும் வழங்க ஆண்டொன்றுக்கு ரூபாய் 3 கோடி.
- ❖ 8 வகையான சமையல் பாத்திரங்கள் வழங்க ஒரு கோடியே 97 இலட்சம் ரூபாய்.
- ❖ முகாம்களில் வசிக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுடைய, நீண்டகாலத் தீர்வினைக் கண்டறிய ஏதுவாக மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்



நலத்துறை அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர், அரசு உயர் அலுவலர்கள் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுடைய பிரதிநிதி, வெளிப்பதிவில் வசிக்கக்கூடிய அகதிகளுக்கான பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழு.

ஆகிய திட்டங்களை அறிவித்தார்.

அதனைச் செயல்படுத்தும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 02.11.2021 அன்று வேலூர் மாவட்டம், மேல்மொணவூரில் நடைபெற்ற அரசு விழாவில், புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கு ரூ.142.16 கோடி மதிப்பீட்டில் 3,510 புதிய குடியிருப்புகள் மற்றும் ரூ.30 கோடி மதிப்பீட்டில் 78 முகாம்களில் குடிநீர், மின்சாரம், சாலை வசதி போன்ற அடிப்படை திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். 225 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

மேலும், மேல்மொணவூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமினை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வுசெய்து, அங்குள்ள இலங்கைத் தமிழர்களிடம் வசதிகள் குறித்துக் கேட்டறிந்ததோடு, முகாமில் உள்ள அங்கன்வாடி மையத்தைப் பார்வையிட்டு, ஆய்வுசெய்து, குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழகத்திலுள்ள மறுவாழ்வு முகாம்களில் வாழும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்காக 109 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.

மேலும், முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு கோவிட் நிவாரண உதவித் தொகை ரூ.4,000 மற்றும் 14 விதமான மளிகைப் பொருட்கள் அடங்கிய பை.

முகாமிற்கு வெளியே வாழும் 13,443 குடும்பங்களைச் சேர்ந்த 33,748 இலங்கைத் தமிழர்களும் முதலமைச்சரின் விரிவான காப்பிட்டுத் திட்டம், ரூ.4,000 கோவிட் நிவாரண நிதி வழங்கும் திட்டத்தில் பயன்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள தீவிர பொருளாதார நெருக்கடியினால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, கைக்குழந்தை உட்பட கடல் மார்க்கமாக தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமிழக முகாம்களில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போன்று தற்காலிக புகலிடம்



வழங்குவதற்கான சிறப்பு அனுமதி அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி 01.04.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

07.04.2022 அன்று ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருடனான தமது தொலைபேசி உரையாடலின்போது, பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கைத் தமிழர்களுக்கு பொருட்களை அனுப்புவதற்கு தமிழ்நாடு அரசு உறுதியோடு உள்ளது என்றும், இலங்கையில் நிலவும் இத்தகைய மோசமான நிலைமையைக் கருத்தில் கொண்டு விரைவில் பொருட்களை அனுப்புவதற்கான வசதியைச் செய்து தருமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுவரை 13 குடும்பங்களைச் சார்ந்த 17 குழந்தைகள் உட்பட 39 இலங்கைத் தமிழர்கள் கடல் வழியாக தமிழ்நாடு வந்துள்ளனர். அவர்கள் அனைவரும் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அவர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் உணவும் வழங்கப்பட்டு வருகிறது. மண்டபம் முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக 15.04.2022 அன்று கலந்துரையாடி அவர்களது அத்தியாவசிய தேவை மற்றும் நலன் குறித்து விசாரித்தார்.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்யும் விதமாக இலங்கை அகதிகள் முகாம் என்பதை "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்து சிறப்பானத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

> **"இங்குள்ள தமிழர்களை மட்டுமல்ல,**
> **கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும்**
> **காக்கக் கூடிய அரசுதான் இந்த அரசு"**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

பண்பாட்டு அடையாளங்களைத் தேடும் நமது முதலமைச்சர்



மா மன்னர்கள் பலர் இந்தியாவைத் தங்கள் குடையின்கீழ் கொண்டுவந்து ஆண்டபோதும், தனிக்குடையின்கீழ் ஆளுகை செலுத்திய மண் தமிழ் மண். பண்டைய நாகரிகம் கொண்டது தமிழ் மண் என்பதற்குப் பல தொல்லியல் சான்றுகள் இருக்கின்றன. தமிழன் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் அறிவியல்பூர்வமாக நிறுவ வேண்டுமானால் முறையான அகழாய்வுகள் அவசியமாகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில் தொல்லியல்–ஆழ்கடல் கள ஆய்வை விரிவாக மேற்கொள்ளப் பெருமுயற்சி எடுத்தார். 1990ஆம் ஆண்டு கடல்சார் ஆய்வுக்குப் பெருந்திட்டம் தீட்டினார். கடலில் மூழ்கிய பூம்புகார் நகரத்தினைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் அகழாய்வில் சில கட்டுமான பகுதிகள் கண்டறியப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், கீழடி அகழ்வாராய்ச்சி உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் பெற்றிருக்கிறது. தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக் கொடுக்கும் கீழடியில் நடைபெற்று வந்த அகழ்வாராய்ச்சியை ஒன்றிய அரசு பாதியிலேயே கைவிட்டபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதற்கு எதிராக, தனது கடுமையான கண்டனத்தைப் பதிவுசெய்தார்.

கரிமப் பகுப்பாய்வு (Carbon Dating) முடிவுகளின்படி, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாகச் சங்ககாலத் தமிழர்கள் விளங்கினர். அந்தவகையில், கீழடி என்ற ஒற்றைச் சொல் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தது.



தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் தற்போது அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அப்போது கிடைத்த பல்வேறு பழமைவாய்ந்த பொருட்கள் குறித்து, அகில இந்திய அளவில் புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை கலந்தாலோசனை மேற்கொண்டது.

கீழடியில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வுசெய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசு மசும்தார், இந்த வெள்ளிமுத்திரைக் காசு, கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு, அதாவது, மௌரியப் பேரரசர் அசோகர் காலத்திற்கும் முற்பட்டது எனத் தெரிவித்தார்.

கரிமப் பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துக்களின் காலம், கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும், கீழடி நாகரிகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனத் தெரியவந்துள்ளது.

முந்தைய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கரிமப் பகுப்பாய்வுகளின் காலக் கணக்கீட்டு முடிவுகளின்படி, கி.மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே, கொற்கை ஒரு துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது என்பது ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ளது.

பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், அகழ்வாராய்ச்சிப் பணிக்காகவும், ஆழ்கடல் அகழாய்வுக்காகவும் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம், தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்தியத் துணைக்கண்டமெங்கும், கடல்கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும், தமிழ்நாடு தொல்லியல் துறை ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் திட்டம் போன்ற

பல்வேறு சிறப்புமிக்கத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

கீழடி நாகரிகத்தின் தொன்மையையும், பண்பாட்டினையும் முழுமையாக உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், கீழடி அகழாய்வுத் தளத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.10.2021 அன்று, நேரில் சென்று, அங்கு வைக்கப்பட்டிருந்த கீழடி அகழாய்வுகள் விளக்கக் காட்சியினைப் பார்வையிட்டார்.

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் வரலாற்றுக்காலம் வரையிலான தொல்லியல் இடங்களில் அகழாய்வு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பண்டையத் தமிழ்ச் சமூகத்தின் தொன்மை, பண்பாடு மற்றும் விழுமியங்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 2022ஆம் ஆண்டில் ஏழு இடங்களில் அகழாய்வுகள் செய்யப்படவுள்ளன.

- கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் (கொந்தகை. அகரம் மணலூர்), சிவகங்கை மாவட்டம் – எட்டாம் கட்டம்,
- சிவகளை, தூத்துக்குடி மாவட்டம் – மூன்றாம் கட்டம்,
- கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம் – இரண்டாம் கட்டம்,
- மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் – இரண்டாம் கட்டம்,
- வெம்பக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் – முதல் கட்டம்,
- துலுக்கர்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – முதல் கட்டம்,
- பெரும்பாலை, தருமபுரி மாவட்டம் – முதல் கட்டம்,

அகழாய்வுப் பணிகள் வரும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி செப்டம்பர் மாதம் இறுதி வரை நடைபெறவுள்ளது. ரூ.5 கோடி நிதியில் அகழாய்வுகள், கள ஆய்வுகள் மற்றும் சங்க காலக் கொற்கைத்





துறைமுகத்தினை அடையாளம் காண முன்களப் புல ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.01.2022 அன்று அறிவித்தார்.

அகழாய்வுப் பணிகளின் தொடக்கமாக சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம், மணலூர் மற்றும் அரியலூர் மாவட்டம், கங்கைகொண்டசோழபுரம் – மாளிகைமேடு ஆகிய இரண்டு அகழாய்வுப் பணிகளைக் காணொலிக் காட்சி வாயிலாக 11.02.2022 அன்று தொடங்கிவைத்தார்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகிற்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு இனி, தமிழ் நிலப்பரப்பிலிருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே நமது அரசினுடைய தலையாயக் கடமை என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முனைப்புடன் செயலாற்றி வருகின்றார்.

> **இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே நமது அரசினுடைய தலையாயக் கடமை.**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழர்களின் உதவும் கரங்கள் நமது முதலமைச்சர்



உலகெங்கும் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், தொழில் வளர்ச்சியிலும் பட்டொளி வீசி தங்களது தனித்திறமையைத் தடம்பதித்து வருபவர்கள் தமிழர்கள்.

அவ்வகையில், அழியாச் செல்வமான கல்விச் செல்வத்தைக் குறிப்பாக, மருத்துவக் கல்வியைப் பெறுவதற்காக உக்ரைன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்குச் சென்று கல்வி கற்பதில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளனர்.

ரஷ்யா, உக்ரைன் நாட்டின்மீது போர் தொடுத்ததால், நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்வி பயில உக்ரைனுக்குச் சென்ற மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தோர் உக்ரைனில் சிக்கித் தவிக்கும் நிலை ஏற்பட்டது.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்களின் தாய்வீடு தமிழ்நாடுதான். எனவே, அவர்களைப் பாதுகாப்பது தமிழ்நாடு அரசின் தலையாயக் கடமை என்ற உணர்வோடு, மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.02.2022 அன்று, தகவல் கிடைக்கப்பெற்ற உடனேயே உக்ரைனில் சிக்கிய தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களை மீட்கும் நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். இதனைத் தொடர்ந்து, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் அவர்களைப் பொறுப்பு அலுவலராகக் கொண்டு மாநில அளவில் கட்டுப்பாட்டு அறை உருவாக்க உத்தரவிட்டார்.



மேலும், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களும், புதுதில்லியில் கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மை உள்ளுறை ஆணையர் மற்றும் உள்ளுறை ஆணையர் ஆகியோரும் பொறுப்பு அலுவலர்களாக நியமனம்.

சென்னையில் 24x7 மணி நேரம் இயங்கக்கூடிய அவசரக் கட்டுப்பாட்டு அறை.

1070 என்ற கட்டணமில்லாத் தொலைப்பேசி எண், 9940256444, 9600023645 ஆகிய உதவி எண்கள் அறிவிப்பு.

nrtchennai@gmail.com, nrtamils@tn.gov.in ஆகிய மின்னஞ்சல் முகவரிகள் அறிவிப்பு.

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழ் மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தவர்களின் விவரங்கள் சேகரித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள உத்தரவிட்டார்.

26.02.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கட்டுப்பாட்டு அறைக்குச் சென்று காணொலி அழைப்பு வாயிலாக உக்ரைனில் மருத்துவம் பயிலும் 3 மாணவர்களுடன் தொடர்புகொண்டு உரையாடி அவர்களுக்கு, ''நாங்கள் இருக்கிறோம் பயப்படாதீர்கள்'' என்று தைரியத்தையும் அறிவுரைகளையும் அளித்தார்.

1,921 நபர்களை 3501 தொலைப்பேசி அழைப்புகள் மூலமும், 4,426 மின்னஞ்சல் மூலமும் தொடர்புகொண்டு, உக்ரைன் தமிழ் மாணவர்கள் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அவர்களின் பெற்றோர், உறவினர்கள் மூலமாக அவர்கள் விவரம் பெறப்பட்டு, அவர்களை மீட்டு வருவதற்கான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ள ஒன்றிய வெளியுறவுத் துறையிடம் மாணவர்கள் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டது.

உக்ரைனில் இருந்து தமிழ் மாணவர்களின் மீட்பு நடவடிக்கையில் காலதாமத காரணத்தினால் மீண்டும் மாண்புமிகு வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு 28.02.2022 அன்று தொலைப்பேசி வாயிலாகவும், பின்னர், 03.03.2022 அன்று கடிதம் மூலமாகவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

மேலும், உக்ரைனின் அண்டை நாடுகளுக்குச் சென்று தமிழ் மாணவர்களை மீட்கும் பணியை மேற்கொள்ள மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.திருச்சி சிவா, திரு.கலாநிதி வீராசாமி, திரு.எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பி.ராஜா மற்றும் நான்கு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய சிறப்பு மீட்புக்குழு அமைத்து உத்தரவிட்டார்.

இக்குழுவினர், ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.ஜெய்சங்கர் சுப்ரமணியன் அவர்களை 05.03.2022 அன்று, புது தில்லியில் சந்தித்து, உக்ரைனிலிருந்து தமிழக மாணவர்களை மீட்கும் பணியினை விரைவுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டனர்.

உக்ரைன் நாட்டின் அண்டை நாடுகளான ருமேனியா, போலந்து, ஹங்கேரி மற்றும் ஸ்லோவோகியா போன்ற நாடுகளின் வழியாகத் தமிழ் மாணவர்களை மீட்பது தொடர்பாகவும் விரிவான ஆலோசனை மேற்கொண்டனர்.

உக்ரைன் நாட்டில் சிக்கித் தவித்த தமிழர்களைப் பத்திரமாக அழைத்து வரத் தமிழ்நாடு அரசால் ரூ.3.50 கோடி நிதி உடனடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

35 மாணவர்கள் உக்ரைன் நாட்டின் சில பகுதிகளிலிருந்து அருகாமையிலுள்ள ஹங்கேரி நாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட செலவு மற்றும் சுமார் 160 மாணவர்களுக்கு உக்ரைன்–ருமேனியா நாட்டின் எல்லைக்குச் செல்வதற்கும் அங்கிருந்து ருமேனியா நாட்டின் தலைநகரமான புகாரெஸ்டிற்கு செல்வதற்கான செலவினங்களைத் தமிழக அரசே மேற்கொண்டது.

உயர்மட்டக்குழு அமைத்த பின்னர், தமிழக மாணவர்களை மீட்கும் பணி தீவிரமடைந்தது, புதுதில்லிக்கு அழைத்து வரப்பட்ட தமிழக மாணவர்கள், தமிழ்நாடு இல்லத்தில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டு, தமிழகம் அழைத்துவர மூன்று சிறப்பு விமானங்களும் தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 07.03.2022 அன்று, திருநெல்வேலி மாவட்டம், ஜோதிபுரத்தில், உக்ரைனிலிருந்து தாயகம் திரும்பிய மருத்துவப் பட்டப்படிப்பு படித்து வரும் செல்வி நிவேதிதா, செல்வி திவ்யபாரதி, செல்வி ஹரிணி, திரு. நவநீத ஸ்ரீராம் ஆகியோர்களை அவர்களது வீட்டில் சந்தித்தபோது, தங்களை உக்ரைனிலிருந்து பாதுகாப்பாக மீட்டு, தாயகம் திரும்பிட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டமைக்காகவும், இந்தியாவிலேயே மருத்துவப் படிப்பினைத் தொடர ஒன்றிய அரசினை வலியுறுத்தியமைக்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசிற்கும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கை காரணமாக உக்ரைனில் மருத்துவக்கல்வி பயின்று வந்த 1,921 மாணவர்களில் 1,890 மாணவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களில் 1,524 மாணவர்கள் தமிழ்நாடு அரசின் செலவில் தமிழகம் அழைத்து வரப்பட்டு, அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 366 மாணவர்கள்





அவர்களது சொந்த செலவில் தமிழகம் திரும்பியுள்ளனர். தாயகம் வர விருப்பம் தெரிவிக்காத 31 மாணவர்கள் உக்ரைன் மற்றும் அண்டை நாடுகளில் பாதுகாப்பான பகுதிகளில் குடியேறிவிட்டனர்.

தமிழகம் திரும்பிய மாணவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 12.03.2022 அன்று, சென்னை விமான நிலையத்திற்கு நேரில் சென்று, பூங்கொத்து கொடுத்து வரவேற்று, அம்மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

உக்ரைனில் இருந்து தாயகம் திரும்பிய மாணவ, மாணவியர்களுக்கு 104 மருத்துவ சேவை மையத்தின் வாயிலாக மனநல ஆலோசனை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 1,524 மாணவர்கள் பயனடைந்தனர்.

உக்ரைனில் பாதுகாப்பற்ற சூழலில் இருந்த தமிழக மாணவர்களைத் துரித நடவடிக்கைகளால் மீட்டு, தமிழகம் கொண்டுவரக் கருணை அடிப்படையிலான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலப்பணிகளைத் தமிழ் சமுதாயமே பாராட்டுகிறது. ●

> **“உக்ரைனிலிருந்து தாயகம் திரும்பிய மாணாக்கர்கள் தங்கள் படிப்பைத் தொடருவதற்கு ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்.”**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

சமூக நீதி காக்கும் நமது முதலமைச்சர்



சமூக நீதிக் கொள்கையின் தாயமாகத் திகழ்வது தமிழ்நாடு. வகுப்புரிமை, வகுப்புவாரி உரிமை, இட ஒதுக்கீடு, சாதிரீதியான ஒதுக்கீடு என்று எந்தப் பெயரைச் சொல்லி அழைத்தாலும், அதற்குச் சமூகநீதி என்ற ஒற்றைச் சொல் கொடுக்கும் பொருளை வேறு எந்தச் சொல்லும் தருவது கிடையாது. அத்தகைய சமூகநீதிக் கொள்கைதான், தமிழ்ச் சமுதாயத்துக்குக் கொடுத்த மாபெரும் கொடையாகும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்திய ஒன்றியத்துக்கே அந்தத் தத்துவத்தைத் திராவிட இயக்கம் கொடையாக வழங்கியது.

நூறாண்டுகளுக்கு முன் வகுப்புரிமை எனும் இட ஒதுக்கீட்டு முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்தது நீதிக் கட்சிதான். மூடப்பட்டுக் கிடந்த கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரப் பதவிகள் அனைத்தும் அதன் மூலமாக அனைவருக்குமானது. சுதந்திர இந்தியாவில் அதற்குச் சட்டரீதியான இடர்பாடு வந்தபோது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருந்து முன்னெடுத்த போராட்டம் இந்தியத் துணைக் கண்டத்தையே கவனிக்க வைத்தது.

இட ஒதுக்கீட்டிற்கு, உச்சநீதிமன்றத்தால் ஆபத்து வந்தபோது கடுமையாகப் போராடி 1950ஆம் ஆண்டு அரசியல் சட்டத் திருத்தத்தைச் செய்ய வைத்தவர்கள் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும்.



தமிழ்நாட்டின் சமூக நீதிக் கொள்கைக்கு இந்திய அரசியல் சட்ட அங்கீகாரம் கிடைத்தது. பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்குரிய இட ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தியதும், காலத்தின் தேவைக்கேற்ப அளவு மாற்றம் பெற்றுத் தந்ததும், கடந்த அரை நூற்றாண்டு கால வரலாற்றில் சரித்திரச் சான்றாகும்.

- பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை 31 சதவிகிதமாக ஆக்கியது,
- பட்டியலினத்தவர் இட ஒதுக்கீட்டை 18 சதவிகிதமாக ஆக்கியது,
- பழங்குடியினருக்குத் தனியாக ஒரு விழுக்காடு வழங்கியது,
- மதம் மாறிய ஆதிதிராவிட கிறிஸ்துவர்களையும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது,
- மிகவும் பிற்படுத்தப்பட்ட 107 சாதியினருக்குத் தனியாகப் பெயரிட்டு ஒதுக்கீடு வழங்கியது,
- அருந்ததியினருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு வழங்கியது,
- இசுலாமியர்களுக்கு 3.5 சதவிகித உள் ஒதுக்கீடு வழங்கியது,
- மண்டல ஆணையத்தின் பரிந்துரைப்படி, ஒன்றிய பணிகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வலியுறுத்திப் பெற்றது,
- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று சட்டம் நிறைவேற்றியது

என அனைத்தும் கழக அரசு சமூக நீதி கருத்தியலுக்கான மாபெரும் பங்களிப்பாகும்.





சமூக நீதிக்கான போராட்டங்களின் வரிசையில், 1987ஆம் ஆண்டு நடைபெற்ற 20 சதவிகித தனி இட ஒதுக்கீடு கோரி வடதமிழகத்தில் நடைபெற்ற போராட்டத்தில் காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு 21 பேர் பலியானார்கள். சமூக நீதி போராளிகளுடைய உயிர்த் தியாகத்திற்கும், போராட்டத்திற்கும் நியாயம் வழங்கிடும் வகையில், 1989ஆம் ஆண்டு அமைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு, இந்தியாவிலேயே முதன்முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை அமைத்து, 20 சதவிகித இட ஒதுக்கீட்டினை வழங்கி, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

சமூகநீதிக் கொள்கையின் தொடர்ச்சியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 1987ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு போராட்டத்தில் பலியான 21 சமூக நீதிப் போராளிகளின் தியாகத்தை மதிக்கக்கூடிய வகையில், ரூ.4 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்படும் என 02.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கு மருத்துவப் படிப்புகளில் 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி, சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து வெற்றியும் பெறப்பட்டுள்ளது. இந்த மகத்தான வெற்றி, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனத்தின் வெற்றியாகும்.

சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூக நீதி, இன உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கையைத் தந்தை பெரியார் அவர்கள் உருவாக்கினார். அதுதான் கடந்த நூற்றாண்டில் சமூகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. எதிர்காலத்திற்குப் பாதை அமைத்துத் தரப்போகிறது என்ற உணர்வை, உணர்ச்சியை, எழுச்சியை, சிந்தனையை விதைக்கும்



அடையாளமாக அறிவாசான் தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17ஆம் நாள் ஆண்டுதோறும் சமூக நீதி நாளாகக் கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், 06.09.2021 அன்று அறிவித்தார்.

சமூக நீதி அளவுகோல் முழுமையாகக் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக ஒரு கண்காணிப்புக் குழுவை சமூக நீதி அரசாணையின் நூற்றாண்டு நாளில் அமைத்து உத்தரவிட்டார்.

சமூக நீதி சேவைக்காக வழங்கப்படும் 'சமூகநீதிக்கான தந்தை பெரியார் விருது'', ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பணியாற்றுவோர்களுக்கு வழங்கப்படும் ''டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது'' விருதாளர்களுக்கான பரிசுத்தொகை ரூ. 5 இலட்சமாக உயர்த்தி உத்தரவிட்டார்.

மேலும், வடக்கே உதித்த சூரியன், மலர் பூக்க வந்த பகலவன், நமது அரசியலமைப்பு சட்டத்தை வகுத்து தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என சட்டமன்றப் பேரவையில் 13.04.2022 அன்று அறிவித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விட்டு சென்ற பணிகளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

> **தந்தை பெரியார் மறைந்தபோது, தந்தை பெரியார் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டார். நாம் தொடர்வோம் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். எனவே நாமும் தொடர்வோம்! தொடர்வோம்! தொடர்வோம்!**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

நீட் விலக்கு உறுதியில் நமது முதலமைச்சர்



'எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நகரட்டும் இந்த வையம்' என்ற உன்னதமான குறிக்கோளைக் கொண்டு செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசு, கல்வி என்பதை அடிப்படை உரிமையாகச் செயல்படுத்திக் காட்டக்கூடிய அரசாகவும் செயல்பட்டு வருகிறது.

ஏழை, எளிய, கிராமப்புற விளிம்பு நிலை மாணவ சமுதாயத்தைப் பாதிக்கும் கல்லூரிச் சேர்க்கையான நுழைவுத் தேர்வுகளைத் தவிர்த்து, பள்ளிக் கல்வித் திறனை, அதாவது, 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே கல்லூரி மாணவர் சேர்க்கை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

மாநில அளவில் நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வுகளை அகற்ற 2007ஆம் ஆண்டு தனிச் சட்டம் இயற்றி, மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில், ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களின் நலன் காக்கப்படுவதை உறுதிசெய்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதனடிப்படையில், மருத்துவ சேர்க்கை நடைபெற்று, மருத்துவத் துறையிலே நாட்டிற்கே முன்னோடியாகத் தமிழகம் விளங்கிக்கொண்டிருக்கிறது.

நீட் என்பது இந்திய மருத்துவக் கவுன்சில் ஒழுங்குமுறை விதிப்படி உருவாக்கப்பட்ட ஒரு தேர்வு. 2010ஆம் ஆண்டு நீட் தேர்வு முறை முன்மொழியப்பட்டபோதே அதனை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கடுமையாக எதிர்த்தார். இந்தியா முழுவதும் 115 வழக்குகள் நீட் தேர்வுக்கு எதிராகப் போடப்பட்டதில், தமிழ்நாடு முதன்மை மாநிலம்.

ஜூலை 2013ஆம் ஆண்டு நீட் தேர்வு அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதியரசரின் அமர்வு தீர்ப்பளித்தது. பின்னர்,



தனியார் நிறுவனம் தொடர்ந்த வழக்கில், ஏப்ரல் 2016ஆம் ஆண்டு நீட் தேர்வுக்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் வழங்கியது. ஒன்றிய அரசு அவசரச் சட்டம் பிறப்பித்தது, நாடு முழுவதும் நீட் தேர்வு நடைமுறையை செயல்படுத்தியது.

நீட் தேர்வில் முறைகேடுகள் நடைபெறுவதாகப் பல்வேறு வழக்குகள் நடைபெற்ற நிலையில், 2017இல் அந்த ஆண்டிற்கான நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கும் அவசரச் சட்டத்தின் வரைவை ஒன்றிய அரசின் ஒப்புதலுக்குத் தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்தது.

நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. நீட் தேர்வு மன உளைச்சலால் வழக்கு தொடர்ந்த அனிதா என்ற மாணவி தற்கொலை செய்துகொண்டார்.

மருத்துவம் படிக்க வேண்டும், மருத்துவராக ஆக வேண்டும் என்ற இலட்சியத்துடன் இருக்கும் ஏழை, எளிய கிராமப்புற மாணவர்களின் கனவைச் சிதைக்கக்கூடிய நீட் தேர்வினை ரத்து செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றுக்கொண்ட நாள்முதல் பல்வேறு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நீட் தேர்வு முறையானது மருத்துவ மாணவர் சேர்க்கையில் சமுதாயத்தின் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா என்று ஆய்வுசெய்து, அதனைச் சரிசெய்ய மாணவர் சேர்க்கை முறைகளை வகுத்து, நடைமுறைபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி அரசுக்கு பரிந்துரை அளித்திட ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.இராஜன் தலைமையில் உயர்நிலைக்குழு ஒன்று அமைத்து 10.06.2021 அன்று உத்தரவிட்டது. இக்குழு நீட் தேர்வால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எடுத்துக்கூறி, மாற்று மாணவர் சேர்க்கை முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பரிந்துரைகளை 14.07.2021 அன்று அரசுக்கு அளித்தது.

இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 13.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 'நீட் விலக்கு மசோதா' சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேலும், சட்ட முன்வடிவு அரசிதழில் வெளியிடப்பட்டது.

அரியலூர் மாணவி நீட் தேர்வினால் பலியானது தொடர்பாக அறிக்கையில், உயிர்காக்கும் மருத்துவப் படிப்புக்காக, தற்கொலை செய்து உயிர்விடும் அவலத்தைத் தடுத்திடுவோம். சட்டப் போராட்டத்தின் மூலம் நீட்டை விரட்டுவோம் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.09.2021 அன்று அறிவித்தார். நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு 104 என்ற தொலைப்பேசி எண் வாயிலாக மனநல ஆலோசனைகளைப் பெறும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவை உடனடியாக மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று மாண்புமிகு ஆளுநர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.11.2021 அன்று நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

17.12.2021 அன்று மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தினார்.

28.12.2021 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் பல்வேறு கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் நீட் தேர்வு சட்டமுன்வடிவுக்கு ஒப்புதல் பெறப்படுவதில் காலதாமதம் குறித்து மனு ஒன்றை அளித்தனர்.

நீட் விலக்கு தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஒருமித்த நிலைப்பாட்டினை எட்டுவதற்குச் சட்டமன்ற அனைத்துக் கட்சிகள் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 08.01.2022 அன்று நடைபெற்றது.

12.01.2022 அன்று நடைபெற்ற காணொலி நிகழ்வின்போது, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

17.01.2022 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் அனைத்துக்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்த கோரிக்கையை வலியுறுத்தியது.

சட்ட முன்வடிவு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படாத நிலையில், சட்ட முன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற குறிப்புடன், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் அனுப்பிய கோப்பு 02.02.2022 அன்று தமிழ்நாடு அரசால் பெறப்பட்டது.

அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதித்து முடிவு செய்திட 05.02.2022 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சட்டமன்ற அனைத்துக் கட்சிகள் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பிய மசோதா 08.02.2022 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவை சிறப்புக் கூட்டத்தில் மீண்டும் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டது.

2022–2023ஆம் கல்வியாண்டிற்கான மருத்துவ மாணவர் சேர்க்கை விரைவில் தொடங்கவுள்ள நிலையில், நீட் தேர்வுக்கு விலக்குகோரும் சட்டமுன்வடிவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்கு விரைந்து அனுப்பிடவேண்டுமென்று, 15.03.2022 அன்று மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

14.04.2022 அன்று மாநில மக்களின் நலனை முன்னிறுத்தி நீட் தேர்வு மசோதாவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு விரைந்து அனுப்பிட, மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டார்.

18.04.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைத்த நீட்



விலக்கு மாசோதாவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பிவைப்பது தொடர்பான நடவடிக்கைகளைப் பார்த்துவிட்டு, தேவைப்பட்டால் அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என அறிவித்தார்.

பொது வாழ்க்கையில் மக்களின் நலன் சார்ந்து செயல்படுவதே பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் காட்டிய வழி. அவ்வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, தமிழ்நாடு மக்களின் நலன் கருதி நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் முயற்சிகள், நடவடிக்கைகள் தொடரும் என்பதில் ஐயமில்லை. ●

> “நீட் போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கு எதிரான போராட்டம், சமூக நீதி இயக்கத்தின் அடுத்தகட்டப் போராட்டம் எனக் கருதி நமது கொள்கையிலிருந்து எள்முனையளவு கூட பின்வாங்காமல் முன்னெடுத்துச் செல்வோம்.”
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

உழவரைப் போற்றும் நமது முதலமைச்சர்



"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்".

நாட்டின் ஒட்டுமொத்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில், வேளாண்மை முக்கியப் பங்கு வகிக்கிறது. மக்களின் வாழ்வாதாரமாக திகழ்ந்து உணவு வாய்ப்பளித்தல், தொழில்துறை முன்னேற்றம், அளிப்பதோடு, வேலை பன்னாட்டு வாணிபம், வறுமை ஒழிப்பு எனப் பல்வேறு இனங்களிலும் வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் 70 சதவீத மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. வேளாண்மையில் நவீன சாகுபடி முறைகளைப் பின்பற்றி உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன், விளைபொருட்களை மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல் போன்ற உத்திகளுடன் சந்தை வேளாண் சார்வாய்ப்புகளை ஏற்படுத்தி, வேளாண்மையை ஒரு ஈட்டும் தொழிலாக, வளர்ச்சி வணிகமாக, இலாபம் மாற்றமடையச்செய்து, நிலையான இலக்குகளை அடைவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையிலான அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நவீன வேளாண் தொழில்நுட்ப முறைகளுடன், சாகுபடிப் பரப்பு, பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை உயர்த்துவதோடு, விவசாயிகளின் நலன் காப்பதையும் அரசின் முதன்மைக் கொள்கையாகக் கொண்டு வேளாண்மைத்துறையை வேளாண்மை – உழவர்நலத்துறை என பெயர்மாற்றம் செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.



தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் காக்கும் வகையில் ஒரு புதிய சகாப்தமாக விவசாயிகளின் நலனைப் பேணிக்காத்து, மாநிலத்தின் பொருளாதாரம் மேம்பாடு அடையச்செய்யும் வகையில், தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக, விவசாயத்திற்கென ஒரு தனி நிதிநிலை அறிக்கை 14.08.2021 அன்று சட்டப்பேரவையில் தாக்கல்.

தமிழ்நாட்டில் வேளாண்மையில் புத்தாக்கம் ஏற்படுத்தி நிலையான உயர்வளர்ச்சி அடைய,

- தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் எக்டர் பயிரிடச்செய்து, நிகர சாகுபடிப் பரப்பு 75 சதவீதமாக உயர்த்துதல்.
- இருபோக சாகுபடி நிலங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல்.
- பணப்பயிர்களுக்கான வேளாண் உற்பத்தித் திறனில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம்பெறச் செய்தல்

ஆகிய முத்தான மூன்று பத்தாண்டு தொலைநோக்குத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியதோடு, 12.06.2021 அன்று மேட்டூர் அணையினை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை நெல் சாகுபடியில் உயர்மகசூல் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் முக்கிய இடுபொருட்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கும் வகையில், ரூ.61.09 கோடி மதிப்பில் குறுவை நெல் சாகுபடித் தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார்.

மேலும்,

- பனை மேம்பாட்டுத் திட்டம்.
- விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்.
- சம்பா பருவப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையாக 6 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1597.18 கோடி.
- 'தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்'' என்ற புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டம் ரூ.11.14 கோடி மதிப்பில் செயலாக்கம். முதற்கட்டமாக 73 இலட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம்.
- முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தில் அன்றாட தேவைக்கான நஞ்சில்லா காய்கறிகளை மகளிர், தங்களது இல்லங்களிலேயே உற்பத்தி செய்வதற்கும், குழந்தைகள் தாவரங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கும், ஊரகப்பகுதிகளில் மானியத்துடன்



12 வகை காய்கறி விதைகள் அடங்கிய 2 இலட்சம் விதைத்தளைகள்.

நகர்ப்புரங்களில் மானியத்துடன் 6 வகை காய்கறி விதைகள் கொண்ட 1 இலட்சம் மாடித்தோட்டத்தளைகள்.

நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த ஊட்டச்சத்து தளைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மானிய விலையில், 8 வகை செடிகள் கொண்ட 2 இலட்சம் ஊட்டச்சத்து தளைகள்.

காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ஊக்கத்தொகை–இடுபொருட்கள்.

காய்கறி குறைவாக சாகுபடி செய்யக்கூடிய 2 ஆயிரம் கிராமங்களில் 1,250 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளத்தை மேம்படுத்த இடுபொருட்கள்.

638 ஹெக்டேர் பரப்பளவில் பந்தல் அமைப்பதற்கான மானியம்.

1,000 ஹெக்டேர் பரப்பளவில் கீரை சாகுபடிக்கான மானியம்

உள்ளிட்ட ரூ.95 கோடி மதிப்பீட்டிலான திட்டங்கள் செயலாக்கம்.

- தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் 8 மாவட்டங்களில் ரூ.97.01 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகக் கட்டடங்கள்.
- 11 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் தரிசில், உளுந்து மற்றும் பச்சைப்பயறு போன்ற பயறுவகைப் பயிர்கள் பயிரிடுவதற்கு இலக்கு.
- நெல் தரிசில் பயறு சாகுபடியை ஊக்கப்படுத்தும் திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு மானிய விலையில், பயிர்பாதுகாப்பு மருந்துகள், சுழற்கலப்பை, விசைத்தெளிப்பான்கள் உள்ளிட்ட இடுபொருட்கள்.
- கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.42.50, சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.150.
- சர்க்கரை ஆலைகளுக்கு 78.38 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு வழங்கிய தகுதியுடைய 91,120 விவசாயிகளுக்கு கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையாக மொத்தம் ரூ.150.89 கோடி.



- ❖ வேளாண் இயந்திரங்களை, விவசாயிகள் வீட்டிலிருந்தபடியே முன்பதிவு செய்ய இ–வாடகை ஆன்லைன் செயலி.
- ❖ வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ், ரூ.50.73 கோடி மானியத்தில், விவசாயிகளுக்கு 2,118 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள்.
- ❖ 230 வட்டார, கிராமங்களில் கரும்பு சாகுபடிக்கேற்ற வாடகை மையங்கள்.
- ❖ ரூ.11 கோடி மதிப்பில் நீண்ட இழை பருத்தி சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த உத்திகளை 25,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டம்.
- ❖ தென்னை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், விலை ஆதரவுத் திட்டத்தின்கீழ், கொப்பரைகளை விவசாயிகளிடமிருந்து நேரடியாக குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல்.
- ❖ 21 மாவட்டங்களிலுள்ள 42 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல்

என வேளாண் பெருங்குடி மக்களுக்கு பல்வேறு மகத்தானத் திட்டங்களை செயல்படுத்தி, வேளாண்மைப் புரட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி வருகிறார். ●

> **தமிழ்நாடு அரசு எடுத்துவரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளினால், தமிழ்நாட்டில் உணவுப் பாதுகாப்பும், ஊட்டச்சத்து பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும் என்பதுடன், விவசாயிகளின் வருமானமும் உயரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

முதலீடுகளை ஈர்க்கும் நமது முதலமைச்சர்



பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாகத் திகழ்ந்து வருகிறது. இந்தியாவில் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாகத் திகழும் தமிழ்நாடு, 2020–2021ஆம் நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.47 சதவிகிதம் பங்களிப்பை அளித்துள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் ரூ.21.79 இலட்சம் கோடியாக வளர்ந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான 2030–2031ஆம் நிதியாண்டிற்குள் தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சி அடையச் செய்ய வேண்டுமெனில் பொருளாதார வளர்ச்சியில் உற்பத்தித்துறை முக்கிய பங்கு வகிக்க வேண்டும். அந்த இலக்கினை அடைய ரூ.23 இலட்சம் கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும், 46 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சியில் அதிகமான தனியார் மற்றும் பொதுத்துறை முதலீட்டை ஈர்க்க வேண்டும். தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதன் வாயிலாக நீடித்த பொருளாதார வளர்ச்சியினை அடைந்து, அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்து தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்ற அடிப்படையில், **"முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு"** என்ற ஒரு சிறப்பான நிகழ்ச்சி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 20.07.2021 அன்று சென்னையில் நடைபெற்றது. அதன் வாயிலாக,



- ரூ.17,141 கோடி முதலீட்டில் 55,054 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 35 தொழில் முதலீடுகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ரூ.4,250 கோடி முதலீட்டில் 21,630 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 9 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல்.
- ரூ.7,117 கோடி முதலீட்டில் 6,798 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 5 திட்டப் பணிகள் துவக்கம்.

என 49 திட்டங்களின் வாயிலாக ரூ.28,508 கோடி முதலீட்டில் 83,482 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

26.08.2021 அன்று, ஒன்றிய அரசின் நிதித்துறையின்கீழ் இயங்கும் சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியுடன், சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியின் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் பகுதிகளை மேம்படுத்த ரூ.524 கோடி நிதி உதவிக்கான கொள்கை அளவிலான ஒப்புதல்.

11.09.2021 அன்று ஐக்கிய அரபு அமீரக நாடுகளைச் சேர்ந்த DP World குழுமம், தூத்துக்குடி, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ரூ.2,000 கோடி முதலீட்டில் கன்டெய்னர் முனையம், சிறு துறைமுகம், குளிர்பதனக் கிடங்கு, பல்பொருள் கிடங்குப் பூங்கா, நவீன வர்த்தகக் கிடங்கு மண்டலம் மற்றும் தகவல் தரவு மையம் போன்றவற்றை நிறுவ, தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது. மேலும், அம்பத்தூரில் ரூ.2,500 கோடி மதிப்பீட்டில், 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில், NTT Global Data Centres and Cloud Infrastructure நிறுவனத்தின் தகவல் தரவு மையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

மாநிலத்தின் ஏற்றுமதித் திறனை வெளிப்படுத்தும் வகையில், 22.09.2021 அன்று, சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற **"ஏற்றுமதியில் ஏற்றம் – முன்னணியில் தமிழ்நாடு"** – தமிழ்நாடு ஏற்றுமதி மாநாட்டில்,



- தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை வெளியீடு.
- குறு, சிறு மற்றும் நடுத்தர ஏற்றுமதி நிறுவனங்களுக்கான கையேடு வெளியீடு.
- ரூ.2120.54 கோடி முதலீட்டில் 41,695 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 24 தொழில் முதலீடுகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- புதியதாக அமைக்கப்பட்டுள்ள பாலிமர் பூங்காவில் நில ஒதுக்கீடு ஆணைகள்.
- தமிழ்நாட்டில் முதல் முறையாக Cotton Corporation of India மூலம் பஞ்சுக் கிடங்குகள் அமைத்திட ஆணை.

ஆகியன மேற்கொள்ளப்பட்டன. 27.09.2021 அன்று சேலத்தில் அமைந்துள்ள ஏரோஸ்பேஸ் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் உலகளாவிய விண்வெளி நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கான முக்கிய விமான பாகங்கள் தயாரித்து வழங்குவதற்கு போயிங் இந்தியா நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 23.11.2021 அன்று கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற **"முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு"** மாநாட்டில், 82 திட்டங்களின் வாயிலாக ரூ.52,549 கோடி முதலீட்டில் 92,420 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

ரூ.34,723 கோடி முதலீட்டில் 74,835 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 52 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்,

ரூ.485 கோடி முதலீட்டில் 1,960 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 7 வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் உதிரிப்பாகங்கள் உற்பத்தி மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்,

என ரூ.35,208 கோடி முதலீட்டில் 76,795 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிடும், 59 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ.13,413 கோடி முதலீட்டில் 11,681 நபர்களுக்குச் சூரிய ஒளி உற்பத்தி, தகவல் தரவு மையம், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், லித்தியம் அயன் மின்னேற்றிகள் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 13 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.



தொடர்ந்து, ரூ.3,928 கோடி முதலீட்டில் 3,944 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் தகவல் நுட்ப தொழில் பூங்கா, தகவல் தரவு மையம், மின் வாகன 2 சக்கர வண்டிகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் 10 திட்டங்களின் வணிக உற்பத்தியினைத் துவக்கி வைத்தார்.

தூத்துக்குடியில் 07.03.2022 அன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தூத்துக்குடியில் அமைக்கப்படவுள்ள "சர்வதேச அறைகலன் பூங்கா" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.4,755 கோடி முதலீட்டில் 17,476 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் 33 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

அடிக்கல் நாட்டப்பட்ட சர்வதேச அறைகலன் பூங்காவில், மரச்சாமான் மற்றும் தோல் பொருட்களால் அறைகலன் பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டங்களை அமைப்பதற்கு முன்வந்துள்ள 8 நிறுவனங்கள் வாயிலாக ரூ.2,845 கோடி முதலீட்டில் 11,450 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர், சர்வதேச அறைகலன் பூங்காவில், உற்பத்தித் திட்டங்களை நிறுவ முன்வந்த M/s. Hettich India Private Limited மற்றும் M/s. Deceuninck Profiles India Private Limited ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொழில் துறை சார்பில், ரூ.1,643 கோடி முதலீட்டில் 3,653 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 6 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. உணவு பதப்படுத்துதல், ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தி மற்றும் உரங்கள் – இரசாயனங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், விருதுநகர் திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இந்நிறுவனங்கள் அமையவுள்ளன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், ரூ.267 கோடி முதலீட்டில் 2,373 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில், 19 நிறுவனங்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டது. இந்த முதலீடுகள், கட்டுமானம், உணவுப் பதப்படுத்துதல், கண்ணாடி உற்பத்தி, ஆடைகள் மற்றும் ஜவுளி, சூரிய ஒளி அடுப்புகள், அறைகலன், உரங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகிய துறைகளில், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், 25.03.2022 அன்று துபாய் சென்று, பல்வேறு துறைகளில் தமிழகத்தில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சர்களைச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார். 26.03.2022 அன்று, தமிழ்நாட்டிற்கு ரூ.2,600 கோடி ரூபாய் முதலீட்டில் 9,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் விதமாக ஐக்கிய அரபு நாடுகளின் முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- துபாயைச் சேர்ந்த நோபுள் ஸ்டீல்ஸ் நிறுவனம் ரூ.1,000 கோடி முதலீட்டில் 1,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், ஒரு உற்பத்தித் திட்டம்.
- துபாயைச் சேர்ந்த ஓயிட் ஹவுஸ் நிறுவனம் ரூ.500 கோடி முதலீட்டில் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த தையல் ஆலைகள் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- துபாயைச் சேர்ந்த டிரான்ஸ்வேல்டு குழுமம் ரூ.100 கோடி முதலீட்டில் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், உணவுப் பூங்கா அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ஆஸ்டர் DM ஹெல்த்கேர் அமைப்பு ரூ.500 கோடி முதலீட்டில் 3,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், மருத்துவமனை நிறுவுவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- ஷெராப் குழும நிறுவனம், ரூ.500 கோடி முதலீட்டில் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், ஒரு சரக்குப் போக்குவரத்துப் பூங்கா அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- அபுதாபியில் 28.03.2022 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், லுலு நிறுவனம் ரூ.3,500 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- லுலு நிறுவனம், ரூ.3,500 கோடி முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 2 வணிக வளாகங்கள் மற்றும் ஒரு ஏற்றுமதி சார்ந்த உணவு பதப்படுத்தும் திட்டம் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

விருது...

தமிழ்நாடு அரசின் தொழில் வழிகாட்டி நிறுவனமாக இருக்கக்கூடிய Guidance Tamil Nadu ''ஆசிய ஓசியானியா'' பகுதியில் சிறந்த தொழில் முதலீடு ஊக்குவிப்பு முகமை என்ற சர்வதேச விருதினைப் பெற்றமைக்காக, அமெரிக்கத் தூதரகம் தமிழ்நாடு அரசைப் பாராட்டியுள்ளது.



"தமிழ்நாடு முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாகவும், தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும் திகழும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு கொள்கை வகுத்து பீடுநடைபோட்டு வருகிறது."

> தொழில் வளர்ச்சியின் பயன் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டுமே சென்றடையாமல், தமிழ்நாடு முழுமைக்கும் அது சென்றாக வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்த அரசு தன்னுடைய பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மகளிர் மேம்பாட்டில் நமது முதலமைச்சர்



பெண்ணுக்கு சமஉரிமையையும், சமூக நீதியையும் கிடைக்கச் செய்யும் பெண்ணியம் போற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

ஆணும் பெண்ணும் சரிசமம் என்ற கொள்கையால் உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் இடஒதுக்கீடு போராடிப் பெற்றுத் தந்தவர். சொத்துரிமையில் ஆணுக்கு நிகரான பங்கு பெண்ணுக்கும் உண்டு என்று சட்டம் வகுத்து, அதனை நடைமுறைப்படுத்தியவர்.

"கண்ணுக்குள் பாவைபோல், உருண்டிருக்கும் உள்ளம் – கைம்
பெண்ணுக்கு இருப்பதையும், உணர்ந்திடுவாய்" –

என்று அவர்களின் வலியை உணர்த்தி, அவர்களை அழைக்கும் விதவை என்ற சொல்லுக்கு மாற்றாக கைம்பெண் என எழுதி, இரு பொட்டு வைத்து அழைத்தவர்.

பெண்களின் உரிமைகளைப் பெறுவதற்கு வழிகாட்டும் பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைக்க மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம் உருவாக்கம். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, சுயதொழில் கடனுதவிகள். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் சுயதொழில் பொருட்களை சந்தைப்படுத்த ஏற்பாடு.

பெண் குழந்தை பிறப்பு முதல் இறுதிக்காலம் வரை சமூகப் பாதுகாப்புடன் வாழ வழிவகை செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.05.2021 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், கையெழுத்திட்ட 5 முக்கியத் திட்டங்களில் ஒன்று மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம்.



முக்கியப் பிரமுகர்கள் வருகையின்போது, சாலையில் பாதுகாப்புப் பணியிலிருந்து பெண் காவலர்களுக்கு விலக்கு. இலகுவானப் பணிகள் வழங்க உத்தரவு,

- மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறுகால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்வு,
- அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணிபுரியும் மகளிர் விடுதிகள்,
- தமிழ்நாடு மாநில மகளிர் வரைவுக் கொள்கை,
- முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 22,164 பெண் குழந்தைகளுக்கு ரூ.55.43 கோடி,
- 2,970 குழந்தைத் திருமணங்கள் தடுப்பு,
- திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள்,
- அரசுப் பணியில் மகளிருக்கு 40 சதவிகித இடஒதுக்கீடு,
- மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாங்கிய ரூ.2,756 கோடி கடன்கள் ரத்து,
- மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.3,000 கோடி கடனுதவி

உயர்நிலைக் கல்வியில் பெண்களின் சேர்க்கை சதவிகிதத்தை உயர்த்தி, கல்வியே நிரந்தர சொத்து என்ற உயரிய நோக்கில், வருடத்திற்கு 6 இலட்சம் மாணவிகள் பயனடையும் வகையில், 6 முதல் 12 ஆம் வகுப்புவரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு, மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம்'' சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டு, அனைத்துத் திட்டங்களுக்கும் முதன்மையாக விளங்குகிறது. ●

> சமூக நீதி, பெண் கல்வி, நிலைத்த நீண்ட பலன், நவீன சிந்தனை, இடைத்தரகர்கள் இன்றி மாணவிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் வரவு வைக்கப்படுவது என்பது ஒரு வெளிப்படையான, பெண்கள் அதிக அளவில் கல்வித் தகுதி பெறுவதற்கு வித்திடக்கூடிய திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டம்.
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

சிறுபான்மையினரின் நம்பிக்கை நமது முதலமைச்சர்



சிறுபான்மையினர்மக்களின் உரிமைகளை பாதுகாப்பதிலும் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நலன்களில் அவர்களுக்குரிய பங்கீடு கிடைப்பதை உறுதி செய்வதிலும் நாட்டிற்கே முன்னோடியாக தமிழ்நாடு விளங்குகிறது.

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழிவாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், 1989ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், 1990ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் நலக்குழு, 1999ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர்பொருளாதார மேம்பாட்டுக்கழகம், 2007ஆம் ஆண்டில் சிறுபான்மையினர்நலன் இயக்ககம் அமைத்ததுமட்டுமின்றி, 2010ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 2010இன்படி, சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக செயல்பட வைத்தவர்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதும், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்திற்கு மேலும் மெருகூட்டும் வகையில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தினை திருத்தியமைத்து உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், நாகூர் தர்கா சின்ன ஆண்டவர் கந்தூரி மற்றும் பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு 45 கிலோ சந்தன கட்டைகளை தமிழ்நாடு அரசு இலவசமாக வழங்க உத்தரவிட்டார்.

- கிராமப்புற சிறுமான்மையினர்மாணவியர்கள் கல்வி இடைநிற்றலின்றி தொடர்ந்து கல்வி பயில 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க ரூ.2.76 கோடி.

- கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மைக்கென வழிமுறைகள் உருவாக்கம்.
- சென்னையில் கிறிஸ்துவர்களுக்கான அடக்கஸ்தலங்கள் அமைக்க நிபந்தனை தளர்வு.
- மாநில அளவில் டிசம்பர் 3ஆம் தேதி சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா.
- உலமா ஓய்வூதிய ஓய்வூதியதாரர்கள் இறந்த பிறகு அவரது குடும்பத்திற்கு ஓய்வூதியம்.
- 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் நூலகம், விளையாட்டு உபகரணங்கள்.
- சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர்களின் சேர்க்கைக்கு வருமான வரம்பு ரூ.2 இலட்சமாக உயர்வு.
- விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வகை செலவினத்தொகை இரு மடங்காக உயர்வு.
- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித்தொகை ஆண்களுக்கு ரூ.3000 மாகவும், பெண்களுக்கு ரூ.5,000 மாகவும் உயர்வு.
- 1,000 இலவச மின்மோட்டாருடன்கூடிய தையல் இயந்திரங்கள்.
- தேனி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர்விடுதிக்கு ரூ.3.48 கோடியில் சொந்தக் கட்டடம்.
- ஜெருசலேம் புனிதப்பயணத்திற்கு, அருட்சகோதரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.60 ஆயிரமாக உயர்வு.
- உலமாக்கள் மற்றும் பணியாளர்நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10583 நபர்களுக்கு ரூ.4.76 கோடியில் மிதிவண்டிகள்.
- அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக இஸ்லாமிய, கிறிஸ்துவ மகளிர்உதவும் சங்கங்கள்.
- வஃக்ப்; வாரிய தலைமை அலுவலகத்திற்கு புதிய கட்டடம்.
- 8 வஃக்ப் சரக அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட ரூ.1.28 கோடி மானியம்.
- 5 மாவட்டங்களில் சிறுபான்மையினர்நல அலுவலகங்கள் தோற்றுவிக்க ரூ,1.75 கோடி.
- கிறித்துவ தேவாலங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைப்பு

என சிறுபான்மையினர்நல அறிவிப்புகள் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ரமலான் மாதத்தில் நோன்பு நோக்கும் இஸ்லாமிய மக்களுக்கு நோன்புக்கஞ்சி தயாரிப்பதற்கு ஏதுவாக பள்ளிவாசல்களுக்கு ரூ.13.54 கோடியில் 6000 மெட்ரிக் டன் அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வோரின் வசதியினைக் கருத்தில் கொண்டு, முன்பிருந்ததுபோல் சென்னையிலிருந்து அவர்கள் ஹஜ் புனிதப் பயணத்தை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வலியுறுத்தி மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 11.11.2021 அன்றும், மாண்புமிகு ஒன்றிய சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.03.2022 அன்றும் கடிதம் வாயிலாக வலியுறுத்தினார்.

பகுத்தறிவு பகலவன், தந்தை பெரியார், அறிவுச்சுடர் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்துத்தந்த சமூக நீதிப் பாதையில், சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ●

மாற்றுத்திறனாளிகள் நலனில் நமது முதலமைச்சர்



மாற்றுத்திறனாளிகள் மீது நீங்கா பற்றும், பாசமும் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் என்று சொல்கிறபோதே அவர்கள் மன அளவில் பாதிப்புக்குள்ளாவதை மாற்றி, தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையில், மாற்றுத்திறனாளிகள் எனப் பெயர் சூட்டி, அவர்களது நலன் காத்திட மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தை உருவாக்கி, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார்.

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக்காத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காகத் தனித் துறையை உருவாக்கினார். மேலும், தொழுநோய் இரவலர் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், அலுமினியத் தாங்கிகள் உள்ளிட்ட கருவிகள் வழங்கும் மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வுத் திட்டம், மாத ஓய்வூதியத் திட்டம், பராமரிப்பு உதவித்தொகை, திருமண உதவித்தொகை, அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை, கல்வி உதவித்தொகை, கல்லூரிகளில் கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ரத்து உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில், மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும், சம உரிமையுடனும் வாழ பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். ஆட்சிப்பொறுப்பேற்றபோது, கொரோனா பெருந்தொற்று காலத்தில், மாற்றுத்திறனாளிகள் எந்தவித சிரமமுமில்லாமல் கொரோனா தடுப்பூசி பெறுவதற்கான அனைத்து தடுப்பூசி மையங்களிலும் தனியாக ஒரு பிரிவு, மாற்றுத்திறனாளிகளுக்கான தனி வரிசை, சாய்வுதள வசதி, தேவைக்கேற்ப மாற்றுத்திறனாளிகளுக்கென சிறப்புத் தடுப்பூசி முகாம்கள் எனச் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.



31.07.2021 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகக் கட்டடத்தைக் காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். பன்னிரெண்டாம் வகுப்புத் துணைத் தேர்வுகளைத் தனித் தேர்வர்களாக எழுத விண்ணப்பித்த மாற்றுத்திறனாளி மாணவர்கள்



அனைவரும் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களித்து அவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றதாக அறிவித்தார்.

உதவி உபகரணங்கள் வேண்டி விண்ணப்பித்துக் காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவி உபகரணங்கள் வழங்க ரூ.62.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென 01.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

- ரூ.70.76 கோடியில், 37,660 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள்.
- 1,228 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்.
- ரூ.360.21 கோடியில், காத்திருப்போர் பட்டியலில் இருந்த 13,484 நபர்கள் உட்பட 2,11,505 பயனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித்தொகை.

மாற்றுத்திறனாளிகளுடன் செல்லும் ஒரு உதவியாளர், அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரண பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள அரசாணை.

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கென நமது நாட்டில் மட்டுமின்றி, உலகிலேயே முன்மாதிரி திட்டமாக ரூ.1,709 கோடி செலவில் "RIGHTS" என்ற திட்டச் செயலாக்கம்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி, மாற்றுத்திறனாளிகள் நலனிற்காகச் சிறப்பான முறையில் சேவையாற்றியவர்களுக்கு மாநில விருது.

தொழுநோயால் பாதிப்படைந்தவர்களின் மறுவாழ்விற்கான மல்லவாடி அரசு மறுவாழ்வு இல்லத்தில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், நூல் கட்டுநர் மற்றும் நூல் கட்டும் உதவியாளர் பணியிடங்களுக்குப் பார்வைக் குறைவுடைய 31 நபர்கள் சிறப்பு நேர்வாகப் பணி நியமனம்.

அறநிலையத்துறையின்கீழ் உள்ள திருக்கோயில்கள் மற்றும் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமணமண்டபங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச திருமணத் திட்டம்.





விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகக் கட்டடம்.

என மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒளிவிளக்கேற்றிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாள்தோறும் அறிவித்து, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

இந்தியாவில் மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பான சேவை வழங்கியமைக்காக, தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2021 அன்று தமிழ்நாடு அரசுக்கு விருது வழங்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு வழங்கிய வகையில் இந்தியாவிலேயே சேலம் மாவட்டம் சிறந்த மாவட்டமாக தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பாகச் செயல் புரிந்தமைக்காக இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற விருதுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மாற்றுத்திறனாளிகள் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து விருது பெற்றுள்ளனர்.

“தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தன் கையில் வைத்துக்கொண்டு எவ்வாறு பணியாற்றினாரோ, அதே வழியில் நின்று, இன்றைக்கு நானும் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

திருநங்கையர்களின் நலன் பேணும் நமது முதலமைச்சர்



திருநங்கைகளும் இந்த சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதால், அவர்களை மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்கும் வகையில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக 'தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியம் உருவாக்கப்பட்டு, திருநங்கையர்களின் நலன், சமூகப் பாதுகாப்பு, சமூக அங்கீகாரம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

திருநங்கையர்களின் நலனை மேம்படுத்தும் விதமாக, 'திருநங்கைகள்'' என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு, அவர்களது சுய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, அடையாள அட்டை வழங்குவது எளிமையாக்கப்பட்டதோடு, நலவாரியத்தின் வாயிலாக குடும்ப அட்டை, வீட்டுமனை பட்டா, குடியிருப்பு வீடுகள், தையல் இயந்திரம், உயர் கல்வி உதவித்தொகை, சுயஉதவி குழுக்கள் உருவாக்குதல் ஆகிய சேவைகளை பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டது.

அந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், திருநங்கையர் நலனில் தனிக்கவனம் செலுத்தி பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

திருநங்கையர்கள் சமுதாயத்தில் சுயமரியாதையோடு வாழ பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளன்று, திருநங்கையர்கள் நகரப் பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இத்திட்டத்தின் கீழ், 5.27 இலட்சம் பயணங்களை திருநங்கையர்கள் மேற்கொண்டுள்ளனர்.



மேலும்,

- ❖ கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை காலத்தில்
- ❖ முதற்கட்டமாக தலா ரூ.2,000 வீதம் 8,493 திருநங்கையர்களுக்கு ரூ.1.69 கோடி நிவாரண நிதியுதவி,
- ❖ இரண்டாம் கட்டமாக தலா ரூ.2,000 வீதம் 8,591 திருநங்கையர்களுக்கு ரூ.1.71 கோடி நிவாரண நிதியுதவி,
- ❖ 40 வயதிற்கு மேற்பட்ட 1,071 திருநங்கையர்களுக்கு தலா ரூ.1,000 வீதம் மாதாந்திர ஓய்வூதியம் வழங்க ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு,
- ❖ சுயமாக தொழில் தொடங்கிய 141 திருநங்கையர்களுக்கு மானியம் வழங்கிட ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு,
- ❖ திருநங்கையர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில், சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம் வாயிலாக திறன் பயிற்சி,
- ❖ தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியம் திருத்தியமைப்பு

என திருநங்கையர்களுக்கென சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநங்கைகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து, முன்மாதிரியாக திகழும் திருநங்கை ஒருவரை சிறப்பிக்கும் வகையில், 2022ஆம் ஆண்டிற்கான, சிறந்த திருநங்கை விருதினை விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை அ.மார்லிமா அவர்களின் 25 ஆண்டுகால சேவையைப் பாராட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 18.04.2022 அன்று, விருதுத்தொகை ரூ.1 இலட்சம் மற்றும் பாராட்டுச் சான்றிழை வழங்கி சிறப்பித்தார்.

“திருநங்கையர் கண்ணியம் காத்த முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய சமூகநீதிப் பாதையில் நடைபோடும் நமது அரசு திருநங்கையர், திருநம்பியர் உரிமை காக்க தொடர்ந்து உழைக்கும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள்துறை, சிறப்பு முயற்சிகள், சிறப்புத் திட்ட செயலாக்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்கள்

சட்டம் மற்றும் ஒழுங்கு

- தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையை நிரந்தரமாக மூடக்கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின்போது பதிவு செய்யப்பட்ட 38 வழக்குகள் ரத்து.
- இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 93 நபர்களுக்கு தலா 1 இலட்சம் மற்றும் சிறையில் இறந்த ஆயுள் தண்டனை கைதி பரத்ராஜ் என்பவரின் தாயாருக்கு ரூ.2 இலட்சம் நிவாரணத் தொகை.
- 38 வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களின் உயர் கல்விக்காகவும், வேலைவாய்ப்பிற்காகவும் "தடையில்லாச் சான்றிதழ்கள்".
- ஊடகவியலாளர்கள் மீது தொடரப்பட்ட 99 அவதூறு வழக்குகள் ரத்து.





அரசியல் ஓய்வூதியம்

- விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.18,000 ஆகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.9,000 ஆகவும் உயர்த்தப்பட்டு 961 நபர்கள் பயன்.
- வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியர் சகோதரர்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விசயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழித்தோன்றல் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் ரூ.9,000 ஆக உயர்த்தப்பட்டு 146 நபர்கள் பயன்.

காவல்துறை

- முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புப் பணியிலிருந்து பெண் காவலர்களுக்கு விலக்கு.
- சென்னை காவல் துறையில் மெரினா கடற்கரை உயிர் காப்பு பிரிவு துவக்கம்.
- புதிதாக உருவாக்கப்பட்ட ஆவடி மற்றும் தாம்பரம் ஆணையரகத்திற்கு ரூ.44.46 கோடி செலவில் 352 நான்கு சக்கர வாகனங்கள், 396 இரண்டு சக்கர வாகனங்கள்.
- ரூ.90 இலட்சம் செலவில் 38 மாவட்டங்கள் மற்றும் 7 மாநகரங்களில் உடற்பயிற்சிக் கூடங்கள்.
- ரூ.25 இலட்சம் செலவில் தனிச் செயலி மூலம் காவலர்கள் குறை தீர்க்கும் வசதி.
- இணையவழிக் குற்றங்களைப் புலனாய்வு செய்ய "மாநில இணையவழி குற்றப்புலனாய்வு மையம்" உருவாக்கம்.
- ரூ.8.42 கோடியில், குற்றங்களைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும் "தீவிர குற்றவாளிகள் தடுப்புப்பிரிவு" உருவாக்கம்.
- காவல் துறை, பொதுமக்களுக்கு இடையே உள்ள நல்லுறவை மேம்படுத்த புதியதாக "காவல் ஆணையம்".
- மகாபலிபுரம், கொடைக்கானல், மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் தலா இரண்டு சுற்றுலா காவல் அலகுகள் அமைக்கப்பட்டு சுற்றுலா காவல் துறையினருக்குத் தனிப்பயிற்சி.
- இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் வரையில் ஆளிநர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வு.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

- திருப்பூர் மாநகரத்திற்கு ரூ.11 கோடி செலவில் வான்நோக்கி நகரும் ஏணியுடன் கூடிய தீயணைப்பு மீட்பு ஊர்தி.
- பெருந்தீ விபத்துக்களின்போது அதிக அளவிலான தண்ணீர் தேவையினை கருத்தில் கொண்டு ரூ.16 கோடி செலவில் 20 தண்ணீர் லாரிகள்.

- ரூ.8.10 கோடி செலவில் தலைக்கவசத்துடன் கூடிய தீயிலிருந்து பாதுகாக்கும் 1,350 தற்காப்பு உடைகள்.
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களுக்கு ரூ.2.10 கோடி செலவில் பாதுகாப்பு உபகரணங்களுடன் கூடிய 3,000 மீட்பு உடைகள்.
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் பயன்பாட்டிற்கு ரூ.3.50 கோடி செலவில் 350 மூச்சுக் கருவிகள்.
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களுக்கு ரூ.9 கோடி செலவில் 10 சிறிய அவசரக்கால மீட்பு ஊர்திகள்.
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக ரூ.5.60 கோடி செலவில் 7 அதி உயர் அழுத்த நீர்த்தாங்கி வண்டிகள்.
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் ரூ.18.75 கோடி செலவில் 25 புதிய நீர்த்தாங்கி ஊர்திகள்.

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வுக் குழுமம்

- 444 சார்பு ஆய்வாளர்கள் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை.

சிறப்பு முயற்சிகள் துறை

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–IIஇன்கீழ், 3 வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ. நீளத்திலான கட்டுமானப் பணிகள் துவக்கம்.
- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–Iஇன் நீட்டிப்புத் திட்டத்தின்கீழ், திருவொற்றியூர் தேரடி மற்றும் விம்கோநகர் பணிமனை மெட்ரோ நிலையங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது.
- விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரையிலான சென்னை மெட்ரோ இரயிலின் நீட்டிப்புத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்க இறுதி நிலை அடைந்துள்ளது.
- கோயம்புத்தூர் பெருந்திரள் துரித போக்குவரத்து திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற உள்ளது.
- மதுரை பெருந்திரள் துரித போக்குவரத்து திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிமுடிவுற உள்ளது.
- இரண்டாம் நிலை நகரங்களான, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றிற்குப் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்புகளுக்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கான ஆயத்தப்பணிகள் துவக்கம்.
- கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கம் துவக்கம்.
- மெட்ரோ இரயில் நிலையங்களுக்கென தனியாக இணைப்புப் பேருந்து சேவைகள் துவக்கம்.
- சென்னை மத்திய சதுக்கத் திட்டத்தின்கீழ், பயணிகள் வசதிகளுடன் கூடிய நில மேம்பாடு





மற்றும் சுரங்க நடைபாதை பொது மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைப்பு.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

- ரூ.380.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,11,391 பயனாளிகளுக்கு தலா ரூ.1,500 வீதம் மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை.
- ரூ.1.56 கோடி செலவினத்தில் 1,656 நபர்களுக்கு ரூ.1,000 வீதம் உயர் ஆதரவு தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை.
- ரூ.70.76 கோடி மதிப்பீட்டில் 37,660 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள், சிறப்புச் சக்கர நாற்காலிகள், காதுக்கு பின்னால் அணியும் காதொளிக் கருவிகள் உள்ளிட்ட 24 வகையான உதவி உபகரணங்கள்.
- 23,326 மாணவர்களுக்கு ரூ.698.87 இலட்சம் கல்வி உதவித்தொகை.
- "தமிழ்நாடு 2021ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான தேர்வுகளை நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்" வெளியீடு.
- மனநலம் பாதிக்கப்பட்டுக் குணமடைந்து வீடு திரும்ப இயலாத 5 பராமரிப்பு மையங்களுக்கு ரூ.34.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு. 700 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.
- மாநில அரசு பதிவு செய்த 8,74,367 மாற்றுத் திறனாளிகளுக்கும் ஒன்றிய அரசால் வழங்கப்படும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை பெறுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு, இதுவரை 4,70,813 மாற்றுத்திறனாளிகளுக்கு ஒன்றிய அரசால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அரசுத்துறை / பொதுத்துறை நிறுவனம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை.
- அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களைக் கண்டறிந்து அப்பணியிடங்களில் தடையற்ற சூழலை உருவாக்கி நியமனம் செய்வதற்கென "சமவாய்ப்பு கொள்கை" 993 தனியார் நிறுவனங்களிலும் 2,059 தொழிற்சாலைகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான உகந்த பணியிடங்களாக 3,525 பணியிடங்கள் கண்டறியப்பட்டு, தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இதுவரை 538 மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தம்.
- தமிழக அரசின் அனைத்து சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் துணையாளர் ஒருவருடன் கட்டணமில்லாப் பயணம் மேற்கொள்ள அனுமதி.
- தேசிய மாற்றுத்திறனாளிகள் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுயதொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை திருப்பி செலுத்துபவர்களுக்கு, வட்டித் தொகை முழுவதும் அரசே செலுத்தும் திட்டத்தில், 5,613 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.26.12 கோடி கடனுதவி.

- சிறுதொழில்கள் மற்றும் பெட்டிக் கடைகள் நடத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.25,000 இதில் எது குறைவானதோ அத்தொகையினை மானியமாக வழங்கும் திட்டத்தில் 1,566 பயனாளிகளுக்கு ரூ.3.23 கோடி கடனுதவி.
- சுயதொழில் தொடங்குவதற்கென பெறப்பட்ட கடன் தொகையில் 5 சதவிகிதம் விளிம்புத் தொகையாக ரூ.4.37 இலட்சம் 35 மாற்றுத்திறனாளிகளுக்கு மானியம்.
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டத்தில் 61 மாற்றுத் திறனாளிகளால் பெறப்பட்ட கடன் தொகையில் ஐந்து சதவிகித பங்குத் தொகை ரூ.7.32 இலட்சம் அரசால் செலுத்தப்பட்டுள்ளது.
- 149 ஆவின் பாலகங்களை அமைக்க மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.74.50 இலட்சம் வைப்புத் தொகை.
- பூந்தமல்லி பார்வைக் குறைவுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியில் மாதம் ரூ.300 வீதம் உதவித் தொகையுடன் 17 நபர்களுக்குப் புத்தகம் கட்டுநருக்கான பயிற்சி.
- ரூ.37.38 இலட்சம் செலவில் 250 கை, கால் பாதிக்கப்பட்டோர் மற்றும் செவித்திறன் குறைவுடையோருக்காகத் தேசிய டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி.

முதல்வரின் முகவரித்துறை

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்கள் மீது 100 தினங்களுக்குள் உரியத் தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியை மெய்ப்பிக்கும் வகையில் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை" என்ற தனித்துறை உருவாக்கம்.
- இத்துறையின் மூலம், 22,24,833 மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 20,47,996 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன.
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலமாக 32,283 நிலப்பட்டாக்கள்.
- சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 30,455 நபர்களுக்கு ஓய்வூதியம்.
- ஊரக வளர்ச்சித்துறை மூலமாக சுமார் ரூ.544.27 கோடி மதிப்பில் 19,665 உட்கட்டமைப்புத் திட்டங்கள் அவற்றில் 9,444 தனிநபர் வீடு வழங்கும் திட்டம்.
- தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மூலமாக வேலைவாய்ப்பு கோரிய 2,254 நபர்களுக்குத் தனியார்த் துறை வேலைவாய்ப்பு 12,000 நபர்கள் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 3,000 நபர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
- 2 ஆண்டுகள் நடைபெற வேண்டிய இப்பணியானது மூன்றே மாதத்தில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.
- இச்சேவைகள் அனைத்தும் பொதுமக்களுக்குத் தொடரும் பொருட்டு, முதலமைச்சரின் தனிப்பிரிவு, முதலமைச்சரின் உதவி மையம் ஒருங்கிணைக்கப் பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு மற்றும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு "முதல்வரின் முகவரி" என்ற துறை உருவாக்கம்.

❖ ❖ ❖







சென்னை, அம்பத்தூர் T1 காவல் நிலையத்தில் ஆய்வு
– 15.04.2022



தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில்
காவலர் குடியிருப்பில் ஆய்வின்போது...– 29.04.2022



சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச்சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

மாண்புமிகு
நீர்வளத்துறை அமைச்சர்
திரு. துரைமுருகன்
அவர்கள்

நீர்வளத்துறை

- காவேரி டெல்டா குறுவை பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு, கடைமடைப் பகுதிகள்வரை பாசனத்திற்கு தேவையான தண்ணீர் வழங்கப்பட்டு, மிக அதிக அளவாக 4.29 இலட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை சாகுபடி.
- முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 94 நாட்கள் 136 அடியாகவும், தொடர்ந்து 18 நாட்கள் 142 அடியாகவும் இருந்தது.
- காவிரி டெல்டாப் பகுதிகளில் ரூ.66.90 கோடி மதிப்பீட்டில் 678 தூர்வாரும் பணிகள் 4,213 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டன.
- 2022–2023ஆம் ஆண்டில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா மாவட்டங்களில் 4,694 கி.மீ. நீளத்திற்கு 689 தூர்வாரும் பணிகள் தொடக்கம்.







- மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரைச் சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு வழங்கும் நீரேற்று திட்டம் 4,238 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதி செய்யும் வகையில் ரூ.565 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கம்.
- பெரம்பலூர் மாவட்டத்தில் 4,194 ஏக்கர் பாசன வசதிபெறும் வகையில் கொட்டரை கிராமத்தின் அருகே மருதையாற்றின் குறுக்கே ரூ.149.40 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி.
- சென்னையில் முன்பருவமழை பணிகள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டதால் வடகிழக்குப் பருவமழையால் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்திருக்கும் காலத்தினை குறைக்க வெற்றிகரமாக உதவியது. ரூ.14.21 கோடி செலவில் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பாண்டில் ரூ.435 கோடி மதிப்பீட்டில் வெள்ளத்தடுப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை.
- ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறையால் நீர் மேலாண்மையில் நாட்டிலேயே மூன்றாம் சிறந்த மாநிலமாக தமிழகம் அறிவிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டது.
- சர்வதேச குழு காலிங்கராயன் அணைக்கட்டு, கல்லணைக் கால்வாய் மற்றும் வீராணம் ஏரி ஆகிய 3 பாசனக் கட்டுமானங்களுக்கு உலக பாரம்பரிய நீர்ப்பாசன அமைப்பு விருதுகள்.
- நீர்வளத்துறை கிடங்குகள் மூலம் ஆற்று மணல் விற்பனை துவக்கம்.
- ரூ.270.38 கோடி செலவில் 60 நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் கட்ட ஆணை. ரூ.321.94 கோடி செலவில் 27 நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் கட்ட உத்தேசிப்பு.
- தமிழ்நாடு நீர்வளத் தகவல் மேலாண்மை அமைப்பை செயல்படுத்த உத்தேசிப்பு.
- தமிழ்நாடு செயற்கைக்கோள் சார்ந்த நீர்நிலைகள், தகவல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பு உருவாக்க உத்தேசிப்பு.

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

- தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவையொட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை, 02.08.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.
- தமிழக வரலாற்றில் முதல் முறையாக மின் நிதிநிலை அறிக்கைகள் (e-Budget) பேரவைக்கு அளிக்கப்பட்டது.
- ''காகிதமில்லா சட்டமன்றம்'' திட்டத்தினைச் செயல்படுத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கையடக்க தொடுதிரை கணினி மற்றும் சிம் கார்டுகள் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் 1921ஆம் ஆண்டு முதல் சட்டமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் ரூ.2.17 கோடியில் கணினிமயமாக்கத் திட்டம்.

- தூர்தர்ஷன் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் முதல் சேனல் மூலமாகப் பேரவை நிகழ்வுகளை நேரடி ஒளிபரப்பு செய்ய நடவடிக்கை.
- தமிழ்நாடு சட்டமன்ற 16ஆவது பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரை நேரடி ஒளிபரப்பு.
- 06.01.2022 மற்றும் 07.01.2022 ஆகிய இரண்டு நாட்களிலும் வினாக்கள்–விடைகள் நேரம் முதல்முறையாக நேரடி ஒளிபரப்பு. 07.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை நேரடி ஒளிபரப்பு. Youtube, Twitter, Facebook போன்ற சமூக ஊடகங்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறை மூலமாக வீடியோ தொகுப்பும் வழங்கப்பட்டது.
- 08.02.2022 அன்று நீட் தேர்வு விலக்கு தொடர்பாக நடைபெற்ற சிறப்புக் கூட்டம் முழுவதும் நேரடி ஒளிபரப்பு. 18.03.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மற்றும் 19.03.2022 அன்று சமர்ப்பிக்கப்பட்ட வேளாண் நிதிநிலை அறிக்கை நேரலையாக ஒளிபரப்பு. 21.03.2022 முதல் 23.03.2022 வரையிலான நிதிநிலை கூட்டத்தொடரின் வினாக்கள் நேரம் நேரலையாக ஒளிபரப்பு. 06.04.2022 அன்று முதல் நடைபெற்று வரும் தற்போதைய நிதிநிலை கூட்டத்தொடரின் வினாக்கள் நேரம் நேரலையாக ஒளிபரப்பு.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் நுழைவாயில் அருகில் புதிய ஆவின் பாலகம்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தை ஒட்டியுள்ள பகுதியில் ரூ.4.29 கோடி செலவில் இறகுப்பந்து விளையாட்டுக் கூடம், புதிய பூங்காக்கள், புதிய மழைநீர் கால்வாயுடன் கூடிய நடைபாதை, சுவாமி சிவானந்தா சாலை வசதி வாலாஜா சாலைகளை இணைக்கும் புதிய உட்புறச் சாலை வசதி.
- அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்புகள் ரூ.99.48 இலட்சம் செலவில் பழுதுநீக்கம் செய்யும் பணிகள்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தின் உபவசதிக் கட்டடத்தில் ரூ.1.83 கோடி செலவில் பழுது நீக்கும் பணிகள்.

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

- கனிமங்கள் மூலமாக ரூ.1,179.21 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- பயனற்றக் குவாரிகளை மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் பசுமை நிதியம் உருவாக்கம்.
- விவசாய நிலங்களை மேம்படுத்துவதற்கு மேல்மட்டத்திலுள்ள மண்ணை 1.5 மீட்டர் ஆழத்திற்கு அகற்றி விளைநிலங்களில் பயன்படுத்தவும், மிகையான மண்ணை செங்கல் சூளைக்குப் பயன்படுத்திடவும் அனுமதி.

❖ ❖ ❖





மேட்டூர் அணை செல்லும் வழியில்
பொதுமக்களிடம் குறைகேட்டல் – 12.06.2021



தூத்துக்குடி மாவட்டத்தில்
கல்லூரி மாணவியர்களுடன் கலந்துரையாடல் – 07.03.2022



மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு
அவர்கள்

நகராட்சி நிருவாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்

நகராட்சி நிருவாக இயக்குநரகம்

கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

- ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள்.
- "கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்" நகராட்சிகளில் ரூ.543.39 கோடி மதிப்பீட்டில் 597 பணிகள்.

நமக்கு நாமே திட்டம்

- நமக்கு நாமே திட்டத்தின்கீழ், மாநகராட்சிகளில் ரூ.24.65 கோடி மதிப்பீட்டில் 74 பணிகள், நகராட்சிகளில் ரூ.23.49 கோடி மதிப்பீட்டில் 190 பணிகள் அனுமதி பெறப்பட்டு, அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்.

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

- தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ.75 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,84,541 நபர்களுக்கு பணிகள் வழங்கப்பட்டு 1,21,280 மனிதசக்தி நாட்கள் உருவாக்கம்.



நூலகம்/அறிவு சார் மையங்கள்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், மூலதன மானிய நிதி, சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ், ரூ.87.2 கோடி மதிப்பீட்டில் 42 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள்.

நீர் நிலைகள் புதுப்பித்தல்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், நமக்கு நாமே திட்டம், அம்ரூத் 2.0, ஜெர்மன் வங்கி நிதியுதவி, மூலதன மானிய நிதி, 15ஆவது மத்திய நிதிக்குழுநிதியுதவியுடன் ரூ.300 கோடி மதிப்பீட்டில் 14 மாநகராட்சிகள் மற்றும் 121 நகராட்சிகளில் உள்ள 150 நீர்நிலைகள் புதுப்பிக்கும் பணிகள்.

மின் மயானம்

❖ ரூ.80.33 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலுள்ள 52 மயானங்களை மின் மயானங்களாக மாற்றும் பணிகள்.

பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள்

❖ தூய்மை இந்தியா திட்டம் 2.0வின்கீழ், ரூ.64.80 கோடி மதிப்பீட்டில் 162 சமுதாயக் கழிப்பிடங்கள், ரூ.81.96 கோடி மதிப்பீட்டில் 49 பொது கழிப்பிடங்கள் புதியதாகக் கட்டும் பணிகள். மூலதன மானிய நிதியின்கீழ் ரூ.17.52 கோடி மதிப்பீட்டில் 446 கழிப்பிடங்கள் புதுப்பிக்கும் பணிகள்.

தேக்கத் திடக் கழிவுகள் அகற்றுதல்

❖ மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளில் ரூ.70.75 கோடி மதிப்பில் 8 நகராட்சிகளில், ரூ.13 கோடி மதிப்பீட்டில் தேக்கத்திடக் கழிவுகள் அகற்றும் பணிகள்.

பூங்காக்கள் சீரமைத்தல்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், நமக்கு நாமே திட்டம், மூலதன மானிய நிதி, 15ஆவது மத்தியநிதிக்குழுநிதியுதவியுடன் 106 பூங்காக்கள் சீரமைக்கும் பணிகள்.

தெரு விளக்குகள்

❖ 11 மாநகராட்சிகள், 18 நகராட்சிகளில், மின் கம்பங்கள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்டு 12,710 புதிய தெரு விளக்குகள், 87 நகராட்சிகள் மற்றும் 4 மாநகராட்சிகளில் 3,11,601 விளக்குகள் ரூ.385.95 கோடி மதிப்பீட்டில் புதிய விளக்குகளாக மாற்றும் பணிகள். ரூ.75.30 கோடி மதிப்பீட்டில், 16 மாநகராட்சிகளில் மின் கம்பத்துடன் கூடிய 59,487 புதிய விளக்குகள் அமைக்கும் பணிகள்.

சந்தைகள்

❖ மூலதன மானிய நிதி, கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம் மற்றும் பொது நிதியின்கீழ், 11 புதிய சந்தைகள், கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பொது நிதியின்கீழ், ரூ.88.65 கோடி மதிப்பீட்டில் 19 சந்தைகள் மேம்பாடு.

சாலைகள்

❖ கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம், மூலதன மானிய நிதி, 15ஆவது மத்திய நிதிக் குழு மற்றும் மாதிரி நகர திட்டம் நிதியுதவியுடன் ரூ.277.66 கோடி மதிப்பீட்டில் 710 புதிய சாலைகள். ரூ.442.92 கோடி மதிப்பீட்டில் 538.23 கி.மீ. நீளத்திலான 3,046 சாலைகள் சீரமைக்கும் பணிகள்.

பேரூராட்சிகள் நிருவாக ஆணையரகம்

❖ நபார்டு நிதியுதவி திட்டத்தின்கீழ், ரூ.200.70 கோடி மதிப்பீட்டில் 192 சாலைப் பணிகள் மற்றும் 11 பாலங்கள் அமைக்கும் பணிகள்.

❖ தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், ரூ.82.99 கோடி மதிப்பீட்டில், 122.72 கிலோ மீட்டர் நீளத்திற்கு 175 சாலைப் பணிகள்.

❖ மூலதன மானியத்தின்கீழ், ரூ.223.16 கோடி மதிப்பீட்டில் 176 உட்கட்டமைப்புப் பணிகள்.

❖ இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி திட்டத்தின்கீழ், ரூ.74.39 கோடி மதிப்பீட்டில் 366 பணிகள்.

❖ 15ஆவது நிதி ஆணைய மானியத் திட்டத்தின் கீழ், ரூ.166.10 கோடி நிபந்தனை மானியம். ரூ.110.72 கோடி நிபந்தனையற்ற மானியத்தில் பணிகள்.

❖ அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ், மத்திய கண்காணிப்பு மற்றும் ஒப்புதல் அளிக்கும் குழு மூலம், 11,253 புதிய பயனாளிகள் கண்டறியப்பட்டு பயனாளிகளுக்குப் பணி ஆணை.

❖ சாலையோர வியாபாரிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ்,

நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சியில் 228 சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் தள்ளு வண்டிகள்.

- பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகளின் ஆத்ம நிர்பார் நிதியின்கீழ், 61,611 சாலையோர வியாபாரிகளின் விபரங்கள் PM-SVANidhi இணையதளத்தில் பதிவேற்றம்.
- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.473.09 கோடி மதிப்பீட்டில் 800 பணிகள்.
- நமக்கு நாமே திட்டத்தின்கீழ், ரூ.12.76 கோடி மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல், நீர்நிலைகள் புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல் உட்பட 134 பணிகள்.
- நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ.27.75 கோடி மதிப்பீட்டில் 83,757 பணி செய்ய விருப்பமுள்ள பயனாளிகள் பட்டியலிடப்பட்டு 37 பேரூராட்சிகளில் 192 பணிகள்.
- அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், ரூ.1,695.58 கோடி மதிப்பீட்டில் 119 பேரூராட்சிகளில் குடிநீர் பணிகள், பூங்கா மேம்பாடு மற்றும் நீர்நிலைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்.
- கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.5.05 கோடி மதிப்பீட்டில் மலைப்பிரதேசப் பகுதிகளுக்கான சாலை விபத்து தடுப்பு அமைப்பு, பொதுநிதியின்கீழ், ரூ.2.39 கோடி மதிப்பீட்டில் பணிகள்.
- தூய்மை இந்தியா திட்டம் – 2.0இன்கீழ், ரூ.16.81 கோடி மதிப்பீட்டில் 23 பேரூராட்சிகளில் உயிரி அகழ்வுப் பணிகள் மேற்கொள்ள 2ஆவது மாநில உயர்மட்ட குழுவின் ஒப்புதல்.
- கொரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுக்க ரூ.7.07 கோடி நிதியுதவியுடன் அனைத்து பேரூராட்சிகளிலும் முன்னெச்செரிக்கை நடவடிக்கைகள்.
- சிறப்பாகச் செயல்பட்ட கல்லக்குடி, மேல்பட்டாம்பாக்கம் மற்றும் கோட்டையூர் பேரூராட்சிகளுக்குச் சுதந்திர தின விழாவில் "மாண்புமிகு முதலமைச்சர் விருது".
- பேரூராட்சிகளில் பணிபுரிந்த காலத்தில் இயற்கை எய்திய 46 அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

- கடந்த 40 ஆண்டுகளில் முதன்முறையாக 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நாளொன்றுக்குச் சராசரியாக 1,000 மில்லியன் லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம்.
- பருவ மழைக்கு முன்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து பகுதிகளிலும் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகளைத் தூர்வாரும் பணிகள்.
- 801 தெருக்களில் 258 தூர்வாரும் இயந்திரங்கள், 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 54 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்களைக் கொண்டு முழுமையாகத் தூர்வாரும் பராமரிப்புப் பணிகள்.
- 7,228 எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகள், 17,404 எண்ணிக்கையிலான கழிவுநீர் இணைப்புகள்.
- குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் 8,81,000 இலவச நடைகள் குடிநீர் விநியோகம்.
- வடகிழக்கு பருவ மழையின்போது சென்னை மாநகரின் பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீரை விரைந்து வெளியேற்றுவதற்கு 59 நீர் உறிஞ்சும் வாகனங்கள், 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 260 தூர்வாரும் ஆட்டோக்கள் 2,000 களப்பணியாளர்களைக் கொண்டு நிவாரணப்பணிகள்.
- பருவமழையின்போது வீடுகளுக்குள் பெருக்கெடுக்கும் கழிவுநீரைக் கட்டுப்படுத்த பிற மாவட்டங்களிலிருந்து 110 கழிவுநீர் வாகனங்கள், 219 நீர் வெளியேற்றும் பம்ப் செட்கள் கொண்டு கழிவுநீரை அகற்றும் பணிகள்.
- ரூ.107.74 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் பணிகள் நிறைவேற்றம்.
- ரூ.25.52 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர், நிலமங்கை நகர் கழிவுநீரிறைக்கும் நிலையத்தில் கூடுதல் கழிவு நீரிறைக்கும் நிலையம் அமைப்பதற்கான பணிகள்.
- ரூ.256.90 கோடி மதிப்பீட்டில் மடிப்பாக்கம் பகுதிக்கான புதிய பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள்.



- ரூ.75 கோடி மற்றும் ரூ.44 கோடி மதிப்பீட்டில் நீலாங்கரை மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளுக்கு முறையாகக் குடிநீர் வழங்கல் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை திருத்தியமைப்பு.
- ரூ.2,553.10 கோடி மதிப்பீட்டில் 16 பகுதிகள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை திருத்தியமைப்பு.
- ரூ.123.19 கோடி மதிப்பீட்டில் அடையாறு ஆற்றில் 39 இடங்களில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க 7 இடைமறித்தல், திசை திருப்பும் பணிகள், 2 முன் மாதிரி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணிகள். 2 திட்டப்பணிகள் முடிவுபெற்று 12 இடங்களில் கழிவுநீர் கலப்பது தடுப்பு.
- ரூ.364.80 கோடி மதிப்பீட்டில் அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாயின் வடிகால்களில் கழிவுநீர் வெளியேறுவதைத் தடுக்கும் 36 பணிகள்.
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், 543 மனுக்கள் மீது தீர்வு.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்கள்

- ரூ.140.22 கோடி மதிப்பீட்டில், முசிறி, தாத்தையங்கார்பேட்டை, துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியங்களிலுள்ள 1.59 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.28.24 கோடி மதிப்பீட்டில், ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் 52,000 மக்கள் பயன்பெறும் வகையில், 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.275.11 கோடி மதிப்பீட்டில், வேலூர் மாநகராட்சியில் 7.20 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.
- ரூ.241 கோடி மதிப்பீட்டில் அன்னூர், மூப்பேரிபாளையம், அவிநாசி, சூலூர் மற்றும் பல்லடம், திருப்பூர் ஊராட்சி பகுதிகளைச் சார்ந்த 94,000 மக்கள் பயன்பெறும் வகையில், 155 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.8.10 கோடி மதிப்பீட்டில், ஓசூர் ஒன்றியத்திலுள்ள 17,000 மக்கள் பயன்பெறும் வகையில், நாகொண்டபள்ளி மற்றும் 27 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.8.46 கோடி மதிப்பீட்டில், கெலமங்கலம் ஒன்றியத்திலுள்ள 21,000 மக்கள் பயன்பெறும் வகையில், ராயக்கோட்டை மற்றும் 28 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.81.41 கோடி மதிப்பீட்டில், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 73,000 மக்கள் பயன்பெறும் வகையில், 274 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.99.24 கோடி மதிப்பீட்டில், பல்லடம் மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த

1.92 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 155 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ ரூ.69.31 கோடி மதிப்பீட்டில், பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 70,000 மக்கள் பயன்பெறும் வகையில், 212 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ ரூ.185.24 கோடி மதிப்பீட்டில், நாமக்கல் நகராட்சியில் 1.59 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

❖ ரூ.224 கோடி மதிப்பீட்டில், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பெருந்துறை மற்றும் 7 பேரூராட்சிகள் மற்றும் 547 வழியோர ஊரக குடியிருப்புகளில் 4.49 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ ரூ.85.75 கோடி மதிப்பீட்டில், திருப்பூர் மாவட்டம், 5 பேரூராட்சிகள் மற்றும் மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 318 குடியிருப்புகளில் 3.37 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ ரூ.9.21 கோடி மதிப்பீட்டில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 17 குடியிருப்புகள் மற்றும் அண்ணாகிராமம் ஒன்றியத்தைச் சார்ந்த 18 குடியிருப்புகளில் 42,000 மக்கள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ ரூ.9.90 கோடி மதிப்பீட்டில், கிருஷ்ணகிரி ஒன்றியத்தைச் சார்ந்த வேலகலஹல்லி மற்றும் 39 குடியிருப்புகளில் 11,000 மக்கள் பயன்பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

❖ ரூ.9.62 கோடி மதிப்பீட்டில், பாலசமுத்திரம் பேரூராட்சியில் 16,000 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

நிறைவேற்றப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

❖ ரூ.34.39 கோடி மதிப்பீட்டில், திருச்சிராப்பள்ளி, மணச்சநல்லூர் பேரூராட்சியில் 36,000 மக்கள் பயன்பெறும் வகையில், பாதாளச் சாக்கடைத் திட்டம்.

❖ ரூ.21.58 கோடி மதிப்பீட்டில், திருச்சிராப்பள்ளி எஸ்.கண்ணனூர் பேரூராட்சியில் 18,000 மக்கள் பயன்பெறும் வகையில், பாதாளச் சாக்கடைத் திட்டம்.

❖ ரூ.35 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர், வல்லம் பேரூராட்சியில் 20,000 மக்கள் பயன்பெறும் வகையில் பாதாளச் சாக்கடைத் திட்டம்.

❖ ரூ.51.50 கோடி மதிப்பீட்டில், ஈரோடு, பெருந்துறை பேரூராட்சியில் 33,000 மக்கள் பயன்பெறும் வகையில், பாதாளச் சாக்கடைத் திட்டம்.

❖ ரூ.95 கோடி மதிப்பீட்டில், தூத்துக்குடி மாநகராட்சியில் 2.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், பாதாளச் சாக்கடைத் திட்டம்.

புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

❖ ரூ.2,327.53 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை, திருநெல்வேலி, நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த 1 நகராட்சி, 8 பேரூராட்சிகள் மற்றும் 1,442 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 11.28 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிருவாக ஒப்புதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி

பொதுச் சுகாதாரத் துறை

கோவிட்–19 தொற்றினைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

❖ கொரோனா பெருந்தொற்று முதல் அலையின்போது, சென்னை மாநகராட்சியின் பல்வேறு நோய்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால், 2,393 ஆக இருந்த தினசரி நோய்த்தொற்று 50 ஆகக் குறைவு.

❖ கொரோனா பெருந்தொற்று இரண்டாவது அலையின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆக்சிஜன் படுக்கைகள் பற்றாக்குறை, 108 ஆம்புலன்ஸ் பற்றாக்குறை, கோவிட்–19 தடுப்பூசிகள் பற்றாக்குறை போன்ற சவால்களை எதிர்கொண்டுத் தீர்வு.

❖ இரண்டாம் அலையைக் கட்டுப்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி தனித்துவமான நடவடிக்கைகள் எடுத்ததற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வெகுவாகப் பாராட்டினார்.

- நோய் அறிகுறி உள்ளவர்களுக்குப் பரிசோதனை, நோய் பாதிக்கப்பட்டோருக்கு வீட்டிலேயே வகைப்படுத்துதல், நோய் தடுப்பு அமலாக்க நடவடிக்கைகள், தீவிர கோவிட் தடுப்பூசி செலுத்தும் பணி போன்ற தொடர் நடவடிக்கையினால் கொரோனா நோய்த் தொற்றினால் ஏற்பட்ட இறப்பு 3.66 சதவிகிதத்திலிருந்து 1.20 சதவிகிதமாகக் குறைப்பு.
- பெருநகர சென்னை மாநகராட்சி இரண்டாம் அலையின்போது 21 கோவிட் வகைப்படுத்தல் மையங்கள், 21 கோவிட் பராமரிப்பு மையங்கள், 952 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள், மூன்றாம் அலையின்போது 21 கோவிட் வகைப்படுத்தல் மையங்கள் மற்றும் 5 கோவிட் பராமரிப்பு மையங்கள் செயல்பாடு.
- கொரோனா நோய்த்தொற்று மூன்றாம் அலையின்போது பெருநகர சென்னை மாநகராட்சி கொரோனா நோயாளிகளை வீட்டிலேயே கண்காணித்து, மருந்து கைப்பைகளை வழங்க 1,535 கோவிட் தன்னார்வலர்கள் பணியமர்த்தம்.

கோவிட் தடுப்பூசி செலுத்துதல்

- 54,89,743 பயனாளிகளுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 46,32,288 பயனாளிகளுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசியும் செலுத்தப்பட்டன.
- காப்பகங்களில் தங்கியுள்ள 21,558 மாற்றுத்திறனாளிகளுக்குச் சிறப்பு முகாம்கள் மூலம் கோவிட் தடுப்பூசி.
- 80 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அவர்களின் வீட்டிற்கேச் சென்று தடுப்பூசி.
- சிறப்புத் தடுப்பூசி முகாம்கள் மூலம் 17,857 கர்ப்பிணிகளுக்கும், 12,051 பிரசவித்த தாய்மார்களுக்கும் கோவிட் தடுப்பூசி.
- ஒவ்வொரு வாரமும் 1,600 இடங்களில் தடுப்பூசி முகாம்கள்.
- 28 மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு, 37,11,689 நபர்கள் பயன்.
- 15–18 வயதிற்குட்பட்டவர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டு, 3,84,194 மாணவர்கள் பயன்.
- முன்களப்பணியாளர்களுக்கு, 60 வயதிற்கு மேற்பட்ட இணை நோய்கள் உடையவர்களுக்கு, முன்னெச்சரிக்கை தடுப்பூசி செலுத்தப்பட்டு, 1,49,874 நபர்கள் பயன்.

டயாலிஸிஸ் மையங்கள்

- சிறுநீரகம் செயலிழந்து உள்ள நோயாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், சென்னையில் 6 இடங்களில் தொடங்கிய டயாலிஸிஸ் மையங்களில் உள்ள 68 டயாலிஸிஸ் இயந்திரங்களின் மூலம் 518 நபர்கள் பயன்.

பூச்சித் தடுப்பு பிரிவு

- பறக்கும் கருவிகள் மூலம் கால்வாய்கள் மற்றும் நீர்வழிப்பாதைகளில் கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணி.
- தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் பணிபுரியும் மலேரியா பணியாளர்களுக்கு இலவசமாகச் சீருடைகள் மற்றும் தொப்பிகள்.
- கிருமி நாசினி தெளிக்க அதிவேக திறன் கொண்ட 2 Cold fill Nebulizer/Atomiser மின் தெளிப்பான் கொள்முதல்.

கால்நடை மருத்துவம்

நாய் இனக்கட்டுப்பாடு திட்டம்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் பெருகிவரும் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த 3 இனக்கட்டுப்பாடு மையங்கள்.
- 1913 இலவச அழைப்பின் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகாரின் அடிப்படையில் மற்றும் அதிகமான நாய்கள் தொல்லை இடங்களில் 16 தெருநாய்கள் பிடிக்கும் வாகனங்கள் மூலம் 17,556 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, நாய்களுக்கு இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்கடி தடுப்பூசி.
- 14,627 தெருநாய்களுக்கு நாய் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை. 200க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு ரேபிஸ் கடி நோய் தடுப்பூசி.

சுற்றித் திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துதல்

- சென்னை கால்நடைகளால் ஏற்படும் போக்குவரத்து தொல்லைகளைக் கட்டுப்படுத்த மாடுபிடிக்கும் வாகனத்துடன் மாடுகளைப்

பிடிக்க, சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்கள் அடங்கிய குழு.

❖ தெருக்களில் சுற்றித் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு 'ஜி' மற்றும் 'டி' மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்டு, பராமரிப்பு செலவு மற்றும் அபராதத் தொகை ரூ.1,550 கால்நடை உரிமையாளர்களுக்கு விதிப்பு.

❖ 3,208 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.35.14 இலட்சம் அபராதம்.

செல்லப் பிராணிகள் சிகிச்சை மையம்

❖ சென்னையில் 4 செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களில் 16,957 நாய்களுக்கு இலவச சிகிச்சை.

பிறப்பு மற்றும் இறப்பு

❖ பிறப்பு இறப்பு பதிவுகளை இணையதளத்தின் வாயிலாகக் கிடைக்க வழிவகை.

❖ 20,50,753 பிறப்பு சான்றிதழ்கள், 33,03,188 இறப்பு சான்றிதழ்கள் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்யப்பட்டு பயனாளிகள் பயன்.

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம்

❖ தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் மூலம் 2025க்குள் காசநோயினை ஒழிக்கத் திட்டம். 36 காசநோய் மையங்கள். 162 நிருணயிக்கப்பட்ட நுண்ணோக்கி மையங்கள், 13 CBNAAT மையங்கள் மற்றும் 13 TRUNAT மையங்கள்.

❖ தனியார் மருத்துமனைகளில் கண்டறியப்படும் நோயாளிகளுக்கும் இலவச பரிசோதனை சேவைகள்.

❖ பெருநகர சென்னை மாநகராட்சியில் ஊடுகதிர் வசதிகள் கொண்ட 7 நடமாடும் ஆய்வுக்கூடங்கள் வாயிலாக 10,548 நபர்களுக்குக் காசநோய் கண்டறியப்பட்டு, 3,626 நோயாளிகளுக்குக் காசநோய்க்குச் சிகிச்சை. 184 நோயாளிகளுக்கு பன்மருந்து எதிர்ப்புக் காசநோய்க்கான சிகிச்சை.

சென்னை மாவட்ட பார்வை இழப்புத் தடுப்பு சங்கம்

❖ பார்வை இழப்பு தடுப்புத் திட்டத்தில் 43 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கண் பரிசோதனை. 2025க்குள் பார்வை இழப்பின் விகிதத்தை 0.25% ஆகக் குறைக்கத் திட்டம்.

❖ அரசு மற்றும் அரசு உதவி பெரும் பள்ளி மாணவர்களுக்குப் பார்வைத் திறன் குறைபாட்டினை சரிசெய்ய இலவசக் கண்ணாடிகள்.

❖ 9,079 கண்புரை அறுவை சிகிச்சைகள் கண் வங்கிகள் மூலம் 1,408 கண்கள் சேகரிப்பு.

தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்டம்

❖ தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்டம் வழியாக 140 நகர்ப்புர ஆரம்பச் சுகாதார மையங்கள், 16 நகர்ப்புர சமுதாய சுகாதார நிலையங்கள், 3 அவசரக் கால மகப்பேறு மருத்துவமனைகள்.



- 159 சுகாதார நிலையங்களில் 81,52,824 பயனாளிகள் சிகிச்சை. பிரசவித்த 11,546 தாய்மார்களில் 5,485 தாய்மார்களுக்கு அறுவை சிகிச்சை, 6,061 சுகப்பிரசவம். 5,355 பயனாளிகளுக்குக்கருத்தடை அறுவைசிகிச்சை.
- 39 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் 9 நகர்ப்புர சமுதாய சுகாதார நிலையங்கள் "KAYAKALP" விருதின் வெற்றியாளராகவும், 5 நகர்ப்புர ஆரம்பச் சுகாதார மையங்கள் இந்திய அரசாங்கத்தால் தேசிய தர உறுதி தரநிலை சான்றிதழுக்காகத் தேர்ந்தெடுப்பு.

சிறப்பு சேவைகளுடன் கூடிய பல்நோக்கு மருத்துவமனை மையங்கள்

- நகர்ப்புர மக்கள் பயனடையும் வகையில் பல சிறப்பு மருத்துவர் சேவைகளுடன் 36 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களில் "வெளிநோயாளிகள் சிறப்பு மருத்துவமனை".
- "நிலையான நாட்கள் நிலையான சிறப்புச் சிகிச்சை" திட்டத்தில் மாலை 4.30 முதல் 8.30 மணிவரை மருத்துவ ஆலோசனை. சிகிச்சைகள் மற்றும் ஆய்வக ஆய்வுகள் ஆகிய சேவையின் மூலம் 35,394 நோயாளிகள் பயன்.

மக்களைத் தேடி மருத்துவம் (MTM)

- 15 மண்டலங்களிலும் தமிழ்நாடு பெண்கள் மேம்படுத்தப்பட்ட கழகம் மூலம் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம்.
- நகர்ப்புர மக்களுக்கு வீடு தேடித் தொற்றாத நோய் கண்டறிதல், மருந்துகளை விநியோகிப்பதற்கும், நோய்த்தடுப்பு சிகிச்சை வழங்குவதற்கும் 15 மொபைல் குழுக்கள் செவிலியருடன் உருவாக்கப்பட்டு உடற்பயிற்சி சிகிச்சை, நோய்த்தடுப்பு மற்றும் பெரிட்டோனியல் டயாலிசிஸ் சேவைகள்.
- 51,257 உயர் இரத்த அழுத்த நோயாளிகள், 42,578 நீரிழிவு நோயாளிகள், 49,277 உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோயாளிகளுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.
- 8,852 நோய்த்தடுப்பு, 10,055 உடற்பயிற்சி சிகிச்சை, 21 பெரிட்டோனியல் டயாலிசிஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சை.

சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்கள்

- நகர்ப்புரங்களில் சுகாதாரப் பராமரிப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, ரூ.88.30 கோடி செலவில் 15ஆவது நிதி ஆணைய மானியத்தின்கீழ், 140 நகர்ப்புர சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்கள்.

அம்மா உணவகம்

- அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் 402 அம்மா உணவகங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.
- அம்மா உணவகங்கள் மூலமாக 3.9 இலட்சம் பயனாளிகள் பயன்.
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டடத் தொழிலாளர்களுக்கு மூன்று வேளை இலவச உணவு வழங்கும் திட்டத்தில் 54,664 பயனாளிகள் பயன்.
- கட்டுமானத் தொழிலாளர்கள் பணிபுரியும் இடத்திலேயே தொடங்கப்பட்ட நடமாடும் அம்மா உணவகம் திட்டத்தில் 1,30,015 பயனாளிகள் பயன்.
- மழைக்காலத்தில் அனைத்து அம்மா உணவகங்களில் இலவசமாக உணவுகள் வழங்கப்பட்டு 13,68,385 பயனாளிகள் பயன்.

வீடற்றோருக்கான காப்பகங்கள்

- 42 வீடற்றோருக்கான காப்பகங்கள், 13 சிறப்புக் காப்பகங்கள் வெற்றிகரமாக இயக்கம். கூடுதலாக 29 காப்பகங்கள் திறக்க நடவடிக்கை.
- காப்பகங்களில் தங்கியுள்ள 1,765 பயனாளிகளில், 1,312 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்.
- கோவிட் – 19 தடுப்பூசி முதல் தவணையில் 1,091 நபர்களுக்கும், இரண்டாம் தவணையில் 843 நபர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு – DAPCU

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 26 ICTC மையங்கள் மற்றும் 10 STI/RTI கிளினிக் வாயிலாக 840 நபர்களுக்கு எச்ஐவி நோய் கண்டறியப்பட்டு சிகிச்சை.
- 7,452 நபர்களுக்கு Anti Retroviral Treatment சிகிச்சை.
- பொதுமக்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து இங்கு பணிபுரியும் 20,000 நபர்களுக்கு நோயைப் பற்றிய விழிப்புணர்வு மருத்துவ முகாம்.

மருத்துவ சேவைகள் துறை

- 22 மெகா கோவிட் தடுப்பூசி முகாம்களின் மூலம் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முதல் தவணையில் – 54,89,743 நபர்களுக்கும், இரண்டாம் தவணையில் – 46,32,288 நபர்களுக்கும், 15 முதல் 18 வயது வரை முதல் தவணையில் – 2,19,977 நபர்களுக்கும், இரண்டாம் தவணையில் – 1,64,217 நபர்களுக்கும், முன்னெச்சரிக்கை தவணையில் 1,49,874 நபர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.
- 98 சதவிகித குழந்தைகளுக்கு முழுமையான தடுப்பூசி.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தில் 69% பயனாளிகள் பயன்
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி திட்டத்தில் 55 நபர்களுக்கு 440 கிராம் தங்க நாணயம்.
- ஜனனி சுரக்க்ஷா யோஜனா நிதியுதவி திட்டத்தில் தலா ரூ. 600 வீதம் 4,745 பயனாளிகளுக்கு ரூ.28.47 இலட்சம் நிதியுதவி.

கல்வித்துறை

- சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 1,15,580 ஆக உயர்வு.
- 32 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் பயிலும் 5,130 மாணவ, மாணவியர்களில் 35 மாணாக்கர்கள் 91 சதவிகித மதிப்பெண்களுக்கு அதிகமாகவும், 641 மாணாக்கர்கள் 81 சதவிகித மதிப்பெண்களுக்கு அதிகமாகவும் பெற்றனர்.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.67.83 கோடி செலவில் 22 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அனைத்து பள்ளிகளில் சீர்மிகு வகுப்பறைகள்.
- நிர்பயா திட்டத்தின்கீழ், ரூ.23.66 கோடி செலவில் 132 பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளின் நலனுக்காகக் கழிப்பறை வசதிகள் மற்றும் பெண் குழந்தைகள் சுகாதாரம் மேம்படுத்த 159 பள்ளிகளுக்குப் பாதுகாப்புடன் நாப்கின்களை பராமரிக்கும் அலமாரிகள்.
- நிர்பயா திட்டத்தின்கீழ் ரூ.5.47 கோடி செலவில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்த 159 பள்ளிகளில் கண்காணிப்புக் கேமராக்கள்.
- நிர்பயா திட்டத்தின்கீழ், ரூ.6.91 கோடி செலவில் 93 பள்ளிகளில் பெண்குழந்தைகளின் உடல் திறனோடு பல்வேறு போட்டிகளில் பங்குபெறப் பாதுகாப்பான விளையாட்டுத் திடல்கள் / மைதானம்.
- ரூ.3.59 கோடி செலவில் இரண்டு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளிகள் தொடக்கம்.
- பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு ரூ.9.80 கோடி செலவில் Smart City திட்டத்தின் வாயிலாக 10,279 சிறந்த சாய்வு இருக்கைகள்.
- ரூ.1.50 கோடி செலவில் 2,000 ஆசிரியர்களுக்கான ICT பயிற்சி.
- ரூ.2.45 கோடி செலவில் சென்னை பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், உதவி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மூத்த ஆசிரியர்களுக்கான தலைமைத்துவ வளர்ச்சிப் பயிற்சி.
- ரூ.59,000 செலவில் சென்னை பள்ளிகளுக்கான SMS, LRMS அமைப்பு மேம்பாடு பயிற்சி.
- நகர முதலீடுகள் புதுமை, ஒருங்கிணைத்தல் மற்றும் நிலைத்திருத்தல் முன்முயற்சி திட்டத்தின்கீழ், 18 வளாகங்களில் 28 பள்ளிகளை "மாதிரி மற்றும் சீர்மிகு" பள்ளிகளாகப் பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து ரூ.95.25 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்கத் திட்டம். சீர்மிகு சென்னை நிறுவனம் ரூ.19.05 கோடி பங்களிப்பு.
- மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற தொழில் பயிற்சி நிறுவனத்தின் மூலம் தொழிற்கல்வி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு.
- மூன்று இடங்களில் இயங்கும் சமுதாய கல்லூரிகளின் மூலம் மென்பொருள் கணினி, சுகாதார உதவியாளர்கள், துணை மருத்துவ படிப்புகள், அடுமனை & இனிப்பு தயாரித்தல் மற்றும் சணல் பை உற்பத்தி செய்தல் போன்ற பயிற்சிகள்.



திடக்கழிவு மேலாண்மைத் துறை

- பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.350.65 கோடி மதிப்பீட்டில் பல ஆண்டுகளாகக் குவிந்துள்ள 3.6 இலட்சம் கனமீட்டர் குப்பை திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து (Bio-mining) பயனுள்ள பொருட்களைப் பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணி.
- கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாகக் குவிந்துள்ள திடக்கழிவுகளை அகழ்ந்தெடுத்து (Bio-mining) பயனுள்ள பொருட்களைப் பிரித்தெடுத்தல் மற்றும் சீரமைத்தல் பணிக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணிகள்.

மழைநீர் வடிகால் துறை

ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி (கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதி)

- கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால், 769 கி.மீ. நீளத்தில் ரூ.3,220 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதியின்கீழ் 46 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று, ரூ.335 கோடி செலவினத்தில் 16.50 சதவிகிதப் பணிகள் நிறைவு. அம்பத்தூர், மணலி, மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதியில் வாழும் 30 இலட்சம் மக்கள் பயன்.

ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி (கோவளம் வடிநிலப் பகுதி)

- கோவளம் வடிநிலப் பகுதியில், M1, M2 மற்றும் M3 என்ற திட்டக் கூறுகளில் ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் 360 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்புகள்.
- முதற்கட்டமாக ரூ.150 கோடி மதிப்பீட்டில் 39.78 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோர, ஜெர்மன் வங்கியின் அனுமதிக்காக அனுப்பி வைப்பு.
- இரண்டாம் கட்டமாக 9 சிப்பங்களில் ரூ.464.43 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க, ஒப்பந்தப்புள்ளிகள் கோர KfW வங்கியின் அனுமதிக்காக அனுப்பி வைப்பு,
- M3 திட்டக்கூறு பணிகள் 14 சிப்பங்கள் ரூ.270.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் ஆலந்தூர் மண்டலப் பகுதியில் வாழும் 8 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

சிதிலமடைந்த மழைநீர் வடிகால் இடித்து புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் விடுபட்ட இடங்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி – உலக வங்கி நிதி

- தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP) மூலம் உலக வங்கி நிதியின்கீழ், மழைநீர் வடிகால்கள் அமைப்பதற்கு

ரூ.120 கோடியில் மேற்கொள்ள ஒப்புதல். 39 சிப்பங்கள் 40.92 கி.மீ. நீளத்திற்கு ரூ.109.93 கோடி மதிப்பீட்டில் பணிகள். 10 சதவிகிதப் பணிகள் நிறைவு.

- மேலும், 4 சிப்பங்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 2 சிப்பங்களுக்குப் பணி ஆணை. 2 சிப்பங்கள், மறு ஒப்பந்தப்புள்ளிகள் பெற நடவடிக்கை.

உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின்கீழ் மழைநீர் வடிகால் அமைத்தல்

- ரூ.26.28 கோடி மதிப்பீட்டில் 9.81 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.

தமிழக அரசின் மூலதன மானிய நிதியின்கீழ் மழைநீர் வடிகால் அமைத்தல்

- ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் 2.05 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், மழைநீர் வடிகால் அமைத்தல்

- சர்வதேசத் தரத்திற்குச் சென்னை மாநகரை உயர்த்த சிங்காரச் சென்னை 2.0 திட்டம்.
- சிங்காரச் சென்னை 2.0 திட்ட நிதியின்கீழ், ரூ.186.47 கோடி மதிப்பீட்டில் 45.23 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்.
- ரூ.70 கோடி மதிப்பீட்டில் 20.15 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திடம் (TUFIDCO) ஒப்புதலுக்குச் சமர்ப்பிப்பு.

நீர்நிலைகளைப் புனரமைத்து புத்துயிர் அளித்தல்

- நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க 20 நீர்நிலைகளை ரூ.200 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கத் தேர்வு. முதற்கட்டமாக 2 நீர்நிலைகளைச் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ1.85 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க ஆய்வு.
- 7 நீர்நிலைகளுக்கான மதிப்பீடுகள் TUFIDCO நிறுவனத்திடம் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், புனரமைக்க உயர்மட்டக் குழு ஒப்புதல்.
- நமக்கு நாமே திட்டத்தின்கீழ், 2 நீர்நிலைகள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி.

பேருந்து சாலைகள் துறை

- தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ், ரூ.100.13 கோடி மதிப்பீட்டில் 103.66 கி.மீ. நீளமுடைய 149 சாலைப் பணிகள்.
- சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ், ரூ.84.57 கோடி மதிப்பீட்டில் 34.83 கி.மீ. நீளமுடைய 57 சாலைப் பணிகள்.
- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ், ரூ.68.65 கோடி மதிப்பீட்டில் 65.51 கி.மீ. நீளமுடைய 57 நடைபாதைப் பணிகள். ரூ.9.08 கோடி மதிப்பீட்டில் 9.48 கி.மீ. நீளமுடைய 19 சாலைப் பணிகள்.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.34.37 கோடி மதிப்பீட்டில் 36.62 கி.மீ. நீளமுடைய 55 சாலைப் பணிகள்.

உட்புறச் சாலைகள்:

- தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், ரூ. 46.76 கோடி மதிப்பீட்டில் 83.41 கி.மீ. நீளத்தில் 539 உட்புறச் சாலைப் பணிகள்.
- சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.43.12 கோடி மதிப்பீட்டில் 82.15 கி.மீ. நீளத்தில் 619 உட்புறச் சாலைப் பணிகள்.
- தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ், ரூ.19.15 கோடி மதிப்பீட்டில் 46.57 கி.மீ. நீளத்தில் 264 உட்புறச் சாலைப் பணிகள்.
- சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ், ரூ.68.86 கோடி மதிப்பீட்டில் 148.24 கி.மீ. நீளத்தில் 979 உட்புறச் சாலைப் பணிகள்.
- மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின்கீழ், ரூ.20.18 கோடி மதிப்பீட்டில் 35.53 கி.மீ. நீளமுடைய 214 உட்புறச் சாலைப் பணிகள்.

பாலங்கள் துறை

- ரூ.242.69 கோடி மதிப்பீட்டில் பாலம், மேம்பாலம், இரயில்வே மேம்பாலம், நடை மேம்பாலம், பாலப்புனரமைக்கும் பணி என 11 பணிகள்.
- ரூ.517.14 கோடி மதிப்பீட்டில் 8 இடங்களில் மேம்பாலம், சுரங்கப்பாதை உயர்மட்ட மேம்பாலம் அமைக்கத் திட்டம்.

மின்துறை

- பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட மண்டலங்களில், ரூ.10.76 கோடி மதிப்பீட்டில் 1,533 புதிய தெருமின் விளக்கு கம்பங்கள்.
- வில்லிவாக்கம் குளம் அமைந்துள்ள பகுதியில், ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் தொங்கு பாலம் நிறம் மாறும் திறனுடைய விளக்குகள், நடைபாதை விளக்குகள் மற்றும் உயர்கோபுர விளக்குகள் அமைக்கும் பணி.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் ரிப்பன் கட்டடத்தில் நிறம் மாறும் வண்ண விளக்குகளால் (RGB Dynamic lighting) ஒளிரூட்டும் பணி.

பூங்கா துறை

- மாநகராட்சி பூங்கா பணியாளர்கள் மூலம் 94 பூங்காக்கள், ஒப்பந்த முறையில் 567 பூங்காக்கள், தத்தெடுப்பு முறையில் 57 பூங்காக்களில் பராமரிப்புப் பணிகள்.
- "சிங்காரச் சென்னை 2.0" திட்டத்தின்கீழ், ரூ.24.43 கோடி மதிப்பீட்டில் 28 பூங்காக்கள் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு 22 பூங்காக்கள் திறந்தவெளி நிலத்தில் அமைப்பு. 6 பூங்காக்கள் அமைக்க நடவடிக்கை.
- சென்னை மாநகரின் குடியிருப்பு நலச்சங்கங்கள் (RWA) தன்னார்வலர்களுடன் இணைந்து நகர்ப்புர அடர்வன காடுகள். 1,53,474 மரக்கன்றுகள் சாலைகள், பூங்காக்கள், மயானங்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் திறந்தவெளி நிலங்களில் நடப்பட்டுப் பராமரிப்பு.

அரங்கத்துறை

- பெருநகர சென்னை மாநகரப் பகுதிகளில் 895 விளையாட்டு மைதானங்கள் பராமரிப்பு.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.12.57 கோடி மதிப்பீட்டில் 18 விளையாட்டுத் திடல்கள் அமைக்க டுபிட்கோவிடமிருந்து (TUFIDCO) ஒப்புதல் பெறப்பட்டு விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் பணிகள்.
- ரூ.2 கோடி மதிப்பீட்டில் கோட்டூர்புரம், கனால் போங்க் சாலை Patrician கல்லூரி அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு திடல் மேம்படுத்தும் பணி.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் நவீன விளையாட்டுத் திடல் அமைக்க நடவடிக்கை.

சீர்மிகு நகரம் (Smart City)

- ரூ.47 கோடி மதிப்பீட்டில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய பசுமை கட்டடத்திற்கானப் பணி.
- ரூ.7.27 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் ஏரியில் தொங்கு பாலம், ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் துருப்பிடிக்காத எஃகு கைப்பிடி அமைக்கும் பணிகள்.
- தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு நிதியின் (TURIF)கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கஸ்தூரிபாய் எம்.ஆர்.டி.எஸ் இரயில் நிலையம் முதல் திருவான்மியூர் எம்.ஆர்.டி.எஸ் இரயில் நிலையம் வரை பக்கிங்ஹாம் கால்வாய்கரையில் நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதை அமைத்து சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தும் பணிகள்.

சென்னை பெருநகர திறன்மிகு போக்குவரத்து திட்டம் (JICA)

- ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையின் (JICA) கடனுதவியுடன் ரூ.905 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகரப் பகுதியில் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புகளைச் செயல்படுத்த நடவடிக்கை.

பிரான்ஸ் மேம்பாட்டு முகமை நிதி (CITIIS) உதவியுடன் நவீனமயமாக்கப்படும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள்

- சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின்கீழ், பிரான்ஸ் மேம்பாட்டு முகமை (AFD) நிதியுதவியுடன் ரூ.95.25 கோடி மதிப்பீட்டில் 18 பள்ளி வளாகங்களில் உள்ள 28 பள்ளிகளை நவீன மற்றும் ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்றும் பணிகள். கூடுதலாக 281 சென்னைப் பள்ளிகளில் இதரப் பணிகள் .

சென்னை மாநகர பெண்களின் பாதுகாப்புக்கான திட்டம் – நிர்பயாநிதி

- ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் சென்னை நகரத் தெரு விளக்குகளை ரிமோட் முறையில் கண்காணிக்கும் திட்டப் பணி.

- பெண்கள் சுகாதாரத் திட்டத்திற்காக ரூ.5.40 கோடி மதிப்பீட்டில் 15 நடமாடும் கழிவறைகள்.
- ரூ.5.47 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளில் மாணவிகளின் பாதுகாப்பிற்காக கேமராக்கள் அமைக்க நடவடிக்கை.
- சென்னைப் பள்ளி மாணவிகளுக்கு ரூ.4.79 கோடி மதிப்பீட்டில் சானிட்டரி நாப்கின்கள்.
- வீடற்ற மாற்றுத்திறனாளி பெண்களுக்காக ரூ.3.08 கோடி மதிப்பீட்டில் உறைவிடம் கட்டும் பணி.
- ரூ.18.87 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்குப் பாதுகாப்பான கழிப்பறைகள்.

சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை திட்டங்கள்

- அடையாறு ஆறுகளின் கரையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஆற்றின் இருபகுதி கரைகளிலும் நிரந்தர சுற்றுச்சுவர் அமைக்கும் பணி.
- ரூ.45.68 கோடி மதிப்பீட்டில் நேப்பியர் பாலம் முதல் மதுரவாயல் புறவழிச்சாலை மேம்பாலம் வரையிலான 23.92 கி.மீ. நீளத்திற்கு நிரந்தர சுற்றுச்சுவர் அமைக்கும் பணி.
- திரு.வி.க.பாலம் முதல் விமானநிலைய ஓடுதளபாலம் வரை 24.67 கி.மீ. நீளத்திற்கு ரூ.66.16 கோடி மதிப்பீட்டில் நிரந்தர சுற்றுச்சுவர் அமைக்கும் பணி.
- ரூ.11.20 கோடி மதிப்பீட்டில், திரு.வி.க.பாலம் முதல் கோட்டுர்புரம் பாலம் வரையில் இரு கரைகளிலும் 60,000 மரக்கன்றுகள் அமைத்து தோட்டம் அமைக்கும் பணி ரூ.9.41 கோடி மதிப்பீட்டில் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைக்கும் பணி.

கட்டடத் துறை

- ரூ.3.37 கோடி மதிப்பீட்டில் 3 பள்ளி கட்டடங்கள் அமைப்பதற்கான பணிகள்.
- ரூ.48.76 கோடி மதிப்பீட்டில் 18 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையக் கட்டடங்கள் கட்டும் பணிகள்.
- ரூ.18.33 கோடி மதிப்பீட்டில் 2 நகர்ப்புர சமூக சுகாதார மையக் கட்டடங்கள் கட்டும் பணிகள்.
- ரூ.8.62 கோடி மதிப்பீட்டில் 12 இரவு காப்பகக் கட்டடங்கள் கட்டும் பணிகள்.
- ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் 3 அங்கன்வாடி மையங்கள் கட்டும் பணிகள்.
- ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் 1 சலவையாளர் கட்டடம், ஓய்வறை கட்டும் பணிகள்.
- ரூ.1.44 கோடி மதிப்பீட்டில் 2 சமுதாய நலக் கூடம் கட்டும் பணிகள்.
- ரூ.9.08 கோடி மதிப்பீட்டில் 1 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்புக் கிடங்கு கட்டும் பணிகள்.
- ரூ.3.26 கோடி மதிப்பீட்டில் 1 மயானக் கட்டடம் கட்டும் பணி.



- ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் 1 கலை மற்றும் கலாச்சாரக் கட்டடம் கட்டும் பணி.
- ரூ.2.82 கோடி மதிப்பீட்டில் நுங்கம்பாக்கம்–காம்தார் நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான இரவு காப்பகம் கட்டும் பணிகள்.
- ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் 6 இரவு காப்பகக் கட்டடங்கள். ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் 4 அங்கன்வாடி மையக் கட்டடங்கள் பணிகள் நிறைவு. ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் 1 ஆரம்பப்பள்ளி கட்டட கட்டுமானப் பணிகள் நிறைவு.
- ரூ.15 கோடி மதிப்பீட்டில் 130 வருட பாரம்பரியமிக்க விக்டோரியா ஹால் கட்டடத்தைப் புனரமைத்து, பராமரிக்கும் திட்டம்.
- ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் லூப் சாலை, பட்டினப்பாக்கத்தில் 366 கடைகள் மற்றும் வாகன நிறுத்த வசதிகளுடன் நவீன மீன் அங்காடி அமைக்க நிதி ஒதுக்கீடு.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.50.66 கோடி மதிப்பீட்டில் 11 இடங்களில் 24 சென்னைப் பள்ளிகளில் கட்டுமானம் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்.
- சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.6.13 கோடி மதிப்பீட்டில் 10 இடங்களில் புகையில்லா LPG தகனமேடை அமைக்க நடவடிக்கை.

பொதுத்துறை

- 195 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம்.

வருவாய்த்துறை

- சொத்துவரி ரூ.778.43 கோடி, தொழில் வரி ரூ.462.35 கோடி என மொத்தம் ரூ.1,240.78 கோடி வசூல்.

எளிதாக வரி செலுத்துவதற்கான வசதிகள்

- பொதுமக்கள், தெரிவு செய்யப்பட்ட வங்கி கிளைகள் மூலம் சொத்து வரி செலுத்துவதற்கான வழிமுறைகள்.
- இணையதள முறையினை பயன்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொத்து வரியினை செலுத்த வழிவகை.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் பொது சேவை மையங்கள் மூலமாக அனைத்து வரிகளும் செலுத்தும் வசதி.
- தொழில் வரி மற்றும் கம்பெனி வரி இணையதள முறையினை பயன்படுத்தி சுய மதிப்பீடு முறை மூலம் வரி செலுத்துவதற்கான வசதிகள்.
- இணையதள வசதியினைப்பயன்படுத்தி முந்தைய ஆண்டின் தொழில் உரிமத்தை அடுத்து வரும் ஆண்டிற்குப் புதுப்பிப்பதற்கு வழிவகை.
- சமுதாய நலக்கூட முன்பதிவினை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை.


புவிசார் தகவல் அமைப்பு வரைபடம் தயாரித்தல் (வானூர்தி அளவீடு மூலமாக)

- தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம் மூலம் உலக வங்கியின் நிதியுதவியுடன், 426 சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட பெருநகரச் சென்னை மாநகராட்சி பகுதிகளில் ட்ரோன் (Drone) எனப்படும் ஆளில்லா வானூர்தி மூலம் அனைத்து கட்டிடங்கள், சாலைகள் மற்றும் சாலைகளில் அமைந்துள்ள அனைத்து துறைகளின் சேவை பயன்பாட்டுப் பொருட்களின் புவிசார் அமைப்பு (GIS) வரைபடம் தயாரிக்கும் பணி.
- ஆளில்லா வானூர்தி பயன்படுத்தித் தயாரிக்கப்படும் வரைபடம், பணி மூலமாகப் பெறப்படும் விவரங்கள், இடம் சார்ந்த தரவுத்தளத்துடன் தரவுகளுடன் இணைக்கப்படும்.

சிங்காரச் சென்னை 2.0

- ரூ.500 கோடி ஒதுக்கீட்டில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ், ரூ.339.69 கோடி செலவில் பேருந்து சாலைகள், விளையாட்டுத் திடல் மேம்படுத்தும் பணி, மழைநீர் வடிகால், பள்ளிகள் என 170 பல்வேறு திட்டப்பணிகள்.

❖ ❖ ❖



கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

மாண்புமிகு
கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. இ.பெரியசாமி
அவர்கள்

கூட்டுறவு

- கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு குடும்பத்தில் 5 பவுனுக்குள் நகைக்கடன் பெற்ற 12,20,109 பயனாளிகளுக்கு ரூ.4,818.88 கோடி தள்ளுபடி.
- ரூ.2,755.99 கோடி மகளிர் சுயஉதவிக் குழுக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு, 1,17,617 மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்.
- பயிர்க்கடனை உரியக் கெடு தேதிக்குள் திரும்பச் செலுத்திய 15,04,111 விவசாயிகளுக்கு ரூ.10,436.79 கோடி வட்டியில்லா பயிர்க்கடன்.
- உழவர் கடன் அட்டை திட்டத்தின்கீழ், 44,531 விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்புப் பணிகளுக்காக ரூ.218.09 கோடி வட்டியில்லாக் கடனுதவி.
- மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன் உச்சவரம்பு ரூ.12 இலட்சமாக உயர்வு. 19,296 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.681.65 கோடி கடனுதவி.



- 2,436 கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.4.36 கோடி கடனுதவி.
- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மூலம், ரூ.39.40 கோடி மதிப்பில் 351 திட்டப்பணிகள்.
- தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் கூடுதலாக 6 தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள்.
- 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.954.18 கோடி வேளாண் விளைபொருட்கள் விற்பனை.
- நுகர்வோர் கூட்டுறவுடன் இணைந்த கடன் திட்டத்தில், ரூ.82.77 கோடி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் முன்னேற்றம்.
- வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ரூ.83.48 கோடி தானிய ஈட்டுக் கடன், ரூ.222.98 கோடி நகைக்கடன் வழங்கி, ரூ.2,405.98 கோடி வணிகம்.
- 25 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.110.04 கோடி பயிர்க்கடன், ரூ.7.57 கோடி மத்தியக் காலக்கடன், ரூ.30.32 கோடி நகைக்கடன்.
- ரூ.8.37 கோடி கட்டுப்பாட்டுப் பொருட்கள், ரூ.4.71 கோடி கட்டுப்பாடற்ற பொருட்கள், ரூ.8.82 கோடி விவசாய இடுபொருட்கள் விற்பனை.
- குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், 1,59,477 விவசாயிகளுக்கு, 16,942.51 மெ.டன் யூரியா, 9,412.44 மெ.டன் டி.ஏ.பி, 4,698.60 மெ.டன் பொட்டாஷ் வழங்கப்பட்டுள்ளது.
- 70 புதிய கூட்டுறவு மருந்தகங்கள் வாயிலாக ரூ.311.14 இலட்சம் மதிப்பிலான மருந்துகள் விற்பனை.
- பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு கடைகளின் மூலம் 150 மெட்ரிக் டன் தக்காளி, 9,888 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.33.70 கோடிக்கு வெளிச்சந்தை விலைக்கும் குறைவாக விற்பனை.
- 2,08,24,176 அரிசி அட்டைதாரர்களுக்கு இரண்டு தவணைகளில் ரூ.4,000 வீதம் கொரோனா நிவாரண உதவித்தொகை.
- 2,07,70,332 அரிசி அட்டைதாரர்களுக்கு, 14 மளிகை பொருட்கள் அடங்கிய கொரோனா நிவாரணத் தொகுப்பு.
- 2,12,17,756 அரிசி அட்டைதாரர்கள், இலங்கை அகதிகள் முகாமில் உள்ள குடும்பங்களுக்கு, 20 பொருட்கள் மற்றும் ஒரு முழுக்கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு.

புள்ளியியல் துறை

விவசாயம்

- பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 35 பயிர்களுக்கு, காரீப் மற்றும் ராபி பருவத்தில் 83,404 பரிசோதனைகளுக்கு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு காப்பீட்டு நிறுவனங்களுக்கு அனுப்பிவைப்பு.
- காரீப் மற்றும் ராபி பருவத்தில், 36 விவசாயம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு 1,32,534 பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் கிராம பட்டியல் அனுப்பிவைப்பு.
- விற்பனை மிகுதி திட்டத்தின்கீழ், நெல் பயிருக்கான 1,302 பரிசோதனைகளுக்கு விற்பனை மிகுதி சதவிகிதம் கணக்கிடப்பட்டு ஆண்டு அறிக்கை வெளியீடு.
- விற்பனை மிகுதி திட்டத்தின்கீழ், 1,276 பரிசோதனைகளுக்கு நெல் பயிருக்கான கிராமப் பட்டியல் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைப்பு.
- ஒவ்வொரு மாதமும் 597 மழைப்பொழிவு நிலையங்களிலிருந்து மழை விவரங்கள் பெறப்பட்டு, சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வருடாந்திர அறிக்கை வெளியீடு.
- 385 வட்டாரங்களில் விவசாயத் தொழிலாளர்களின் தினசரி ஊதியம் குறித்த மாதக் குறியீடு மதிப்பிடப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, ஆண்டறிக்கை வெளியீடு.
- பயிர்பரப்பு உரிய காலத்தில் மதிப்பீடும் திட்டத்தின்கீழ், 3,480 டி.ஆர்.எஸ் கிராமங்களில் உள்ள 9 முக்கிய பயிர்களின் பரப்பு விவரங்களைக் கொண்டு காரீப் மற்றும் ராபி பருவத்திற்கான மதிப்பீடுகள் கணக்கீடு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ரூ.119.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மத்திய மற்றும் மாநில மாதிரிகள் அடங்கிய 520 மாதிரி கிராமங்களுக்குப் பருவம்–1க்கான பயிர் பரப்பாய்வு பணி மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, ரூ.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு.



- சிறுபான்மைப் பயிர் திட்டத்தின்கீழ், சராசரி விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி 8 பயிர்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைக்காக 650 கிராமங்கள் தேர்வு.
- பழம் மற்றும் காய்கறிகள் திட்டத்தின்கீழ், சராசரி விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி, 13 பயிர்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைக்காக 735 கிராமங்கள் தேர்வு.
- தென்னை மற்றும் கமுகு திட்டத்தின்கீழ், சராசரி விளைச்சல் விகிதம் மற்றும் உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு, ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைக்காக 379 கிராமங்கள், தென்னை பயிருக்கும் 64 கிராமங்கள் கமுகு பயிருக்கும் தேர்விடப்பட்டது.
- உரிமையாளர்களின் நிலங்களின் தொகுப்பு எண்ணிக்கை, பல்வகை பயிர்கள், நிலப் பயன்பாட்டு வகைகள், இரசாயன உரங்களின் பயன்பாடு, உயிர் / கனிம உரங்களின் விவரம், வேளாண்மை கருவிகள், சாகுபடியாளரால் விவசாயக்கடன்பெற்றவிவரங்களைஉள்ளடக்கிய பத்தாவது வேளாண்மை கணக்கெடுப்பு மூன்றாம் கட்ட அறிக்கை வெளியீடு.
- பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டு, பொருளாதாரத்தின் முதன்மைப் பிரிவின் முக்கிய அளவுகளுக்கான முக்கியத் தகவல்களை உள்ளடக்கியது.
- பயிர் முன் மதிப்பீடு அறிக்கை, ஒவ்வொரு மாதமும் இறுதி செய்யப்படும் பயிர் பரப்பு விவரங்களை அடிப்படையாகக் கொண்டு முதலாம் மற்றும் இரண்டாம் முன்மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு உரியக் காலக்கெடுவிற்குள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன.
- பொதுப்பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டத்தின்கீழ், பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்ட ஆண்டறிக்கை வெளியீடு. பொதுப்பயிர் மதிப்பீட்டாய்வுத் திட்டத்தில் 17 முக்கியப் பயிர்களுக்கு, ஹெக்டேருக்கான விளைச்சல் விவரம் மற்றும் உற்பத்தி விவரம் மாவட்ட மற்றும் மாநில அளவில் கணிக்கப்பட்டு, 9,500 பரிசோதனைகள் திட்டமிடப்பட்டுள்ளது.

புள்ளிவிவரப் பகுப்பாய்வு மையம்

- கோவிட் பல்ஸ் சர்வே (தொலைபேசி ஆய்வு) அலை–4 முடிக்கப்பட்டு அரசுக்கு அறிக்கை.
- முதியோர் குறித்த தொடர் ஆய்வு கணக்கெடுப்பு அலை–1 சென்னை, திருவண்ணாமலை, திருச்சி, தருமபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களில் நடைபெறுகிறது.
- தேர்தலுக்கான அறிவுத்திறன், அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்தான அடிப்படை ஆய்வு குடிமக்களிடையே மேற்கொள்ளப்பட்டு அறிக்கை மாநில தலைமைத் தேர்தல் அலுவலருக்கு அனுப்பப்பட்டது.
- தேர்தலுக்கான அறிவுத்திறன் அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்தான இறுதிக்கட்ட ஆய்வு குடிமக்களிடையே மேற்கொள்ளப்பட்டு அறிக்கை தயாரிக்கப்படுகிறது.



முன்னாள் படைவீரர் நலன்

- ரூ.157.10 இலட்சம் செலவில் திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மையத்துடன் கூடிய மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகக் கட்டடங்கள்.
- போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளில் உயிர் நீத்த படைவீரர்களின் வாரிசுதாரர் 10 நபர்களுக்கு தலா ரூ.20 இலட்சம் கருணைத் தொகை.
- இந்திய – சீனா எல்லையில் லடாக் பகுதியில் வீர மரணம் அடைந்த படைவீரர் Hav (லேட்) K.பழனி என்பவருக்கு வழங்கப்பட்ட உயரிய வீர விருதினைப் பாராட்டும் வகையில் ரூ.10 இலட்சம் நிதியுதவி.
- முன்னாள் படைவீரர்களுக்கு குரூப் – சி பணியிடங்களில் 482 நபர்களுக்கும், குரூப்– டி பணியிடங்களில் 340 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு.
- போர், போரையொத்த நடவடிக்கைகள், உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் மற்றும் பணியின்போது மரணமுற்ற, ஊனமுள்ள படைவீரர்களின் 56 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம்.
- முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சேர்ந்த 15,631, நபர்களுக்கு மாதாந்திர நிதியுதவிகள், மருத்துவ நிதியுதவிகள் மற்றும் கல்வி உதவித்தொகையாக ரூ.40.04 கோடி.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

- மாநில / ஒன்றிய அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் பல்வேறு ஒப்பந்த அடிப்படையில் 2,123 முன்னாள் படைவீரர்கள் பணியிடங்களில் பணியமர்த்தம். கூடுதலாக இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோவில்களில் 49 உதவி பாதுகாப்பு அலுவலர்கள் பணியமர்த்தம்.
- 181 புதிய வாடிக்கையாளர்கள் அடையாளம் காணப்பட்டு, 391 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு பணிகளில் நியமனம்.
- தற்போதைய கேட்புகளுக்கு ரூ.250.31 கோடி மற்றும் நிலுவைத் தொகையில் ரூ.53 கோடி ஆக மொத்தம் ரூ.303.31 கோடி வசூல்.
- 7,734 முன்னாள் படைவீரர்களுக்கு நலம் அளிக்கும் நடவடிக்கையாக, விபத்து காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வழங்கும் பொருட்டு ரூ.12.50 இலட்சம் காப்பீட்டுக் கட்டணத் தொகை.
- 2021–2022ஆம் நிதியாண்டிற்கான பங்களிப்புத் தொகை ரூ.103.68 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதிக்கு வழங்கப்பட்டது.
- ரூ.63.52 இலட்சம் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதியிலிருந்து இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளுக்கு ஏற்பாடு.
- முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டத்திலிருந்து இக்கழகத்தில் பணிபுரியும் அனைத்து ஒப்பந்த பணியாளர்களுக்கும் மாதச் சந்தா ரூ.250 செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, பணியாளர்களின் ரெப்கோ வங்கிக் கணக்கில் ரூ.5.99 கோடி செலுத்தப்பட்டது.
- 50 குடும்பங்களுக்கு ஈமச் சடங்கு மானியமாக ரூ.2.47 இலட்சம்.

❖ ❖ ❖



மாண்புமிகு
உயர்கல்வித்துறை அமைச்சர்
திரு. க.பொன்முடி அவர்கள்

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

உயர்கல்வித்துறை

- பொறியியல் கல்லூரிகளில் அரசுப் பள்ளியில் பயின்ற மாணவர்கள், 7.5 விழுக்காடு சிறப்பு உள் ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை. ரூ.74.28 கோடி நிதி ஒதுக்கீட்டில், இம்மாணவர்களுக்கான கல்விக்கட்டணம், விடுதிக்கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்பு.
- ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்பக் கல்லூரி அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றம்.
- முதுநிலை பட்டமேற்படிப்பு மாணாக்கர்கள் படிப்பில் கவனம் செலுத்த ஊக்குவிப்பதற்கான ஊக்கத்தொகை பெறும் மாணவர் எண்ணிக்கை 1,200 ஆக அதிகரிப்பு.
- அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக துறைகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் முதுநிலைப் பட்ட



மேற்படிப்பு பயிலும் 1,200 மாணாக்கர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.6,000 உதவித்தொகை வழங்க ரூ.8.64 கோடி நிதி ஒதுக்கீடு.

- 10 அரசு பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு ஜெர்மனி, பிரென்ச், ஜப்பானிய மற்றும் சீன மொழிகள் கற்பித்தல்.
- 50 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள்.
- அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில், அமைப்பியல் மற்றும் இயந்திரவியல் துறைகளில் தமிழ் வழியில் பட்டயப்படிப்பு அறிமுகம்.
- மாணவியர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகரிப்பதற்கு, மகளிருக்கான பட்டயம் மற்றும் குறுகிய காலச்சான்றிதழ் படிப்புகள் துவக்கம்.
- சுயதொழில் தொடங்குவதை ஊக்குவிக்கச் சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி மண்டலங்களில் மையங்கள் (Hubs) நிறுவப்பட்டு தொழில் முனைவு மேம்பாடு மற்றும் புத்தாக்கப் பயிற்சி.
- பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணாக்கர்களுக்கு, செயல்திறன் மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் கூடுதல் பாடங்கள்.
- கோயம்புத்தூர், சேலம், காரைக்குடி மற்றும் வேலூர் அரசு பொறியியல் கல்லூரிகளில் ரூ.34.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் கூடுதல் விடுதிக் கட்டடங்கள்.
- அண்ணா பல்கலைக்கழகத்தின் மெட்ராஸ் தொழில்நுட்பப் பயிலகத்துடன் இணைந்து "தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்".
- திருச்சுழி, திருக்கோயிலூர், தாளவாடி, ஒட்டன்சத்திரம், மானூர், தாராபுரம், ஏரியூர், ஆலங்குடி, சேர்க்காடு மற்றும் கூத்தாநல்லூர் (மகளிர்) ஆகிய 10 இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
- புதிய 10 அரசுக் கலைக் கல்லூரிகளில் ரூ.93 இலட்சம் செலவில் மின்னணு நூலகங்கள்.
- 17 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் செயல்படும் மின்னணு நூலகங்களை ரூ.85 இலட்சம் செலவில் தொழில்நுட்பத்துடன் மேம்படுத்த ஆணை.
- ரூ.45.32 கோடி நிதி ஒதுக்கீட்டில் சங்கரன்கோயில், ஆலங்குளம், ஜம்புகுளம், வானூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு நிரந்தரக் கட்டடம்.
- 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள் துவக்கம்.





- ரூ.2 கோடி செலவில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் ஒருங்கிணைந்து 100 பாடப்புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்க ஆணை.
- ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையம் மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்தில் பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்காக நிறுவப்பட்டுள்ள புத்தாக்க மையங்கள்.
- ரூ.160.11 இலட்சம் செலவில் பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களின் படைப்பாற்றல் மற்றும் தனித்திறன்களை மேம்படுத்த 5 மண்டலங்களில் செய்கலைஞர் ஆய்வுக்கூடம்.
- இந்தியாவிலேயே அதிக அளவில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் 2,631 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.
- தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மயிலாடுதுறை, சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் 4 மையங்கள் உருவாக்கம். இப்பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கையும் நிறுவப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

“அழியாத அறிவுச் செல்வமான கல்விச் செல்வம் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். அரசுப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களும் உயர்கல்வி நிலையங்களுக்குள் நுழைய வேண்டும்.”


– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



புதுதில்லி, மேற்கு வினோத் நகரில் உள்ள அரசு மாதிரி பள்ளி மாணவியர்களின் வரவேற்பு– 01.04.2022



மாதிரி பள்ளி மாணவியர்களுடன் கலந்துரையாடல் – 01.04.2022




மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர்
திரு. **எ.வ.வேலு** அவர்கள்

பொதுப்பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

பொதுப்பணிகள் (கட்டடங்கள்)

- ரூ.39 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குச் சென்னை காமராஜர் சாலையில் நினைவு மண்டபம் கட்டும் பணிகள்.
- ரூ.170 இலட்சம் மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சென்னை அண்ணா சாலையில், அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவ வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கும் பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.
- ரூ.1.95 கோடியில் இந்தியச் சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டினை நினைவுகூரும் வகையில் சென்னையில் நினைவுத் தூண்.
- ரூ.12.69 கோடியில் சென்னை பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் பணிகள்.
- ரூ.37.82 கோடி மதிப்பீட்டில் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடம் புனரமைத்தல்.





- ரூ.114 கோடி மதிப்பீட்டில் மதுரையில் கலைஞர் நினைவு நூலகக் கட்டடம் கட்டும் பணிகள்.
- கோவிட்–19 நோய்த்தொற்று அலைகளை எதிர்கொள்ளத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார மையங்களில் 14,683 எண்ணிக்கையிலான கூடுதல் ஆக்ஸிஜன் இணைப்புகளுடன் கூடிய படுக்கை வசதிகள்.
- தமிழ்நாடு கோவிட் அவசர சிகிச்சை தொகுப்பு 2 திட்டத்தின்கீழ் ரூ.60.784 கோடி செலவில் 50 அரசு மருத்துவமனைகள், 37 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகள் மற்றும் 116 மாவட்ட துணை மருத்துவமனைகளில் 2,096 தீவிர சிகிச்சைப் பிரிவு ஆக்சிஜன் படுக்கை வசதிகள்.
- ரூ.230 கோடி மதிப்பீட்டில் சென்னை, கிண்டி கிங் நோய்த்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டும் பணி.
- ரூ.57.46 கோடி மதிப்பீட்டில் நபார்டு ஆர்.ஐ.டி.எப். XXVII திட்டத்தின்கீழ், கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த 88 புதிய கால்நடை மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணிகள்.
- ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் திரு.கி.ராஜநாராயணன் அவர்களுக்கு நினைவகம்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

சாலைப் பணிகள்

- ரூ.3,363.55 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 3,388 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 571 பாலம் / சிறுபாலப் பணிகள்.
- ரூ.1,949.27 கோடி மதிப்பில் 2,140.84 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் தரம் உயர்வு.
- ரூ.129.94 கோடி மதிப்பில் விருத்தாச்சலம் பரங்கிப்பேட்டை சாலை மேம்பாடு.
- ரூ.1.97 கோடி மதிப்பில் ஜவான்ஸ் பவன் சாலை மேம்பாடு.

உயர்மட்ட பாலங்கள்

- நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ், ரூ.189.44 கோடி மதிப்பில் 73 உயர் மட்ட பாலங்கள்.
- ரூ.17.04 கோடி மதிப்பில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டரை – எரையூர் சாலை, செய்யார் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம்.
- ரூ.90.96 கோடி மதிப்பில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையில் உயர்மட்ட பாலம்.
- ரூ.10.41 கோடி மதிப்பில் மூலக்கரைச் சாலை மற்றும் கூரப்பாளையம் சாலைகளிலிருந்த தரைப்பாலத்திற்குப் பதிலாகச் சிறு பாலம்.

சாலை மேம்பாலங்கள்

- ரூ.53.12 கோடி மதிப்பில் மதுரை – தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பு பல்வழிச்சாலையில் மேம்பாலம்.
- ரூ.67 கோடி மதிப்பில் தரமணி இணைப்பு சாலையிலிருந்து வேளச்சேரி புறவழிச்சாலை செல்லும் பாலம்.
- ரூ.93.50 கோடி மதிப்பில் கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் காளியம்மன் கோயில் தெரு மற்றும் சென்னை புறநகரப் பேருந்து நுழைவு வாயில் சந்திப்பில் மேம்பாலம்.

இரயில்வே மேம்பாலங்கள்

- ரூ.58.02 கோடி மதிப்பில் அண்ணனூர் அருகில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.25.74 கோடி மதிப்பில் கடம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் கடம்பத்தூர் – திருவாலங்காடு இரயில் நிலையங்களுக்கிடையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.59.63 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.34.50 கோடி மதிப்பில் ஊரப்பாக்கம் அருகில் வண்டலூர் – கூடுவாஞ்சேரி இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.20.96 கோடி மதிப்பில் ஓலக்கூர் பீடர் சாலையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.22.63 கோடி மதிப்பில் திருவெண்ணை நல்லூர் – பரிக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம்.
- ரூ.22.27 கோடி மதிப்பில் டி.கே.வி.கோட்டா சாலையிலிருந்து விரிஞ்சிபுரம் செல்லும் சாலையில் இரயில்வே மேம்பாலம்.
- ரூ.38.74 கோடி மதிப்பில் தண்டரை – திருவண்ணாமலை இரயில் நிலையங்களுக்கு இடையே இரயில்வே மேம்பாலம்.
- ரூ.48.48 கோடி மதிப்பில் பொள்ளாச்சி – கிணத்துக்கடவு இரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம்.









இரயில்வே கீழ்ப்பாலம்

- ரூ.14.52 கோடி மதிப்பில் நாங்குநேரி – வள்ளியூர் இரயில்வே நிலையங்களுக்கிடையில் இரயில்வே கீழ்ப்பாலம்.

ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சக நிதி பணிகள்

- ரூ.909.29 கோடி மதிப்பில் தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைப் பணிகள்.
- ரூ.9.97 கோடி மதிப்பில் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலையில் சாலைப் பணி.
- ரூ.732.3 கோடி மதிப்பில் ஒன்றிய சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதித் திட்டத்தின்கீழ் சாலை மற்றும் பாலப் பணிகள்.

நடைபெற்றுவரும் பணிகள்

- ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.2,123.64 கோடி மதிப்பில் நான்கு வழித்தட சாலைகள் மற்றும் ரூ.865.35 கோடி மதிப்பில் இரு வழிச் சாலைகள்.
- ரூ.551.23 கோடி மதிப்பில் 648 உயர்மட்டப் பாலங்கள்.
- ரூ.412.69 கோடி மதிப்பில் நகரப்பகுதி சிறப்பு மேம்பாடு திட்டத்தின்கீழ், 96 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்பாடு.
- ரூ.200 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 401 சாலைப் பாதுகாப்புப் பணிகள்.
- ரூ.414.06 கோடி மதிப்பில் நபார்டு கடனுதவி திட்டத்தின்கீழ், 73 பாலங்கள்.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டப் பணிகள்

- ரூ.314.48 கோடி மதிப்பில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் ரூ.45.50 கோடி மதிப்பில் மடிப்பாக்கம் அருகே வாகன சுரங்கப்பாதை.
- ரூ.46.54 கோடி மதிப்பில் சர்தார் பட்டேல் சாலையுடன் ராஜீவ் காந்தி சாலை இணையும் மத்திய கைலாஷ் சந்திப்பில் மேம்பாலம்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சாதனைகள்

- தமிழ்நாட்டின் மத்திய மற்றும் மேற்கு மாவட்ட தொழிற்சாலைகளுக்குத் தேவையான சரக்குகளை மேம்படுத்தப்பட்ட கடலூர் துறைமுகத்தைப் பயன்படுத்தி சிறு மற்றும் நடுத்தர கப்பல்களின் மூலம் கையாளுவதற்கு ஏதுவாக, திறமையான துறைமுக இயக்குபவரை தேர்ந்தெடுத்து சந்தைப்படுத்தி, பராமரிப்புடன் இயக்குவதற்கு அரசாணை.

❖ ❖ ❖



வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

அவர்கள்

உணவு தானிய இயக்கம்

- தமிழ்நாட்டில் முதன்முறையாக வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை.
- 118 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை. இது கடந்த 6 ஆண்டுகளில் அதிகபட்ச உணவு தானிய உற்பத்தியாகும்.
- 22.19 இலட்சம் எக்டரில் நெல் சாகுபடி 40.12 இலட்சம் எக்டர் உணவு தானியங்கள்.
- 7.68 இலட்சம் எக்டர் பரப்பில், பயறு வகைப் பயிர்கள் பயிரிடப்பட்டு 5.13 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து சாதனை.



நெல்

❖ தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ரூ.21.05 கோடி மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தில் ரூ.7.51 கோடி நிதியில் விவசாயிகளுக்கு நெல் விதை, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஊக்கத்தொகை மற்றும் இடுபொருட்களுக்கான மானியம் வழங்கும் திட்டம் செயலாக்கம்.

❖ ரூ.14.34 கோடியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 92,035 நெல் பயிரிடும் விவசாயிகள் பயன். ரூ.5.11 கோடியில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் திட்டத்தில் 64,847 நெல் பயிரிடும் விவசாயிகள் பயன்.

❖ தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ரூ.3.60 கோடியில், 1,20,000 எக்டர் பரப்பளவில் மண்வளத்தை மேம்படுத்திடத் திரவ உயிர் உரங்கள் பயன்படுத்தும் திட்டம் செயலாக்கம். இதுவரை 59,263 விவசாயிகள் பயன்.

❖ 21.519 இலட்சம் எக்டர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 1.937 இலட்சம் எக்டர் கூடுதலாகும்.

குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம் 2021

❖ தமிழ்நாட்டில் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறந்துவைத்து, ரூ.61.09 கோடியில் குறுவை தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார்.

❖ காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி பரப்பு கடந்த 46 ஆண்டுகளில் இல்லாத அளவாக 4.90 இலட்சம் ஏக்கராக உயர்வு.

❖ 2,870 மெ.டன் நெல் விதைகள் ரூ.5 கோடியில் 1,33,560 ஏக்கருக்கு விநியோகிக்கப்பட்டு 1,11,355 விவசாயிகள் பயன்.

❖ 31,050 மெ.டன் உரங்கள் ரூ.41.07 கோடியில் 1,88,471 ஏக்கருக்கு விநியோகிக்கப்பட்டு 1,59,465 விவசாயிகள் பயன்.

❖ 4.80 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் ரூ.3.36 கோடியில் 24,000 ஏக்கருக்கு விநியோகிக்கப்பட்டு 16,342 விவசாயிகள் பயன்.

❖ ரூ.8.96 கோடி செலவில் 239 விவசாயிகளுக்குப் பண்ணை இயந்திரங்கள் மற்றும் பண்ணை குட்டைகள் அமைப்பு.

❖ சம்பா நெல் அறுவடைக்குப் பின் நிலத்தில் இருக்கும் ஈரப்பதத்தைத் திறம்பட பயன்படுத்தி, பயறுவகை பயிர்களைச் சாகுபடி செய்வதற்குச் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு நெல் அறுவடைக்குப் பின் பயறு சாகுபடி 3.07 இலட்சம் எக்டராக அதிகரிப்பு.

அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்காக தார்ப்பாய் வழங்குதல்.

❖ தானியங்களில் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கு விவசாயிகளுக்கு 50% மானியத்தில் தார்ப்பாய்கள் வழங்குவதற்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு. இதுவரை 20,000 விவசாயிகளுக்கு ரூ.4.13 கோடி செலவில் 41,343 தார்ப்பாய்கள் வழங்கப்பட்டுள்ளது.

நெற்பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகத் துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்குதல்

❖ நெற்பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 200 மெ.டன் துத்தநாக சல்பேட் மற்றும் 3,662 மெ.டன் ஜிப்சம் ரூ.2.16 கோடியில் 28,310 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுதானியங்கள்

❖ "சிறுதானிய இயக்கம்", தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் – மக்காச்சோளம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் – தரிசு நில மேம்பாடு திட்டம் மற்றும் திரவ உயிர் உரங்கள் விநியோகம் ஆகிய திட்டங்களுக்கு ரூ.26.26 கோடி ஒதுக்கீடு. இதுவரை ரூ.15.73 கோடியில் 9.53 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு 1,11,494 விவசாயிகள் பயன்.

பயறுவகைப் பயிர்கள்

❖ பலம் தரும் பயறு பெருக்குத் திட்டத்திற்கு ரூ.45.97 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை சிறப்புத் திட்டங்கள் வாயிலாக ரூ.23.89 கோடியில் 1.90 இலட்சம் விவசாயிகள் பயன்.

எண்ணெய்வித்துக்கள்

❖ ஏற்றம் தரும் எண்ணெய் வித்துக்கள் திட்டத்திற்கு ரூ.25.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.11.59 கோடியில் 76,925 விவசாயிகள் பயன்.

தென்னை

❖ தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்களுக்கு

ரூ.14.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.1.50 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுண்ணீர்ப் பாசனத் திட்டம்

- சிறு / குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியத்திலும் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியத்திலும் நுண்ணீர் பாசனம் அமைக்க, 75,000 எக்டருக்கு ரூ.383 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 48,039 விவசாயிகளுக்கு 48,180 எக்டரில் நுண்ணீர்ப் பாசனம் அமைத்தமைக்கு ரூ.295 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

- 15,639 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 606 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகளும், 2,952 மெட்ரிக் டன் பயறுவகை விதைகளும், 3,713 மெட்ரிக் டன் எண்ணெய்வித்து விதைகளும், 18 மெட்ரிக் டன் பருத்தி விதைகளும், மொத்தம் 22,927 மெட்ரிக் டன் விதைகள் வேளாண்மைத்துறை விதைப் பண்ணைகளிலிருந்து கொள்முதல்.

- 17,803 மெட்ரிக் டன் நெல் விதைகளும், 683 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகளும், 3,471 மெட்ரிக் டன் பயறுவகை விதைகளும், 3,681மெட்ரிக்டன்எண்ணெய்வித்துவிதைகளும், 13 மெட்ரிக் டன் பருத்தி விதைகளும், மொத்தம் 25,651 மெட்ரிக் டன் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் விநியோகம்.

நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

- மருத்துவ குணமிக்க பராம்பரிய நெல் இரகங்களை பாதுகாத்திட நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, வேளாண்மைத் துறையின் கீழ், செயல்படும் 33 அரசு விதைப்பண்ணைகளில் 16 வகையான பாரம்பரிய நெல் இரகங்கள் 200 ஏக்கர் பரப்பளவில் பயிரிட்டு, 50 சதவிகித மானிய விலையில் ரூ.25 இலட்சம் செலவில் விவசாயிகளுக்கு விநியோகம்.

உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்குதல்

- பொது விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு 90 சதவிகித மானியத்திலும் 64,444 வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்க ரூ.15 கோடி ஒதுக்கீடு. இதுவரை 10,350 விவசாயிகளுக்கு ரூ.1.97 கோடியில் வழங்கப்பட்டுள்ளது.

பயிர் பாதுகாப்பு

- 3.5 இலட்சம் எக்டரில் மக்காச்சோளப் பயிர் சாகுபடி, மக்காச்சோளப்பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான இடுபொருட்கள் ரூ.20 கோடியில், 80,000 எக்டருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் 4.5 இலட்சம் எக்டரில் தென்னை பயிர் செய்யப்பட்டு வருகிறது. தென்னையில் வெள்ளை ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் 20,000 எக்டருக்கு ரூ.2 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

- ரூ.146.64 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் என்ற புதிய திட்டம் 7.5 இலட்சம் ஏக்கர் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தில் இதுவரை 4.25 இலட்சம் ஏக்கரில் சிறுதானியங்கள், 2.30 இலட்சம் ஏக்கரில் பயறு வகைகள், 65 ஆயிரம் ஏக்கரில் எண்ணெய்வித்து பயிர்கள், 30 ஆயிரம் ஏக்கரில் பருத்தி, சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

- 255 பண்ணைக் குட்டைகள், 588 ஏக்கரில் வயல்வெளி வரப்புகள், 51 பண்ணை இயந்திர வாடகை மையங்கள் மற்றும் 8 மதிப்புக் கூட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 13.33இலட்சம்உயர்மதிப்புகொண்டமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 3.06 இலட்சம் சிறு குறு விவசாயிகள் பயன்.

"தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்"

- தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம் என்ற புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தில் 73 இலட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு ரூ.11.14 கோடி நிதி ஒதுக்கீடு. இதுவரை 48,01,541 மரக்கன்றுகள் 26,639 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

❖ தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின்கீழ், பயிர் சார்ந்த மற்றும் பயிர் சாராத காரணிகளைச் செயல்படுத்த ரூ.16.55 கோடி நிதி ஒதுக்கீடு. மாதிரி கிராம திட்டத்திற்கு ரூ.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா)

❖ அட்மா திட்டத்தில் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த 7,801 பயிற்சிகள், 2,070 கண்டுணர் பயணங்கள், 485 பண்ணைப் பள்ளிகள் மற்றும் 10,000 செயல் விளக்கத் திடல்கள் ரூ.22.15 கோடியில் நடத்தப்பட்டு 4,37,665 விவசாயிகள் பயன்.

பிரதம மந்திரி பயிர் காப்பீடு

❖ பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 26.06 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு 40.60 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

❖ மொத்த சாகுபடி பரப்பளவில் 50 சதவிகிதம் காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 63 சதவிகிதம் சாதனை எய்தப்பட்டுள்ளது. 2021–2022ஆம் ஆண்டில் ரூ.2,324 கோடி காப்பீட்டுக் கட்டண மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு.

❖ 2020–2021ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,055 கோடி, 9.27 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மண்வளம் மேலாண்மை

❖ 3,08,603 மண்மாதிரிகள் எடுக்கப்பட்டு அதில் 3,03,966 மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 2,92,551 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம்.

இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்

❖ ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் 193 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அக்ரி கிளினிக் அல்லது வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்குப் பட்டதாரி ஒருவருக்கு தலா ரூ.1 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

வேளாண் மண்டல குழுக்கள் அமைத்தல்

❖ வேளாண் மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்டத்தில் நிலவும் நீர் ஆதாரம், நிலவளம், தட்பவெப்பம், இயற்கை பாதிப்புகள் உள்ளிட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு விவசாயிகளை இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாத்திட உரிய ஆலோசனைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுப்பண்ணையம்

❖ 20 சிறு, குறு விவசாயிகள் கொண்ட 5,500 உழவர் ஆர்வலர் குழுக்கள் அமைப்பு. இத்தகைய 5 உழவர் ஆர்வலர் குழுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 100 விவசாயிகளைக் கொண்ட 1,100 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கம்.

❖ உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் விவசாயம் செய்வதற்குத் தேவையான பண்ணை இயந்திரங்கள் கொள்முதல் செய்திட மூலதன நிதியாக ரூ.55 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பண்ணையம்

❖ 13,300 ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள் ரூ.59.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புயல் நிவாரணத் தொகை

❖ புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிதி இழப்பினை கருத்தில் கொண்டு மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.155.02 கோடி பெறப்பட்டு பயனாளர் நேரிடை பரிவர்த்தனை மூலம் நிதி ஒப்பளிப்பு பெறப்பட்ட 15 நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட 3.37 இலட்சம் விவசாயிகள் பயன்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

நுண்ணீர்பாசனத்திட்டம்

❖ நுண்ணீர்பாசனத்திட்டத்தில், 1,50,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட ரூ.982.48 கோடி நிதி ஒதுக்கீடு. இதுவரை ரூ.614 கோடி நிதி செலவில் 92,400 எக்டர் பரப்பளவில் 89,408 விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளது.

தேசிய தோட்டக்கலை இயக்கம்

❖ மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே 60:40 நிதி பங்களிப்புடன் ஒரு உப திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ இத்திட்டத்தில் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி மேம்பாட்டிற்காக ரூ.167.172 கோடி நிதி ஒதுக்கீடு.

- நடவு செடிகள் உற்பத்தி இனத்தின் கீழ், 50 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான விதை உற்பத்தி திடல்கள் அமைக்கப்பு.
- பாதுகாக்கப்பட்ட சூழலில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிக்க 38,000 ச.மீ பரப்பளவில் பசுமைக்குடில், 20,500 ச.மீ. பரப்பளவில் நிழல் வலைக் குடில் மற்றும் 2,060 எக்டர் பரப்பளவில் நிலப்போர்வை ரூ.25.89 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பு.
- 268 எண்கள் பண்ணை இயந்திரங்கள், விவசாயிகளுக்கு ரூ.53.11 இலட்சம் நிதியில் வழங்கப்பட்டுள்ளது.
- அறுவடைக்குப் பின் செய் இழப்புகளைக் குறைக்க 131 சிப்பம் கட்டும் அறைகள், 929 எண்கள் குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்பட்டு, இதுவரை ரூ.322.88 இலட்சம் நிதி மானியமாக விடுவிப்பு.
- சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் இனத்தின் கீழ், 441 நடமாடும் விற்பனை வண்டிகள் ரூ.21.75 இலட்சம் நிதியில் வழங்கப்பட்டுள்ளது. ரூ.41.253 கோடி நிதி சாதனை.

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

- நீர் மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தித் தீவிரப்படுத்துவதன் மூலம் ரூ.35.62 கோடி நிதியில் 7,559.45 எக்டர் பரப்பளவில் காய்கறிகள், பழங்கள், நறுமணப் பயிர்கள், பூக்கள், முந்திரி மற்றும் நுண்ணீர்ப் பாசனக்கருவிகள் அமைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

- இத்திட்டம் ரூ.41.55 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு, ரூ.34.52 கோடி சாதனை. இத்திட்டத்தின்மூலம். 2,30,976 விவசாயிகள் பயன்.
- 2020 – 2021ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோட்டக்கலை பயிர்களின் பயிர் சாகுபடி பரப்பு 15.29 இலட்சம் எக்டர் சாதனையை எட்டியுள்ளது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

- பந்தல் வகை காய்கறிகளின் தரம் மற்றும் உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகள் 120 எக்டர் பரப்பில் நிரந்தர பந்தல் அமைத்து சாகுபடி செய்ய ரூ.2.40 கோடி நிதி செலவிடப்பட்டது.
- நஞ்சில்லா காய்கறிகளை உற்பத்தி செய்து மக்கள் உண்பதை உறுதி செய்யும் நோக்கத்துடன் ரூ.7.99 கோடி நிதியில் 15,971 எக்டர் பரப்பிலான காய்கறி பயிர்களை அங்கக முறையில் சாகுபடி செய்ய ஊக்கமளிக்கப்பட்டது.



❖ 'தரிசு நிலத்தின் தங்கம்' என்றழைக்கப்படும் முந்திரிப் பயிரின் பரப்பு ரூ.4.50 கோடி நிதியில் 2,875 எக்டர் பரப்பில் விரிவாக்கம்.

❖ முருங்கை, பனைமரம், வெங்காயம், கீரைகள், அத்தி, டிராகன் பழம், வெண்ணை பழம், மங்குஸ்தான் போன்ற தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியை 6,435 எக்டரில் அதிகரிக்க, ரூ.8.71 கோடி நிதியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

❖ விவசாயிகள் தரமான வாழைத்தார்களை உற்பத்தி செய்யும் விதமாக, 1,000 எக்டர் பரப்பிலான வாழை தோட்டங்களுக்கு, வாழைத்தார் உறைகள் ரூ.1.25 கோடி நிதியில் வழங்கப்பட்டன.

❖ இதுவரை காய்கறிகள் சாகுபடி செய்யப்படாத கிராமங்களில் காய்கறி சாகுபடியை ஊக்குவிக்கும் விதமாக, 420 எக்டர் பரப்பில் ரூ.1.35 கோடி நிதியில் காய்கறி சாகுபடி.

மானாவாரி பகுதி மேம்பாடு

❖ தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்பு அடங்கிய ஒருங்கிணைந்த பண்ணைய முறை அலகுகள் 1,370 எண்களில் ரூ.6.20 கோடி நிதியில் அமைக்கப்பட்டது

தேசிய மூங்கில் இயக்கம்

❖ மூங்கில் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக பொது நிலங்களில் 494 எக்டர் பரப்பளவிலும், தனியார் நிலங்களில் 120 எக்டர் பரப்பளவிலும், மொத்தம் 614 எக்டர் பரப்பில் ரூ.2.91 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.

கூட்டுப் பண்ணையத் திட்டம்

❖ கூட்டுப் பண்ணைய திட்டத்தின் மூலம், 500 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு ரூ.25 கோடி தொகுப்பு நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 50,000 சிறு, குறு விவசாயிகள் பயன்.

பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

❖ 1,38,466 விவசாயிகள் 42,603 எக்டர் பரப்பளவில் அறிவிப்பு செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களில் பயிர்க் காப்பீடு செய்துள்ளனர்.

❖ 2020–2021ஆம் ஆண்டு பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களில் காப்பீடு செய்த விவசாயிகளில், 60,783 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.80.54 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

❖ அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 3,728.350 இலட்ச நடவுப் பொருட்கள் மற்றும் குழித்தட்டு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்.

❖ 325 மெ.டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வீட்டுக் காய்கறித் தோட்டங்களுக்கு விநியோகம்.

❖ 107 மெ.டன் உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள், 29 மெ.டன் உயிர் உரங்கள், 823 மெ.டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்.

காய்கறி உற்பத்தி

❖ முதலமைச்சரின் காய்கறி சாகுபடி இயக்கம் எனும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 328 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு 2 இலட்சம் காய்கறி விதைத் தளைகளும், 1 இலட்சம் மாடித் தளைகளும் இணையதளப் பதிவு மூலம் பயனாளிகளுக்கு விநியோகம். காய்கறி சாகுபடி பரப்பு 3.83 இலட்சம் எக்டராக உயர்வு.

மின்னணு வேளாண்மை

❖ 2021ஆம் ஆண்டு குறுவை தொகுப்புது திட்டத்தின் கீழ் 1.595 இலட்சம் விவசாயிகளுக்கு 31,050 மெட்ரிக் டன் உரங்கள், 2 இலட்சம் காய்கறித் தழைகள், 1 இலட்சம் மாடித் தோட்டத் தழைகள் மற்றும் 73.5 இலட்சம் மதிப்புள்ள மரக்கன்றுகள் பரிசுபெற்ற பயனாளிகளுக்கு விநியோகம்.

❖ வேளாண்மை இயக்குநரகத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு உருவாக்கம். இதன்மூலம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், ஆதார் சேவை இணைப்பு, மின் ஆளுகை செயல்படுத்துதலில் மின்னணு கையொப்பத்தைப் பயன்படுத்துதல், வேளாண்மை உழவர் நலத்துறைக்கென தனி இணையம்.

வேளாண்மைப் பொறியியல் துறை

❖ "இ–வாடகை கைப்பேசி செயலி" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.01.2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இ–வாடகை கைப்பேசி செயலி மூலமாக 9 இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் முன்பதிவு செய்து ரூ.6 கோடி அரசிற்கு இயந்திர வாடகையாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

- நிலமேம்பாடு திட்ட இயந்திரங்கள், குறைந்த வாடகையில் வழங்கப்படுவதன் வாயிலாக 27,345 விவசாயிகள் பயன். அரசிற்கு ரூ.18.44 கோடி வாடகையாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள 43 மண் தள்ளும் இயந்திரங்களைக் கொண்டு, அரசுக்கு ரூ.57.21இலட்சம் வாடகையாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

புதிய கல்லூரிகள்

- கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அரசு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைக் கல்லூரிகள் ரூ.40 கோடியில் துவக்கம்.
- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்வழிக் கல்வித் திட்டத்தின் கீழ், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டப்படிப்புகளை துவங்க ஆணை.

புதிய மையங்கள்

- ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் ரூ.2 கோடியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம்.
- ரூ.3 கோடியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் செயல்பாட்டில் உள்ள வளம்குன்றா அங்கக வேளாண்மைத் துறையினை, நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமாக மேம்பாடு.
- செட்டிநாட்டில் வறட்சி நில பயிர்களின் ஆராய்ச்சி மேம்பாட்டுத் திட்டம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது.

புதிய ஆராய்ச்சித் திட்டங்கள்

- ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கிள்ளிகுளத்தில் பனைமர ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டம்.
- தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் பல்கலைக்கழக பயிற்சி மையங்கள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கம்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அதிக மகசூல் தரும் பயிர் வகைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த ரூ.557 இலட்சம் ஒதுக்கீடு.
- தொலையுணர்வு தொழில்நுட்பம் மூலம் இயற்கை வளங்களை ஆராய்ந்து பயிர், மண் மற்றும் நீர் குறித்த தகவல்கள் கணினிமயமாக்க ரூ.72 இலட்சம் ஒதுக்கீடு.
- வேளாண் வணிகத்தில் தொழில்முனைவோரை ஊக்குவிக்க ரூ.130 இலட்சம் ஒதுக்கீடு.
- விதை உற்பத்தித் திறனை அதிகரித்து புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களை உற்பத்தி செய்து வழங்குவதற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு.
- நானோ தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு.
- திருச்சி மாவட்டம், குமுளூர் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டு வருட வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு துவங்க வேளாண்மைப் பொறியியலில் பட்டயப்படிப்பு அறிமுகப்படுத்த ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு.
- பண்ணைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்த டிஜிட்டல் விவசாயத்தை ஊக்குவிக்க ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு.
- பல்கலைக்கழக வேளாண் தொழில்நுட்ப இணையதளம் மற்றும் ஊடகங்களை மறுசீரமைக்க ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு.
- வேளாண் அறிவியல் நிலையங்களில் ஒற்றைச் சாளர விற்பனை மையங்களை நிறுவுவதற்கு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு.
- பனை மேம்பாட்டு இயக்கம், மரபுசார் நெல் இரகங்களை பாதுகாத்து விதைப்பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு விநியோகம். இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 50,000 விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் விநியோகம். கொல்லிமலை மிளகு, பண்ருட்டி பலா, பொன்னி அரிசி போன்ற பாரம்பரிய வேளாண் விளைப்பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்குவதன் மூலம் அகில உலகச் சந்தையில் விற்பனைக்கு நடவடிக்கை போன்ற பல்வேறு புதுமையான திட்டங்கள் அறிமுகம்.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு தோட்டக்கலை கல்லூரி, சிவகங்கை, நாகப்பட்டிணம், கரூர் மாவட்டங்களில் 3 வேளாண்மைக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. வேளாண்மைக் கல்வியில் தமிழ் வழி அறிமுகம், மஞ்சளில் ஆராய்ச்சி தீவிரப்படுத்த ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் ஆராய்ச்சி நிலையப் பணிகள் நிறைவேற்றம்.

தரவரிசை

- கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தென்னிந்தியாவில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கிடையே முதலிடத்தையும், இந்திய அளவில் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளதாகக் கல்வி உலகம் பத்திரிகை நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஜூன் 2021).
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2020ஆம் ஆண்டிற்கான இந்திய வேளாண் ஆராய்ச்சிகழகதரவரிசையில்எட்டாவதுஇடத்தை பெற்றுள்ளது. இந்த பல்கலைக்கழகமானது இந்தியாவில் பரவியுள்ள 67 வேளாண் நிறுவனங்களில் எட்டாவது இடத்தையும் தேசிய அளவிலான மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் நான்காவது இடத்தையும், தென்னிந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுக்கிடையே இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. (டிசம்பர் 2021).
- இந்திய வேளாண் வணிக மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் செயல் திறன் குறித்த தரவரிசைப் பட்டியலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேலாண்மைத் துறை, இந்திய மேலாண்மை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைந்திந்திய வேளாண் வணிகக் கல்வி நிறுவனங்களில் தேசிய அளவில் 15ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

விருது

- தேசிய அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பசுமை மற்றும் தூய்மையான வளாக விருது, தோட்டக்கலை வனவியல் மற்றும் வேளாண் பொறியியல் துறையில் இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளன.

சர்க்கரைத் துறை

கரும்பு உற்பத்தி ஊக்கத்தொகை

- சர்க்கரை ஆலைகளுக்கு 78.38 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு வழங்கியதற்காக 91,120 விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக ரூ.33.31 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை

- ரூ.150.89 கோடி செலவில், 91,120 விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,900 வீதம் கரும்பு உற்பத்தி ஊக்கத் தொகை மற்றும் சிறப்பு ஊக்கத் தொகை.

கரும்பு உற்பத்திக்கான சிறப்புத் திட்டம்

- கரும்பு விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரும் இரகங்களை நடவு செய்திட வல்லுநர் விதைக் கரும்பிற்கு 1,307 விவசாயிகளுக்கு ரூ.1.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 2020–2021ஆம் ஆண்டை விட 35,000 எக்டர் கூடுதலாக, 1,47,500 எக்டர் அளவுக்கு கரும்பு சாகுபடி உயர்வு.

இயற்கை பண்ணை முறை

- இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை, அரசு வேளாண் விரிவாக்க மையங்களில் இயற்கை வேளாண்மைக்கான இடுபொருட்கள் விநியோகம், வட்டார அளவில் இயற்கை வேளாண்மை மேற்கொள்ளும் பதிவு செய்து அங்ககச் சான்று பெறுவதற்குப் பயிற்சி அளித்துப் பதிவு பரப்பு 1,15,597 ஏக்கரைக் கடந்துள்ளது.

நுண்ணீர்ப்பாசனம்

- கரும்பில் நுண்ணீர்ப்பாசனம் அமைத்திடச் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும் மற்ற விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. 5,893 எக்டர் பரப்பில் நுண்ணீர்ப்பாசனம் அமைக்கப்பட்டு 5,843 விவசாயிகள் பயன்.
- ரூ.689.64 கோடி மானியத்தில் 1.023 இலட்சம் எக்டரில் நுண்ணீர்ப்பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 1,00,838 விவசாயிகள் பயன். நுண்ணீர்ப்பாசனத் திட்டத்தில் தமிழகம் தேசிய அளவில் முன்னிலை.

கொப்பரைக் கொள்முதல்

- தென்னை விவசாயிடமிருந்து நேரடியாக குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொப்பரைக் கொள்முதல் செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் இதுவரை இல்லாத அளவாக 2,021 மெட்ரிக் டன் கொப்பரை கொள்முதல்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)

- கரும்பு விவசாயிகளுக்குக் கரும்பு பயிரிட ஊக்கம் அளிக்கும் வகையில் 779 எக்டர் (76%) பொருள் மற்றும் ரூ.0.78 (65%) கோடி நிதி சாதனை அடையப்பட்டு 885 விவசாயிகள் பயன்.

ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

- ரூ.227.05 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,997 கிராமப் பஞ்சாயத்துகளில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கரும்பு பதிவு

- கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 99,889 எக்டர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரும்பு அரவை

- கூட்டுறவு பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் 85,18,573 மெட்ரிக் டன் கரும்பு அரவைச் செய்யப்பட்டுள்ளது.
- தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 12 மெகாவாட் இணை மின் உற்பத்தி நிலையத்தின் பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.
- மே மாதம் 2015 முதல் இணை மின் திட்டப்பணிகள் ஏதும் நடைபெறாமல் இருந்த எம்.ஆர்.கே, கள்ளக்குறிச்சி–1 மற்றும் கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மீண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.
- கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 19,53,138 மெ.டன் கரும்பினை அரவைச் செய்து 8.65 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானத்தில் 1,62,670.5 மெ.டன் சர்க்கரையை உற்பத்தி செய்து உள்ளன.

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை

- 61,401 ஹெக்டேர் பரப்பளவில், 120,396 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்குச் சான்றளிப்பு.
- 66,405 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைத் தரங்களை உறுதி செய்திட 77,221 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு 2,476 மெட்ரிக் டன் விதைகள் விற்பனைக்குத் தடை.
- தரமான விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதற்காக 29 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில், 1,10,502 விதை மாதிரிகளின் தரங்கள் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
- பயிற்சிப் பிரிவின் மூலம் நவீன உத்திகள் குறித்து 47,320 விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை சாகுபடியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- 28 அங்ககச்சான்று நிறுவனங்களில், அங்ககச் சான்றளிப்பிற்காக 1,15,597 ஏக்கர் பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.
- தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையில் மின் ஆளுமையைச் செயல்படுத்தும் பொருட்டு களப்பணியாளர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் விதை மாதிரிகள் சேமிப்பு வசதி



வழங்குவதன் மூலம் விதைத்தரக்கட்டுப்பாட்டுப் பிரிவினை வலுப்படுத்துவதற்காக ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

கொரோனா–19 பெருந்தொற்று காலத்தில் துறையின் செயல்பாடுகள் மற்றும் முன்னெடுப்புகள்

- கொரோனா–19 பெருந்தொற்று காலத்திலும், 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தங்கு தடையின்றி செயல்பட்டு வருகின்றன. ரூ.325 கோடி மதிப்பிலான 1.15 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்கள் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு 510 கிடங்குகளில் 77,766 மெ.டன் விளைபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொருளீட்டுக் கடனாக 225 விவசாயிகள் ரூ,3.73 கோடி பெற்றுள்ளனர்.
- உழவர் சந்தை விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் 48,388 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் 85,129 வாகனங்கள் மூலம் நுகர்வோர்களுக்கு நேரடியாக விற்பனை.
- மாநில அளவிலும் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் விவசாயிகள் உதவி மையத்துடன் கூடிய கட்டுப்பாட்டு அறை.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 22.86 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருள் வர்த்தகம் நடைபெற்றுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.31.30 கோடி பொருளீட்டுக் கடன் 1,441 விவசாயிகளுக்கும், ரூ.3.79 கோடி பொருளீட்டுக்கடன் 220 வியாபாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- 63 மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில் ரூ.342.57 கோடி மதிப்பிலான 10.60 இலட்சம் எண்கள் தேங்காய் மற்றும் 18.03 இலட்சம் குவிண்டால் இதர விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 1.20 இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைத்தளத்தின் வழியாக ரூ.323.71 கோடி பரிவர்த்தனை.
- திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, பூந்தோட்டம் மற்றும் மன்னார்குடி ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 9,500 மெ.டன் கொள்ளளவில், 5 சேமிப்பு கிடங்குகள் ரூ.14 கோடி மதிப்பீட்டில், ஏற்படுத்தப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.
- 6,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 6 சேமிப்பு கிடங்குகள், 50 உலர்களங்கள், 2 தொடர் ஓட்ட உலர்விப்பான், 2– மறு சுழற்சி தொகுப்பு உலர்விப்பான், ரூ.16.50 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவி மூலம் ஏற்படுத்த ஆணை.
- வரத்து மிகுதியுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அருகில், 10 இடங்களில் 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு வசதியுடன் கூடிய துணை விற்பனைக்கூடங்கள் ரூ.9.40 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்த ஆணை.
- திருவாரூர் மாவட்டத்தில் பருத்தி விவசாயிகள் நலனுக்காகப் பருத்தி விதை நீக்கும் இயந்திரம் நாளொன்றுக்கு 50 மெ.டன் திறனுடன் ரூ.5 கோடி மதிப்பில் ஏற்படுத்த ஆணை.
- புதுக்கோட்டை மாவட்டம், சிதம்பரவிடுதி, நாமக்கல் மாவட்டம், எருமபட்டி, திருப்பூர் மாவட்டம், பூலவாடி மற்றும் ஈரோடு மாவட்டம், பர்கூர் ஆகிய இடங்களில் 250 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் ஏற்படுத்த ஆணை.
- ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 28 இடங்களில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் உலர்க்களங்கள் அமைக்க ஆணை.
- நீலகிரி மாவட்டத்தில் ரூ.35 இலட்சத்தில் விவசாயிகள் பயன்பாட்டிற்காகச் சிறுதானியங்கள் பதப்படுத்தும் அலகு. நீலகிரி மாவட்டம், எடப்பள்ளியில் ரூ.2 கோடியில் ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்.
- நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை பகுதியில் ரூ.50 இலட்சத்தில் விளையும் மிளகினை விவசாயிகள் பதப்படுத்தும் வகையில், மிளகிற்கான பதப்படுத்தும் மையம்.
- தஞ்சாவூர் மாவட்டத்தில், ரூ.5.20 கோடியில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தென்னை மதிப்புக் கூட்டும் மையம்.
- விரிவுபடுத்தும் பணி. விரிவுபடுத்தும் பணி. விரிவுபடுத்தும் பணி.



உழவர் சந்தைகள்

- உழவர் சந்தைகளில் ரூ.1,572 கோடி மதிப்புள்ள 4.60 இலட்சம் மெட்ரிக் டன் காய்கனிகள், 16.73 இலட்சம் விவசாயிகளினால் 5.91 கோடி நுகர்வோருக்கு விற்பனை.
- 50 உழவர் சந்தைகளை நவீன வசதிகளுடன் புனரமைத்தல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ரூ.12.5 கோடி ஒதுக்கீடு.
- உழவர் சந்தைகளின் காய்கறி கழிவுகளை உரமாக்குவதற்கு 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் உரம் தயாரிக்கும் அலகுகள்.
- ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் 10 மாவட்டங்களில் பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் புதியதாக 10 உழவர் சந்தைகள். மாநகராட்சி பகுதிகளில் ரூ.60 இலட்சத்தில் பண்ணை காய்கனிகள் கிடைக்க 30 நடமாடும் காய்கனி அங்காடிகள்.
- ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் 50 உழவர் சந்தைகள் மற்றும் 50 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மின்னணு விலைப் பலகைகள்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

- 381 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் உருவாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.
- இடைநிலை மூலதன உதவித் திட்டத்தின்கீழ், 60 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.5 கோடி வணிகம் செய்வதற்காகக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 16 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிகம் செய்வதற்காக ரூ.3 கோடி கடன் உத்தரவாதம். 20 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிகம் செய்வதற்காக ரூ.4 கோடி நிதியுதவி.
- பாரதப் பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்துதலுக்கான திட்டத்தில் 162 தனிநபர் நிறுவனங்களுக்குக் கடன் ஒப்பளிப்பு செய்து ரூ.6.02 கோடி மானியம் ஒப்புதல்.

உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

- திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற் பூங்காவில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் ரூ.77.02 கோடி மதிப்பீட்டில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா.
- 10 ஏக்கர் பரப்பளவில் கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மதுரை ஆகிய ஏழு இடங்களில் "வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைத்தல்" திட்டத்தின் நிதி உதவியுடன் ரூ.191.88 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உணவு பதப்படுத்துதல்

❖ தமிழ்நாட்டில் விளையும் பல்வேறு வேளாண்மை விளைபொருட்களுக்கான ஏற்றுமதியை அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் துவங்கியுள்ளது. சென்னையில் வேளாண் ஏற்றுமதி சேவை மையம், முருங்கை ஏற்றுமதி மண்டலம், மதுரையில் முருங்கைக்காகச் சிறப்பு ஏற்றுமதி சேவை மையம், உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்காகத் தனிக் கழகம் ஏற்படுத்த நடவடிக்கை.

வேளாண் ஏற்றுமதி வளர்ச்சி

❖ சென்னை, கிண்டியில் உள்ள அக்ரோ கிரீன் பார்க் கட்டடத்தில் தேவையான உள்கட்டமைப்புகளுடன் கூடிய வேளாண் ஏற்றுமதி வசதி மையம் நிறுவ நடவடிக்கை.

❖ விவசாய ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு ரூ.2 இலட்சம் ரொக்கப் பரிசு.

❖ மாநிலத்தின் தனித்துவமான பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் நடவடிக்கைகள்.

❖ சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, முந்திரி போன்றவற்றிற்கான புவிசார் குறியீடு பெறப் பதிவு செய்யும் பணி நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள பொருட்களுக்கான புவிசார் குறியீடு பெரும் பணியும் நடைபெற்று வருகிறது.

❖ தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியை முருங்கை ஏற்றுமதி மண்டலமாக அரசு அறிவித்துள்ளது. முருங்கை ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரிக்க மதுரையில் சிறப்பு ஏற்றுமதி வசதி மையம் அமைக்க நடவடிக்கை.

❖ தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சி மையம் மூலம் ரூ.12.15 இலட்சம் மதிப்பில் 1,522 தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 45 பயிற்சிகள்.

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

❖ "பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு" நிதியின் கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.7.51 கோடி நிதி விடுவிப்பு.

நீர்வளம் மற்றும் மண்வள பாதுகாப்பு மேலாண்மை பணிகள்

❖ 4 கசிவு நீர் குட்டைகள், 40 தடுப்பணைகள், 51 நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்புகள், 32 அமிழ்வு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. 420 எக்டேர் தரிசு நிலங்கள் சீரமைக்கப்பட்டு, 24 கிராம குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன.

❖ 1,280 எக்டேர் பரப்பில், தீவன பயிர் உற்பத்தி, அங்க உரம் இடுதல், பசுந்தாள் உரமிடுதல், ஊட்டமேற்றிய தொழு உரமிடுதல், வண்டல் மண் பரப்புதல் ஆகிய இப்பணிகளின் வாயிலாக ரூ.2.04 கோடி மதிப்பீட்டில், 2,044 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

பயிர் மேலாண்மை செயல்பாடுகள்

❖ மாற்றுப் பயிர் திட்டம் 30 எக்டேரிலும், பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் பயிர் ரகங்கள் வழங்குதல் 24 எக்டேரிலும், குறுகிய காலப் பயிர்கள் 30 எக்டேரிலும், மேம்படுத்தப்பட்ட நடவுமுறை 106 எக்டேரிலும், நீர் மேலாண்மை செயல்பாடுகள் 117 எக்டேரிலும், பண்ணை குட்டையில் மீன் வளர்த்தல் பணி 7 குட்டைகளிலும் ரூ.26.35 இலட்சம் செலவிடப்பட்டு, 314 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

குறு தொழில் மற்றும் வாழ்வாதார பணிகள்

❖ 12 மண்புழு உர தயாரிப்பு அலகுகள், 17 மாவு அரைக்கும் இயந்திரங்கள், 99 தையில் இயந்திரங்கள், 66 கால்நடைகள் மற்றும் வீடுகளில் கோழி வளர்த்தல் பணிகள், நீர்வடிப் பகுதிகளிலுள்ள நிலமற்ற, 197 பெண் பயனாளிகளுக்கு அவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக ரூ.24.62 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பருவநிலை பாதுகாப்புப் பணிகள்

❖ 25 எக்டேர் பரப்பளவில் பொதுநிலங்களில் மரம் நடும் பணியும், 20 எக்டேர் பரப்பளவில் தோட்டக்கலை பயிர்களும், 10 எக்டேர் பரப்பளவில் சாலையோர மரம் நடும் பணியும் முடிக்கப்பெற்றுள்ளன.

❖ 60 உரம் மக்கும் குழிகளும், 15 தேனி வளர்ப்புப் பணிகளும், 4 எண்ணெய் எடுக்கும் கருவிகளும் 137 பயனாளிகளுக்கு ரூ.13.88 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

திறன் மேம்பாட்டுப் பணிகள்

❖ அறிவு மேலாண்மை மற்றும் ஆவணமாக்கும் பயிற்சிகளுக்காக ரூ.6.25 இலட்சம் செலவில் 26 பயிற்சிகள்.

❖ ❖ ❖



மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்

திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்

அவர்கள்

வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம்

- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், 3,00,263 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை.

கொரோனா நிவாரணம்

- கொரோனா நோயினால் இறந்த 63 வருவாய்த்துறை முன்களப் பணியாளர்களுக்கு தலா ரூ.25 இலட்சம் நிவாரணம்.
- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தின்கீழ் வழங்கும் ஓய்வூதியத் தொகைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.4,807.56 கோடியாக உயர்வு.

வருவாய்த்துறை கட்டடங்கள்

- ரூ.10.32 கோடி நிதி ஒதுக்கீட்டில் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு, புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகம்.

வருவாய்த்துறை உயர் அலுவலர்களின் பயன்பாட்டிற்கு புதிய வாகனங்கள் வழங்கியது

- மதுரை, திருப்பூர், தருமபுரி, கடலூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், தஞ்சாவூர், விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி





மாவட்டங்களுக்கு ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் புதிய வாகனங்கள் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு.

பேரிடர் மேலாண்மை

- வடகிழக்கு பருவமழைக் காலத்தில், பேரிடர் தொடர்பான 16 எச்சரிக்கை தகவல்கள் 28,91,931 நபர்களுக்குக் குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்பட்டுள்ளன.
- மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் 1,070 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி மூலம் வரப்பெற்ற 7,539 புகார்கள் மீது தீர்வு.
- மாநில அவசரக் கட்டுப்பாட்டு மைய வாட்ஸ் அப் எண் 94458 69848 மூலம் பொதுமக்களிடமிருந்து 186 புகார்கள் பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கை.
- மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் கட்டணமில்லாத் தொலைப்பேசி 1077 எண்ணிற்கு வரப்பெற்ற 10,327 புகார்கள் மீது நடவடிக்கை.
- சமுதாய பேரிடர் மீட்புப் படையினை உருவாக்கும் வகையில், 14 கடலோர மாவட்டங்களில் முதல்நிலை மீட்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு ரூ.20.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 65,000 குடியிருப்பு வாசிகள் முதல்நிலை மீட்பாளர்களாக பயிற்சி.
- வடகிழக்குப் பருவமழை காலத்தில், ஏற்பட்ட சேதங்களை உடனடியாக சீரமைக்க, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பல்வேறு துறைகளுக்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு.
- கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக உயிரிழந்த 55,743 நபர்களது குடும்பங்களுக்கு ரூ.278.71 கோடி நிவாரணம்.
- 14 கடலோர மாவட்டங்களில் பேரிடர் காலங்களில் அத்தியாவசியப் பணிகள் எவ்விதத் தடையுமின்றி தொடர்ச்சியாக நடைபெறும் வகையில் 38 வருவாய் அலுவலகங்களுக்கு 2 கிலோவாட் திறன் கொண்ட 38 மின்னாக்கிகள் வாங்க ரூ.41.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- 1,000 குறுவட்டங்களில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் தானியங்கி மழைமானிகள் அமைக்க நிதி ஒதுக்கீடு.

- சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கனமழையால் ஏற்பட்ட மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு மற்றும் குடிசை சேதம் ஆகியவற்றிற்காக 96,273 குடும்பங்களுக்கு ரூ.32.66 கோடி நிவாரணம்.

- கனமழையால் பாதிக்கப்பட்ட 1.80 இலட்சம் ஹெக்டேர் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.168.37 கோடி உயர்த்தப்பட்ட நிவாரணம் வழங்கப்பட்டு 3.59 இலட்சம் விவசாயிகள் பயன்.

- வடகிழக்குப் பருவ மழையின்போது ஏற்பட்ட சேதங்களைச் சீரமைக்கத் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.352.85 கோடி ஒதுக்கீடு.

- 400 தானியங்கி மழைமானிகள், 100 தானியங்கி வானிலை மையங்கள், வானிலை பலூன் அமைப்பு, 2 வானிலை ரேடார்கள், 11 தானியங்கி நீர்மட்ட கருவிகள் அதிவேக கணினிகள் அமைத்திட நடவடிக்கை.

நில நிருவாகத் துறை

இலவச வீட்டுமனை ஒப்படை

- வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கும் வகையில் 24,883 நபர்களுக்கும், ஆதிதிராவிடர்/பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை நிலங்களில் குடியிருந்து வரும் 53,991 நபர்களுக்கு, புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வரும் 16,018 நபர்களுக்கும் இலவச வீட்டுமனை பட்டாக்களும், நத்தம்/நகர நிலவரித் திட்டத்தின் கீழ் 56,809 நபர்கள் என மொத்தம் 1,51,701 நபர்களுக்கு இணைய வழியாகப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

விரைவுப் பட்டா மாறுதல் திட்டம்/இணையதள வழியிலான பட்டா மாறுதல் திட்டம்

- 19,52,244 இனங்களுக்கு இணைய வழியாகப் பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

நில மாற்றம்

- மாநில அரசுத் துறைகளுக்கு நிலைக் கிரயமின்றி 32 இனங்களில் 443 ஏக்கர் அரசு நிலங்கள் நில மாற்றம்.

நில உரிமை மாற்றம்

- அரசு நிலங்கள், பொதுப் பயன்பாட்டிற்காக, உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மாநில அரசு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் மத்திய அரசு நிறுவனங்களுக்கும், சில அரிய நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் வணிக நோக்கமில்லா நேர்வுகளில், நிலக்கிரயத் தொகையாக, ஒருமடங்கும், வணிகநோக்கமுடைய இனங்களில் நிலக்கிரயத் தொகையாக, இரு மடங்கும் வசூலித்து 124 இனங்களில் 616 ஏக்கர் அரசு நிலங்கள் நில மாற்றம்.

ஆக்கிரமணங்களை அகற்றுதல்

- அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் கண்காணித்துப் பாதுகாக்கும் வகையில் பொதுமக்களிடமிருந்து 12,425 புகார் மனுக்கள் பெறப்பட்டு, 10,182 மனுக்களுக்குத் தீர்வு.

- நீர்நிலை புறம்போக்குகள்–2740.37.1 எக்டர், மேய்க்கால், சாலை, கோவில்–1,111.78.99 எக்டர், காடு ஆகிய இதர புறம்போக்குகள் என மொத்தம் – 3,852.16.09 எக்டர் ஆக்கிரமணங்கள் அகற்றம்.

நிலக் குத்தகை

- அரசு புறம்போக்கு நிலங்கள், கட்டடங்கள், நிலத்துடன் கூடிய கட்டடங்களைத் தனியாருக்கு தற்காலிகமாகக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 951 குத்தகை இனங்களில், நடப்புக் குத்தகையில் ரூ.12.64 கோடி, நிலுவைக் குத்தகையில் ரூ.17.25 கோடி, என மொத்தம் ரூ.29.88 கோடி குத்தகைத் தொகை தனியாரிடமிருந்து வசூல்.

நில எடுப்பு

- பல்வேறு உட்கட்டமைப்பு சார்ந்த பணிகளுக்காக மாநில அளவில் நில நிருவாக ஆணையரின் கீழ் தமிழ்நாடு நில எடுப்பு முகமை (LAATAN) என்ற சிறப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, 686.23 எக்டர் (1,695 ஏக்கர்) நிலங்கள் மாநில நெடுஞ்சாலைத் திட்டங்களுக்காகவும், 552 எக்டர் (1,365 ஏக்கர்) நிலங்கள் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்காகவும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

சிறுப்பாசனப் புள்ளி விவர பகுத்தாய்வு (RMIS)

- ஜலசக்தி அமைச்சகத்தின் நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்புத் துறையின் கீழ், சிறுப்பாசனத் திட்டங்கள் குறித்த விரிவான புள்ளி விவரத் தொகுப்பு உருவாக்கம்.
- ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சிறுப்பாசனக் கணக்கெடுப்பினை நடத்தி, அதன்மூலம் தெளிவான தரவுகளைத்தொகுத்து அளிப்பதோடு நிலத்தடி நீர் குறித்து ஆய்வு.
- மத்திய அரசு, சிறுப்பாசனக் கணக்கெடுப்பின் நோக்கத்தினை மேலும் விரிவுபடுத்தி நீர் நிலைகள் குறித்த கணக்கெடுப்பும் சேர்த்து மேற்கொள்ளும் ஆறாவது சிறுப்பாசன கணக்கெடுப்பும் மற்றும் நீர்நிலைக் கணக்கெடுப்பும் முடிவுறும் தருவாயில் உள்ளன.
- நில நிருவாகத்துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து மிக எளிதாகவும், மிக விரைவாகவும் கோப்பு பரிவர்த்தனைகள் நடைபெறவும், காகிதமில்லா அலுவலகம் அமைவதற்கு வழிவகை.
- அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் "உள்நுழை" விவரங்கள் உருவாக்கப்பட்டு, கோப்புகள் அந்தந்த அலுவலர் படிநிலைப்படி மின் ஆளுமை கோப்பு அமைப்பின் மூலமாக அனுப்பப்பட்டு 8,000க்கும் மேற்பட்ட தபால்கள் இதன் மூலம் நடவடிக்கை.
- 38 மாவட்ட வருவாய் அலுவலர், தனி மாவட்ட வருவாய் அலுலவர், அனைத்து மாவட்ட வருவாய் அலுவலருடைய தனிச் செயலருக்கும் உள்நுழையீட்டு விவரங்கள் உருவாக்கப்பட்டு அனைவருக்கும் தக்க பயிற்சி.

நில நிருவாக ஆணையரக கணினிமயமாக்கும் திட்டம்

- காகிதமில்லா நிலையினை உறுதி செய்ய, இணைய முகப்பு உருவாக்கப்பட்டு "நில நிருவாக ஆணையரக கணினிமயமாக்கும் திட்டம்".

நிலச்சீர்திருத்தம்

- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 1,46,91,297 நபர்கள் உறுப்பினர்களாகவும்,



1,35,74,462 நபர்கள் உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் உறுப்பினர்களாகவும் என மொத்தம் 2,82,65,759 நபர்கள் கணக்கெடுக்கப்பட்டு ரூ.146.57 கோடி 1,24,587 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு, ரூ.187.22 கோடி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒதுக்கீடு.

❖ பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நில உடமைதாரர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் 10 வருவாய் நீதிமன்றங்களால் நிலுவையில் உள்ள 5,263 வழக்குகளில் 2,140 வழக்குகள் முடிக்கப்பட்டு, 3,123 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

❖ சட்டப் பிரிவு 37Aஇன் கீழ், 26 நிறுவனங்களுக்கும் மற்றும் பிரிவு 37Bஇன் கீழ், 5 பொது நம்பகங்களுக்கு அரசால் அனுமதி.

நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை

❖ இணையவழி நில ஆவணங்களிலுள்ள பிழைகளை முழுமையாகக் களைவதற்குரிய ஒரு சிறப்பு நடவடிக்கையாக ஒவ்வொரு கிராமத்திலும் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 44,967 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 30,241 விண்ணப்பங்களுக்கு பட்டா தொடர்பான பிழைகள் சரிசெய்யப்பட்டுத் தீர்வு.

❖ **நகர்ப்புர நில ஆவணங்கள் :** 32.38 இலட்சம் நகரப்புலங்களில் 31.94 இலட்சம் புல எண்களுக்கான நில ஆவணங்கள் ஒப்பிடப்பட்டு, 7.57இலட்சம்பிழைகள்கண்டறியப்பட்டுஅவற்றில் 5.38 இலட்சம் பிழைகள் களையப்பட்டுள்ளன.

❖ **இணையவழிப் பட்டா மாறுதல் திட்டம் :** 8.90 இலட்சம் இணையவழிப் பட்டா மாறுதல்கள்.

❖ **தானியங்கி பட்டா மாறுதல் :** உட்பிரிவு செய்ய வேண்டிய தேவை இல்லாத நிலப் பரிவர்த்தனைகளுக்கான 1,46,914 பட்டா மாறுதல்கள் தானியங்கியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ **உரிமம் பெற்ற நில அளவர்கள் :** நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பலவிதமான நிலஅளவைப் பணிகளை விரைந்து நிறைவேற்ற, கட்டுமான பொறியியலில் மூன்றாண்டுகள் பட்டயப் படிப்பில் தேர்ச்சி மற்றும் ஓரத்தநாடு நில அளவை பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 150 நபர்களின் இணையவழிப் பட்டா மாறுதல் பணியிலும், 164 நபர்கள் பிற அரசுத்துறைகளிலும் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

❖ **குறுவட்ட அளவர்களுக்குத் தரவு அட்டைகள் வழங்குதல் :** இணையவழிப் பட்டா மாறுதல் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய 264 குறுவட்ட அளவர்களுக்கு 3G தரவு அட்டைகள், 255 குறுவட்ட அளவர்களுக்கு 4G தரவு அட்டைகள் வழங்க நடவடிக்கை.

❖ **'ஒருங்கிணைந்த நில ஆவணம்' :** 'அ' பதிவேடு, சிட்டா, புலப்படம் ஆகியவற்றை நிலச் சாகுபடி மற்றும் பயன்பாடு ஆகிய விவரங்களை உள்ளடக்கிய இணைய வழி அடங்கல் ஆவணங்களுடன் ஒருங்கிணைத்து நில உரிமைதாரர்களுக்கு 'ஒருங்கிணைந்த நில ஆவணம்' வழங்குவதற்கான அரசு ஆணை.

❖ **மறு நில அளவை :** நவீன நில அளவைக் கருவிகளான வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவியைப் பயன்படுத்தி கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 262.54 ச.கி.மீ. பரப்பளவிற்கு மறு நில அளவை செய்யப்பட்டுள்ளது.

❖ **நகர்ப்புர நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புர நிலவரி :** தமிழ்நாடு நகர்ப்புர நிலவரிச் சட்டத்தின்கீழ், ரூ.12.85 கோடி நகர்ப்புர நிலவரித் தொகை வசூல்.

❖ அறியாக் கிரயம் பெற்றோர் திட்டத்தின்கீழ், 92,595 சதுர மீட்டர் பரப்பளவு நிலங்கள் 413 இனங்களில் வரன்முறை செய்ய அரசால் இசைவளிப்பு.

❖ ரூ.3.69 கோடி நிலமதிப்புத் தொகையாக அறியாமல் கிரயம் பெற்ற மனுதாரர்களால் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

❖ ரூ.8.70 இலட்சத்தில் 15 நவீன கணினிகள்.

❖ ❖ ❖



சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்
மக்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிதல்... – 08.11.2021



சென்னை, கொளத்தூர் நிவாரண முகாமில்
உணவின் தரம் ஆய்வு... – 09.11.2021



மாண்புமிகு

தொழில்துறை அமைச்சர்

திரு. தங்கம் தென்னரசு

அவர்கள்

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்

தொழில்துறை

- சென்னை, கோயம்புத்தூர், தூத்துக்குடி மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் நடத்தப்பட்ட ஐந்து முதலீட்டு மாநாடுகள் மூலம், ரூ.69,375 கோடி முதலீட்டில், 2,25,802 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க 131 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.
- வருடாந்திர முதலீட்டாளர்கள் சந்திப்பு 2022இன் போது ஆசிய–ஒசியான மண்டலத்திற்கான சிறந்த முதலீட்டு நிறுவனத்திற்கான விருது தமிழ்நாட்டின் வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.
- தமிழகத்தைப் பெரிய அளவில் தொழில் மயமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கி உருவாக்க நடவடிக்கை.
- தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021, தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021 ஆகியவை வெளியீடு. ஒற்றைச் சாளர இணையம் 2.0, ஒற்றைச் சாளர கைப்பேசி செயலி வழிகாட்டி நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட இணையம் மற்றும் தமிழ்நாடு நிலத் தகவல் இணையம் ஆகியன துவக்கிவைப்பு.



- நிதிநுட்பப் பிரிவு, ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு மற்றும் பணி ஆய்வகப் பிரிவு ஆகிய சிறப்புப் பிரிவுகள் வழிகாட்டி நிறுவனத்தில் அமைத்தல்.
- ஆக்சிஜன் உற்பத்தி தொழில்களில் முதலீடு செய்யும் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்த ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர்கள், மருத்துவ ஆக்சிஜன் மற்றும் பெரிய திரவ ஆக்சிஜன் ஆலைகளின் வணிக உற்பத்தியைத் தொடங்கும் முதலீட்டாளர்களுக்கு இதர சலுகைகளுடன், 30 சதவிகித மூலதன மானியம் வழங்க ஆணை.
- தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் 207 தொழில் நிறுவனங்களுக்கு 1,328 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து, ரூ.19,970 கோடி முதலீட்டில் 36,785 நபர்களுக்கு வேலைவாய்ப்பு.
- மணப்பாறை, தேனி, திண்டிவனம் ஆகிய மூன்று இடங்களில் உணவுப் பூங்காக்கள், மாநல்லூரில் மின்வாகனப் பூங்கா, ஓரகடத்தில் மருத்துவ சாதனங்கள் பூங்கா, விருதுநகரில் ஆடைப்பூங்கா, பனப்பாக்கத்தில் தோல் பூங்கா, சூளகிரியில் வருங்கால நகர்திறன் பூங்கா, கரூரில் ஜவுளிப் பூங்கா, நெமிலியில் தயார் நிலையிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் வல்லம்–வடகால், ஓரகடம் மற்றும் பெருந்துறை ஆகிய தொழிற்பூங்காக்களில் ஆயத்தத் தொழிற்கூட வசதிகள், சிறுசேரி மற்றும் பர்கூரில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் நிறுவிடத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் நடவடிக்கை.
- தொழில்பூங்காக்கள், தொழில் நிறுவனங்கள், புதிய கண்டுபிடிப்புகளுக்கான புத்தாக்க மையங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைக்காக ரூ.500 கோடி மதிப்பீட்டில் தொழில் சுற்றுச்சூழல் அமைப்பு நிதி உருவாக்கம்.
- திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில், ரூ.1,200 கோடி முதலீட்டில் பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா அமைக்கத் தேசிய நெடுஞ்சாலை லாஜிஸ்டிக்ஸ் மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுகம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், (NEEDS) 152 பயனீட்டாளர்களுக்கு, ரூ.120.45 கோடி கடன் வழங்க அனுமதி.
- கோவிட்–19 தொற்றுநோயின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நிதிப் பற்றாக்குறையினை சமாளிக்க 582 தொழில்முனைவோருக்கு ரூ.159.47 கோடி கடன் வழங்க அனுமதி.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில், கரூரில் உள்ள சமுதாயக் கூடத்தில் 152 ஆக்சிஜன் வசதி படுக்கைகள் உட்பட 200 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம்.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலம் ஆக்சிஜன் Booster compressor மற்றும் filling station அமைத்து மருத்துவமனைகளுக்கு,



ஆக்சிஜனை சிலிண்டர்களில் நிரப்பி வழங்கும் பணி.

- "வலிமை" என்ற புதிய வகை சிமெண்ட் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.
- அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் புதைபடிவ பூங்காக்கள் அமைக்க நடவடிக்கை.

கலை மற்றும் பண்பாட்டுத்துறை

- 75 ஆவது சுதந்திர ஆண்டையொட்டி, ரூ.164 இலட்சம் செலவில் 75 நாட்டுப்புறக் கலை வடிவங்களை, 75 ஒளிப்படங்களாக தயாரித்து இணையவழியில் வெளியிடும் பணி தொடக்கம்.
- "கால் கொண்ட கவிதைகள்" என்ற பெயரில், விரைவு தகவல் குறியீட்டு முறையுடன் நாட்காட்டி வெளியீடு.
- ரூ.28.03 இலட்சம் மதிப்பில், 684 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள்.
- நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ், 1,000 நலிந்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.3,000 நிதியுதவி.
- மறைந்த புகழ்பெற்ற 18 கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒருமுறை குடும்ப பராமரிப்பு நிதியாக தலா ரூ.25,000.
- மகாகவி பாரதியாரின் 100 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஓவியப் போட்டி.
- நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ், 88 நலிந்த கலைஞர்களின் மரபுரிமையினர்களுக்கு ரூ.74.46 இலட்சம் நிதியுதவி.
- வறுமைக் கோட்டின்கீழ் வாழும் புகழ்பெற்ற கலைஞரான திரு.எம்.கே.தியாகராஜ பாகவதரின் பேரன் திரு.சாய்ராம் என்பவருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் நிதியுதவி.
- மாவட்டக் கலை மன்றம் வாயிலாக வழங்கப்படும் விருதுகளின் எண்ணிக்கை 15 ஆக உயர்வு. ரூ.53.70 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு.
- "விடுதலைப் போரில் தமிழகம்" அலங்கார ஊர்திகள் சென்ற தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கலை பண்பாட்டுத்துறையின் சார்பாகக் கலை நிகழ்ச்சிகள். கலைஞர்களுக்கு ரூ.10.80 இலட்சம் மதிப்பூதியம்.
- சுற்றுலாத்துறை மற்றும் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு கலைஞர்களுக்கு ரூ.31.30 இலட்சம் மதிப்பூதியம்.
- யுடியூப், முகநூல், டிவிட்டர் மற்றும் வாட்ஸ்ஆப் குழுக்கள் வாயிலாகக் கலை பண்பாட்டுத் துறையின் செயல்பாடுகள் மற்றும் தகவல்கள் பரிமாற்றம்.
- நம்ம ஊரு திருவிழா என்ற பெயரில் பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலை விழா 500 நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு நடத்தப்பட்டது.
- துபாயில் நடந்த உலக வர்த்தக கண்காட்சியில் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டது.

அருங்காட்சியகங்கள் துறை

- ரூ.6 கோடி மதிப்பில் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியக பாரம்பரிய கட்டடம் மேம்பாடு.
- ரூ.2.5 கோடி செலவில், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு மேலாண்மையை நிறுவும் பணிகள்.
- சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் பல்வேறு கல்வி சார்நிகழ்ச்சிகள்.
- ரூ.5.41 கோடி செலவில் சென்னை, அரசு அருங்காட்சியக பாந்தியன் கட்டடத்தை மீட்டுருவாக்கி காட்சிக்கூடங்களை மேம்படுத்தும் திட்டப்பணிகள்.
- ரூ.2.81 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஒரு பழைய பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி அதில் பாரம்பரிய சூழல் மற்றும் உட்கட்டமைப்புக் கொண்ட உணவகம்.
- ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் தற்போதுள்ள நிருவாகக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய நிருவாகக் கட்டடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்.
- ரூ.90 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியகத்தில் சுற்றுச்சுவர்.

தொல்லியல்துறை

- ரூ.16.93 கோடியில் சார்ஜாமாடி, தஞ்சாவூர், டேனிஷ்கோட்டை தரங்கம்பாடி மற்றும் மதுரை திருமலைநாயக்கர் அரண்மனை புனரமைப்பு பணிகள். இந்நிதியாண்டிற்கு ரூ.43.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- கொடுமணல், சிவகளை மற்றும் கீழடியினைச் சுற்றியுள்ள அகரம் மற்றும் கொந்தகை இடங்களை தொல்லியல் தளங்களாக அறிவிப்பதற்கான முன்னிலை அறிவிக்கை வெளியீடு.
- கீழடியில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை.
- கொற்கையின் கரையோரப் பகுதிகளில் முன்கள ஆய்வு ரூ.172.65 இலட்சத்தில் மேற்கொள்ளத் திட்டம். இதில், தொல்லியல் துறையால் ரூ.93.65 இலட்சம் ஒப்பளிக்கப்படவுள்ளது.
- தொல்லியல் அகழாய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ளத் தொடரும் செலவினம் ரூ.5 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு.
- சிவகங்கை மாவட்டத்தில் கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம், கொந்தகை, அரியலூர் மாவட்டத்தில் கங்கைகொண்ட சோழபுரம் (மாளிகைமேடு) இடங்களில், தொல்லியல் அகழாய்வுப் பணிகள்.
- ரூ.1.58 கோடி நிதி ஒதுக்கீட்டில் சிவகங்கை மாவட்டம், கீழடியில் புதிய உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்திற்கு 34 கூடுதல் பணியிடங்கள்.
- தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனத்தில், ஈராண்டு முதுநிலை கல்வெட்டியல் பட்டயப் படிப்பு தொடக்கம்.
- தொல்பொருட்கள் மற்றும் கல்வெட்டுகளை மின்னனு முறையில் ஸ்கேன் செய்ய ரூ.60 இலட்சத்தில் இரண்டு உயர்நிலை கையடக்க 3D Scanner மற்றும் உபகரணங்கள்.
- பாறை ஓவியங்களை மின்னனு முறையில் ஆவணப்படுத்த தொல்லியல் அலுவலர், புவியியலாளர், மானுடவியலாளர், நாட்டுப்புறவியல் நிபுணர்கள் அடங்கிய வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 18 இடங்களில் களஆய்வு.
- கீழடி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், ஆதிச்சநல்லூர், சிவகளை, அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய ஏழு இடங்களில் அகழாய்வு பணிகள்.
- வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் புதிய கற்கால இடங்களைக் கண்டறிதல் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தைக் கண்டறிதல் என இரு கள ஆய்வுகள்.
- அரிட்டாப்பட்டி, முதலைக்குளம், தொண்டூர், நெகனூர்மற்றும்பூலாங்குறிச்சி ஆகியஇடங்களில் உள்ள தமிழி கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிப்பு.
- "ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை பகுதிகளில் அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களைக் காட்சிப்படுத்த, திருநெல்வேலி நகரில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் "பொருநை அருங்காட்சியகத்திற்கு" 13 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு.
- கீழடியில் வெளிக்கொணரப்பட்ட தொல்பொருட்களைக் காட்சிப்படுத்தச் சிறப்புக் கண்காட்சி துவக்கம்.
- உலக மரபு வாரவிழா கொண்டாடப்பட்டு, அனைத்து அகழ்வைப்பகங்களிலும் கோயில்களின் பாதுகாப்பு மற்றும் தொல்லியல் சின்னங்களைப் பராமரித்தல் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு.
- 45ஆவது சென்னை புத்தகத் திருவிழாவில் 5,000 சதுர அடியில் அமைக்கப்பட்ட பொருநை கண்காட்சி அரங்கு, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை பகுதிகளில் அகழாய்வின்போது கிடைத்த அரிய தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டது.
- 5ஆவது நெல்லை புத்தகக் கண்காட்சியில் பொதுமக்கள் பயனடையும் வகையில் ஒரு சிறப்புக் கண்காட்சி.
- இப்புத்தகக் கண்காட்சியில் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் என்னும் தலைப்பில் 6 கல்வெட்டுத் தொகுதிகள் வெளியீடு.
- கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் லித்திக் டெக்னாலஜி எனப்படும் கற்தொழில்நுட்பம் குறித்த தேசிய அளவிலானப் பயிலரங்கம்.
- சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பண்டைய தமிழ்ப்பண்பாடும் மரபும் என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம்.

தமிழ் வளர்ச்சித்துறை

- தமிழ் இலக்கியத்திற்கு வளம்சேர்க்கும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் 3 நபர்களுக்கு ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய இலக்கிய மாமணி விருது.
- ஞானபீட விருது, சாகித்திய அகாடமி விருது, கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள், தமிழ் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 10 தமிழ் எழுத்தாளர்களுக்கு ஆண்டுதோறும் அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் கனவு இல்லம்.
- ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தொடர்ந்து செயல்படுவதற்கு ரூ.1.25 கோடி.
- 8 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு ரூ.1.30 கோடி நூலுரிமைத் தொகை.
- குறள் முற்றோதல் செய்யும் மாணவர்கள் அனைவருக்கும் குறள் பரிசு வழங்க ஆணையிடப்பட்டு 219 மாணவர்களுக்கு ரூ.25.18 இலட்சத்தில் குறள் பரிசு.
- நவி மும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டட மேம்பாட்டிற்கு ரூ.25 இலட்சம்.
- தீராக் காதல் திருக்குறள் என்ற பெயரில் தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாக ரூ.25 இலட்சத்தில் குறளோவியம் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, மாணவர்கள் வரைந்த ஓவியங்களைக் கொண்டு திருக்குறள் நாட்காட்டி உருவாக்கம்.
- தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக ரூ.1 கோடி வழங்கப்பட்டு அயல்நாடு, வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்கத் தமிழ் பரப்புரைக் கழகம் உருவாக்கம்.
- ரூ.15 இலட்சம் செலவில் சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துக்களை ஓவியங்களாக வரைந்து காஃபி மேசைப் புத்தகமாக வெளியிட நடவடிக்கை.
- புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்களின் அரிய ஒலி/ஒளிப் பொழிவுகள் இணையதளத்தில் ஆவணமாக்கத் தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.10.40 இலட்சம்.
- ரூ.10 இலட்சத்தில் பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்கள் ஒலி நூல்களாக வெளியிட நடவடிக்கை.
- திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்பு.
- நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் கருத்துக்களையும், சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க அவர்களது பிறந்த நாளன்று பேச்சுப் போட்டிகள் நடத்திட ஆணையிடப்பட்டு, ரூ.27.20 இலட்சம் ஒதுக்கீட்டில் மகாத்மா காந்தி மற்றும் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளில் பேச்சுப் போட்டிகள்.
- சங்க இலக்கிய நூல்களைச் சந்தி பிரித்து உரையுடன் தொகுப்பு நூலாகவும் மற்றும் திராவிடக் களஞ்சியம் எனும் தொகுப்பு நூலை உருவாக்கத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு ரூ.10 இலட்சம், உருவாக்கப்படும் நூல்களை அச்சிட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம்.
- மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும் அவரது படைப்புகள் குறித்தும் ஆய்வு செய்த, மறைந்த பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவர் குடும்பத்தாருக்கும், மூத்த ஆய்வாளர் திரு.சீனி விசுவநாதன், பேராசிரியர் ய.மணிகண்டன் ஆகியோர்களுக்கும் தலா ரூ.3 இலட்சம் வீதம் விருதுத்தொகையுடன் பாரதி நினைவு நூற்றாண்டு விருதுகள்.
- கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ரூ.5 இலட்சம் விருதுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழ்.
- எல்லைப் போராட்டத் தியாகிகள் 110 பேருக்குச் சிறப்பு நேர்வாக தலா ரூ.1 இலட்சம்.
- தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் பிறந்த நாளன்று, ஆண்டுக்கு 12 இடங்களில் இலக்கியக் கூட்டங்கள் மூன்று மாவட்டங்களில் நடத்திட ரூ.3.75 இலட்சம் ஒதுக்கீடு.
- தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக வழங்கப்பட்டு வந்த அரசு விருதுகளுக்கான விருதுத்தொகை ரூ.2 இலட்சமாக உயர்வு.
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் முதல் நூலாக அயல்நாட்டு அறிஞர் டாக்டர் ராபர்ட் கால்டுவெல் எழுதிய "A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages" என்னும் நூல் பேராசிரியர் பா.ரா.சுப்பிரமணியன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியீடு.
- பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக பாரதியின் கையெழுத்துப் பிரதிகள், சித்திரக் கதை நூல், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து ஓவியங்களுடன் கூடிய நூலாகவும், பாரதியாரின் படைப்புகள், பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் வெளியிடும் பெருந்திட்டப் பணிகள்.



- "பன்முக ஆளுமையாளர் கலைஞர்" என்னும் பொருண்மையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக 16 நாட்கள் இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கம்.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோன்றுவதற்கு வித்திட்ட, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் நிறுவனர் நாள் விழாவாகக் கொண்டாட்டம்.
- தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாக வ.உ.சிதம்பரனார் குறித்த இணையவழிக் கருத்தரங்கம்.
- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு ரூ.28.80 இலட்சம் உதவித்தொகை.
- தமிழ் இலக்கியங்களை உலகமொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.12 இலட்சம். கலைஞரின் சங்கத் தமிழ் நூல் பிரஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்காகப் பணிகள்.
- தமிழ்ப் பணிகள் தொடர்பாகப் பிற பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களுடன் பன்னாட்டு அளவில் 4, உள்நாட்டு அளவில் 11 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.
- தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பாக 15 இந்திய ஆட்சிப் பணியாளர்களுக்கு அடிப்படைத் தமிழ்ப் பயிற்சி.
- வீரமாமுனிவரின் பிறந்தநாள் "தமிழ் அகராதியியல் நாள்" விழாவாகக் கொண்டாடப்பட்டு, பள்ளி மாணவர்களுக்கு ஓவியப்போட்டி, சொல்லாக்கப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள்.
- "தமிழ் அகராதியியல் நாள்" விழாவின் பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகளின் ஆய்வுமலர் அச்சிட்டு, விலையின்றி விநியோகம்.
- தூயதமிழ்ப் பேசுவோர் 6 பேருக்குத் பரிசுத்தொகை, சான்றிதழ். 36 பேருக்குத் தூயதமிழ்ப் பற்றாளர் விருது, 2 தூயதமிழ் ஊடக விருது, 2 நற்றமிழ்ப் பாவலர் விருது.
- சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள், அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடுகள், விக்கிப்பீடியாவில் பதிவேற்றம்.
- உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை வாயிலாக 3 இணையத் தமிழ்க் கூடல், 12 இணைய வழிப் பன்னாட்டுக் கருத்தரங்கங்கள்.
- "பாரெங்கும் பாரதி" தலைப்பில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இணைய வழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் பன்னாட்டுக் கவியரங்கம்.
- பள்ளி, கல்லூரிகளுக்கு தனித்தனியே அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.
- புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 131ஆவது பிறந்தநாளைப் போற்றும் வகையில் தமிழ்க் கவிஞர் நாள் விழா கொண்டாடப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

- பாவேந்தர் பாரதிதாசன் ஆய்விருக்கைச் சார்பில், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் நிகழ்வாக "புரட்சிக் கவிஞர் வாழ்கிறார்" என்ற பொருண்மையில் சொற்பொழிவு.

உலகத் தமிழ்ச் சங்கம்

- நெதர்லாந்து சூரியத் தமிழ் தொலைக்காட்சி, கல்லிடைக்குறிச்சி தேசிய கல்வி அறக்கட்டளை, தில்லி கலை இலக்கியப் பேரவை இணைந்து சர்வதேச மகளிர் நாளினை முன்னிட்டு இணையவழி பன்னாட்டுக் கவியரங்கம்.
- இச்சங்கத்தில் நடைபெற்ற நூல் அரங்கேற்றம் நிகழ்வில் 16 நூல்கள் அரங்கேற்றம்.

❖ ❖ ❖



மாண்புமிகு
சட்டத்துறை அமைச்சர்
திரு. எஸ்.இரகுபதி
அவர்கள்

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

- தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி சட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அகில இந்திய இட ஒதுக்கீட்டுக்கான 50% இடங்களையும், தமிழ்நாடு அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையான 69% (பட்டியலினத்தவர்–18%, பழங்குடியினர்–1% மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்–50%) போன்றே பின்பற்றிட அரசு ஆணை.
- சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகரத்தில் 3 ஆண்டு மற்றும் 5 ஆண்டு சட்டப் படிப்பில் முதலாமாண்டில் தலா 80 மாணவர்களுடன் ஒரு அரசு சட்டக் கல்லூரியினை 2022 – 2023ஆம் கல்வியாண்டு துவக்கிட ஆணை.
- அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மூலம் ஆங்கிலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி.
- மிகவும் பழைமையான மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற 147 சட்டங்கள், மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் நீக்கறவு செய்யப்பட்டுள்ளன.
- ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 11 நபர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாகத் தற்காலிகமாக நியமனம்.
- 14 அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்கென சட்டப் புத்தகங்கள்,



சட்ட இதழ்கள் மற்றும் சட்ட தரவுத் தளங்கள் வாங்குவதற்கென ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

❖ திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மண்டலம் அமைத்திடும் பணிகளுக்கென ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

❖ நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக்கட்டடம்கட்டும்பணிகளைமேற்கொள்ள ரூ.92.31 கோடி நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

❖ 14 அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்குச் சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சட்ட மாநாடுகள் நடத்திட ஆண்டொன்றுக்கு ரூ.28 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

❖ அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்களுக்கு, ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சியினை நடத்திட ரூ.14 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு அளித்து ஆணை.

❖ திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவுவதற்கு ரூ.28 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி.

❖ சேலம், நாமக்கல் மற்றும் தேனி அரசு சட்டக் கல்லூரிகளுக்கென இயந்திரமும் சாதனமும் மற்றும் கணினியும் அதன் துணைப் பாகங்களும் வாங்கிடும் பொருட்டு, ரூ.35.92 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை.

❖ தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் இணைய வழியில் சட்ட வரலாற்று மாநாடு நடத்தியதற்கு ரூ.4.40 இலட்சம் மீள் ஒப்பளிப்பு.

❖ தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் இளநிலை சட்டப்படிப்பு பயின்ற தமிழகத்தைச் சேர்ந்த 2 முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள் அவர்கள் செலுத்தியுள்ள கல்விக் கட்டணம் ரூ.2 இலட்சம் மீள் ஒப்பளிப்பு.

❖ திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்டம் மற்றும் வேளாண்மைக்கான மையம் மற்றும் முதலீடுகளுக்கான சட்டங்கள் மையம் நிறுவிட ரூ.20 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டுவரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் செவியுணர் காணொளி ஊடக மையம் நிறுவிட ரூ.46.58 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டுவரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவிடும் பணிகளுக்கென ரூ.1.67 கோடிக்கு நிருவாக அனுமதி.

❖ சீர்மிகு சட்டப் பள்ளியில் இளநிலை சட்டப் படிப்புகளில் தெரிவுப் பாடமாகத் தேசிய மாணவர் படைத் திட்டம் அறிமுகம்.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இணையவெளி சட்டம் மற்றும் நீதி என்ற புதிய பாடப்பிரிவில் முதுநிலை சட்டப் படிப்பு ரூ.1.18 கோடி செலவில் தொடக்கம்.

❖ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டுவரும் சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனைச் சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூ.15 இலட்சம் செலவில் தொடங்க நடவடிக்கை.

❖ அரசு சட்டக்கல்லூரிகளில் எல்.எல்.எம். சட்ட முதுநிலை படிப்பு மாணவர் சேர்க்கையினை இணைய வழியில் நடத்திட அனுமதி.

சிறைகள் (ம) சீர்திருத்தப்பணிகள் துறை

❖ அனைத்து மத்தியச் சிறைகளுக்கும் ரூ.18 இலட்சம் செலவில் 9 ஊடுகதிர் அலகிடல் கருவிகள்.

❖ சிறைகளைச் சீர்திருத்த மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள்.

❖ ❖ ❖



வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டுவசதி மேம்பாடு, இடவசதி கட்டுப்பாடு, நகரத்திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்

திரு. சு.முத்துசாமி

அவர்கள்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

- ரூ.678.06 கோடி மதிப்பீட்டில் 2,298 குடியிருப்புகள் மற்றும் 3,145 மனைகள் உள்ளடக்கிய 5,443 அலகுகளின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- 6,323 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.84.23 கோடி மதிப்பீட்டிலான 7.40 ஏக்கர் வாரிய நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பதிவாளர்

- தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தென்சென்னை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு திருவள்ளூர் மாவட்டம் பிடாரிதாங்கல் கிராமத்தில் 3.94 ஏக்கர் நிலப்பரப்பளவில்





மனைப்பிரிவு திட்டம் செயல்படுத்த ரூ.20 கோடி கடன் வழங்கியுள்ளது.

- முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் ரூ.1,436 கோடி வைப்பீடுகள் திரட்டப்பட்டு, கடன் நிலுவைத் தொகை ரூ.1,977 கோடி, ரூ.912 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
- கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களால் உருவாக்கப்பட்ட வீட்டுமனைத் திட்டங்களின் மூலம் உறுப்பினர்களுக்கு 93,319 எண்ணிக்கையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற தமிழக அரசின் வீட்டுவசதிக் கொள்கையைச் செயலாக்குவதில் முக்கியப் பங்காற்றி வருகிறது.
- கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பணி நிபந்தனைகளுக்கான ஒட்டுமொத்த துணை விதித்திருத்தம் மேற்கொள்ள ஆணைகள் வழங்கப்பட்டு புதிய துணை விதித்திருத்தத்தின் படி முன்னர் வேலை வாய்ப்பகம் மூலம் கலந்தறியாமல் பணியமர்த்தம் செய்யப்பட்ட 337 பணியாளர்கள் பணி மூப்பு மற்றும் பதவி உயர்வுக்கான பணிச்சலுகைகள் பெற்று பயன்.
- 4 கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அரசு சிமெண்ட் 1,162 டன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.66.18 இலட்சம் இலாபம்.
- பிரதம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் 39 பொது சேவை மையங்கள் செயல்படுத்தப்பட்டு 58,533 எண்ணிக்கையிலான சேவைகள் வழங்கப்பட்டு ரூ.33 இலட்சத்திற்கு வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 116 சேவை சங்கங்களுக்கு சொந்தமான கடைகள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற 965 இடங்களை வாடகைக்கு விட்டு சேவை.

நகர் மற்றும் ஊரமைப்பு துறை

- ரூ.5 கோடி மதிப்பீட்டில், மதுரை மாவட்டத்தில் நகர் ஊரமைப்பு அலுவலக கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.12.2021 அன்று துவக்கம்.
- மண்டலத்திட்டங்கள் தயாரிப்பதற்காக, மாநிலம் 12 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, மண்டலத் திட்டம் (தயாரிப்பு, பிரசுரம் மற்றும் அங்கீகாரம்) விதிகள் 2021இல் உருவாக்கம். கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மண்டலங்களுக்கான திட்டங்கள் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் போபாலில் உள்ள திட்டமிடல் மற்றும் கட்டடக்கலை பள்ளி மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதுரை மண்டலத்திற்கான திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கி வழங்கிய ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் பணிகள்.
- 8 மண்டலங்களுக்கான திட்டங்கள் தயாரிப்பதற்காக ரூ.41.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் துவக்கம்.
- மயிலாடுதுறை மாவட்டத்தில் நகர் ஊரமைப்பு அலுவலகம் 16.12.2021 அன்று புதியதாக துவக்கம்.

- 18 மாவட்டங்களில் நகர் ஊரமைப்பு அலுவலகம் சொந்தக் கட்டடங்களில் இயங்க ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான பணிகள்.
- தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, ஆமதாபாத்தில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் திட்டமிடல் மையம் மூலம் மறுஆய்வு.
- மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களுக்கு நகர்ப்புர வளர்ச்சித் திட்டக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டு, அக்குழுமங்கள் செயல்பட புதிய அத்தியாயம் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971இல் சேர்த்திடச் சட்டமன்றத்தில் மசோதா நிறைவேற்றம்.
- பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திட்ட அனுமதிக்கான கால அவகாசம் 5 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகளாக காலநீட்டிப்பு.
- திட்டமில்லாப் பகுதிகளில் அனுமதியின்றி கட்டப்பட்ட கல்விக் கட்டடங்கள் வரன்முறை திட்டத்தின்கீழ், 358 கல்வி கட்டடங்களுக்குத் தீர்வு.
- மாநிலத்தின் 7 சதவிகிதமாக உள்ள திட்டப் பகுதியை 22 சதவிகிதமாக உயர்த்திட 111 முழுமைத் திட்டங்கள் மறுஆய்வுக்கும், 24 நகரங்களுக்கு புதிய முழுமைத் திட்டங்கள் தயாரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2,824 குடியிருப்பு மனைப் பிரிவுகளுக்குத் திட்ட அனுமதி.
- 920 கட்டடங்களுக்குத் திட்ட அனுமதி.
- வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், 14,860 மனைப் பிரிவுகள் வரன்முறை.
- ஒற்றைச்சாளர முறையில் 26 சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகளுக்கானத் (MSME) திட்ட அனுமதியும், வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau) மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களில் 18 தொழிற்சாலைகளுக்கு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக, காலியாக இருந்த உதவி திட்ட அமைப்பாளர் பதவியில் 15 பணியிடங்கள் மற்றும் திட்ட உதவியாளர் நிலை–I பதவியில் 15 பணியிடங்கள் நேரடி நியமனம்.
- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 01.05.2022 முதல் ஒற்றைச் சாளர நிகழ்நிலை மூலமாகத் திட்டமிடல் அனுமதி விண்ணப்பத்தை தொடக்கம் முதல் இறுதி வரை கைமுறையான தலையீடில்லாமல் முடிக்கும் திட்டத்தை அறிமுகம்.
- சுமார் 8 தடையில்லா சான்று வழங்கும் துறைகள் இவ்வமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டு, இது தவிர விண்ணப்பிக்கப்பட்டுள்ள இடத்தின் புல அளவீட்டுப் புத்தகம், பட்டா மற்றும் GLV ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள DOSS மற்றும் IGRவுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- ஏற்கெனவே, வழங்கப்பட்ட திட்ட அனுமதி உட்பட அனைத்துப் பதிவுகளையும் பாதுகாப்பாக்க





டிஜிட்டல் மயமாக்கும் பணியில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஈடுபட்டுள்ளது.

- ❖ கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் பணியாற்றிவரும் தினக்கூலி பணியாளர்களின் நலனுக்காக ரூ.2.67 கோடி மதிப்பில் கோயம்பேட்டில் ஓய்வுக் கூடம் மற்றும் சிற்றுண்டியகம்.
- ❖ காட்டாங்குளத்தூர் கிராமம், மறைமலைநகரில் ரூ.5.85 கோடி மதிப்பில் 1.07 ஏக்கர் பரப்பளவில் சமுதாயக் கூடம்.
- ❖ பொதுமக்களின் கருத்துக் கேட்புக்குப் பிறகு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டத்தின் அரக்கோணம் தாலுக்காவில் உள்ள பகுதிகள் உட்பட 5,904 சதுர கி.மீ. பரப்பளவில் சென்னைப் பெருநகரப் பகுதி விரிவாக்கத்திற்கான முன்மொழிவு அரசின் பரிசீலனையில் உள்ளது.
- ❖ சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் 2 முதல் 6 மாதங்கள் வரை பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டு, இதில் 30 பயிற்சியாளர்கள் அதாவது 20 பிரிவு 'A' (மாணவர்) மாணவர்களுக்கு மற்றும் 10 பிரிவு 'B' (தொழில் வல்லுநர்கள்) கட்டிடக்கலை, திட்டமிடல், சிவில் இன்ஜினியரிங், பொதுவியல் பொருளாதாரம் மற்றும் சமூகவியல் ஆகிய துறைகளில் கோடைக்கால இன்டர்ன்ஷிப் 2022க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

❖ ❖ ❖



மாண்புமிகு

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்

திரு. கே.ஆர்.பெரியகருப்பன்

அவர்கள்

ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ், ரூ.23,214.39 கோடி மதிப்பீட்டில் 22,06,260 பணிகள்
- மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு ரூ.6,149 கோடி விடுவிப்பு.
- ரூ.1,162.44 கோடி செலவில் 14,32,204 ஊரக வீடுகளுக்குக் குடிநீர் குழாய் இணைப்பு.
- ரூ.2,223.33 கோடி செலவில் 5,696 கி.மீ. நீளமுள்ள 4,123 சாலைப் பணிகள் மற்றும் 54 பாலங்கள்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ், ரூ.5,662.22 கோடி மதிப்பீட்டில் ஊரகப் பகுதிகளில் நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் 1,02,308 பணிகள் உட்பட 4,79,992 பணிகள்.
- அனைவருக்கும் வீடுகள் என்ற நோக்கில் ஊரகப் பகுதிகளில் ரூ.8,017.40 கோடி மதிப்பீட்டில் 2,89,887 வீடுகள் கட்ட அனுமதி.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- 16,519 புதிய சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, 21,596 குழுக்களுக்கு ரூ.32.39 கோடி சுழல் நிதி.
- சமுதாய முதலீட்டு நிதியாக ஒரு குழுவிற்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 37,500 குழுக்களுக்கு ரூ.255.25 கோடி நிதி.





- 9,830 தனி நபர்களுக்கு ரூ.14.50 கோடி நலிவு நிலைக்குறைப்பு நிதி.
- ரூ.622 கோடி செலவில் 2,42,571 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி.
- 4,08,740 சுய உதவிக் குழுக்களுக்குக் கடனுதவி ரூ.21,392.52 கோடி வழங்கப்பட்டு சாதனை. ரூ.1,17,812 கோடி வங்கிக் கடனுதவி.
- 1,62,069 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.27.12 கோடி வட்டி மானியம்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள் 17,11,837 நபர்கள் ஆயுள் காப்பீட்டிலும், 21,01,722 நபர்கள் விபத்து காப்பீட்டிலும், 22,09,249 நபர்கள் மருத்துவக் காப்பீட்டிலும் பதிவு.
- ரூ.68 இலட்சம் மதிப்பீட்டில், 8 மாவட்ட பூமாலை விற்பனை வளாகங்கள் புதுப்பிப்பு.
- தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின்கீழ், 11,290 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள்.
- ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலம் 15,736 இளைஞர்கள் பயிற்சி பெற்று 13,069 இளைஞர்கள் சுயதொழில் துவக்கம்.
- மாவட்ட அளவிலான 50 வேலைவாய்ப்பு முகாம்கள் வாயிலாக, 32,517 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

- 2,477 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கம். 2,000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.15 கோடி துவக்க நிதி.
- 804 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 500 தொழில் குழுக்களுக்கு ரூ.375 கோடி துவக்க நிதி.
- ரூ.7.62 கோடி செலவில் 1,131 சமுதாய பண்ணைப்பள்ளிகள் அமைக்கப்பட்டு, 34,669 உறுப்பினர்களுக்கு வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

- 20,438 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 15,859 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15.96 கோடி சுழல் நிதி.
- 300 பகுதிகள் அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, 215 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.1.08 கோடி சுழல் நிதி.
- ரூ.11.20 கோடி செலவில் 7,662 நகர்ப்புர இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி.
- 8,053 தனிநபர்களுக்கு ரூ.45 கோடி, 5,245 தொழில் குழுக்களுக்கு ரூ.167.48 கோடி, 14,237 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.644.42 கோடி வட்டி மானியத்துடன் வங்கிக் கடனுதவி.

❖ ❖ ❖



மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

திரு. தா.மோ.அன்பரசன்

அவர்கள்

குடிசைத் தொழில்கள், சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத்தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கோவிட்–19 பெருந்தொற்று கால விளைவுகளை எதிர்கொள்ள அரசு மூலதன மானியமாக ரூ.360 கோடி வழங்கியது. 3,545 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.360 கோடி முழுவதும் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS) உருவாக்கம். ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு.
- படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.148.57 கோடி மானியம் 929 திட்டங்களுக்கு நிதி நிறுவனங்களால் இறுதி ஒப்பளிப்பு. தனிநபர் முதலீட்டு மானியம் ரூ.86.88 கோடியும், பின்முனைவட்டி மானியம் ரூ.10.36 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.
- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான, வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், 4,151 பயனாளிகளுக்கு, ரூ.40.91 கோடி மானியம்.
- பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், ரூ.76.46 கோடி 3,053 பயனாளிகளுக்கு விளிம்புத் தொகை மானியம்.



- கோவிட் பெருந்தொற்று காலத்தில் சிட்கோ நிறுவனத்திற்கு தவணைத்தொகை மற்றும் வாடகைத் தொகையைச் செலுத்துவதற்கு ஆறு மாத கால அவகாசம். 5 குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.3.43 இலட்சம் முத்திரைக் கட்டண மானியம்.
- காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் துல்லிய பொறியியல் குழுமம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் சிப்காட் தொழிற்பூங்காவில் மருந்து பொருட்கள் குழுமம் தலா ரூ.100 கோடி மதிப்பில் அமைப்பதற்கான நடவடிக்கை.
- நான்கு மாவட்டங்களில் 413 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.241 கோடி மதிப்பில் 5 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள்.
- சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழில் மனைகள் ஒதுக்கீட்டிற்குத் தீர்வுகாணத் திருத்திய மனைமதிப்பீட்டு கொள்கை உருவாக்கம். இத்திருத்திய மனைகொள்கை மதிப்பீட்டின்படி, தொழிற்பேட்டைகளில் மனை மதிப்பு 5% முதல் 75% வரை குறைக்கப்பட்டுள்ளது.
- சிட்கோ தொழிற்பேட்டைகளில் அரசு புறம்போக்கு வகைப்பாட்டில் உள்ள நிலங்களுக்கு பட்டா வழங்க அதிகாரமளிக்கப்பட்ட குழு அமைப்பு ஒன்றினை கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டைகளை உள்ளடக்கிய 23 தொழிற்பேட்டைகளின் 1,314 ஏக்கர் நிலத்திற்குப் பட்டா வழங்க அதிகாரம் பெற்ற குழுவின் கூட்டத்தில் முடிவு.
- அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.29.47 கோடி மதிப்பில் 800 பணியாளர்கள் தங்குவதற்காக 5 தளங்களுடன் கூடிய பணியாளர் தங்கும் விடுதி கட்டுமானப் பணிகள்.
- பொது உற்பத்தி கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டத்தின்கீழ், ரூ.2.5 கோடி மானியத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளாளலூரில் ரூ.4.76 கோடி மதிப்பில் வார்ப்புக்குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரையில் ரூ.4.44 கோடி மதிப்பில் பொறியியல் குழுமம், வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் ரூ.3.61 கோடி மதிப்பில் தீப்பெட்டி குழுமம் அமைக்க நடவடிக்கை.
- தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கச் சூழலை மேம்படுத்தி தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை வரையறை. இதன் மூலம் ரூ.20 இலட்சத்திற்கும் குறைவான கொள்முதல்களுக்கு, EMD செலுத்துவதிலிருந்து விலக்கு, முன்விற்று முதல் நிபந்தனை விலக்கு, முன் அனுபவ நிபந்தனை விலக்கு, ஒப்பந்தப்புள்ளி செலவு தள்ளுபடி ஆகிய சலுகைகள்.
- தமிழ்நாடு புத்தொழில் விதை நிலை மானிய நிதி திட்டத்தின்கீழ், 19 நிறுவனங்களுக்கு ரூ.1.9 கோடி மானியம்.
- புத்தாக்கப் பற்றுச்சீட்டுத் திட்டத்தின் மூலம் 84 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.2.29 கோடி நிதியுதவி.
- 19,837 ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு நான்கு கட்டங்களாகப் பயிற்சி.
- 1,042 நிறுவனங்களுக்கு ரூ.8.59 கோடி குறைந்தழுத்த மின் மானியம்.
- 5 குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.3.46 இலட்சம் ஊதியப்பட்டியல் மானியம்.
- 809 குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.39 கோடி பின் முனை வட்டி மானியம்.
- 358 நிறுவனங்களுக்கு ரூ.3.02 கோடி ஆற்றல் தணிக்கை, ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்ட மானியம்.
- 173 நிறுவனங்களுக்கு ரூ.150 இலட்சம் தரச்சான்றிதழ் பெறுவதற்கான மானியம்.
- ஒரு சிறு தொழில் நிறுவனத்திற்கு மூலதன சந்தைகளிலிருந்து நிதி திரட்டுவதற்காக செலவிட்ட ரூ.14.16 இலட்சம் மானியம் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.
- 43 நிறுவனங்களுக்குக் காப்புரிமை பதிவு, வர்த்தக முத்திரை பதிவுக்காகவும் ரூ.4.16 இலட்சம் மானியம்.
- குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்கள் திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டத்தின்கீழ், 276 குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவன 14,639 பயனாளிகளுக்குப் பயிற்சி.
- 45 வசதியாக்கக் குழுக்கூட்டம் நடத்தப்பட்டு 175 குறு மற்றும் சிறுதொழில் நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.42.62 கோடி பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- RIDF பாகம்–1 திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 5 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ.17.68 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கம்.
- RIDF பாகம்–2 திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 10 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கம்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மூலதனக் கடன் வழங்குவதற்காகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), தாய்கோ இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.

- கொலுசு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் சேலம் மாவட்டம், அரியகவுண்டம் பட்டியில் 1.23 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.55 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி தொழில் வளாகம்.
- டான்சியின் உற்பத்தி பொருட்களை அறிந்து கொள்ள மின் வணிக இணைய முகப்பு.
- திண்டுக்கல், துதிப்பேடு மற்றும் பல்லாவரம் ஆகிய 3 இடங்களில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீர் பொது சுத்திகரிப்பு நிலையங்களை நவீனமயமாக்க, தரம் உயர்த்த ரூ.4.82 கோடி அரசு நிதி.
- திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் டிசைன் குழுமத்திற்கும், பல்லடத்தில் விசைத்தறி குழுமத்திற்கும் பொது வசதி மையம் அமைப்பதற்கு ரூ.88 இலட்சம் மற்றும் ரூ.1.05 கோடி முதல் தவணை.
- திருப்பூரில் துணி பின்னல் குழுமத்திற்கும், ஈரோட்டில் நெசவு குழுமத்திற்கும் பொது வசதி மையம் அமைப்பதற்கு ரூ.1.20 கோடி மற்றும் ரூ. 74.73 இலட்சம் இறுதி தவணை.
- தமிழ்நாட்டில் கயிறு குழுமங்களை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள கயிறு குழுமங்களுக்கு ரூ.2.96 கோடி இறுதி தவணை.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக எண்ம தகவல் வழிகாட்டும் கடன் மதிப்பீட்டு முறையை மேம்படுத்த, தொழில்களுக்கான தகவல் தளத்தினை உருவாக்க அரசாணை.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

- தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்காக 1,23,106 வீடுகள்.
- 95,336 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள்.
- வீட்டுவசதி பணிகளுக்காக ரூ.1,197.09 கோடி மூலதன செலவினம்.
- 2,828 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டாணைகள்.
- 544 அடுக்குமாடிக் குடியிருப்புகள், 628 மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ரூ.37 கோடி செலவிலான அடுக்குமாடிக் குடியிருப்புகள் பழுது நீக்குதல், புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வருகிறது.
- தாமாக வீடுகள் கட்டும் 446 திட்டப்பகுதிகளில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 398 அடிப்படை வசதிகளுக்கான பணிகள்.
- சென்னை மற்றும் இதர நகரங்களில் 26 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் 7,726 சிதிலமடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மீண்டும் கட்டும் திட்டத்திற்கான பணிகள்.
- அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மறுகட்டுமானத்திற்காக பயனாளிகள் மாற்று இடங்களில் தங்குவதற்காக வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.24,000 ஆக உயர்வு.
- ரூ.68.72 கோடி செலவில் சென்னை மற்றும் இதர நகரங்களில் 65 அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதியில் உள்ள 26,483 அடுக்குமாடிக் குடியிருப்புகள் புதுப்பிக்கும் பணிகள்.
- ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின்கீழ் கட்ட ரூ.1,570 கோடி செலவில் 6,157 வீடுகள் கட்டுவதற்கு ரூ.1,095 கோடி கடனுதவிக்கான ஒப்பந்தம். தமிழக அரசு ரூ.475 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,869 வீடுகள் கட்டும் பணிகள்.
- அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீட்டின்போது பயனாளிகள் பங்களிப்புத் தொகையினை ஒரே தவணையாக செலுத்தும் முறை ரத்து.
- ரூ.5 இலட்சம் வரை செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை மாதம் ரூ.250 முதல் ரூ.500 வரை குறைப்பு.
- குடும்பத் தலைவி பெயரில் ஒதுக்கீட்டாணைகள் மற்றும் விற்பனை பத்திரங்கள் வழங்க திட்டம்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

- பெரும்புலவன் பாரதியாரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பூம்புகார் நிறுவனம் பாரதியார் சிலைகள் மற்றும் நினைவுப் பொருட்களை பல்வேறு அளவுகளில் குறைந்த விலையில், காகிதக்கூழ், களிமண், பித்தளைப் பொருட்கள், தஞ்சாவூர் கலைத் தட்டு, மரச்சிற்பம் போன்ற பல்வேறு கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்து, தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் செயல்படும் விற்பனை நிலையங்களில் காட்சிக்காகவும், விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன.



- ரூ.5.61 கோடி செலவில் மாமல்லபுரத்தில் 'கைவினை சுற்றுலா கிராமம்' திட்டத்தை, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) கைவினைஞர்கள் நலனுக்காகவும், சுற்றுலா மேம்பாட்டிற்காகவும் செயல்படுத்தி வருகிறது. இதன் முதற்கட்டமாக ரூ.2.26 கோடி பெறப்பட்டு ரூ.1.80 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் நெட்டி வேலை, அரும்பாவூர் மரச்சிற்பம் கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பதிவகம் மூலம் பெறப்பட்ட புவிசார் குறியீடு அங்கீகார சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.
- 65 வயதிற்கு மேற்பட்ட 20 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் மற்றும் பூம்புகார் மாநில விருதுகள்.
- கைவினை பொருள்கள் தயாரிக்கும் வண்ணம் கைவினைஞர்களின் நலனுக்காக ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவி தலா ரூ.60 இலட்சம் செலவில் கைத்திறத் தொழில்களுக்காக 5 இடங்களில் வசதி மையங்கள்.
- மேலும், ரூ.47 இலட்சம் செலவில் கோரைப் பாய்கள் மற்றும் களிமண் பொம்மைகள் கைத்திறத் தொழிலுக்கான இயந்திரங்களுடன் கூடிய 2 பொது வசதி மையங்கள் துவக்கப்பட்டு 2,500 கைவினைஞர்கள் பயன்.
- துபாய் எக்ஸ்போ திடலில் நடைபெற்ற தமிழ்நாடு வார விழா கண்காட்சியில் பூம்புகார் கைவினைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டது.

பட்டு வளர்ச்சித் துறை

- ரூ.10 இலட்சம் செலவில் வாடிக்கையாளர்கள் இரசனைக்கேற்ற சேலை வடிவமைப்புகளை தாங்களே வடிவமைக்கும் திட்டம் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் செயலாக்கம்.
- 5,042.30 ஏக்கர் பரப்பில் உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்த 3,232 பயனாளிகளுக்கு ரூ.5.29 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- தனி பட்டுப்புழுவளர்ப்பு குடில் அமைத்த 329 பட்டு விவசாயிகளுக்கு ரூ.3.76 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 380 பட்டுவிவசாயிகளின் 600.40 ஏக்கர் பரப்பிலான மல்பெரி தோட்டங்களில் சொட்டுநீர்ப்பாசன அமைப்பு நிறுவிய வகையில் ரூ.92.381 இலட்சம் பங்குத்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- 400 முனைகள் கொண்ட 1 தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவிய தொழில் முனைவோருக்கு பங்குத் தொகை ரூ.30.52 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம் மூலம் 79.268 மெட்ரிக் டன் முறுக்கேற்றிய பட்டு நூல் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



மாண்புமிகு
செய்தித்துறை அமைச்சர்
திரு. மு.பெ.சாமிநாதன்
அவர்கள்

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்

செய்தி மக்கள் தொடர்புத்துறை

நினைவகங்கள் பிரிவு

- சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பீட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிட கட்டுமானப் பணிகள் துவக்கம்.
- முத்தமிழறிஞர் கலைஞருக்கு சென்னை அண்ணா சாலை, அரசினர் தோட்டம், ஓமந்தூரார் மருத்துவ வளாகத்தில் ரூ.1.70 கோடியில் திருவுருவச் சிலை.
- அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய 175 ஆவது ஆண்டு விழாவின் நினைவாகச் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணிகள் துவக்கம்.
- 1987 ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான







21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி கிராமத்தில் மணிமண்டபம்.

- ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மறைந்த எழுத்தாளர் கி. ராஜநாராயணன் அவர்களுக்கு, கோவில்பட்டியில் திருவுருவச் சிலை, நூலகத்துடன் கூடிய அரங்கம்.
- உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு ரூ.18 இலட்சம் மதிப்பில் புனரமைப்பு.
- தூத்துக்குடியில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு மணிமண்டபம்.
- சென்னை காந்தி மண்டபத்தில், வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் ரூ.43.42 இலட்சம் செலவில் புதுப்பிப்பு மற்றும் மார்பளவு சிலை.
- ரூ.72.50 இலட்சம் செலவில் ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லம் புனரமைத்து திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில் ஒலி–ஒளிக் காட்சி அமைத்திடவும் நடவடிக்கை.
- ரூ.43.70 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில், வ.உ.சிதம்பரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை.
- விடுதலைப் போராட்ட மாவீரர் மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை.
- ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை.
- ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு, கடலூரில் திருவுருவச்சிலை.
- மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை.
- வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்குச் சென்னை இராணி மேரி கல்லூரியில் ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை.
- இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர நாள் விழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் 10 நினைவிடங்களை மேம்படுத்தி ஒலி–ஒளிக்காட்சி.
- சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காந்தி மண்டபம் – அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவு மண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவு மண்டபம் ஆகியன ரூ.3.38 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு.
- சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர்

நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலை மற்றும் திருமூர்த்தி அணை அருகில் அரங்கம்.

- ரூ.4 கோடி மதிப்பில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டப் பணிகளின் போது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவு மண்டபம், பொள்ளாச்சியில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர், வி.கே.பழனிசாமி கவுண்டர், மேனாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஆகியோர்களின் திருவுருவச் சிலைகள்.
- ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு, சென்னையில் திருவுருவச் சிலை மற்றும் நாமக்கல் நகரில் அரங்கம்.
- ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு, ஈரோடு மாவட்டம் பவானிசாகர் நகரியத்தில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம்.
- ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் மேனாள் அமைச்சர் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி கிராமத்தில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம்.
- ரூ.29.55 கோடி மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் நவீன முறையில் புனரமைக்கும் பணி.
- நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களுக்கு சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில், மார்பளவு வெண்கலச் சிலை.

செய்தி வெளியீட்டுப் பிரிவு

- கொரோனா தொற்றால் இறந்த 17 ஊடகவியலாளர்களின் வாரிசுகளுக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.1.70 கோடி இழப்பீட்டுத் தொகை .
- கொரோனா நிவாரணமாக 5,782 ஊடகவியலாளர்களுக்கு, ரூ.2.89 கோடி செலவில் தலா ரூ.5,000 வீதம் சிறப்பு ஊக்கத் தொகை.
- பணிக்காலத்தில் இயற்கை எய்தும் ஊடகவியலாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.5 இலட்சமாக உயர்வு.
- அரசு செய்தி வெளியீடுகள், சாதனைகள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றைக் கீச்சகம் (Twitter), படவரி (Instagram) முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (Youtube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, சமூக ஊடகப் பணிகளை மேற்கொள்வதற்கு ''சமூக ஊடகப்பிரிவு'' என்ற தனிப்பிரிவு புதியதாக உருவாக்கம்.

பத்திரிகையாளர் நலவாரியம்

- உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, நலத்திட்ட உதவிகள் வழங்க, பத்திரிகையாளர் நல வாரியம் உருவாக்கம்.





- தகுதி வாய்ந்த இளம் பத்திரிகையாளர்களைத் தெரிவு செய்து இந்திய அளவில் புகழ் பெற்ற பத்திரிகை சார்ந்த கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில நிதியுதவி.

- இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய கலைஞர் எழுதுகோல் விருது.

விழாக்கள் பிரிவு

- பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தொடங்கி வைத்த நாளான 07.10.1961ஆம் நாளை "பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட தினம்" என அறிவிப்பு. இந்நாளில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர், வி.கே.பழனிசாமி கவுண்டர், முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலையணிவித்து மரியாதை.

- "கப்பலோட்டிய தமிழன்" வ.உ.சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18ஆம் தேதி தியாகத் திருநாளாக அனுசரிக்க ரூ.80 ஆயிரம் ஆண்டுதோறும் தொடர்செலவினமாக நிதி ஒப்பளிப்பு.

- மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாளினை "மகாகவி நாளாக" கடைபிடிக்க ரூ.80 ஆயிரம் ஆண்டுதோறும் தொடர்செலவினமாக நிதி ஒப்பளிப்பு.

- மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை, பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ரூ.2.40 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- ரூ.1.52 கோடி நிதி ஒதுக்கீட்டில் அனைத்து மாவட்டங்களிலும் 75ஆவது சுதந்திர தின பவள விழா "சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா" கொண்டாட்டங்களை நடத்த பல்துறை பணிவிளக்கக் கண்காட்சிகள்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் "எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்" என்ற பெயரினை "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" எனப் பெயர் மாற்றம்.

- ரூ.1.58 கோடி செலவில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் உட்கட்டமைப்பு வசதிகள்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக 232 வகையான புத்தகங்கள் ரூ.2 கோடி மதிப்பில் மறுபதிப்பு.

- கருணை அடிப்படையில் 6 நபர்கள் பணிநியமனம்.

❖ ❖ ❖



மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

மாண்புமிகு
சமூக நலன்-
மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி பி.கீதா ஜீவன்
அவர்கள்

- கர்ப்ப காலத்திலும் பிரசவத்திற்குப் பின்னரும் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தைக் கருவுற்ற மகளிருக்குத் தெளிவுபடுத்திடச் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 90,000 கருவுற்ற மகளிர் பயனடைந்துள்ளனர்.
- ஒருநாள் வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடத்துவதற்காக ரூ.3.5 கோடி செலவில் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழகத்தை உருவாக்க ஒப்பளிக்கப்பட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.
- முதன்மை அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களில் 25 சதவிகிதம் விதவைகள்/ கணவனால் கைவிடப்பட்டோருக்குப் பணி நியமனம்.
- குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி உதவியாளர்களின் பணி ஓய்வுபெறும் வயது 60ஆக உயர்வு.



- ரூ.7.76 கோடி செலவில் 7,757 குழந்தைகள் மையங்களுக்கு தலா ரூ.10,000 வீதத்தில் மின்வசதி ஏற்படுத்தும் பணிகள்.
- கிராமப்புற, நகர்ப்புற மற்றும் பெருநகரப் பகுதிகளில் வாடகைக் கட்டடங்களில் செயல்படும் 7,228 குழந்தைகள் மையங்களின் வாடகையினை உயர்த்தி ஆணை. ரூ.18.17 கோடி நிதி ஒதுக்கீடு.
- அரசு சொந்தக் கட்டடங்களில் செயல்படும் 43,214 குழந்தைகள் மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்புத் தொகையாக தலா ரூ.3,000 வீதம் ரூ.12.96 கோடி நிதி ஒதுக்கீடு.
- 2021 – 2022ஆம் ஆண்டிற்கு ரூ.24.80 கோடி செலவில் 25 மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் 2 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச்சீருடைகள்.
- 2022 – 2023ஆம் ஆண்டிற்கு ரூ.4.15 கோடி செலவில் 7 மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் பயிலும் 2 முதல் 6 வயது வரையிலான 1,58,063 குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச்சீருடைகள் வழங்க நிதி ஒதுக்கீடு.
- மாநில அளவிலான மண்டல வாரியான (4 மண்டலங்கள்) ஒப்பந்தப்புள்ளி முறை அறிமுகப்படுத்தப்பட்டு, சத்துணவுத் திட்டப் பயனாளிக் குழந்தைகளுக்கு அக்மார்க் தரத்திலான முட்டைகள் கொள்முதல் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் 60 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
- கொரோனா காலத்தில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்குப் பாடத்திட்டத்தின் மென்நகல் வாட்ஸ்ஆப் மூலம் பகிரப்பட்டு, குழந்தைகள் வீட்டிலிருந்தே கற்பதற்கு ஏதுவாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கை.
- அங்கன்வாடிப் பணியாளர்களால் பெற்றோர்களுக்கான பகிரிக் குழுக்கள் (Whatsapp Group) உருவாக்கப்பட்டு, ஊரடங்கு காலத்தில், பாடத்திட்டச் செயல்பாடுகள் வீடியோ மற்றும் குரல் வழி செய்தியாகப் பெற்றோர் மற்றும் குழந்தைகளைப் பேணுவோருக்கு அளிக்கப்பட்டு வீடுகளில் கற்பிக்கும் வசதி.
- 2021ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தினை தாய்ப்பாலூட்டும் வாரமாகக் கொண்டாடும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குரல்வழி விழிப்புணர்வு செய்திகள் 4.6 இலட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அனுப்பி விழிப்புணர்வு.
- ரூ.1.30 கோடி செலவில் 27 மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில் 2 வயதிற்குட்பட்ட இளம் சிறார் மற்றும் குழந்தைகளின் உணவூட்டும் முறைகளை மேம்படுத்தி ஊட்டச்சத்துக் குறைபாட்டினை களைவதற்குப் பெற்றோர் மற்றும் குழந்தைகளைப் பேணுவோருக்கு சுயமதிப்பீட்டு தாள்கள்.
- அனைத்து திருமண நிதியுதவி திட்டங்களின் கீழ், ரூ.762.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 53,599 பட்டதாரிகள், 41,101 பட்டதாரி அல்லாதோருக்கும் ரூ.379 கோடி மதிப்பில் (8 கிராம், 22 கேரட்) தங்கம், ரூ.383 கோடி நிதியுதவியும் வழங்கப்பட்டு 94,700 மகளிர் பயனடைந்துள்ளனர்.
- சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல் பயணம் செய்து 105.52 கோடி மகளிர் பயணங்கள் மேற்கொண்டனர்.
- சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் திருநங்கைகள் கட்டணமில்லாமல் பயணம் செய்து 6.13 இலட்சம் பயனாளிகள் பயணங்கள் மேற்கொண்டனர்.
- 8,493 திருநங்கையர்களுக்கு, முதற்கட்டமாக, கோவிட்–19 இரண்டாம் அலைக்கான நிவாரண நிதியுதவித் தொகையாக ரூ.2,000 வீதம் ரூ.1.69 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 8,591 திருநங்கையர்களுக்கு, இரண்டாம் கட்டமாக, கோவிட்–19 இரண்டாம் அலைக்கான நிவாரண நிதியுதவித் தொகை ரூ.2,000 வீதம் ரூ.1.71 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கான மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.1,000 வீதம் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,071 திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.
- திருநங்கைகளுக்கு சொந்த தொழில் துவங்க மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 192 திருநங்கைகள் சொந்தத் தொழில் துவங்க ரூ.96.65 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



- திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 20 திருநங்கைகளுக்கு சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம் மூலம் திறன் பயிற்சி. மேலும், 655 திருநங்கைகளுக்குத் திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்க நடவடிக்கை.
- 18 மாவட்டத்தில் அரசுப் பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்படுத்தத் திட்டம்.
- திருச்சி, கூடுவாஞ்சேரி மற்றும் தாம்பரம் ஆகிய மூன்று இடங்களில், 678 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் 3 அரசுப் பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் கட்டும் பணிகள்.
- ஓசூர், திருவண்ணாமலை, செயின்ட் தாமஸ் மவுண்ட், வடபழனி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 இடங்களில் பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள். பிற மாவட்டங்களில் விடுதிகள் கட்டுவதற்கான நிலம் தேர்வு செய்யும் பணிகள்.
- தமிழ்நாடு மாநில மகளிர் வரைவு கொள்கை (ஆங்கிலம் மற்றும் தமிழில்) உருவாக்கப்பட்டு அரசு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, விரைவில் வெளியிட நடவடிக்கை.
- முதியோர் இல்லங்களுக்கு ரூ.102.01 இலட்சம் அரசு மானியம். 711 முதியோர்கள் பயனடைந்துள்ளனர்.
- ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஒருங்கிணைந்த வளாகங்களில் உள்ள பயனாளிகளுக்கு ரூ.590.47 இலட்சம் அரசு மானியம். 989 முதியோர்கள் மற்றும் 959 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
- தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறும் குறுகிய கால தங்கும் இல்லங்களுக்கு ரூ.485.09 இலட்சம் அரசு மானியம். 963 பெண்கள் மற்றும் 83 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.
- ஜூன் 15 தினமானது முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்புத் தினமாக அனுசரிப்பு. ரூ.3.80 இலட்சம் செலவில் முதியோர் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வு.
- 01.10.2021 அன்று மாநிலம் முழுவதும் சர்வதேச முதியோர் தினம் கொண்டாடுவதற்கு ரூ.5.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- மாநில மூத்த குடிமக்கள் வரைவு கொள்கை வரைவு குழுவினரால் (ஆங்கிலம் மற்றும் தமிழில்) தயாரிக்கும் பணி.
- மூத்த குடிமக்கள் நலனுக்கான தேசிய செயல் திட்டத்தினை செயல்படுத்த முதல் தவணையாக ரூ.1.18 கோடி நிதி ஒப்பளிப்பு.
- முதலமைச்சரின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், ரூ.83.45 கோடி செலவில், 33,359 பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.
- தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ், 170 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர். 3,190 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

- சத்துணவு சமையலர், சமையல் உதவியாளர் ஆகியோரின் ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்வு.
- 100 சத்துணவு மையங்களுக்கு சமூக தணிக்கை மேற்கொள்ள அனுமதி.
- பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்களின் தரத்தினை உயர்த்த, 100 சத்துணவு மையங்களுக்கு ISO சான்றிதழ் வழங்கிட ஆய்வுப் பணிகள்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 46.70 இலட்சம் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை கண்டறிய ரூ.2 கோடி ஒப்பளிப்பு.
- சத்துணவு மையங்களில் ரூ.69 கோடி செலவில் 1,291 வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டும் பணிகள்.
- 1,000 சத்துணவு மையங்களில் ரூ.80 இலட்சம் செலவில் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை.
- கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாகப் பள்ளிகள் மூடப்பட்டிருந்த நிலையில் சத்துணவு குழந்தைகளுக்கு உலர் உணவுப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் மாதமொன்றுக்கு தலா 10 முட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
- சத்துணவு மைய பயனாளிகளுக்குச் சுகாதாரமான முறையில் உணவு சமைக்கும் பொருட்டு, 25,000 பள்ளி சத்துணவு மையங்களுக்கு ரூ.1.62 கோடி செலவில் சுகாதார பேழைகள்.
- கொரொனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டுப் பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது ஏற்கெனவே தாய் (அ) தந்தையை இழந்து, கொரொனா நோய்த்தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த 338 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.16.90 கோடி வைப்பீடு. பாதிக்கப்பட்டக் குழந்தைகளுக்கு 18 வயது நிறைவு செய்யும் போது வட்டியுடன் வழங்கப்படும்.
- கொரொனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டு தாய் அல்லது தந்தையை இழந்த 18 வயதுக்கு உட்பட்ட 10,486 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.314.58 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- கொரொனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டுப் பெற்றோர் இருவரையும் இழந்து உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் 308 குழந்தைகளுக்கு மாத பராமரிப்பு தொகையாக ரூ.3,000 வீதம் ரூ.84.93 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012இன்கீழ், "தமிழ்நாடு பாதிக்கப்பட்ட குழந்தைக்கான இழப்பீட்டு நிதி" அரசால் உருவாக்கப்பட்டு இடைக்கால இழப்பீட்டுத் தொகையாக ரூ.2 கோடி அனுமதிக்கப்பட்டு, பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கும் பொருட்டு ரூ.5 கோடி அரசால் கூடுதலாக ஒதுக்கப்பட்டு, 373 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- குழந்தைகளை குடும்பச் சூழலில் வைத்துப் பராமரிப்பதை ஊக்குவிக்கும் நோக்கில் நிதி ஆதரவு திட்டத்தின்கீழ், 1,148 குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000 வீதம் ரூ.1.38 கோடி செலவில் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- முதன் முறையாக, குழந்தைகளின் பாதுகாப்பு சேவைகள் குறித்து யுனிசெஃப் நிறுவனத்துடன் இணைந்து அனைத்து பங்குதாரர்களுக்கும் பயிற்சி வழங்க "சமூக உரிமைக்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்" உருவாக்கம்.
- குழந்தைகளின் ஒட்டுமொத்த நல்வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் "தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021" வெளியீடு.
- சென்னை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சிறுவர்களிடையே உள்ள போதை பழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ரூ.21.54 இலட்சம் மதிப்பீட்டில் போதை தடுப்பு மையங்கள்.
- புதியதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இளைஞர் நீதி குழுமம் மற்றும் குழந்தைகள் நலக் குழுக்கள் ஆகியவற்றை ஏற்படுத்த அரசு ஆணை.
- ரூ.14.27 இலட்சம் செலவில் அரசினர் மகளிர் காப்பகம் / பாதுகாப்பு இல்லங்கள் மற்றும் அரசு பிற்காப்பு நிறுவனங்களில் தங்கும் பெண்களுக்கு நவீன தொழிற்பயிற்சி.

❖ ❖ ❖



மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்

அவர்கள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

- மீன்பிடி குறைவு காலத்தில் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகை ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டு ரூ.108 கோடி ஒப்பளிப்பில் 1,54,009 மீனவ குடும்பங்களுக்கு ரூ.92.406 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது.
- தேசிய கடல் மீனவர் சேமிப்பு, நிவாரணத் திட்டத்தின்கீழ், ரூ.63.19 கோடி அரசால் விடுவிக்கப்பட்டு, 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,78,021 மீனவர்களுக்கு ரூ.53.40 கோடி நிவாரணத் தொகை.
- தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு, நிவாரணத் திட்டத்தின்கீழ், ரூ.62.80 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,76,911 மீனவ மகளிருக்கு ரூ.53.07 கோடி நிவாரணத் தொகை.
- பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமாக்கும் திட்டத்தின்கீழ், ரூ.24 கோடி மதிப்பீட்டில், நாட்டுப்படகு மீனவர்களுக்கு ரூ.9.60 கோடி நிதியில் 2,000 உள்/வெளிபொருத்தும் இயந்திரங்கள் 549 வழங்கப்பட்டு ரூ.1.80 கோடி மானியம் விடுவிப்பு.



- கடல்சார் கல்விபயிலும் 51 மீனவ இளைஞர்களுக்கு ரூ.15.75 இலட்சம் கல்வி உதவித்தொகை.
- கனமழை காரணமாக சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, இராமநாதபுரங்களில் சேதமடைந்த விசைப் படகுகள், நாட்டுப்படகு, கட்டுமரம், வலை இயந்திரம், மீன் பண்ணைகளுக்கு ரூ.565.71 இலட்சம் நிவாரணம்.
- இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட 122 படகுகளில் 108 விசைப்படகு உரிமையாளருக்கு தலா ரூ.5 இலட்சமும், 14 நாட்டுப்படகு உரிமையாளருக்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதம் என மொத்தம் ரூ.5.61 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு.

உள்நாட்டு மீன்வளம்

- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 10 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களில் 6,568 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி.
- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 38 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளில் 934.79 இலட்சம் மீன்விரலிகள் வளர்ப்பு.
- ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்திற்கு ரூ.124 இலட்சம் ஒப்புதல்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம்

- நவீன மீன்விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் விற்பனையகங்கள் வாயிலாக 227.066 டன் மீன்கள் விற்பனை செய்து ரூ.1,212.56 இலட்சம் வருவாய் ஈட்டியது.
- வரிவிலக்களிக்கப்பட்ட 81,742 கிலோ லிட்டர் உயர்வேக டீசல் எரியெண்ணெய், கடல் மீனவர்களுக்கு விநியோகம்.
- வணிக ரீதியிலான மண்ணெண்ணெய் மானிய விலையில் 3,015 கடல் மீனவ பயனாளிகளுக்கு 9,869 கிலோ லிட்டர் விநியோகம்.
- நீர்தேக்கம் மூலம் 840.83 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.733.44 இலட்சம் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக வருவாய் ஈட்டியது.
- சென்னை மீன் விற்பனை அங்காடிகள், இணைய தளம், கைப்பேசி செயலி வாயிலாக 1,041 கேட்புகளை ஏற்று 1,450 கிலோ மீன்கள் ரூ.9.14 இலட்சத்திற்கு விற்பனை.

தமிழ்நாடு மீனவர் நலவாரியம்

- தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் வாயிலாக பல்வேறு திட்டங்களின் கீழ், 4,289 பயனாளிகளுக்கு ரூ.5.86 கோடி நிவாரணத் தொகை.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகம்

- தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.2.76 கோடி மதிப்பில் மீன் உற்பத்தியை அதிகரிக்க உள்நாட்டு மீன் வளர்ப்போரின் திறன் மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த மீன் பண்ணை மாதிரி வளாகம் அமைத்தல்.
- ரூ.1.20 கோடியில் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள மீன்வளத் தொழில் காப்பகம், தொழில்சார் பயிற்சி இயக்ககத்தில் மீனவர்களுக்கான கடல் ஆரும் திறன் பயிற்சிக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.
- ரூ.80 இலட்சத்தில் முட்டுக்காட்டில் மீன்வளர்ப்பு தொழில்காப்பகம் மற்றும் தொழில் பயிற்சி இயக்ககத்தில் கொடுவா மீன்களுக்கு குறைந்த செலவில் தீவனம், சிறந்த பண்ணை மேலாண்மை முறைகளை உருவாக்குதல்
- ரூ.1.01 கோடியில் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் மாதவரம் வளாகத்தில், ஒருங்கிணைந்த மீன்நோய்க் கண்காணிப்பு மேற்பார்வை, மீன்குஞ்சுகளின் தரமதிப்பீட்டினை மேற்கொள்ளும் அமைப்பினை ஏற்படுத்துதல்.
- ரூ.1.98 கோடியில் கிருஷ்ணகிரி, பாரூரில் மீன்வளர்ப்பில் மறுசுழற்சி செய்யப்படும் நீரில் மண்ணில்லா முறையில் காய்கறி வளர்ப்புப் பூங்கா அமைத்தல்
- ரூ.1.06 கோடியில் நீருயிரி வளர்ப்பு மற்றும் மீன்வளத்திற்கான மின்னணு விரிவாக்க மையம் நிறுவுதல்

கூடுதல் கட்டுமானப் பணிகள்

- தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி மூலம் டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் முக்கிய வளாகங்களில் கூடுதல் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.26.09 கோடி நிதியுதவி.

உருவாக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள்

- டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தால் 14 புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கம்.

கல்வி

- 195 இளங்கலை மாணவர்களும், 56 முதுகலை மாணவர்களும் மற்றும் 4 முனைவர் பட்டப்படிப்பு மாணவர்களும் தேர்ச்சி.
- இளநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 15 சதவிகிதம் இடஒதுக்கீட்டில் 18 மாணவர்கள் சேர்ப்பு.
- இளநிலை மாணவர் சேர்ப்பில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டில் 15 மாணவர்கள் சேர்ப்பு.
- 373 மாணவர்கள் இளநிலை பட்டப் படிப்பிலும், 44 மாணவர்கள் முதுகலை பட்டப்படிப்பிலும் மற்றும் 29 மாணவர்கள் முனைவர் பட்டப்படிப்பிலும் சேர்ப்பு.
- டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழக மாணவர்கள் புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய நுழைவுத் தேர்வில் ஒரு மாணவர் 5ஆம் இடத்தைப் பெற்று, 28 மாணவர்கள் முதல் 100 இடங்களுக்குத் தேர்வாகி, 10 மாணவர்கள் முதல் 25 இடங்களுக்கும் தேர்வு.

மீனவர்களுக்கான சேவைகள்

- தூத்துக்குடி, தூத்தூரில் ரூ.3.82 கோடியில் இரண்டு மீன்வளத்தொழில் காப்பகம், தொழில்சார் பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டு, 4 உள்வளாகப் பயிற்சிகள் நடத்தப்பட்டு, 120 மீனவர்கள் பயன், ஆழ்கடலில் மீன்பிடித்தல் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்த பயிற்சி நடத்தப்பட்டு 32 மீனவர்கள் பயன்.

தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடங்கள்

- செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் ரூ.7.31 கோடியில் மீன்வளர்ப்பு தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நிலையக் கட்டடம் திறப்பு.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜீயபுரத்தில் ரூ.2.50 கோடியில் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையக் கட்டடம் திறப்பு.

மீன் தீவனம் உருவாக்கம்

- செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் மீன்வளர்ப்பு தொழில்காப்பகம், தொழில் பயிற்சி இயக்ககத்தில் ஃப்ளவர் ஹார்ன், பொன்மீன், பங்காஸியஸ், இந்திய பெருங்கெண்டைகள், திலேப்பியா மீன்களுக்கான உணவு உருவாக்கப்பட்டு மிகக்குறைந்த விலையில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது.
- ரூ.2.91 கோடியில் தேனி மாவட்டத்தில் அயிரை மீன் ஆராய்ச்சி மையம்.

கால்நடை பராமரிப்புத்துறை

- அனைத்துக் கால்நடை நிலையங்களிலும் 1,307.73 இலட்சம் சிகிச்சைப்பணிகள், முதலுதவிகள், அறுவை சிகிச்சைகள், தடுப்பூசிப்பணிகள், குடற்புழு நீக்கப்பணிகள், செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 24.87 இலட்சம் கன்றுகள் பிறப்பு.
- 25.98 இலட்சம் பசுந்தீவன புல்கரணைகள், 100.25 மெட்ரிக்டன் மண்புழுஉரம் பண்ணைகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம்.
- கால்நடை பண்ணைகளின் மூலம் 574 நல்மரபின ஆட்டுக்குட்டிகளும், 719 பன்றிக்குட்டிகளும், 80 மாட்டினங்களும் விற்பனை.
- கோழி மற்றும் குஞ்சுகளின் விற்பனையில் ரூ.24.75 இலட்சமும், முட்டை விற்பனையில் ரூ.13.62 இலட்சமும் வருவாய்.
- 54.46 இலட்சம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- 1,027 மேச்சேரி செம்மறியாட்டுக் குட்டிகள் கால்நடை வளர்ப்போருக்கு, கால்நடைகளை மேம்படுத்திட வழங்கப்பட்டுள்ளது.
- 1,01,354 கால்நடைகளுக்கு அவசர ஊர்தி சேவையின் மூலம் இருப்பிடத்திற்கே சென்று சிகிச்சை.
- நபார்டு XXV திட்டத்தின்கீழ், 102 கால்நடை நிலையங்களில் 40 கால்நடை நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 62 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- அஸ்காட் திட்டத்தின்கீழ், 34,77,900 கால்நடைகளுக்கு அடைப்பான், தொண்டை அடைப்பான் சப்பை நோய், ஆட்டம்மை நோய் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

- சிறப்புக் கால்நடை சுகாதாரம், விழிப்புணர்வு முகாம்கள் திட்டத்தின்கீழ், ரூ.7.76 கோடி செலவில் கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த 7,760 விழிப்புணர்வு முகாம்கள்.
- தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ், 77.85 இலட்சம் தகுதியுள்ள மாட்டினத்திற்குக் கோமாரி தடுப்பூசி.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 37 மாவட்டங்களில் 1,925 பயனாளிகளுக்கு ஒரு நாள் வயதுடைய தலா ஆயிரம் கோழிக் குஞ்சுகள், ஒரு மாதத்திற்குத் தேவையான தீவனம், குஞ்சு பொரிப்பான், 50 சதவிகித மானியத்தில் 1,451 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- விழுப்புரம், தேனி மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.2.25 கோடியில் கறிக்கோழிப்பண்ணைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- இராமநாதபுரம், தருமபுரி, புதுக்கோட்டை, விருதுநகர் மாவட்டங்களில் தலா 200 பயனாளிகளுக்கு ரூ.1.40 கோடி செலவில் குறைந்த முதலீடு தொழில்நுட்பம் கொண்ட கோழிப்பண்ணைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- ரூ.3.02 கோடி செலவில் 32 கால்நடை மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்.
- தேசிய கால்நடை இயக்ககத்தின்கீழ், ரூ.11.50 கோடி செலவில் 2.50 இலட்சம் கால்நடை அலகுகளுக்குக் காப்பீடு.
- ஓசூர் மாவட்ட கால்நடை பண்ணையில் கரு மாற்று, ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பத்தின் மூலம், 487 கருக்கள் சேகரிக்கப்பட்டு, 330 கருக்கள் மாற்றப்பட்டு, 157 கருக்கள் சேமிப்பு.
- தேசிய செயற்கை முறை கருவூட்டல் திட்டம் பகுதி II மற்றும் III இன் கீழ், 11.75 இலட்சம் கால்நடை வளர்ப்போரின் 14.50 இலட்சம் பசு மற்றும் எருமைகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல்.
- ஏழ்மை நிலையிலுள்ள கணவனை இழந்த / கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு தலா 5 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்க ரூ.75.63 கோடி ஒதுக்கீடு .

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தரவரிசைப் பட்டியலில் மாநில அளவிலான கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தையும், அனைத்து வேளாண் பல்கலைக்கழகங்களுக்கிடையில் 12 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டில் வடமேற்கு மண்டலத்தில், ரூ.1.49 கோடியில் கால்நடை உற்பத்திக்கென தீவன உற்பத்திப் பிரிவு நிறுவுதல்.
- தருமபுரியில் ரூ.1.80 கோடியில் திருச்சி கறுப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்.
- ரூ.1.52 கோடியில் தமிழ்நாட்டின சிறுவிடை கோழியின வள மையம் நிறுவுதல்.
- ஒரத்தநாட்டில் ரூ.1.97 கோடியில் தமிழகத்தின் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம்.
- ரூ.2.50 கோடியில் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தின் வளாக வசதிகளை மேம்படுத்துதல்.
- திருநெல்வேலியில் ரூ.1.61 கோடியில் விலங்குவழி பரவும் நோயறி ஆய்வகம், சுகாதாரத் தளம் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்.
- தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், ரூ.1.15 கோடியில் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தில் சேலம் கருப்பு வெள்ளாட்டினத்தை பாதுகாக்க வேண்டி 5 புதிய பண்ணைக் கட்டடங்கள் திறப்பு.
- கல்வி, ஆராய்ச்சியில் இணைந்து செயல்படும் நோக்குடன் நான்கு கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- கறவை மாடு வளர்ப்போரிடையே திறனை ஊக்குவிக்கும் நோக்குடன் பயிற்சிகள், விழிப்புணர்வு திட்டங்களைச் செயல்படுத்திட திருமலாபால் பொருட்கள் தனியார் நிறுவனம், சென்னை மற்றும் அசிஸ்ட்டெவெலப்மெண்ட் சொல்யூஷன்ஸ், சென்னை நிறுவனங்களுடன் முக்கூட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- பல்கலைக்கழக அறிவியலறிஞர்களால் உருவாக்கப்பட்ட மூன்று நச்சுயிரித் தடுப்பூசிகள் தயாரிக்கும் தொழில்நுட்பங்களைத் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்வதற்கு பயோவெட் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆசிரியர்கள் உருவாக்கிய நான்கு தொழில்நுட்பங்களுக்குக் காப்புரிமைகள்.

❖ ❖ ❖



மாண்புமிகு
பிற்படுத்தப்பட்டோர்
நலத்துறை அமைச்சர்
திரு. ஆர்.எஸ்.
ராஜகண்ணப்பன்
அவர்கள்

பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளால், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டினை நடப்பு கல்வியாண்டிலிருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு. இதன் மூலம் சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.
- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்வு.
- அரசுப் பள்ளிகளில் பயின்று 7.5 சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் கீழ், மருத்துவக் கல்வி இயக்ககத்திற்கு மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்பில் சேர்ந்த 317 மாணவ, மாணவியருக்கு ரூ.11.51 கோடி கல்விக் கட்டணத் தொகை ஈடு செய்யப்பட்டது.
- 275 கல்லூரி விடுதிகளில் ரூ.2.74 கோடி செலவில் ''செம்மொழி நூலகம்''.
- 275 கல்லூரி விடுதிகளுக்கு ரூ.1.52 கோடி செலவில் உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள்.
- 40 விடுதிகளுக்கு ரூ.10 இலட்சம் செலவில் போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள்.



- 275 கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியருக்குத் தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி.
- மாவட்ட அளவில் சிறந்த விடுதிகளுக்கு ரூ.7.80 இலட்சம் செலவில் பரிசுகள்.
- விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர், காப்பாளினிகளுக்கு ரூ.49.55 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி.
- 20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு ரூ.23.60 இலட்சம் செலவில் பயோ–மெட்ரிக் கருவிகள்.
- விடுதிகளில் ரூ.13 கோடி செலவில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் .
- 7 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.1 கோடி செலவில் சுற்றுச்சுவர்.
- விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாயாகவும், (ரூ.490.26 இலட்சம் கூடுதல் செலவினம்) உயர்வு.
- 2 பள்ளி விடுதிகள் ரூ.14.44 இலட்சம் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்வு.
- 2 விடுதிகளுக்கு ரூ.660.54 இலட்சம் செலவில் சொந்த கட்டடம்.
- விடுதி மாணவ, மாணவியருக்கு "கலைத் திருவிழா" என்ற பெயரில் ரூ.3.80 இலட்சம் செலவில் கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள்.
- கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ், பயன் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்வு. ரூ.217.72 கோடி நிதி ஒதுக்கீடு.
- கல்வி உதவித் தொகை திட்டங்களின்கீழ், வழங்கப்படும் மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணம், அனைவருக்கும் 400 ரூபாயாக உயர்வு. கூடுதல் செலவினம் ரூ.9 கோடி.
- 234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்குக் கழிப்பறை வசதிகள் ரூ.4.68 கோடி செலவில் ஏற்படுத்த ஆணை.
- கள்ளர் பள்ளி கட்டடங்களில் ரூ.6 கோடி செலவில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆணை.
- 15 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்பட உள்ளது.
- 225 கள்ளர் பள்ளிகளில் முதலாம் வகுப்பில் ஆங்கில வழியிலான வகுப்புகள் தொடக்கம்.
- கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்க நடவடிக்கை.
- கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியருக்கு, ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சமாக உயர்வு, ரூ.16.75 கோடி ஒதுக்கீடு.
- 11ஆம்வகுப்புபயிலும்4,00,210பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு ரூ.165.69 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.
- தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டிகள் மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் ஆகிய உதவிகளைப் பெற பயனாளிகளின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1 இலட்சமாக உயர்வு.
- ஆண்டுதோறும் வழங்கப்படும் பித்தளை சலவைப் பெட்டிகளின் எண்ணிக்கை, 3,000ஆக உயர்த்தப்பட்டு, ரூ.1.46 கோடி செலவில் வழங்கிட ஆணை.
- சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 3,533 உறுப்பினர்களுக்கு ரூ.95.24 இலட்சம் செலவில் நிதி உதவி.
- தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 14,118 உறுப்பினர்களுக்கு ரூ.7.98 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.
- சீர்மரபினர் நலவாரியம், நரிக்குறவர் நலவாரியம் பணியாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.5,000 ஆகவும் உயர்வு.
- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 12,662 பயனாளிகளுக்கு ரூ.84.40 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.
- தந்தை பெரியார் விருதுத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டு, ஒரு சவரன் தங்கப் பதக்கம், ரூ.5 இலட்சம் விருதுத் தொகை திரு. க.திருநாவுக்கரசு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



மாண்புமிகு

வனத்துறை அமைச்சர்

திரு. **கா.ராமச்சந்திரன்**

அவர்கள்

வனம்

- பசுமைத் தமிழகத்தை உருவாக்குவதன் முன்னோட்டமாக முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 98ஆவது பிறந்தநாளான 03.06.2021 அன்று மாநிலம் முழுவதும் 38,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் வேளாண் காடுகள் திட்டத்தின்கீழ், 73 இலட்சம் நாற்றுகள் வளர்ப்பு.
- பொது இடங்களில் உள்ள மரக்கன்றுகளைப் பாதுகாக்க மாநில பசுமைக்குழு, மாவட்ட பசுமைக் குழுக்கள் அமைப்பு.
- ரிவால்டோ யானை அதன் வாழ்விடத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டது.
- கூடலூர் கோட்டத்தில், காட்டிலிருந்து வெளியேறிய புலியைப் பாதுகாப்பாக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது.
- மனித உயிரிழப்பு, நிரந்தர ஊனத்திற்கான நிவாரணத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்வு.
- பாரம்பரிய அறிவுசார் சொத்துரிமையினை அணுகுதல், பலன்களை பங்கீடுதல் திட்டத்தின் மூலம் பயனாளர்களுக்கு உயிர்ப்பல்வகைமைச் சட்டத்தின்படி ரூ.90 இலட்சம் பகிர்ந்தளிப்பு.
- கழுவேலி சதுப்பு நிலம், தமிழ்நாட்டின் 16ஆவது பறவைகள் சரணாலயமாக அறிவிப்பு.
- மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில் கடற்பசு பாதுகாப்பு மையம்.
- 13 சதுப்புநிலங்களை ராம்சார் சதுப்புநிலமாக அறிவிக்க நடவடிக்கை.
- அழிவுற்ற காடுகளை மீள் உருவாக்க ரூ.481.14 கோடி நிதி தேசிய வங்கியிலிருந்து விவசாயம், கிராமப்புற வளர்ச்சிக்காக பெறப்பட்டது. ❖





வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட ஆசிய சிங்கங்களைப் பார்வையிடல் – 06.06.2021



சென்னை, தலைமைச் செயலகம் நாமக்கல் கவிஞர் மாளிகை முன்பு மரக்கன்று நடும்போது – 12.03.2022



மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர்

திரு. அர.சக்கரபாணி

அவர்கள்

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக்கட்டுப்பாடு

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்

- கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், பொதுமக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நிவாரணத் தொகையாக ரூ.2,000 வீதம் இரண்டு தவணைகளில் வழங்கி, முதற்கட்டமாக ரூ.4,196.38 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூ.4,196.38 கோடியும் 2,09,81,900 அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.
- கொரோனா பெருந்தொற்று காலத்தில் நியாயவிலைக் கடைகள் மூலம் 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு ரூ.977.10 கோடி செலவில் வழங்கப்பட்டு, 2,07,70,332 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்றுள்ளனர்.
- ரூ.1,297 கோடி செலவில் 2,12,17,756 அரிசி அட்டைதாரர்கள், அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் குடும்பங்கள் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், 21 மளிகைப் பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.





- 11,47,844 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம்.
- 65 நியாயவிலைக்கடைகளை உள்ளடக்கிய புதிய கொளத்தூர் மண்டல உதவி ஆணையாளர் அலுவலகம் தோற்றுவிப்பு.
- நேரடி கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விளை நெல்லினை விற்க ஆன்லைன் மூலம் பதிவு அறிமுகப்படுத்தப்பட்டு, 47.75 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல்.
- பருவகால சுமைதூக்கும் தொழிலாளர்களின் 40 கிலோ எடையுள்ள நெல் மூட்டைக்கான கூலி தொகை ரூ.10 ஆக உயர்வு. 27,845 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- கொள்முதல் பருவங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.100ஆகவும், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.75ஆகவும் உயர்வு.
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 21 நவீன அரிசி ஆலைகள் 52,500 மெ.டன் மாதாந்திர அரைவைத் திறனுடனும், 473 தனியார் அரைவை முகவர்கள் 7,67,431 மெ.டன் மாதாந்திர அரைவைத் திறனுடன் நெல் அரைவை செய்து வருகின்றனர்.
- காலகெடுவுக்குள் நெல் அரைவை செய்வதை உறுதிப்படுத்த 21 கழக நவீன அரிசி ஆலைகளிலும் கருப்பு மற்றும் பழுப்பு அரிசி நீக்கும் இயந்திரம் பொருத்தும் பணி "ஒரு முறை சிறப்புத் திட்டம்" மூலம் அறிமுகம்.
- அரைவை முகவர்களுக்கு ஒரு குவிண்டால் பச்சரிசி நெல்லுக்கு ரூ.25ஆகவும், ஒரு குவிண்டால் புழுங்கல் நெல்லுக்கு ரூ.40ஆகவும் அரைவைக் கூலி உயர்வு.
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் இறந்த 34 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமனம்.
- அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1995இன்கீழ், 7,945 வழக்குகள் பதிவு. ரூ.8.11 கோடி மதிப்பில் பொது விநியோகத் திட்டத்தில் பொருட்கள் கைப்பற்றப்பட்டது.
- கள்ளச் சந்தை தடுப்பு, இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் 1980இன்கீழ், 93 நபர்கள் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

❖ ❖ ❖



மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்

திரு. வி.செந்தில் பாலாஜி

அவர்கள்

- ரூ.803 கோடி செலவில் 2.13 இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்தினை உள்ளடக்கி ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- மாநில அளவில் மையப்படுத்தப்பட்ட "மின்னகம்" மின் நுகர்வோர் சேவை மையம் தொடங்கப்பட்ட 20.06.2021 முதல் 03.05.2022 வரை 8,05,379 அழைப்புகள் பதிவு செய்யப்பட்டு அதில் 7,99,651 (99.29%) அழைப்புகள் சரி செய்யப்பட்டுள்ளன.
- தமிழக அரசின் தொடர் முயற்சியால் 2021–2022ஆம் நிதியாண்டில் மின் உற்பத்தி நிலையங்களில் திறமையான செயல்பாடு, வட்டி விகிதம் குறைப்பு, உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் ரூ.2,200 கோடி சேமிப்பு.
- புதியதாகத் தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கரூர் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு மூன்று புதிய மண்டலங்கள் உருவாக்கம்.





- புதியதாக வழங்கப்பட்ட மின் இணைப்புகள் 8.16 இலட்சம் ஆகும்.
- புதியதாக நிறுவப்பட்ட மின்மாற்றிகள் 24,036.
- கூடுதலாக நிறுவப்பட்ட துணை மின் நிலையங்கள் 47.
- கூடுதலாக அமைக்கப்பட்ட மிக உயர் அழுத்த மின் வழிப்பாதைகள் 742.21 சுற்று கி.மீ.
- கூடுதலாக அமைக்கப்பட்ட உயர் அழுத்த மின் வழிப்பாதைகள் 6,429.83 கி.மீ.
- கூடுதலாக அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின் வழிப்பாதைகள் 10,258.75 கி.மீ.
- துணை மின் நிலையங்களில் மின்மாற்றிகளின் தரம் உயர்த்தப்பட்டவை 120.
- தமிழ்நாட்டின் மொத்த மின் நிறுவு திறன் 32,595.06 மெகாவாட்டிலிருந்து 33,877.31 மெகாவாட்டாக உயர்த்தப்பட்டுள்ளது.
- மேற்கூரை சூரிய மின் உற்பத்தி நிறுவு திறன் 359 மெகாவாட்டாக உயர்வு.
- தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி 2020 – 2021ஆம் ஆண்டில் 15,553.52 மில்லியன் யூனிட். 2021–2022 ஆம் ஆண்டில் 20,391.18 மில்லியன் யூனிட் கூடுதல் உற்பத்தி 4,837.66 மில்லியன் யூனிட் அதாவது 31.1%.
- தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் சொந்தமான புனல் மின் உற்பத்தி நிலையங்களில் மத்திய மின்சார ஆணையத்தின் ஆண்டு இலக்கான 3,853.74 மில்லியன் யூனிட்டை காட்டிலும் 1,660.36 மில்லியன் யூனிட் கூடுதலாக உற்பத்தி செய்து மொத்த உற்பத்தி 5,514.1 மில்லியன் யூனிட்டாக பதிவு செய்துள்ளது.

கீழ்கண்ட மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

- இந்தியச் சூரிய மின்சக்தி கழகத்திடமிருந்து 1,000 மெகாவாட் சூரிய மின் சக்தியினை ஒரு யூனிட் ரூ.2.61 வீதம் பெறுவதற்கான 25 வருட காலத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



- பைலட் திட்டம் IIஇன் கீழ், PTC நிறுவனத்திடமிருந்து 400 மெகாவாட் மின்சாரம் யூனிட் ஒன்றுக்கு ரூ.3.26 வீதம் கொள்முதல் 3 வருட காலத்திற்கான மின் கொள்முதல் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.
- நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் தலபிரா அனல் மின் திட்டத்திலிருந்து 1,500 மெகாவாட் 25 வருட காலத்திற்கான மின் கொள்முதல் சராசரியாக யூனிட் ஒன்றுக்கு ரூ.3.06 வீதம் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.
- எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு 627 மெகாவாட் அளவிற்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.4.04 என 5 வருட காலத்திற்கு நடுத்தர கால மின் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- மத்திய மின் உற்பத்தி நிலைய வழக்கமான பங்களிப்பைத் தவிரக் கூடுதல் ஒதுக்கீடாக 592 மெகாவாட், சராசரியாக யூனிட் ஒன்று ரூ.4.76 என 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.
- ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிகள் 12,34,108.
- மழைக்காலங்களில் மழைநீர் தேங்கும் இடங்களில் உள்ள பில்லர் Boxes கண்டறியப்பட்டு, 1,339 பில்லர் Boxகள் 1 மீட்டர் உயர்த்தப்பட்டுள்ளன.
- நிலக்கரி சுரங்கங்களிலிருந்து கடந்த 10 ஆண்டுகளில் பெறப்பட்ட நிலக்கரியை விட உட்சப்பட்சமாக. 2021 – 2022ஆம் ஆண்டில் 172.39 இலட்சம் டன் நிலக்கரி பெறப்பட்டுள்ளது.
- ஒன்றிய அரசின் மின்சார அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி சுரங்கங்களிலிருந்து நேரடியாக 5 இலட்சம் டன் நிலக்கரியைச் சாலை மற்றும் இரயில் போக்குவரத்து முறையில் (RCR) வழங்குவதையும், தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தியது.
- பாரதீப் துறைமுகத்தில் ஏற்கெனவே உள்ள 2 பெர்த்களுடன் தற்சமயம் கூடுதலாக 2 பெர்த்கள் முறையே IOHP & JSW நிறுத்துவதற்கான கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



தகவல் தொழில்நுட்பத்தில் செயல்படுத்தப்பட்டவை:

- புதிய வேளாண் சேவை இணைப்புக்கான இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- நுகர்வோருக்கு வலைத்தள வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்துவதற்காக ஒற்றை கட்டண நுழைவாயில் 06.11.2021 அன்று முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு (மொலாசஸ்)

- எத்தனாலுக்கு சான்றளிக்கும் அதிகாரம் வடிப்பாலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு தமிழ்நாட்டில் முதன்முறையாகக் கரும்புச்சாறு மற்றும் பி ஹெவி மொலாசஸ் ஆகியவற்றிலிருந்து தற்போது எத்தனால் உற்பத்தி நடைபெற்று வருகிறது.
- நீர் ஆதராங்களிலிருந்து 1/5 கிலோ மீட்டர் தூரம் வரை தொழிற்சாலைகள் நிறுவப்படுவதைத் தடுக்கும் 1989 மற்றும் 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைகளிலிருந்து ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகளுக்குக் கழிவுநீர் வெளியேற்றமில்லா தொழில்நுட்பத்துடன் கூடிய எத்தனால் ஆலை அமைக்க விலக்களித்து புதிய எத்தனால் ஆலைகள் அமைய அரசு நடவடிக்கை
- எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை, சேத்தியாத்தோப்பு மற்றும் கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகியவற்றில் எத்தனால் ஆலை நிர்மாணத்திற்கான நடவடிக்கை.

❖ ❖ ❖

“நுகர்வோர் குறைகளை உடனடியாகத் தீர்த்து வருகிறோம். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒரு மாதத்திற்குள் ‘மின்னகம்’ என்ற குறை தீர்வு மையத்தை தொடங்கி வைத்தேன். அதில் பதியப்பட்ட புகார்களில் 90 விழுக்காட்டுக்கு மேலான குறைகள் தீர்வு காணப்பட்டுள்ளது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்

திரு. **ஆர்.காந்தி** அவர்கள்

கைத்தறி மற்றும் துணிநூல், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்

- துணிநூல் துறைக்குத் தனியாக ஆணையரகம் உருவாக்க ஆணையிடப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.493.7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 179.59 இலட்சம் சேலைகள், 179.36 இலட்சம் வேட்டிகள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, பொங்கல் பண்டிகையின் போது கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.
- வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ், நெசவு பணிகளுக்கான கூலி கைத்தறி சேலை மற்றும் பெடல்தறி சேலைக்கு தலா ரூ.26.67 ஆகவும், கைத்தறி மற்றும் பெடல்தறி வேட்டிக்கு தலா ரூ.12.36 ஆகவும் உயர்வு.
- விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.327.44 கோடி ஒதுக்கீட்டில் 4 இணைக்கான 489.69 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டு 39,51,155 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.
- சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், நெசவு பணிகளுக்கான கூலி கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட்டுக்கு தலா ரூ.4.89 ஆகவும், கைத்தறி டிரில்லுக்கு ரூ.4.69 ஆகவும் உயர்வு.
- நெசவாளர் முத்ரா திட்டத்தின்கீழ், நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிவோரின் நெசவு மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை மேற்கொள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்



மூலம் குறைந்தபட்சம் ஒரு பருத்தி இரக தறிக்கு ரூ.50,000 வீதம், ஒரு பட்டு இரக தறிக்கு ரூ.1,00,000 வீதம் கடன் தொகை வருடத்திற்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் வழங்கப்படுகிறது.

- 13,392 முத்ரா கடன் விண்ணப்பங்களுக்கு ரூ.65.70 கோடி கடன் வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது.
- கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையிலுள்ள தள்ளுபடி மானியத் தொகை ரூ.160.11 கோடி கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.696.30 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர், கரூர், விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சாயச்சாலை கட்டடங்கள் திறப்பு.
- 246 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 406 சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் தற்காலிக பணியாளர்களை பணிநிரந்தரம் செய்வதற்கு அரசால் குழு அமைக்கப்பட்டு 400 சிறப்பு காலமுறை ஊதிய பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட உள்ளனர்.
- நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிந்து வரும் நிரந்தரப் பணியாளர்களுக்கு 5ஆவது ஊதிய விகிதம் நிர்ணயம் செய்வதற்கு அரசால் குழு அமைக்கப்பட்டு, 1,033 பணியாளர்கள் பயன்பெற உள்ளனர்.
- நெசவாளர் குறைதீர்க்கும் மையம் கைத்தறி ஆணையரகத்தில் அமைப்பு. இம்மையத்தில் தொலைபேசி, இணையதளம், மின்னஞ்சல் வாயிலாக நெசவாளர்கள் குறைகள் தீர்க்கப்பட்டு பயன்.
- காஞ்சிபுரம் சரகத்திலுள்ள 22 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் செயல்பட்டு வருகிறது.
- மாநில அளவிலான சிறந்த பருத்தி மற்றும் பட்டு நெசவாளர்களுக்கான பரிசுத் தொகை ரூ.4.50 இலட்சம் அளவிற்குக் காசோலைகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.
- கைத்தறி இரகங்களை அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்து மிகச் சிறப்பான பங்களிப்பினை வழங்கிய முதல் மூன்று கைத்தறி ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெறும் காசுக்கடனுக்கான வட்டி சுமையைக் குறைக்க ரூ.10.73 கோடி வட்டி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.
- நெசவாளர்களின் வடிவமைப்புத் திறனை மேம்படுத்திட நெசவாளர் சேவை மையம் மூலம் 300 நெசவாளர்களுக்கு வடிவமைப்புத் திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) மற்றும் தேசிய உடையலங்கார தொழில்நுட்பக் கல்லூரிகளில் (NIFT) பயின்ற வடிவமைப்பாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டுப் பாவாடை சட்டைகள், லினன் சேலைகள், இயற்கை பருத்தியினால் தயாரிக்கப்பட்ட குழந்தை ஆடைகள் "தமிழ் தறி" எனும் பெயரில் சிறப்பு தொகுப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- காஞ்சிபுரம் கோ–ஆப்டெக்ஸில் சுத்த பட்டு, சுத்த ஜரிகை சேலைகளின் ஜரிகை தரம் பரிசோதிக்கப்பட்டு, பட்டுச் சேலைகளில் ஜரிகை உத்தரவாத அட்டை இணைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.
- இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆர்கானிக் ஆடைகள் உயர்ந்த தரத்தன்மைகளான சருமத்திற்கு இதம், மிருதுத்தன்மை மற்றும் எளிதாக தூய்மைப்படுத்துதல் ஆகிய அம்சங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டு, சென்னையிலுள்ள கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் ஐந்து விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- சென்னை மற்றும் சேலத்தில் நடைபெற்ற பட்டுத் திருவிழாவில் ரூ.2.10 கோடி மதிப்பிலான பட்டு இரகங்கள் விற்பனை.
- கோயம்புத்தூர், சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் 350 விற்பனை பணியாளர்களுக்கு விற்பனை திறன் மேம்படுத்தப் பயிற்சி.
- தமிழ்நாட்டில் இயங்கும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் 75 நிரந்தரப் பணியாளர்களுக்கு 12% ஊதிய உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டு, பயன்பெற்று வருகின்றனர்.
- நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் புதியதாக அரசு பட்டுக்கூடு அங்காடி துவங்கப்பட்டு,



36.814 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.202.01 இலட்சம் மதிப்பில் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

- ❖ "ஆதிரை கலெக்சன்ஸ்" எனும் பெயரில் பிளாக் பிரிண்ட் முறையில் அச்சிட்ட பட்டுப் புடவைகள், மெல்லியரக காட்டன் புடவைகள், புதிய வண்ணக்கலவை மற்றும் வடிவமைப்புகளுடன் கூடிய மெத்தை விரிப்புகள் மற்றும் போர்வை இரகங்கள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.
- ❖ தேங்காய் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்ட நூடுல்ஸ்களை பயன்படுத்தி "காதி ப்ராக்ரென்ஸ்" (Khadi Fragrance) எனும் பெயரில் ரோஸ், லேவண்டர், சந்தனம் மற்றும் செஞ் சந்தனம் எனும் 4 வகை நறுமணங்களில் புதியவகை குளியல் சோப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ கண்கவரும் லேபிள்களுடன் கூடிய புதிய வடிவிலான கண்ணாடி பாட்டில்களில் "காதித் தேன்" அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.98.01 இலட்சம் மதிப்பிலான பச்சை தேன் பதப்படுத்தப்பட்டு, ரூ.1.37 கோடி மதிப்பிற்கு விற்பனை எய்தப்பட்டுள்ளது.
- ❖ சிவகங்கை மாவட்டம், கண்டனூர் கிராமத்தில் உள்ள கதர் வளாகத்தினை ரூ.45.80 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்து அதனில் கதர் நூற்பு நிலையம், கதர் துணி உற்பத்தி, தோல் பொருட்கள் உற்பத்தி அலகு, தச்சுக் கருமாரப் பொருட்கள் உற்பத்தி அலகு, சோப்பலகு, பனை ஓலைப் பொருட்கள் அலகு, கால் மிதியடிகள் அலகு, கூடை முடைதல் அலகு மற்றும் எம்ப்ராய்டரி பொருட்கள் அலகு எனும் 9 அலகுகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- ❖ 7ஆவது தேசிய கைத்தறி தினத்தையொட்டி ரூ.26.83 இலட்சத்திற்குக் கைத்தறி விற்பனை.
- ❖ ரூ.117 இலட்சம் ஒப்படைப்பில் மாநில அளவில் 6 கைத்தறி கண்காட்சி நடத்தப்பட்டு ரூ.329.18 இலட்சம் மதிப்பிற்குக் கைத்தறி விற்பனை.
- ❖ நூற்பு பணி தெரியாத 60 பெண்களுக்கு மாதம் 20 நபர்கள் வீதம் ஒரு மாதகாலப் பயிற்சி அளிக்கப்பட்டு இப்பயிற்சி பெற்றவர்களுக்கு இராட்டைகளை வழங்கி வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.
- ❖ இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் ஆன்ட்ராய்டு மற்றும் IOS வழியில் செயல்படும் "tnkhadi" எனும் கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இணையவழியாக ரூ.2.86 இலட்சம் மதிப்பிலான காதி கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- ❖ காதி கிராமப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்திடும் பொருட்டு 4 தனி உரிமைக் கிளைகளை (Franchise) நடத்துவதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ காதி கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை விற்பனை செய்ய அனுபவம், அதிக சந்தைப் பரப்பினைக் கொண்டுள்ள 11 நிறுவனங்கள்/ தனி நபர்களை மண்டல வாரியாக / மாவட்ட வாரியாக தேர்வு செய்து மொத்த விற்பனை முகவர்களுக்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ கதர் கிராமத் தொழில் வாரிய கட்டுப்பாட்டில் செயல்படும் 164 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.1,518.83 இலட்சத்திற்குக் கிராமப் பொருட்கள் உற்பத்தி செய்து ரூ.2,084.32 இலட்சத்திற்கு விற்பனை எய்தப்பட்டுள்ளது.
- ❖ "பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்" கீழ், நடப்பாண்டில் 917 தொழில் திட்டங்களுக்கு, விளிம்புத் தொகை மானியமாக ரூ.22.54 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதனால் 6,763 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ 10,126 பனைத் தொழில் கைவினைஞர்களுக்குப் பதநீர் இறக்கவும் அதனை விற்பனை செய்யவும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ கூட்டுறவுத் துறையின் நியாய விலைக் கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சிறப்பு அங்காடிகள் மூலம் ரூ.163.30 இலட்சம் மதிப்பில் கற்பகம் என்ற பெயரில் தரமான பனை வெல்லம் 35.50 டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



தூத்துக்குடி மாவட்டத்தில், கனமழையால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில்
ஆய்வின்போது பொதுமக்களுடன்– 02.12.2021



தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் டி.பி.எம். பள்ளியில்
பாரதியார் வேடமணிந்த பள்ளி மாணவர்களுடன் – 02.12.2021



மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

திரு. மா.சுப்பிரமணியன்

அவர்கள்

மருத்துவக் கல்வி இயக்ககம்

- சென்னை, பெரியார் நகர், அரசு புறநகர் மருத்துவமனை ரூ.652.82 இலட்சத்தில் 300 படுக்கைகள் கொண்ட கோவிட் மருத்துவமனையாக மாற்றம்.
- சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், ரூ.34.60 கோடியில் நவீன Robotic அறுவை சிகிச்சை மையம்.
- விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய 7 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 150 மருத்துவ மாணவர்கள் சேர்க்கைக்கும், இராமநாதபுரம், திருப்பூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 100 மருத்துவ சேர்க்கைக்கும் தேசிய மருத்துவ ஆணையம் அனுமதி.
- அரசு உட்கட்டமைப்பு, மனித சக்தியை உருவாக்குவதை விரைவுபடுத்தியதன் வாயிலாக நடப்புக் கல்வியாண்டில் 1,450 மருத்துவ மாணவர்கள் சேர்க்கைக்கு வழிவகுத்துள்ளது.
- அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் 200ஆக உயர்வு.







- 15 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 38 சிறப்புப் பிரிவுகளில் 146 பட்ட மேற்படிப்பு இடங்கள், 6 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 11 சிறப்புப் பிரிவுகளில் 21 பட்ட மேற்படிப்பு இடங்கள் கூடுதலாகத் தொடக்கம்.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஒட்டுமொத்த சேவைகளின் தகவல்கள் குறித்த டிஜிட்டல் காட்சி பலகை.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்ட முதியோர்கள் அனைவருக்கும் புற்றுநோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள்.
- அரசின் தீவிர நடவடிக்கையால், அகில இந்திய இட ஒதுக்கீட்டில் 15% இளநிலை மருத்துவ இடங்கள், 50% பட்ட மேற்படிப்பு இடங்களிலும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீட்டை நடப்பு நிதியாண்டு முதல் நீதிமன்ற உத்தரவிற்கிணங்க இந்திய அரசு அமல்படுத்தியது.
- அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மாணவர் சேர்க்கையில் 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு. நடப்பாண்டில் 437 மருத்துவ இடங்களும், 107 பல் மருத்துவ இடங்களும் ஒதுக்கீடு. இம்மாணவர்களுக்கான விடுதிக் கட்டணம் உட்பட அனைத்து மருத்துவப் படிப்பிற்கான செலவினையும் அரசே ஏற்கும் வகையில், ரூ.16 கோடியில் சுழல் நிதி.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கொரோனா தொற்றுநோயை நிருவகிப்பதற்காக கோவிட் தனிமைப்படுத்தும் வார்டுகள் மற்றும் RTPCR கூடிய ஆய்வகங்கள்.
- கோவிட் தொற்றுநோய் மேலாண்மைக்காக, அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், கோவிட் சிகிச்சைக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்புகளுடன் கூடிய போஸ்ட் கோவிட் கிளினிக்குகள்.
- மதுரை மருத்துவக் கல்லூரி மருந்தியல் கல்லூரியில் எம்.பார்ம் முதுநிலை இடங்கள் 45 ஆக உயர்வு.
- 22 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மனநலம் குன்றிய ஆதரவற்ற நோயாளிகளுக்கான மீட்பு சேவைகள் மையம்.
- குழந்தைகள் இணைய அடிமை நோய்க்கு ஆளாவதைத் தடுக்க அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மன நல நிபுணர் குழுவால் சிறப்பு ஆலோசனை.
- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதியோர் மற்றும்



மன நலம் குன்றியவர்களுக்கு அறிவாற்றல் மறுவாழ்வுக்காகத் தினசரி பராமரிப்பு மையங்கள்.

- அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பிரசவத்திற்குப் பிந்தைய வார்டுகளில் பச்சிளங் குழந்தைகளுக்குக் காதுகேட்கும் திறன் பரிசோதனை சேவைகள்.
- தாம்பரம் அரசு நெஞ்சக மருத்துவமனையில் நுரையீரல் மறுவாழ்வு மையம்.
- சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையில் அமைந்துள்ள ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் ரூ.2.44 கோடி செலவில் வாழ்வூட்டும் மருத்துவம் மற்றும் ஆராய்ச்சித் துறையாக மேம்பாடு.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதுகுத் தண்டு பாதிப்பும் மற்றும் இதர நோய்களால் படுத்த படுக்கையாக இருக்கும் காரணத்தினால் ஏற்படும் உடல் புண் சிகிச்சைக்காக 10 பிரத்தியேக படுக்கைகளுடன் தனி சிகிச்சைப் பிரிவு.
- ரூ.230 கோடி மதிப்பீட்டில் தென் சென்னையில் புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

- அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் ரூ.18.56 கோடி நிதியில் 70 PSA Plant அமைப்பு.
- புதியதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கு புதிய இணை இயக்குநர் நலப்பணிகள் பணியிடங்கள் உருவாக்கம்.
- ஒப்பந்த முறையில் பணியாற்றி வந்த 250 செவிலியர்களுக்குப் பணி நிரந்தரம்.
- 6 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையக் கட்டடங்கள் கட்ட ரூ.41.34 கோடி ஒதுக்கீடு.
- 5 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் அறுவை அரங்குடன் கூடிய கண் சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள் கட்ட ரூ.3 கோடி ஒதுக்கீடு.
- கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், சேலம், அரியலூர் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ஒருங்கிணைந்த அவசரகால சிகிச்சை மையக் கட்டடங்கள் கட்ட ரூ.13.53 கோடி ஒதுக்கீடு.
- அரூர், திண்டிவனம் அரசு மருத்துவமனைகளில் கலப்பு உயர் தீவிர சிகிச்சை பிரிவுக் கட்டடங்கள் கட்ட ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு.
- கொரோனா–19 பெருந்தொற்று காலத்தில் உயிரிழந்த 101 அரசு முதல் நிலை பணியாளர்கள் / 23 தனியார் முதல்நிலை பணியாளர்களுக்கு பிரதான் மந்திரி கரிப்

கல்யாண் திட்டம் வாயிலாக ரூ.62 கோடி ஒதுக்கீடு.

- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு மருத்துவமனை, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை, திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அரசு மருத்துவமனை, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனை, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தமல்லி அரசு மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.78.17 கோடி ஒதுக்கீடு.
- காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு தலைமை மருத்துவமனை, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை, தென்காசி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை, இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை அரசு தலைமை மருத்துவமனைக்கு மாவட்ட தொடக்க நிலை இடையூட்டு சேவை மையக் கட்டடங்கள் கட்ட ரூ.5.70 கோடி ஒதுக்கீடு.

தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம்

- ரூ.148.29 கோடி செலவில் துணை சுகாதார நிலையங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகளில் பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம்

- 542 கோவிட்–19 அர்ப்பணிப்பு ஆம்புலன்ஸ்கள் மூலம் 6,30,549 பயனாளிகள் பயன்.
- 108 அவசரகால ஊர்திகளின் எண்ணிக்கை 1,353 ஆக உயர்த்தப்பட்டு, 16,41,943 பயனாளிகள் பயன்.
- கொரோனா சேவைக்காக, 108 ஆம்புலன்ஸ் பணியாளர்கள் முன்களப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டு தலா ரூ.15,000 ஊக்க நிதி.
- நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்கீழ், 30,086 பயனாளிகள் பயன்.
- ஜி.வி.கே.இ.எம்.ஆர். நிருவாகம் வாயிலாக இலவச அமரர் ஊர்தி மற்றும் இலவச தாய் சேய் நல ஊர்தி சேவைகள்.

தொலைப்பேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம்

- கோவிட் 2 ஆவது அலையின் போது 104 தொலைப்பேசி மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம் வாயிலாக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ஆக்சிஜன் சிலிண்டர்களுடன் கூடிய படுக்கை வசதிகள் தொடர்புடைய தகவல்கள்.
- கொரோனா தொடர்பாக 6,57,737 அழைப்புகள்.
- 1,10,971 நீட் தேர்வு மாணவர்களுக்குத் தற்கொலை தடுப்பு ஆலோசனை.
- உக்ரைன் போரினால் நாடு திரும்பிய 1,524 மாணவர்களுக்கு மன அழுத்தம் நீங்க ஆலோசனை.
- ஸ்நேகா தற்கொலை தடுப்பு மையத்துடன் 104 மருத்துவ உதவி சேவை மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம்.
- உயிர்காக்கும் முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் 4 ஆண்டுகளுக்கு ஒரு குடும்பத்திற்குக் காப்பீட்டு தொகை ரூ.1,00,000 வழங்கும் திட்டத்தில் 1.34 கோடி குடும்பங்கள் இணைப்பு. 3.43 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.873.81 கோடியில் சிகிச்சை.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளி ஆவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.1,20,000 ஆக உயர்வு.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட 1,414 பத்திரிகையாளர்கள் வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைப்பு.
- ரூ.382.13 கோடி செலவில் 31,179 நபர்களுக்கு கொரோனா நோய்த் தொற்றுக்கான சிகிச்சை.
- ரூ.594.29 இலட்சம் செலவில் 2,056 நபர்களுக்குக் கருப்பு பூஞ்சை சிகிச்சை.
- ரூ.182.64 கோடி செலவில் 32,23,064 நபர்களுக்கு RT-PCR பரிசோதனை.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், கோவிட்–19 தொற்று பரிசோதனை கட்டணம் ரூ.250 ஆக, குழு

மாதிரிகளுக்கு ரூ.75ஆக, காப்பீட்டுத் திட்டப் பயனாளியாக இல்லாதவர்களுக்குத் தனியார் ஆய்வுக் கூடங்களில் பரிசோதனைக் கட்டணம் ரூ.400ஆக குறைத்து நிர்ணயம்.

- ரூ.905.02 கோடி காப்பீட்டு தொகையில் 11,303 பயனாளிகளுக்கு உயர் சிறப்பு அறுவை சிகிச்சைகள்.
- இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டத்தின் மூலம் 39,542 பயனாளிகளுக்கு ரூ.34.74 கோடி செலவில் சிகிச்சை.

பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை

- மாநில அவசரகால கட்டுப்பாட்டு அறை (SEOC) மற்றும் 24/7 அவசரகால தகவல் தொடர்பு மையம் அமைப்பு.
- மாவட்ட அளவில் 24x7 மணிநேரமும் செயல்படக்கூடிய கட்டளை மையம் (War Room).
- 1,25,127 கோவிட் படுக்கை வசதி.
- கொரோனா காலத்தில் கூடுதலாக 26,126 ஆக்ஸிஜன் படுக்கைகளுடன் 79,618 படுக்கை வசதிகள்.
- கோவிட்–19 தொற்று பரவலைக் கட்டுப்படுத்த 3,075 மருத்துவர்கள், 5,362 செவிலியர்கள், 1,362 மருத்துவ பணியாளர்கள், 626 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 5,828 சுகாதார ஊழியர்கள் கூடுதலாக பணியமர்த்தம்.
- கொரோனா மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநில மற்றும் மாவட்டம் வாரியாக ஒருங்கிணைப்பு கட்டளை மையங்களில் கூடுதலாக 8,720 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள்.
- திரவ நிலை ஆக்ஸிஜன் சேமிப்பு கிடங்குகளின் அளவு 1,513 மெட்ரிக் டன் ஆக உயர்வு.
- நோய் அறிகுறிகள் கண்காணிப்புத் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
- கூடுதலாக 501 கொரோனா கவனிப்பு மையங்கள், 62 ஆயுஷ் கொரோனா கவனிப்பு மையங்கள் அமைப்பு.
- கொரோனா நோயைப் பரிசோதிக்க மற்றும் தனியார் அரசு மருத்துவமனைகளில் 335 RT-PCR ஆய்வகங்கள்.
- அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட / வட்ட மருத்துவமனைகளில் 222 PSA நிலையங்கள்.
- மெகா தடுப்பூசி முகாம்கள் வாரந்தோறும் நடத்தப்படுகிறது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை மற்றும் ஆய்வகங்களின் கட்டணங்கள் திருத்தியமைப்பு. காப்பீட்டுத் திட்டத்தில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் வசதி.



- மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் சிறப்பாக நடைமுறை.
- டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த 25,000 களப்பணியாளர்கள் வாயிலாகக் கொசு ஒழிப்புப் பணி.
- மலேரியா பரவலை 2030 ஆம் ஆண்டிற்குள் நிரந்தரமாக நீக்க நடவடிக்கை.
- 90,84,732 நபர்களுக்கு மலேரியா நோய்க்கான இரத்த பரிசோதனை செய்யப்பட்டு, மலேரியா கண்டறியப்பட்ட 772 நபர்களுக்குப் பூரண சிகிச்சை.
- தமிழ்நாட்டில் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ரூ.9.62 கோடி நிதி ஒதுக்கீடு. 8,023 யானைக்கால் நோய் நிலை 4–இன் பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வீதம் உதவித்தொகை.
- 104 மருத்துவ தகவல் சேவை மையம் வாயிலாக 3.61 இலட்சம் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள்.
- தேசிய ஊரக நலவாழ்வு குழுமத்தின்கீழ், ரூ.22.72 கோடியில் 29 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், மருத்துவ அலுவலர் (ம) செவிலியர் குடியிருப்புக் கட்டட கட்டுமானப் பணிகள்.
- நடமாடும் மருத்துவமனை திட்டத்தின் வாயிலாக, 2,02,304 முகாம்கள் நடத்தப்பட்டு 1,54,60,280 பயனாளிகள் பயன்.
- தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 389 புதிய நடமாடும் மருத்துவ வாகனங்களுக்கு தேசிய நலவாழ்வு குழுமம் ரூ.70.02 கோடி நிதி ஒதுக்கீடு.
- கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் மூலம் ரூ.3.85 கோடி ஒதுக்கீட்டில் 385 வட்டாரங்களில் 1,155 மருத்துவ முகாம்கள் நடத்திட ஆணை.
- புதுப்பொலிவுடன் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம். ஆண்டிற்கு 1,250 சிறப்பு முகாம்கள் நடத்திட ரூ.4,16,68,000 நிதி ஒதுக்கீடு. இதுவரை 1,188 முகாம்கள் நடத்தப்பட்டு 8,25,682 நபர்கள் பயன்.
- பெருநகர சென்னை மற்றும் மாநகராட்சிகளில் 95 முகாம்கள் நடத்த ரூ.31.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு .

மாதவிடாய் கால தன் சுத்தத்திற்கான திட்டம்

- அரசு மருத்துவமனையில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு 5.07 இலட்சம் தாய்மார்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்கள்.
- சிறைச்சாலைகளில் உள்ள 3,000 பெண் கைதிகளுக்கும், சென்னை மனநல மருத்துவமனையில் உள்ள 1,900 பெண் உள் நோயாளிகளுக்கும் விலையில்லா சானிட்டரி நாப்கின்கள்.
- ரூ.113.10 கோடி நிதியில் 1,21,96,964 பயனாளிகள் பயன்பெறும் வகையில் சானிடரி நாப்கின்கள் கொள்முதல்.
- பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின்கீழ், 1,55,909 பள்ளி குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு கண் கண்ணாடிகள் வழங்க நடவடிக்கை.
- ரூ.50 கோடியில் 3,82,881 பிரசவித்த தாய்மார்கள் பயனடையும் வகையில் 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்.
- அயோடின் பற்றாக்குறை இல்லாத தமிழ்நாட்டினை உருவாக்கும் நோக்கில் இல்லந்தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.
- "தேசிய சிறார் நலத் திட்டத்தின்"கீழ், 45,895 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், 51,829 அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டு, 2,968 நோய் கண்டறியப்பட்ட குழந்தைகளுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது.
- தேசியவளரிளம்பருவத்தினர்நலத்திட்டத்தின்கீழ், 1,60,225 வளரிளம் பருவத்தினருக்கு மருத்துவ சேவைகளும் 1,43,907 வளரிளம்பருவத்தினருக்கு ஆலோசனை சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.
- பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறையில் 4,321 பிரிவுகளுக்கு பல்வேறு பயிற்சிகள்.
- தடுப்பூசி திட்டத்தின் கீழ், 9.31 இலட்சம் பச்சிளம் குழந்தைகள், 10.21 இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் பயன். தடுப்பூசி போடுவதில் 99 சதவிகிதம் தொடர் சாதனை.

- தமிழ்நாட்டில் முழுமையாகத் தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை 90.2 சதவிகிதமாக உயர்வு.
- தமிழ்நாடு போலியோ பாதிப்பு இல்லாத மாநிலமாகத் தொடர்ந்து 18 வருடம் இருந்து வருகிறது.
- 27 மெகா கோவிட் தடுப்பூசி முகாம்கள் வாயிலாக 4,00,34,268 நபர்கள் பயன்.
- 10,83,07,173 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. முதல் தவணையாக 93.72 சதவிகிதமும், இரண்டாவது தவணையாக 79.12 சதவிகிதமும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.
- அரசு மற்றும் தனியார் கோவிட் மையங்களில் 10,51,58,137 நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில், 10 புதிய மாவட்டங்களில் புகையிலை கட்டுப்பாட்டு மையங்கள். புகையிலை விடுபடும் மையங்கள் வாயிலாக 4,395 நபர்களுக்கு ஆலோசனை.
- விழிப்புணர்வு கூட்டங்களின் விளைவாக 307 பள்ளிகள், 18 கல்லூரிகள் புகையிலையில்லா கல்வி நிறுவனங்களாக அறிவிப்பு.
- தமிழகத்தில் புகையிலையினால் விளையும் தீமைகள் மற்றும் புகையிலை கட்டுப்பாட்டுச் சட்டங்கள் குறித்த 8 பயிற்சிகளின் மூலம் 862 பேருக்கு பயிற்சி.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி, ரூ.18,000 ஆக உயர்வு, ரூ.957.87 கோடி நிதி ஒதுக்கீடு.
- அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ், 1,384 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 460 நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கூடுதல் நலவாழ்வு சேவைகளை வழங்க வழிவகை. 2020–2021ஆம் ஆண்டில் 2,448 துணை சுகாதார நிலையங்களும், 2021–2022ஆம் ஆண்டில் 2,400 துணை சுகாதார நிலையங்கள் நலவாழ்வு மையங்களாக மாற்றம்.
- 4,848 இடைநிலை சுகாதார பணியாளர்கள், 2,448 பலநோக்கு சுகாதாரப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம்.
- தொலைதூர மருத்துவ சேவையானது (இ–சஞ்சீவினி) திட்டத்தில் 369 காணொளி மையங்கள், 5,996 காணொளி கிளை மையங்கள் செயல்பட்டு வருகிறது. இச்சேவையில் 3,12,63,495 பயனாளிகள் பயன்.
- "மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்" மூலம் 44,24,011 பயனாளிகள் முதன் முறையாகச் சேவைகள் பெற்றும், 53,10,304 பயனாளிகள் தொடர் சேவைகளைப் பெற்று 97,34,315 பயனாளிகள் பயன்.
- 15ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப கிராம மற்றும் நகர்ப்புற சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கும், மருத்துவ உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் ரூ.805.93 கோடி நிதி ஒதுக்கீடு.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை

- இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகத்துடன் இணைக்கப்பட்ட "தரவு அலகு" தொடக்கம்.
- 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய்களுக்கு இந்திய முறை மருத்துவ மருந்துகள் வழங்கும் சேவை.
- ரூ.32 கோடி செலவில், 110 இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள் சுகாதார நலவாழ்வு மையங்களாகத் தரம் உயர்வு,
- அருகி வரும் நிலையில் உள்ள மருத்துவ தாவரங்களைப் பாதுகாப்பதற்காக மாநில மூலிகை தாவரம் வாரியத்திற்கும் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கும் இடையே "புரிந்துணர்வு ஒப்பந்தம்".
- செங்கல்பட்டு ஆலத்தூர் டாம்ப்கால் நிறுவனத்தில் சூரிய ஒளி மின்சாரம் பெறுவதற்கான ரூ.70 இலட்சம் செலவில் பணிகள்.
- டாம்ப்கால் மருந்துகளை அரசு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் காதி மற்றும் கிராம தொழில் வாரியம் மூலம் விற்பனை செய்வதற்கான "புரிந்துணர்வு ஒப்பந்தம்".
- அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை இணைப்பு வளாகத்தில் "சித்த மருத்துவ பல்கலைக்கழகம்".

தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை

- பயன்பாட்டில் இல்லாத 108 அவசர ஊர்திகளை



பிற திட்டங்களுக்கு வழங்கும் வாகன பொது சேர்ம திட்டம்'.

- சுகாதாரத்துறை வாகன (ம) உதவித்திட்டம் மூலமாக 107 புகார்களுக்குத் தீர்வு.

தேசிய நலவாழ்வு குழுமம் – தமிழ்நாடு

- "மக்கள் நலப் பதிவு" எனும் சுகாதார தகவல் இயங்குதளம் உருவாக்கம். 6,60,09,980 பயனாளிகளுக்கு அடையாள எண்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 108 அவசரகால ஊர்திகள் சேவையை வலுப்படுத்த, ரூ.69.18 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 188 புதிய வாகனங்கள்.
- ரூ.5.10 கோடி செலவில் 17 புதிய RT-PCR பரிசோதனைக் கருவிகள்.
- சென்னை டி.எம்.எஸ். வளாக பொது சுகாதார ஆய்வகத்தில் ரூ.4 கோடி செலவில் மரபணு பகுப்பாய்வுக் கூடம்.
- நகர்ப்புர கர்ப்பிணித் தாய்மார்கள் பரிசோதனைக்காக ரூ.1.10 கோடி செலவில் 10 நகர்ப்புர ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு 10 அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள்.
- ரூ.56.62 இலட்சம் செலவில் 38 அரசு மருத்துவமனைகளுக்கு நுரையீரல் செயல்பாட்டினை கண்டறியும் ஸ்பைரோ மீட்டர் கருவிகள்.
- கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகளுக்கான தடுப்பூசி சேவைகள் குறுஞ்செய்திகளின் மூலமாக நினைவூட்டும் திட்டம்.
- கோவிட் தொற்று நோய்களின்போது தடையற்ற தாய் சேய் நலசேவைகள்.
- தொற்றுநோய் காலத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான சிகிச்சையும், மகப்பேறுக்கு பின் தொடர் பின் கவனிப்பும் தடையின்றி வழங்கப்பட்டது.
- கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான உரிய சிகிச்சைகள் குறித்துத் தக்க வழிகாட்டல் சேவைகள்.
- பாலூட்டும் தாய்மார்களுக்குத் தடுப்பூசி செலுத்தியதுடன், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் கோவிட் தடுப்பூசியைப் பரிந்துரைத்துச் செயல்படுத்தியதில் முதல் மாநிலம் தமிழ்நாடு.
- முதன்முறையாகத் திருப்பத்தூர் மாவட்டம், புதூர் நாடு, ஆரம்பச் சுகாதார நிலையத்தில் மலைவாழ் மக்களுக்காகச் சிறப்பு பச்சிளங் குழந்தைப் பிரிவு.
- மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, தஞ்சாவூர் அரசு மிராசுதாரர் மருத்துவமனையிலும் கூடுதல் சிறப்பு பச்சிளங் குழந்தைப் பிரிவு.
- பதினைந்தாவது நிதிக் குழுவின் கீழ், 2021–2022 ஆம் நிதியாண்டு முதல் 2025–2026 ஆம் நிதியாண்டு வரை 5 ஆண்டுகளுக்கு தமிழகத்திற்குச் சுகாதாரத் துறைக்கான மானியமாக ரூ.4,280 கோடிக்கு ஒப்புதல்.

- ரூ.116.30 கோடி செலவில் பொதுச் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நகர்ப்புறங்களில் ஆயுஷ்மான் பாரத் – சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்கள்.
- அவசரகால கோவிட் மேலாண்மைக்கான நிதித் தொகுப்பு–II இன் கீழ், கூடுதல் நிதியாக ரூ.799 கோடி ஒன்றிய அரசு அனுமதித்து, தமிழக அரசின் 40% பங்களிப்பாக ரூ.319.6 கோடி மதிப்பில் செலவிடப்பட்டு சுகாதார உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு தமிழகத்தில் கோவிட்–19 பெருந்தொற்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் மூலம், 4,848 இடைநிலை சுகாதார பணியாளர்கள், 2,448 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் ஆண் / சுகாதார ஆய்வாளர் நிலை–2 தேர்வு.
- ரூ.70 கோடி மதிப்பீட்டில் தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 389 புதியதாக நடமாடும் மருத்துவக் குழு வாகனங்கள்.
- ஒன்றிய அரசு நிர்ணயித்த இலக்கை அடைவதற்காக 7,000க்கும் மேற்பட்ட சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் வெற்றிகரமாகச் செயல்பாடு.
- ஆயுஷ்மான்பாரத் – சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையங்களின் கீழ், ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்தமைக்காக மாநிலத்திற்கு ரூ.100 கோடி கூடுதல் மானியம்.
- ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்படும் திட்டங்களுக்கு நிதியைப் பெறவும், பிரித்து வழங்கவும், ஒற்றை முறைமை கணக்கு தமிழ்நாட்டில்தேசியநலக்குழும அலுவலகத்திலும் மற்றும் 3,053 பல்வேறு செயல்முறைப்படுத்தும் முகவர்களுக்கு ஒரே வங்கியில் பூஜ்ஜிய நிலுவைத் தொகை கணக்குகள் துவக்கம்.
- உயிர் காக்கும் மயக்கவியல் திறன், பேறுகால அவசர பயிற்சி 29 மருத்துவ அலுவலர்கள் உயிர் காக்கும் மயக்கவியல் திறன் பயிற்சியிலும், 7 மருத்துவ அலுவலர்கள் பேறுகால அவசர சேவை பயிற்சி.
- அகில இந்திய அளவில் முதன் மாநிலமாக தமிழ்நாட்டில் பருவநிலை மாற்றத்தால் மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார பாதிப்புகளை திறம்பட நிவர்த்தி செய்ய மாநில அளவிலான பயிலரங்கு.
- 104 ஹெல்த் ஹெல்ப் லைன் மூலம் மன அழுத்தத்தைப் போக்கும் விதமாக மனநல ஆலோசனை சேவைகளைத் தொடங்கப்பட்டு 1,10,971 மாணவர்களுக்கு ஆலோசனை.
- தேசிய நலவாழ்வு குழுமம் மற்றும் SCARF நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டதின் மூலம் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் "முதியோர் மனநலம்" சேவை.
- தேசிய நலவாழ்வு குழுமம் மற்றும் SNEHA நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தானதன் மூலம் 104 அவசர சேவையில் பணிபுரியும் அனைத்து மனநல ஆலோசகர்களுக்கும் பயிற்சி.
- சென்னை தண்டையார்பேட்டையில், சாலைகளில் அலைந்துதிரியும்மனநலம்பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்து குடும்பத்தினருடன் இணைக்கும் வகையில் அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையம்.
- தமிழ்நாடு தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ், பணிபுரியும் 7,823 பணியாளர்கள் புற ஆதார முறையிலிருந்து ஒப்பந்த முறைக்கு மாற்றம்.
- செவிலியர் உட்பட 28,110 மருத்துவத்துறை பணியாளர்களுக்கு ரூ.89.82 கோடி செலவில் 30 சதவிகிதம் சம்பள உயர்வு.
- தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் பணியாற்றும் 30,164 ஒப்பந்தப் பணியாளர்களுக்கு முதன் முறையாக பணித்திறன் மதிப்பீடு.
- கொரோனா பெறுந்தொற்றின் போது கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சிறப்பான மருத்துவ சேவை மற்றும் பராமரிப்பு வழங்கியதற்கு ஒன்றிய அரசின், சிறந்த செயல்பாடு, புதிய உத்திக்கான தேசிய உச்சி மாநாட்டில் சிறந்த சேவைக்காக தமிழ்நாட்டிற்கு விருது.
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசியைப் பரிந்துரை செய்து வழங்கியதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. 1,30,652 கர்ப்பிணித் தாய்மார்கள், 5,13,190 பாலூட்டும் தாய்மார்களுக்குத் தடுப்பூசி சேவைகள்.
- கோவிட்–19 இரண்டாம் அலைகால கட்டத்தில், கோவிட்–19 ஒருங்கிணைந்த கட்டளை மையம் உருவாக்கப்பட்டு 72,300 அழைப்புகளுக்கும் மருத்துவமனைகள் மற்றும் படுக்கை வசதிகள் செய்து தருவதற்காக விவரங்கள் வழங்கப்பட்டு,

14,563 அழைப்புகளுக்குப் படுக்கை வசதிகள் செய்யப்பட்டன.

❖ தேசிய நகர்ப்புர சுகாதார குழுமத்தின் தலா ரூ.1.50 கோடி செலவின் மூலம் 23 நகர்ப்புர ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளாகத் தரம் உயர்வு.

❖ வால்பாறை நகராட்சிக்குட்பட்ட சோலையார் நகர், முடிஸ்நகர் மற்றும் திருநெல்வேலி நகராட்சியிலுள்ள தச்சநல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களாக மேம்பாடு.

❖ தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவை முன்னெடுப்பு திட்டத்தின் முயற்சியால் 11.12% விபத்துகள் குறைக்கப்பட்டதுடன், விபத்தினால் ஏற்படும் மரணங்களும் 17.75% குறைக்கப்பட்டுள்ளது.

❖ தேசிய நலவாழ்வு குழுமத்தின் நிதியுதவியுடன் 4 மருத்துவமனைகளில் மகப்பேறு மற்றும் சேய்நல பிரிவுக் கட்டடங்கள், 3 மருத்துவமனைகளில் அனைத்து துறைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் 3 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்.

❖ துணை தேசிய சான்றிதழ் நடத்தப்பட்டதில் தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திற்குக் காசநோய் சுமையை 40% குறைத்ததற்காக வெள்ளிப் பரிசு, கரூர், கன்னியாகுமரி, நாமக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களுக்குக் காசநோய் சுமையை 20% குறைத்ததற்காக வெண்கலப் பரிசு.

❖ அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின்கீழ், நடைபெற்ற உலகளாவிய சுகாதார பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு நாட்டிலேயே அதிகபட்சமாக 22 தொற்றா நோய்களுக்கான 29,88,110 பரிசோதனைகள் மேற்கொண்டதற்காகவும், பிரச்சாரத்தின்போது மூன்றாவது அதிக எண்ணிக்கையிலான 85,514 ஆரோக்கிய அமர்வுகளை நடத்தியதற்காகவும் தமிழ்நாடு இரண்டு விருதுகளை வென்றுள்ளது.

மருந்துகள் கட்டுப்பாடுத் துறை

❖ 56,750 மருந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 1,042 உற்பத்தி நிறுவன உரிமங்கள், 328 இரத்த வங்கி நிலையங்கள், 537 இரத்த சேமிப்பு நிலையங்கள் மற்றும் 52,849 மருந்து விற்பனை உரிமங்கள்.

❖ மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டம், 1940இன்படி முறையாக இல்லாத 4 மொத்த விற்பனை உரிமங்கள் மற்றும் 17 சில்லரை உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்திவைப்பு.

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத்துறை

❖ உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டம் 2006 நாடு முழுவதும் 05.08.2011 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

❖ 1,03,897 உணவு வணிகர்களுக்கு உணவு உரிமம், 4,28,686 உணவு வணிகர்களுக்குப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.187 கோடி உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவுச் சான்றிதழ் கட்டணம் வசூலிப்பு.

❖ உணவு வணிகர்களுக்கு 2,790 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, 1.87 இலட்சம் மக்கள் பங்கேற்பு.

❖ உணவு தயாரிப்பு நிறுவனங்கள் மூலம் உணவு சேமித்து வைக்கப்பட்ட இடங்கள், விற்பனையாளர்கள் ஆய்வு செய்யப்பட்டு இதுவரை 12,815 ஆய்வுகள்.

❖ 91.7 டன் புகையிலை மற்றும் நிக்கோட்டின் கைப்பற்றி அழிப்பு.

❖ வாட்ஸ்ஆப் செயலி மூலமாக உணவு தொடர்பான புகாரினை பெற்று நடவடிக்கை எடுத்துக் குறை தீர்க்கும் (9444042322) முறை ஏற்படுத்தப்பட்டுப் பாராட்டப்பட்டுள்ளது.

❖ FSSAIஇன் வழிகாட்டுதலின்படி, 2,423 உணவு விடுதி மற்றும் தங்குமிடங்களுக்கு "சுகாதார மதிப்பீடு" திட்டத்தின்கீழ், சான்றிதழ்.

❖ ஈட் ரைட் சேலஞ்சிங்கில் ஈட் ரைட் இந்தியா திட்டத்தின்கீழ், தெரு உணவு விற்பனையாளர்களை மேம்படுத்த வியாபாரிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு தெரு உணவு மையத்திற்குச் சான்றிதழ்.

❖ மாநில உணவு பாதுகாப்புத் துறையின் செயல்பாடுகளை மாநில உணவு பாதுகாப்பு குறியீடு மூலம் தர மதிப்பீடு செய்து, தமிழ்நாடு மூன்றாவது மாநிலமாக அறிவிப்பு.

❖ ❖ ❖



மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்
திரு. பி.மூர்த்தி அவர்கள்

வணிகவரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு

வணிகவரித் துறை

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி ரூ.1,04,970 கோடி மொத்த வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேர இணையவழி வசதி சேவை (https://www.tn.gov.in/tntwb/tamil) துவக்கம்.
- சிறு வணிகர்கள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (GST) சட்டத்தின்கீழ் பதிவு பெற்று "விற்று முதல் அளவு" ரூ.40 இலட்சத்திற்கு உட்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் அச்சட்டத்தின் கீழ் பதிவு பெறாத குறு வணிகர்கள் உறுப்பினர்களாகச் சேர, சேர்க்கைக் கட்டணம் ரூ.500 வசூலிப்பதிலிருந்து எட்டு மாதங்களுக்கு விலக்கு. இச்சேவையைப் பயன்படுத்தி 36,952 புதிய உறுப்பினர்கள் வணிகர் நல வாரியத்தில் சேர்ந்துள்ளனர்.
- தமிழ்நாடு வணிகர் நலவாரியத்தால் அவ்வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளில் கூடுதலாகத் திருமண உதவித் தொகை ரூ.10,000



மற்றும் விபத்துக்கான நிவாரணத் தொகை ரூ.25,000 வழங்கப்படுகிறது.

- பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3 குறைப்பு.
- வணிகர்களின் குறைகளைக் களையும் வகையில் அனைத்து மண்டலங்களிலும் அதாவது மதுரை, திருநெல்வேலி, சென்னை, வேலூர், கோவை, சேலம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வணிகர்கள் மற்றும் வணிகர் சங்கங்களுடன் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- சரக்குகளின் மீதான வரி விகிதங்கள் ஒத்திசைக்கப்பட்ட பெயரிடும் முறை (HSN தமிழில் விவரங்களுடன் வெளியீடு.
- வரி செலுத்துவோர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் வழங்கப்படும் இணையவழி சேவைகள் துரிதப்படுத்தப்பட்டு விரைவில் வரி திருப்புகை பெற வழிவகை.
- கணினி உதவியுடன், நமூனாக்களை ஆய்வு செய்வதற்கான பகுப்பாய்வு கருவி நிறுவப்பட்டு வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்களை அடையாளம் காணப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை.
- போளூர், புதுக்கோட்டை, துறையூர், ஆத்தூர், கோபிசெட்டிபாளையம் மற்றும் சத்தியமங்கலத்தில் வாடகைக் கட்டடங்களில் செயல்படும் வணிகவரித்துறை அலுவலகங்களுக்குச் சொந்த கட்டடங்கள்.
- வணிகவரித்துறையில் களப்பணியில் அதிக எண்ணிக்கையில் பணியாளர்கள்.
- திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், திருவாரூர், ஒசூர், திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய ஏழு இடங்களில் புதிய நிருவாக கோட்டங்கள்.
- கடலூர், திருவாரூர், ஒசூர், திருப்பூர், செங்கல்பட்டு மற்றும் விருதுநகர் ஆகிய ஆறு இடங்களில் புதிய நுண்ணறிவு கோட்டங்கள்.
- ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணையாக ஒரு வணிகவரி மாவட்டம் இருக்கும் விதமாக துறையின் அலுவலகங்கள் மாற்றியமைப்பு.
- வணிகவரித்துறையின் செயல்பாட்டினை மேம்படுத்தச் சுற்றும் படைகளின் எண்ணிக்கை 53 லிருந்து 100 ஆக அதிகரிப்பு. சுற்றும் படைகளுக்கு ரூ.16.54 கோடி செலவில் ரேடியோ அதிர்வெண் தொழில்நுட்ப கையடக்கக் கருவிகளுடன் கூடிய 100 வாகனங்கள்.
- வணிகவரித்துறையின் சுற்றும் படைகளின் பணிகளை ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் துரிதப்படுத்த மாநில கட்டுப்பாட்டு அறை.
- மாதந்தோறும் வரி செலுத்துவோர் அறிக்கை தாக்கல் செய்வதைக் கண்காணிக்க 40 பணியாளர்களைக் கொண்ட ரூ.5.17 கோடி மதிப்பீட்டில் புதிய அழைப்பு மையம்.

பதிவுத்துறை

- பதிவுத்துறை வரலாற்றிலேயே இதுவரை இல்லாத வகையில் மிக அதிக அளவிலான வருவாயாக ரூ.13,913.65 கோடி ஈட்டப்பட்டு 29,98,048 ஆவணங்கள் பதிவு.
- பதிவுத்துறையில் தூய மற்றும் எளிமையான நிருவாகம் வழங்க பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில், பொதுமக்கள் புகார்கள் தெரிவித்திட 'கட்டுப்பாட்டு அறை'.
- திங்கட்கிழமைதோறும் மண்டல துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகங்கள் மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் குறைதீர் முகாம்கள்.
- பதிவு அலுவலகங்களில் வெளிப்படையான செயல்பாடு, சமூக நீதியை நிலை நாட்டவும் ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்த உயர் மேடை மற்றும் சுற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள தடுப்புகள் நீக்கம்.
- திருவாரூர், திருவள்ளூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய புதிய பதிவு மாவட்டங்கள் உருவாக்கம்.
- கடந்த காலத்தில் பதிவுத்துறையில் ஆவணப்பதிவில் நடைபெற்ற முறைகேடுகளை விசாரிப்பதற்காகச் சிறப்பு விழிப்பு குழு.
- ஆவண எழுத்தர் நல நிதியம் அமைப்பு.
- கிறிஸ்தவ திருமணப்பதிவுச் சான்றுகளின் உண்மை வடிப்புகள் அந்தந்த மண்டல துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்க அரசாணை.
- ஸ்டார் 2.0 மென்பொருள், தமிழ்நிலம் மென்பொருள் வழியாக உட்பிரிவு தேவைப்படாத மற்றும் விற்பவரின் பெயரில் பட்டா உள்ள நேர்வுகளில் தன்னிச்சையான பட்டா மாற்றம்.



- மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் வண்ணம் மாடியில் செயல்படும் பதிவுத்துறை அலுவலகக் கட்டடங்களில் மின்தூக்கி வசதி அல்லது தரைத்தளத்திற்கு அலுவலகம் மாற்றி அமைக்க நடவடிக்கை.
- மாவட்டப்பதிவாளர்கள் ஆணை மீது சம்பந்தப்பட்ட துணைப் பதிவுத்துறைத் தலைவரிடம் மேல்முறையீடு செய்திட வழிவகை.
- மோசடி எனக் கண்டறியப்பட்ட ஆவணப் பதிவுகளை மாவட்டப்பதிவாளர் ரத்து செய்திட வழிவகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவினை சட்டப்பேரவையில் நிறைவேற்றி அதனைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பு.
- MOD ஆவணங்களை இணைய வழியாகவே பதிந்துகொள்ள ஏதுவாக சட்டத்திருத்தம் மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பு.
- சந்தை வழிகாட்டி மதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் களையும் பொருட்டு உயர்மட்ட சந்தை வழிகாட்டி மதிப்பு சீரமைப்புக்குழு.
- 575 சார்பதிவாளர் அலுவலகங்களில் ரூ.2.45 கோடி செலவில் ஆவணதாரர் பெயரையும் காட்சிப்படுத்தப்பட, அடையாளவில்லை காட்சிக் கருவிகள்.
- ரூ.24.57 கோடி மதிப்பீட்டில் வில்லங்கச் சான்றினை இணையவழியில் பொதுமக்கள் பார்வையிடுவதற்கு ஏதுவாக, 01.01.1950 முதல் 31.12.1974 வரை ஆவணங்களின் அட்டவணை II பதிவேடுகள் கணினிமயமாக்கம்.
- வருவாய் மாவட்ட எல்லைகளுக்கு இணையாக சார்பதிவக எல்லைகள் மறுசீரமைப்பு.
- சார்பதிவாளர் அலுவலகத்தின் பதிவு அறைகளில், ரூ.5.98 கோடி செலவில் கூடுதலாக தலா இரண்டு ஐபி கேமரா கருவிகள்.
- வெளிப்படையான நிருவாகத்தை அமைக்கும் நோக்குடன் சார்பதிவாளர் அலுவலகங்கள் கூர்நோக்கு அடிப்படையில் 'அ', 'ஆ' மற்றும் 'இ' வகை அலுவலகங்களாக வகைப்படுத்துதல்.

❖ ❖ ❖

"உங்களால் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் ஒரு தலைமைத் தொண்டனாக இருந்து, உங்கள் தேவைகள் அனைத்தையும் நிச்சயமாக, உறுதியாக செய்து தருவேன்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



பெருநகரச் சென்னைப் பகுதிகளில்
கொரோனா தடுப்பு விழிப்புணர்வு பணி – 04.01.2022





போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

மாண்புமிகு
போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. **எஸ்.எஸ்.சிவசங்கர்**
அவர்கள்

போக்குவரத்துத்துறை

- உள்ளூர் நகரப் பேருந்துகளில் (Town Bus) மகளிருக்கு கட்டணமில்லாப் பயண வசதி.
- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்து பயண அட்டை இல்லாமலும் பயணம் மேற்கொள்ள அனுமதி.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக சாதாரண நகரப் பேருந்துகளில், மூன்றாம் பாலினத்தவரும் கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதி.
- 40 சதவிகிதம் மற்றும் அதற்குமேல் மாற்றுத் திறனுடையவர்களுக்கு, அவர்களது துணையாளர்களுடன் கட்டணமில்லா பயணம் செய்ய அனுமதி.



- 7,321 சாதாரண நகரப் பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லா பயணம். ஒரு நாளைக்கு சுமார் 36.26 இலட்சம் பெண்கள் பயணம்.
- நாளொன்றிற்கு 26,019 மாற்றுத்திறனாளிகள் மற்றும் துணையாளர்கள், 1,318 மூன்றாம் பாலின நபர்கள் பேருந்துகளில் பயணிக்கின்றனர் பெண்களால் 105.51 கோடியும், மூன்றாம் பாலின நபர்களால் 6.1384 இலட்சமும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் துணையாளர்களால் 79.54 இலட்சம் பயண நடைகள் மேற்கொள்ளப்பட்டுப் பயனடைந்துள்ளனர்.
- அரசு பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிர் பயணத்திற்கு ஈட்டுத்தொகையாக 2021–2022ஆம் நிதியாண்டில், ரூ.1,216.83 கோடியும், 2022–2023ஆம் ஆண்டிற்கு ரூ.1,520 கோடியும், நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் பாலினத்தவர் பயணத்திற்கான ஈட்டுத்தொகையாக ரூ.1.21 கோடியும் ஒதுக்கீடு.
- "நிர்பயா" திட்டத்தின் வாயிலாக அனைத்துப் பேருந்துகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், பேருந்து வழித்தடங்களை எளிதில் அறிந்து கொள்ள, "Locate and Access My Bus" என்ற செயலி செயல்படுத்தி, 2,500 பேருந்துகள் மற்றும் 66 பேருந்து பணிமனைகள்/பேருந்துநிலையங்களிலும் CCTV கேமரா பொருத்தும் பணிகள், மத்திய கட்டுப்பாட்டு மையம் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது. 99 பேருந்துகள் மற்றும் 18 பேருந்து பணிமனைகள் / பேருந்து நிலையங்கள் சோதனை ஓட்டம் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.
- ஓய்வுபெற்ற 2,457 போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகை ரூ.497.32 கோடி வழங்கப்பட்டது.
- 2021–2022ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் செலவு அதிகரிப்பு விலையை ஈடு செய்ய ரூ.1,014.63 கோடி அரசு வழங்கியுள்ளது. 2022–2023ஆம் ஆண்டிற்கு மானியமாக ரூ.1,300 கோடி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு.
- உலக வங்கி நிதி நிறுவனத்தின் நிதியுதவியுடன் மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட்–ஐ உலகத் தரம் வாய்ந்த போக்குவரத்து நிறுவனமாக்க வணிகத் திட்டம் தயாரிக்க ஆலோசகர் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 16 பேருந்து பணிமனைகள் / பேருந்து நிலையங்கள் நவீனமயமாக்க ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 2021–2022ஆம் ஆண்டில் ரூ.1,289.07 கோடி மாணவர் இலவசப் பயண ஈட்டுத்தொகை. மேலும், 2022–2023ஆம் ஆண்டிற்கு ரூ.928 கோடி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு.
- 122 புதிய வழித்தடங்களில், தற்சமயம் இயங்கி வரும் 152 பேருந்துகள் மூலம் பேருந்து வசதி.
- 07.05.2021க்கு முன்னர் நிறுத்தப்பட்ட 328 வழித்தடங்களில் 394 பேருந்துகள் மூலம் மீண்டும் பேருந்து இயக்கம் தொடக்கம்.
- சென்னையில் 12 சிறிய பேருந்துகள் 6 வழித்தடங்களில் மெட்ரோ இரயில் நிலையங்களை பிற பகுதிகளுடன் இணைத்து, இயக்கப்பட்டு வருகிறது.
- அனைத்து பேருந்துகளிலும் புதுப்பொலிவுடன் திருவள்ளுவர் படம் மற்றும் திருக்குறள் அதன் விளக்கவுரையுடன் பொருத்தப்பட்டது.
- தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு ரூ.424.47 கோடி பங்கு மூலதன உதவி.
- போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, 18 முதல் 45 வயது உள்ளவர்களில் முதல் தவணை 97.53 சதவிகித நபர்களுக்கு, இரண்டாம் தவணை 93.39 சதவிகித நபர்களுக்கு, 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் முதல் தவணை 98.19 சதவிகித நபர்களுக்கு, இரண்டாம் தவணை 94.33 சதவிகித நபர்களுக்கு கோவிட்–19 தடுப்பூசி செலுத்தப்பட்டது.
- தமிழ்நாட்டில், புதியதாய் BS-VI குறியீட்டிற்கு இணக்கமாக – 2,213 டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் .
- அரசு போக்குவரத்துக் கழகங்களின் கூடுதல் வருவாய்க்காக பெட்ரோல் / டீசல் சில்லறை விற்பனை நிலையங்கள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான 10 இடங்களில் நிறுவப்படவுள்ளது.



❖ அரசு போக்குவரத்து நிறுவனங்களின் கட்டடங்களின் கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவப்படவுள்ளது.

போக்குவரத்து

❖ திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு ரூ.2.42 கோடி செலவில் சொந்தக் கட்டடம்.

❖ மதுரை (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.3.78 கோடி செலவில் சொந்தக் கட்டடம்.

❖ கோயம்புத்தூர் (வடக்கு) வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.4.38 கோடி செலவில் சொந்தக் கட்டடம்.

இன்னுயிர் காப்போம் திட்டம்

❖ "இன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ்" தமிழகத்தில் பல்வேறு சாலைப் பாதுகாப்பு முயற்சிகள் செயல்பாடு.

❖ சாலைப் பாதுகாப்பிற்கான சிறப்புப் பணிக்குழு உருவாக்கம்.

❖ 'சீரான சாலைகள்' திட்டம் வாயிலாக விபத்தில்லா தமிழகத்தை அடைய அறிவியல் பூர்வமாக, புதுமையான செயலாக்கத் திறன் உருவாக்க முயற்சி.

நம்மை காக்கும் 48

❖ உயிரிழப்பைக் குறைக்கும் வகையில், விபத்து நடத்த முதல் 48 மணி நேரத்தில் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை வழங்கும் "நம்மை காக்கும் 48" திட்டம்.

இன்னுயிர் காப்போம் – உதவி செய் திட்டம்

❖ சாலை பாதுகாப்பு தொடர்பாக தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக 'இன்னுயிர் காப்போம் – உதவி செய் திட்டம்' தொடங்க நடவடிக்கை.

❖ ❖ ❖



சென்னை எழும்பூர்
குழந்தைகள் நல மருத்துவமனையில் ஆய்வு – 20.06.2022



செங்கல்பட்டு மாவட்டம்,
செங்காடு ஊராட்சி அலுவலகத்தில் ஆய்வு – 24.04.2022



மாண்புமிகு
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்
திரு. பி.கே.சேகர்பாபு
அவர்கள்

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்

இந்து சமய அறநிலையத் துறை

- கொரோனா நோய்த் தொற்று காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் திருக்கோயில்கள் சார்பாக நாள்தோறும் ஒரு இலட்சம் வீதம் 44 இலட்சம் உணவுப் பொட்டலங்கள்.
- "கோரிக்கைகளை பதிவிடுக" எனும் இணையவழித் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு, பக்தர்களின் கோரிக்கைகள் மீது 30 தினங்களுக்குள் நடவடிக்கை.
- 'அழைப்பு மையம்' பொதுமக்களின் குறைகளை தொலைபேசி மூலம் பெறப்பட்டு அவர்களுக்கு உடனடியாக குறைகளை களைய நடவடிக்கை.
- கொரோனா தொற்று காலத்தில் இந்துசமய அறநிலையத் துறையின் திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்கும் வகையில் தலா ரூ.4,000 உதவித்தொகை, 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டு 11,065 பணியாளர்கள் பயன்.
- திருக்கோயில் நிலங்களின் உரிமை ஆவணங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, முதற்கட்டமாக 3,43,647 ஏக்கர் நிலங்கள் முழுவதும் ஒத்துப்போகும் இனங்களாக கண்டறியப்பட்டு 'அ' பதிவேடு / நகரநில





அளவைப் பதிவேடு மற்றும் சிட்டா ஆகியன வெளியீடு.

❖ அறநிறுவனங்களுக்குச் சொந்தமான சொந்தமான நிலம், கட்டடம், மனை ஆகியவற்றில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்றி 753.02 ஏக்கர் நிலமும், 513 கிரவுண்ட் 0544 சதுர அடி மனைகளும், 34 கிரவுண்ட் 2,285 சதுர அடி கட்டடங்களும், 46 கிரவுண்ட் 2,077 சதுர அடி திருகுளக்கரைகளும் மீட்பு. மீட்கப்பட்ட நிலங்களின் மொத்த மதிப்பு ரூ.2,344.44 கோடி.

❖ காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை கீழ்ப்பாக்கம் சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி நீதிமன்ற தீர்ப்பின்படி, கையகப்படுத்தப்பட்டு அருள்மிகு ஏகாம்பர நாதர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி எனப் பெயர் மாற்றம்.

❖ 47 முதுநிலைத் திருக்கோயில்களில் உழவாரப் பணிகள் இணைய வழிமுறையில் பதிவு செய்யும் வசதி துவக்கப்பட்டு திருக்கோயில்களின் அனைத்து இடங்களிலும் உழவாரப் பணிகள்.

❖ மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் உட்பட 46 திருக்கோவில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை.

❖ "கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டத்தின்கீழ்" 74,565 தல மரக்கன்றுகள் 3,118 திருக்கோயில்களில் நடப்பட்டுள்ளன.

❖ அன்னைத் தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய 12 இறைவன் போற்றி பாடல் நூல்கள் வெளியிடப்பட்டு, 47 முதுநிலை திருக்கோயில்களுக்கு போற்றி பாடல் நூல்கள் வழங்கப்பட்டன.

❖ அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையின்கீழ் பயிற்சிபெற்ற 24 அர்ச்சகர்கள் உள்ளிட்ட 208 நபர்கள் பணி நியமனம்.

❖ ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ், 12,959 திருக்கோயில்களில் பணிபுரியும் 9,982 அர்ச்சகர்களுக்கு தலா ரூ.1,000 வீதம் மாத ஊக்கத்தொகை.

❖ திருத்தணிகை, சமயபுரம், திருச்செந்தூர் ஆகிய திருக்கோயில்களில் "நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்" தொடக்கம். இத்திட்டத்தின்கீழ், நாள்தோறும் 15,890 பக்தர்கள் பயன்.

❖ திருக்கோயில்களில் தலைமுடி திருத்தும் பணியாளர்களுக்கு தலா ரூ.5,000 வழங்கும் திட்டம் துவக்கம். இத்திட்டத்தின்கீழ், ரூ.10.47 கோடி செலவில், 1,744 பணியாளர்கள் பயன்.

❖ திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன், இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்களில் பக்தர்களால் வழங்கப்பட்டு பயன்பாடற்ற பலமாற்று பொன் இனங்களை 24 காரட் தங்கக் கட்டிகளாக மாற்றுவதற்கான பூர்வாங்கப் பணிகள் துவக்கம்.

❖ இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் பலமாற்று பொன் இனங்களை உருக்கி சுத்தத் தங்ககட்டிகளாக மாற்றி வங்கியில் முதலீடு செய்ய அனுமதி.

❖ அருள்மிகு கபாலீசுவரர் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 9 உதவி பேராசிரியர்கள், ஒரு நூலகர் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணிநியமனம். 216 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

- மதுரை மற்றும் திருவண்ணாமலையில் ஒதுவார் பயிற்சி பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு துவக்கம்.
- காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி துவக்கப்பட்டு, 857 மாணவ, மாணவிகளுக்கு இலவச சீருடை, புத்தகப்பை மற்றும் இதர பொருட்கள்.
- கொளத்தூரில் அருள்மிகு கபாலீஸ்வரர் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியருக்கு கல்வி தொடர்புடைய விலையில்லா உபகரணங்கள்.
- ஒருகால பூஜை திருக்கோயில்களில், பூஜைகள் செய்வதற்கு திருக்கோயில் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.1 இலட்சம் வீதம் அரசு மானியம் ரூ.130 கோடி. ரூ.129.59 கோடி தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு.
- விளாத்திக்குளம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஒட்டன்சத்திரம், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதியதாக துவக்கம். 313 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.
- திருக்கோயில்களிலும், திருக்கோயில்களின் திருமண மண்டபத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணமில்லா திருமணத் திட்டம் மணமக்களுக்கு வாழ்த்துக்களுடன் பரிசுப்பொருட்கள்.
- பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் வேதபாராயணர் பள்ளிகளில் பயிலும் 18 மாணவர்கள், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் ஒதுவார் பயிற்சி பள்ளிகளில் பயிலும் 24 மாணவர்கள் மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தவில் / நாதஸ்வர பயிற்சி பள்ளிகளில் 25 மாணவர்கள் என மொத்தம் 67 மாணவர்களுக்கான உதவித்தொகை ரூ.3,000ஆக உயர்வு.
- கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில் நிருவாகம் மேம்பாடு மற்றும் இதர செலவினங்களுக்காக வழங்கப்படும் அரசு மானியம் ரூ.6 கோடியாக உயர்வு. புதுக்கோட்டை மாவட்ட தேவஸ்தான திருக்கோயில் நிருவாக மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக வழங்கப்படும் அரசு மானியம் ரூ.3 கோடியாக உயர்வு.
- ரூ2.10 கோடி நிதி ஒதுக்கீட்டில், ஒவ்வொரு திருக்கோயிலுக்கு ரூ.30 இலட்சம் வீதம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய ஆறு திருக்கோயில்களில் முதலுதவி மருத்துவ மையங்கள் மற்றும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவர் உடன் மருத்துவப் பணியாளர்களுடன் கூடிய மருத்துவ மையம் துவக்கம்.





- திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் நிரந்தரப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு. ரூ.25 கோடி கூடுதல் செலவினம்.
- தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் அர்ச்சகர்களுக்குப் புத்தாடைகள் மற்றும் பணியாளர்களுக்குச் சீருடைகள். 15,511 திருக்கோயில் பணியாளர்கள் பயன்.
- திருக்கோயில்களில் பணியாற்றும் முழுநேரம், பகுதிநேரம், தொகுப்பூதியம், தினக்கூலி உள்ளிட்ட பணியாளர்களுக்கு பொங்கல் கருணைக்கொடை ரூ.2,000 ஆக உயர்வு.
- திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் ரூ.23.81 கோடி மதிப்பீட்டில் பக்தர்களின் வசதிக்காக புதிய குடிநீர்த் திட்டம், புதிய அன்னதானக் கூடம், கம்பிவட ஊர்தி மேல்நிலையத்திலிருந்து மின்தூக்கி, புதிய நாத மணிமண்டபப் பணிகள் துவக்கம்.
- திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிகளை மேம்படுத்துவது, பராமரிப்பது, செம்மைப்படுத்துவது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்.
- இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில், கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டு, முதுநிலை திருக்கோயில்களில் கண்காணிப்பு.
- தமிழ்நாட்டில் உள்ள 314 திருக்கோயில்களுக்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தால் "உணவு தயாரித்தல் மற்றும் விநியோகத்திற்காக" BHOG தரச்சான்றிதழ்கள்.
- 81 திருக்கோயில்களுக்கு திருக்குட முழுக்கு.
- இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களுக்கு ரூ.5.54 கோடி மதிப்பில் 72 புதிய வாகனங்கள்.
- பக்தர்களுக்கு தரமான திருநீறு மற்றும் குங்குமம் பிரசாதம் வழங்குவதற்காக 8 திருக்கோயில்களில் நவீன இயந்திரம் மூலம் தயாரித்து பிற திருக்கோயில்களுக்கு வழங்கும் திட்டம் துவக்கம்.
- 550 திருக்கோயில்களில் இணைய வழி மற்றும் கணினி வழி வாயிலாக 225 கட்டணச் சேவைகள் வழங்கும் திட்டம் துவக்கம்.
- மதுரை, பழநி, திருசெந்தூர், ஸ்ரீரங்கம் உட்பட 10 திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கும் திட்டம் துவக்கம்.
- ரூ.15 கோடி செலவில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடம்.
- திருக்கோயில்களில் பணிபுரியும் தினக்கூலி / தொகுப்பூதிய 33 பணியாளர்கள் பணிநிரந்தரம்.

❖ ❖ ❖



மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்

முனைவர் பழனிவேல் தியாகராஜன்

அவர்கள்

நிதித்துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக் கால நன்மைகள்

முதலமைச்சர் பொது நிவாரண நிதி

கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பிற்காக ரூ.547.74 கோடி முதலமைச்சர் பொது நிவாரண நிதி பெறப்பட்டுள்ளது.

கோவிட்–19 மற்றும் கோவிட்–19 அல்லாத பிற நிகழ்வுகளுக்கு, பின்வருமாறு நிவாரண / நிதியுதவி வழங்கப்பட்டுள்ளன.

- ரூ.260 கோடி மதிப்பீட்டில் கோவிட்–19 நோய்த்தொற்று இரண்டாம் அலை மற்றும் மூன்றாம் அலை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள நிதியுதவி.
- ரூ.25 கோடி மதிப்பீட்டில் கருப்பு பூஞ்சை நோய் சிகிச்சைக்காக உயிர் காக்கும் மருந்துகள் வாங்க நிதியுதவி.
- ரூ.9.2 இலட்சம் மதிப்பீட்டில் கொரோனா ஊரடங்கு காலத்தில் ஆதரவற்ற கால்நடைகளுக்குத் தீவனப் பொருட்கள் கொள்முதல் செய்ய நிதியுதவி.
- கோவிட்–19 பெருந்தொற்று பாதிப்பினால் பெற்றோர் இருவரையும் இழந்த 315 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.15.75 கோடி வைப்பீடு.



- கோவிட்–19 பெருந்தொற்று பாதிப்பினால் தாய் அல்லது தந்தையை இழந்த 9,147 குழந்தைகளுக்கு தலா ரூ.3 இலட்சம் வீதம் ரூ.274.41 கோடி நிவாரணம்.
- கோவிட்–19 நோய்த் தொற்றால் உயிரிழந்த 16 செய்தியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1.60 கோடி நிவாரணம்.
- கொரோனா தொற்றால் உயிரிழந்த முன்கள அரசுப் பணியாளர்கள் 346 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.86.50 கோடி நிவாரணம்.
- கொரோனா தொற்று நோய் பணியின் போது விபத்தில் உயிரிழந்த 14 அரசுப் பணியாளர்கள் மற்றும் தற்காலிக முன்கள ஒப்பந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.70 இலட்சம் நிவாரணம்.
- எதிர்பாரா நிகழ்வுகளில் உயிரிழந்த 409 நபர்களின் குடும்பங்களுக்கு ரூ.4.65 கோடி நிவாரணம்.
- பல்வேறு காரணங்களால் காயமடைந்த அல்லது உயிரிழந்த 830 நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்குச் சிறப்பு நிகழ்வாக ரூ.26.01 கோடி நிவாரணம்.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)

- அரசிற்குச் செலுத்த வேண்டிய வரவினங்களை, மின்வரவுகளாக 24x7 மணிநேரமும் தங்குதடையின்றி இணையத்தின் (www.karuvoolam.tn.gov.in <http://www.karuvoolam.tn.gov.in>) மூலம் செலுத்தும் வசதி.
- பத்திரப்பதிவுத்துறை, போக்குவரத்துத்துறை ஆகிய துறைகளால் திரட்டப்படும் வரி வரவினங்களை IFHRMS மூலம் பெறுவதற்கான ஒருங்கிணைப்புப் பணிகள்.
- கருவூலக் கணக்கு துறைக்கு இந்தியத் தொழில் கூட்டமைப்பு நிறுவனத்தால் CII CONNECT தொழில்நுட்ப முன்மாதிரி பயன்பாட்டிற்கான விருது.

ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்திற்குப் பேராசிரியர் திரு. க.அன்பழகன் மாளிகை எனப் பெயரிடுதல்

- முன்னாள் நிதியமைச்சர் திரு. க.அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் நினைவாக நிதித்துறை வளாகத்தில் அன்னாரின் மார்பளவு சிலை. அக்கட்டடத்திற்கு "பேராசிரியர் திரு.க.அன்பழகன் மாளிகை" எனப் பெயர் சூட்டப்பட்டது.

கருவூல அலுவலகங்களில் (CCTV) கேமராக்களை நிறுவுதல்

- ரூ.1.22 கோடி மதிப்பீட்டில் 6 சம்பளக்கணக்கு அலுவலகங்கள், 2 சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்ட கருவூல அலுவலகங்களுக்கு (ELCOT) நிறுவனத்தின் மூலம் 390 CCTV கேமராக்கள் கொள்முதல்.

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

- அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மேலும் நான்காண்டிற்கு நீட்டிப்பு.
- அரசு ஊழியர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள் விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் மற்றும் நிறுவன பணியாளர்கள் மற்றும் அவர்களின் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கும் ரூ.5 இலட்சம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.
- இப்புதிய திட்டத்தில் குறிப்பிட்ட நோய்களையும், குறிப்பிட்ட சிகிச்சைகளையும் சிறப்பினமாகக் கருதி அதற்கு ரூ.10 இலட்சம் வரை மருத்துவச் சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.
- கோவிட்–19 நோய் தொற்றிற்கான சிகிச்சையைக் குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்த்து ரூ.10 இலட்சம் வரை சிகிச்சை.
- புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 54,641 நபர்களுக்கு ரூ.232.01 கோடி மதிப்பில் மருத்துவச் சிகிச்சை.

மாவட்ட ஆட்சியர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

- 17 ஓய்வூதியர்களின் குறை தீர்வு கூட்டங்கள் வாயிலாக மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட

632 ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் மனுக்கள் அனைத்தின் மீதும் நடவடிக்கை.

ஓய்வூதிய அதாலத்

- தமிழ்நாடு சட்டப் பணிகள் ஆணையத்தால் 22.02.2002இல் உருவாக்கப்பட்ட ஓய்வூதிய அதாலத் முன்பு வைக்கப்படும் ஓய்வூதியதாரர் குறைகள் மீதான உத்தரவினை செயல்படுத்திட, ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய குழு அமைப்பு.

அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம்

- தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ், அரசு அலுவலர்கள் பணிக் காலத்தில் இறக்கும் நேர்வில் அவர்தம் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு. குழுக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள உள்ளாட்சித் துறை, அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிலையங்கள் முதலியனவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் நீட்டிப்பு.

ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

- தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ், ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ.50,000.
- தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தில் 5,003 நிலுவை விண்ணப்பங்களை நேர் செய்து வட்டியில்லா முன் பணம்.
- தமிழ்நாடு குடும்ப பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ், 29,318 கேட்புகள் பெறப்பட்டு, இறந்துபோன 18,925 ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களுக்கு ரூ. 94.39 கோடி.
- தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் பங்களிப்பு வருங்கால வைப்புநிதித் திட்டத்தின்கீழ், 279 பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தினக்கூலி பணியாளர்களின் விண்ணப்பங்கள் ஒப்பளிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ரூ.3.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 64 ஓய்வூதியதாரருக்கு ரூ.2.99 இலட்சம் ஒட்டு மொத்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

- பல்வகை நிறுவனங்கள் மற்றும் தேசிய சமூக நலத் திட்டம் உள்ளிட்ட 4,073 நிறுவனங்களின் 2020–2021ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.
- நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 30,518 ஓய்வூதியதாரர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம்.
- உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர், குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம், தொடர்பான குறைகளைக் களைய உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம்.
- நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின்கீழ் 105 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.46.31 இலட்சமும் ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 239 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.106 இலட்சமும் அனுமதி.
- ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின்கீழ், 167 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.76.35 இலட்சம், ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்கீழ், 392 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு ரூ.173.54 இலட்சம் அனுமதி.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ரூ.18 கோடி அளிக்கப்பட்டுள்ளது.
- 342 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்க ரூ.45.99 இலட்சம்.
- 308 ஊராட்சி ஒன்றியங்களின் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் 2020–2021ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு ஓய்வூதிய கணக்குகளுக்கு ஒப்புதல்.
- 14 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சி பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகள் தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டுத் தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதல்.
- பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் காலத்தில் 27,928 தணிக்கைத்





தடைகளை நீக்கம் செய்த வகையில் ரூ.1,227.66 இலட்சம் வசூல்.

- தணிக்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து தணிக்கையாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி.
- உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென தணிக்கைத் தகவல் மேலாண்மை.
- தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) வழிகாட்டுதல்களின்படி பயன்படுத்தப்படும் தரவுகள் மேம்பாடு.

மாநில அரசு தணிக்கைத் துறையின் சாதனைகள்

- 3,22,276 சத்துணவு மையங்கள் மற்றும் 1,554 இதர நிறுவனங்களில் தணிக்கை.
- 6,055 தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் மூலம் ரூ.784.75 இலட்சம் வசூல்.

சிறுசேமிப்புத் துறை

- அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு, அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம், அஞ்சலக தொடர் வைப்பு திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் ஆகிய திட்டங்களில் சிறுசேமிப்பு உயர்வு.

உலக சிக்கன நாள் கொண்டாட்டங்கள்

- உலக சிக்கன நாள் விழாவில் மாணவர் / மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பண்பினை, ஊக்குவிக்கும் வகையில் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள்.

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத்துறை

- தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 10 அலகுகளிலும் இறுதித் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை அறிக்கை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

தனி அறிக்கைகள்

- 2019–2020 தணிக்கையாண்டில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் 9 அலகுகளில் ரூ.120.76 கோடிக்கு சீரிய முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளது.
- 829 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.6.19 கோடிக்கு சீரிய முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளது. தனி அறிக்கைகள் உரிய மேல் நடவடிக்கைக்காக நிருவாகத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத் தணிக்கை துறை

- இந்து சமய அறநிறுவனங்களின் வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்திட இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவந்த தணிக்கை பிரிவு சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் இந்து சமய அறநிலையத்துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தனித்துறையாக நிதித்துறையின் நிருவாக கட்டுப்பாட்டிற்கு மாற்றம்.

உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்

சென்னை மாநகர கூட்டாண்மை

- "சென்னை மாநகரக் கூட்டாண்மை" என்னும் தனித்தன்மை வாய்ந்த வளர்ச்சித் திட்டம்.

சென்னை மாநகர கூட்டாண்மை – நிலையான நகர்ப்புர சேவைகள் திட்டம் – கட்டம் 1

- பொது சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர் மற்றும் கழிவுநீர் ஆகிய துறைகளில் நெகிழ்திறன் வாய்ந்த சேவைகள்
- தமிழ்நாடு அரசின் நிதித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படும்.
- சென்னை மாநகர கூட்டாண்மை திட்டத்திற்கான நகர்ப்புர சேவைகள் திட்டம் மற்றும் இதற்கான வழங்கல் சார்ந்த குறியீடுகளுக்குத் தமிழக அரசு திருத்திய கொள்கை அளவிலான ஒப்புதல்.

திட்டம் மற்றும் வளர்ச்சி

மாநில திட்டக் குழு

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

- மாநிலத் திட்டக் குழுவில் அரசு மற்றும் அரசுத் துறைகளில் புதுமைகளை வளர்ப்பதற்கும் புதுமை கலாச்சாரத்தை ஊக்குவிக்க ரூ.87.83 கோடி மதிப்பீட்டில் 22 முன்மொழிவுகள்.

தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

- நிலம் மற்றும் நீர் வளங்கள் தொடர்பான துறைகளில் கொள்கை குறுக்கீடுகளில் அரசுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறது மாநிலத் திட்டக் குழு.
- ரூ.116.53 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக 7 ஆராய்ச்சி ஆராய்வுகளுக்கு அனுமதி.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், கன்னியாகுமரி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில்,

- சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் மூலம் ரூ.12.38 கோடி செலவில் 106 பணிகள்.
- நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையின் மூலம் ரூ.9.15 கோடி செலவில் 84 பணிகள்.
- வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் 12 பணிகளும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ரூ.16.12 கோடி செலவில் 65 பணிகள்.
- கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் ரூ.45.60 இலட்சம் செலவில் 8 பணிகள்.
- ரூ.11.50 இலட்சத்தில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, அமராவதிநகரில் உள்ள அரசு பழங்குடியினர் குடியிருப்புப் பள்ளிக்கு உணவு உண்ணும் அறையுடன் கூடிய சமையலறை.
- மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் ரூ.48 இலட்சத்தில் 3 பணிகள்.
- தொழில் துறையின் மூலம் ரூ.4.72 கோடியில் 5 பணிகள்.
- பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.3.89 கோடியில் 9 பணிகள்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் ரூ.2.24 கோடியில் 15 பணிகள்.
- 204 பணிகளுக்கு ரூ.60.204 கோடியில் சம்மந்தப்பட்ட 11 மாவட்டங்களில் உள்ள பணிகளைச் செயல்படுத்தும் துறைகளிடமிருந்து பிரேரணைகள் பெறப்பட்டு அரசின் அனுமதிக்காகச் சமர்ப்பிப்பு.

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 1974ஆம் ஆண்டு முதல் இதுகாறும் சமர்ப்பித்துள்ள 790 மதிப்பீட்டு ஆய்வறிக்கைகள் அரசு கொள்கை முடிவுகள், கொள்கை உருவாக்கம்.

- தமிழ்நாட்டில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காக்ளியர் உள்ளமைப்பு அறுவை சிகிச்சை மேற்கொண்ட சிறுவர்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு.
- தமிழ்நாட்டில் "பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்" குறித்த மதிப்பீட்டாய்வு.
- பேரழிவு மற்றும் சமூக பயன்பாட்டில் ஆளில்லா வான்வழி வானூர்திகளின் வடிவமைப்பு மேம்பாடு மற்றும் செயல்பாடு குறித்த மதிப்பீட்டாய்வு.
- "சென்னை மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள மறுகுடியமர்வில் மாணவர்களின் தற்போதைய நிலை மற்றும் இடை நிற்றலுக்கான காரணங்கள்" பற்றிய ஆய்வறிக்கை.
- தமிழ்நாடு ஓர் பொருளாதார ஆய்வறிக்கை முடிக்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

மனிதவள மேலாண்மைத் துறை

- பெண் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்வு.
- அரசுப் பணியாளர்களுக்கு அவர்களது பணித்திறனை மேம்படுத்தும் பொருட்டு பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிக்கு ஊக்கத்தொகை.
- அரசுப் பணிகளில் நேரடி நியமனம் மூலம் பணிநியமனம் செய்யப்படுவதற்கான வயது உச்சவரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்வு.
- கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளையோர்கள் அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள் மற்றும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பகங்கள் மூலம் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம்.
- புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் உருவாக்கம்.
- மாநிலம் முழுவதும் ஊழல் தடுப்பு இயக்குநரகம் சென்னை மாநகர சரகம், மத்திய சரகம், வடக்கு சரகம், மேற்கு சரகம் மற்றும் தென்சரகம் என ஐந்து சரகங்களாகப் பிரிக்கப்பட்டு அவை அனைத்தும் காவல் கண்காணிப்பாளர் நிலையில் கண்காணிப்பு.
- அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ்மொழி பாடத்தாள் கட்டாயம்.
- தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளில் உள்ள சில பணியிடங்களை நிரப்பும் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு வழங்கும் விதமாகச் சட்டம்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் நான்கு உறுப்பினர்கள் நியமனம்.
- மனிதவள மேலாண்மைத்துறையில் மின்னனு அலுவலக (e-office) முறை தொடக்கம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

- தேர்வாணையத்தின் அனைத்து தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ்மொழி தகுதித்தேர்வு அறிமுகம்.
- 12 போட்டித் தேர்வுகளுக்கான தேர்வாணைய அறிவிக்கைகள் வெளியீடு. 10 போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.
- தேர்வாணைய வரலாற்றிலேயே முதன்முறையாக துறைத் தேர்வுகளில், அனைத்து கொள்குறிவகைத் தேர்வுகளும் கணினி வழித் தேர்வாக அனைத்து மாவட்ட தேர்வு மையங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.
- தேர்வாணைய விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தீர்வு காணும் வகையில், தேர்வாணைய அலுவலகத்தில் "குறைதீர் அழைப்பு மையம்".

❖ ❖ ❖



பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

மாண்புமிகு
பால்வளத்துறை அமைச்சர்
திரு. சா.மு.நாசர்
அவர்கள்

- ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 குறைப்பு. நாளொன்றுக்கு 3.50 இலட்சம் லிட்டர் விற்பனை அதிகரிப்பு.
- சென்னை பெருநகரில் ஆவின் பால் விற்பனை அதிகபட்சமாக 14.15 இலட்சம் லிட்டர் விற்பனை.
- மாவட்ட ஒன்றியங்கள் மூலம் அதிகபட்ச விற்பனையாக 14.35 இலட்சம் லிட்டர் பால் விற்பனை.
- பால் விற்பனை விலை குறைப்பினால் 1 கோடி நுகர்வோர்கள் மற்றும் 450 நிறுவனங்கள் பயன்.
- பால் விலை குறைப்பினால் புதியதாக 6 இலட்சம் நுகர்வோர்கள் ஆவினில் இணைந்து, சந்தை மதிப்பு அதிகரிப்பு.
- பால்விலை குறைப்பினால் 1 கோடி நுகர்வோர்கள் வருடத்திற்கு ரூ.1,643 இலட்சம் சேமிப்பின் மூலம் பயன்.
- ஆவின் நிறுவனம் 43.05 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து சாதனை.





- பிரீமியம் மில்க்கேக், மாம்பழம் & ஸ்ட்ராபெர்ரி சுவைகளில் யோகர்ட், பாயாசமிக்ஸ், பால் புரத நூடுல்ஸ், டெய்ரி ஒயிட்னர் ஆகிய புதிய பால்பொருட்கள் அறிமுகம்.
- தீபாவளி பண்டிகையின்போது ஆவின் நெய் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட இனிப்பு வகைகள் அறிமுகப்படுத்தி விற்பனை மேற்கொள்ளப்பட்டு, ரூ.8,211 இலட்சம் மதிப்பில் பால் பொருட்கள் விற்பனை.
- அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பில் ஆவின் 100 மி.லி. நெய் ஜார் 2,15,67,122 எண்ணிக்கையில் ரூ.120.77 கோடி மதிப்பிற்கு விநியோகம்.

❖ ❖ ❖





மாண்புமிகு
சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர்
நலத்துறை அமைச்சர்
திரு. செஞ்சி
கே.எஸ்.மஸ்தான்
அவர்கள்

சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வஃக்ப் வாரியம்

- சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியருக்குச் சிறுபான்மையினர் பண்டிகைகளுக்குச் சிறப்பு உணவு.
- சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பயன்பெறும் வகையில் 1,000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.45 இலட்சம் செலவில் வழங்கிட ஆணை.
- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.5,000 ஆகவும் உயர்வு.
- சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் ரூ.1.75 கோடி செலவில் தோற்றுவிக்க ஆணை.
- தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு முஸ்லீம் உதவி சங்கங்களும், கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு கிறிஸ்துவ உதவி சங்கங்களும் கூடுதலாகத் துவங்கிட ஆணை. ஒரு சங்கத்திற்கு ரூ.1 இலட்சம் ஒதுக்கீடு.



- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில்பதிவுசெய்யப்பட்டஉறுப்பினர்களுக்கு ரூ.180.92 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 4,479 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உள்ள 10,583 உறுப்பினர்களுக்கு ரூ.4.76 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கிட ஆணை.
- இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு அருட்சகோதரிகள் / கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் ரூ.60,000 ஆக உயர்வு.
- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 6,034 பயனாளிகளுக்கு ரூ.36.18 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.
- பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டத்தின்கீழ், சிறுபான்மையினர் அதிகம் வாழும் 10 மாவட்டங்களில் 62 அடிப்படை வசதிபணிகளுக்கு ஒன்றிய அரசின் பங்களிப்பாக ரூ.369.45 கோடி, மாநில அரசின் பங்களிப்பாக ரூ.246.30 கோடியும் மொத்தம் ரூ.615.75 கோடி மதிப்பில் செயல்படுத்த ஒப்புதல். முதல் தவணையாக ரூ.184 கோடி விடுவிப்பு.
- தமிழ்நாடு வஃக்ப் வாரியத்திற்கான ஆண்டு நிருவாக மானியமாக வழங்கப்படும் ரூ.2.50 கோடியுடன் தமிழ்நாடு வஃக்ப் வாரியம் வசூலிக்கும் சகாயத்தொகை அடிப்படையில் 5 சதவிகிதம் ஊக்கத் தொகையைக் கூடுதல் நிருவாக மானியமாக வழங்க ஆணை.
- 4 வஃக்ப் சரக அலுவலகங்களுக்கு ரூ.64 இலட்சம் செலவில் சொந்த கட்டடம் கட்ட ஆணை.
- பள்ளி வாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வஃக்ப் நிறுவனங்களைப் பழுது பார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியம் ரூ.6 கோடியாக உயர்வு, 70 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைகின்றன.
- வஃக்ப் சொத்துக்களைப் பாதுகாக்க 60,000 வஃக்ப் சொத்துக்களை ட்ரோன்களைப் பயன்படுத்தி G.P.S./G.I.S. மேப்பில் செய்ய இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் ரிமோட் சென்சிங், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, ஜவஹர்லால் டெக்னாலஜிகள் யூனிவர்ஸிட்டி, ஹைதராபாத் மற்றும் சென்னை பல்கலைக்கழகம், புவியியல் துறைகளுடன் ஒப்பந்தங்கள்.

அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு

- 106 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 58,547 இலங்கைத் தமிழர்களும், முகாம்களுக்கு வெளியே 34,122 இலங்கைத் தமிழர்களும் வசித்து வருகின்றனர்.
- "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்," "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறு வாழ்வுத்துறை ஆணையரகம்" எனப் பெயர் மாற்றம்.
- இலங்கை அகதிகள் முகாம், "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம்.
- அனைத்து சமூக நலத் திட்டங்களின் பலன்களும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிப்பு.

மாதாந்திர பணக்கொடை

- ரூ.21.29 கோடி கூடுதல் செலவில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்குக் குறைந்தபட்ச வாழ்க்கை பாதுகாப்பு நிதியாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த பணக்கொடை உயர்வு.

துணிமணிகள்

- ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையில் துணிமணிகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் மூலம் வழங்கப்படும் துணிமணிகள் விலையினை உயர்த்தி நிர்ணயித்து, 58,614 குடும்பங்களுக்கு, ரூ.4.52 கோடி கூடுதல் செலவில் துணிமணிகள் வழங்கப்பட்டுள்ளது.

பாத்திரங்கள்

- முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள விலையின் அடிப்படையில் பாத்திரங்கள் வாங்கி வழங்க இயலாத நிலையில் பாத்திரங்களுக்கான கொள்முதல் விலையினை உயர்த்தி நிர்ணயித்து, 18,890 குடும்பங்களுக்கு ரூ.2.42 கோடி கூடுதல் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி உதவித்தொகை

- முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களின் பட்டப்படிப்பு, இளநிலை கலை மற்றும் அறிவியல்

பட்டப்படிப்பு, இளநிலை தொழிற்கல்வி பட்டப்படிப்புகளுக்கான உதவித்தொகை முறையே ரூ.10,000, ரூ.12,000, ரூ.20,000 என உயர்வு.

- 55 பொறியியல் மாணவர்களின் மதிப்பெண் அடிப்படையில் கல்விக்கட்டணம், விடுதி கட்டணங்கள் அரசே ஏற்பு.
- 1,261 மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்வி உதவித்தொகையாக ரூ.1.53 கோடி.

இலவச அரிசித் திட்டம்

- முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழ் பெரியவர்கள், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் அரிசி ரூ.19 இலட்சம் கூடுதல் செலவினத்தில் முற்றிலும் இலவசம்.

விலையில்லா சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் மானிய விலையில் சமையல் எரிவாயு உருளை வழங்குதல்

- முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் 6,481 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.8.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் விலையில்லா எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் மானியத்தில் சமையல் எரிவாயு உருளை வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, சமையல் எரிவாயு மற்றும் அடுப்பு வழங்கப்பட்டு 16,305 குடும்பங்களுக்கு ரூ.1.30 கோடி எரிவாயு உருளைக்கான மானியம்.

வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

- முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 7,469 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல். 3,510 புதிய வீடுகள் கட்ட நான்கு வீடுகள் கொண்ட 868 தொகுப்புகள் கட்டுவதற்கு ரூ.173.60 கோடியும், 38 தனிவீடுகள் கட்டுவதற்கு ரூ.2.15 கோடியும் என ஆக மொத்தம் ரூ.175.75 கோடி ஒதுக்கீடு.
- திண்டுக்கல் மாவட்டம், தோட்டனூத்து, அடியனூத்து மற்றும் கோபால்பட்டி ஆகிய மூன்று முகாம்களை ஒருங்கிணைத்து தோட்டனூத்து கிராமத்தில் புதியதாக ரூ.17.17 கோடி நிதி ஒதுக்கீட்டில் 321 வீடுகள் கட்டும் பணி.
- குடிநீர் வசதி, கழிவறை வசதி, மின்சார வசதி, கழிவு நீர்க் கால்வாய் வசதி கூடுதலாகச் செய்து கொடுக்க ரூ.30 கோடி ஒதுக்கீடு. முதற்கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கீட்டில் பணிகள்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

- முகாம் வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் "சமூக முதலீட்டு நிதி" ரூ.75,000 ஆக உயர்வு. 321 சுயஉதவிக்குழுக்கள் பயன்.
- 300 புதிய சுயஉதவிக் குழுக்கள் கண்டறியப்பட்டு வருவதுடன் முதற்கட்டமாக 260 குழுக்களுக்கு, தலா ரூ.1.25 இலட்சம் வீதம் ரூ.3.25 கோடி மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக வழங்கல்.

முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு கோவிட்–19 நிவாரண உதவியாக ரூ.4,000 வழங்குதல்

- ரூ.7.58 கோடி செலவில் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.4,000 வீதம் கோவிட–19 நிவாரண உதவித்தொகை. ரூ.88.08 இலட்சம் செலவில் 14 விதமான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

- 5,000 முகாம் வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திறன் மேம்பாட்டுத்துறையின் மூலம் மாவட்டந்தோறும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு, 3,289 நபர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்.

முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்

- உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்துகொண்டு முகாமிற்கு வெளியே வாழ அனுமதிக்கப்பட்ட, 13,443 குடும்பங்களைச் சேர்ந்த 33,748 இலங்கைத் தமிழர்களுக்கு, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத்திட்டம் மற்றும் ரூ.4,000 நிவாரண நிதி.

நீண்ட கால தீர்வுகளுக்கான ஆலோசனை குழு

- முகாமிற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வுகாண ஆலோசனைக் குழு அமைப்பு.
- இக்குழு, குடியுரிமை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், இலங்கைத் தமிழர்கள் இலங்கைக்குத் திரும்புவதற்கு உதவுவதற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கான

செயல்திட்டத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவினை தயார் செய்து வருகிறது.

வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்

- வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு "அயலகத் தமிழர் நல வாரியம்" உருவாக்க நடவடிக்கை.
- புலம்பெயர் தமிழர் குறித்தத் தரவு தளம் ஏற்படுத்துதல்; வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்குக் காப்பீடு திட்டம் மற்றும் அடையாள அட்டை.
- குறைந்த வருவாய் கொண்ட புலம் பெயர் தமிழர் குடும்பங்களுக்கான கல்வி, திருமண உதவித்தொகை.
- சென்னை மட்டுமின்றி தமிழகத்தில் மேலும் 6 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம்.
- புலம்பெயர் தமிழர்களுக்கு ஆலோசனை வழங்க 24x7 கட்டணமில்லாத் தொலைப்பேசி வசதி, வலைத்தளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகள்.
- புலம்பெயர் தமிழர்களுக்கான சட்ட உதவிமையம் அமைத்தல்.

அயலகத் தமிழர் தின விழா

- கோவிட், ஒமிக்ரான் பெருந்தொற்று காரணமாக 12.01.2022 அன்று "காணொலி வாயிலாகத் தமிழால் இணைவோம்" என்ற கருப்பொருளுடன் அயலகத்தமிழர் தினம் கொண்டாட்டம். இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள் நடத்த அரசு ரூ.41 இலட்சம் ஒதுக்கீடு.

உக்ரைனிலிருந்து மாணவர்கள் மீட்பு

- உக்ரைனில் சிக்கித் தவித்த மாணவர்களை மீட்க உடனடியாக ஒரு மாநில கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டு, தமிழ் மாணவர்களை மீட்பதை வெளியுறவு அமைச்சருடன் ஒருங்கிணைக்க மறுவாழ்வுத்துறை ஆணையர் பொறுப்பு அலுவலர், 3 நாடாளுமன்ற உறுப்பினர், 1 சட்டமன்ற உறுப்பினர் மற்றும் 4 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைப்பு.
- ரூ.3.26 கோடி செலவில் 1,890 மாணவர்கள் மீட்கப்பட்டு 1,524 மாணவர்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளனர்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

- இந்நிறுவனம், சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபுஎமிரேட், ஓமன், பஹ்ரைன் உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளில் 198 நபர்கள் பணியமர்த்தப்பட்டு, வெளி முகமை முறையில் 536 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு வேலைகளில் பல்வேறு அரசுத் துறைகளில் பணியமர்த்தம்.

❖ ❖ ❖





பள்ளிக் கல்வி

மாண்புமிகு

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி

அவர்கள்

- கோவிட்–19 பெருந்தொற்றால் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு மாணவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்யும் "இல்லம் தேடிக் கல்வி," என்ற சிறப்புத் திட்டம். ரூ.199.96 கோடி மதிப்பீட்டில் 1,79,356 தன்னார்வலர்களால் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தால் 30 இலட்சம் மாணவர்கள் பயன்.
- ரூ.3.09 கோடி செலவில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு "நான் முதல்வன்" எனும் தொழில் வழிகாட்டல் இணையதளம்.
- அனைத்து பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக்குழுவின் மறுசீரமைப்பு, உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 23 இலட்சம் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.
- சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்குத் தரமானக் கல்வியை வழங்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வரும் 61 கஸ்தூரிபா காந்தி உண்டு உறைவிட பள்ளிகள் மற்றும் 44 மாணவியர் விடுதிகளுக்கு ரூ.22.83 கோடி நிதியுதவி. 9,560 பெண் குழந்தைகள் பயன்.



- புதிய கைப்பேசி செயலி மூலம் 1,88,487 பள்ளி செல்லா குழந்தைகள் கண்டறியப்பட்டு, வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ரூ.93.12 கோடி நிதி செலவில் ஆயத்த பயிற்சிகள் வழங்கப்பட்டு, முழுமையானக் கல்வி தொடர்ந்து பெற ஆலோசனைகள்.
- பள்ளி வசதி ஏற்படுத்துதல், சமத்துவம், உட்கட்டமைப்பு, கற்றல் விளைவுகள் மற்றும் நிருவாகம் ஆகிய கோட்பாடுகளில் சிறந்து விளங்கும் மாநிலங்களின் தரவரிசையில் தமிழ்நாடு இரண்டாவது இடம்.
- 1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை மாணவர்கள் பயன்பெறும் வகையில் எண்ணும் எழுத்தும் இயக்கம் உருவாக்கம். ரூ.66.70 கோடி நிதி ஒதுக்கீடு.
- ரூ.34.78 கோடி நிதி செலவில் கற்றல் செயல்பாடுகளில் நிலவும் இடைவெளியைக் குறைக்கக் கட்டக வடிவிலான புத்தகங்கள் மற்றும் பயிற்சிதாள்களுடன் கூடிய பாடவாரியான விரைவு துலங்கள் குறியீடுகள் அடங்கிய பயிற்சி புத்தகங்கள்.
- ரூ.30.9 இலட்சம் செலவில் 6,177 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இணையதள வழியாக வினாடி வினா போட்டிகள்.
- ரூ.7.48 கோடி செலவில் மாணவர் மனசு என்ற புகார்/ஆலோசனைப் பெட்டி மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு பதாகைகள் அமைப்பு.
- 10 மாவட்டங்களில் ரூ.23.32 கோடி மதிப்பீட்டில் மாதிரிப் பள்ளிகள்.
- கல்வி மேலாண்மை தகவல் மையத்தில் பள்ளிகளில் நிருவகிக்கப்படும் பதிவேடுகள் EMIS மூலமாகப் பராமரிப்பு.
- உட்கட்டமைப்பு அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் ரூ.116.28 கோடி பள்ளி மானியம்.
- மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்திட ரூ.31.96 கோடி செலவில் ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம்.
- நடுநிலைப் பள்ளிகளில் 21,570 கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ரூ.1.04 கோடி செலவில் சிறப்புப் பயிற்சி.
- 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் ரூ.114.17 கோடி செலவில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள்.
- ரூ.20.26 கோடி செலவில் 865 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்குத் திறன் (Smart) வகுப்பறைகள்.
- ரூ.9.37 கோடி செலவில் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் பழங்குடியின மாணவர்களுக்கு, 621 கல்வி தன்னார்வலர்கள் மூலம் 12 மாவட்டங்களில் 28,215 பழங்குடி இன குழந்தைகளுக்கான சிறப்புப் பராமரிப்பு மையம்.
- வகுப்பறை கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை மேம்படுத்திடத் தேவையான ஆலோசனை வழங்கும் 'வகுப்பறை உற்று நோக்கல் செயலி'.
- தேசிய கலைத் திருவிழா படைப்பாற்றலை வளர்க்க நடத்தப்பட்ட போட்டிகளில் தமிழ்நாடு ஏழு பரிசுகளை வென்று முதன் முறையாக முதலிடம்.
- அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் பொது மாறுதல் கலந்தாய்வு.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் துணையோடு 11 மற்றும் 12ஆம் வகுப்பிற்கான தொழிற்கல்விப் பாடத்திட்டங்கள் மேம்பாடு.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 20 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குப் பயிற்சி.
- பணிக்காலத்தில் மரணமடைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் 250 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம்.
- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாகத் திசைதோறும் திராவிடம் 'முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்', 'இளந்தளிர் இலக்கியத் திட்டம்'.
- திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ், தமிழ் இலக்கிய நூல்கள் ஆங்கிலம் மற்றும் பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்க 20 தலைப்புகளில் தமிழ் நூல்கள் தேர்ந்தெடுப்பு.
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்கீழ், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற புத்தகம் வெளியீடு.
- இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் சிறந்த சிறார் எழுத்தாளர்களைக்

கொண்டு 50 கதைகள் கொண்ட 50 நூல் வெளியிட நடவடிக்கை.

- வ.உ.சி.யின் 150ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், 'வ.உ.சி. பன்னூல் திரட்டு' மற்றும் திருக்குறள் வ.உ.சி. உரை வெளியீடு.
- பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு, 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகம் ரூ.5 கோடி செலவில் 37 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை.
- "பொருநை நாகரிகம்" என்ற நூல் 10,000 பிரதிகள் தமிழிலும், 5,000 பிரதிகள் ஆங்கிலத்திலும் வெளியீடு, கீழடி நூலின் ஆங்கிலப் பிரதிகள் 5,000 வெளியீடு.
- மின்னனு சேவைகள் இ–சேவை மையங்களின் வாயிலாக இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ், புலப்பெயர்வு சான்றிதழ், சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள வழிவகை.
- 15,89,235 குழந்தைகள் பயன்பெறும் வகையில் எண்ணும் எழுத்தும் திட்டம்.
- கொரோனா–19 பெருந்தொற்றினால் பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டிருந்த நிலையில் மாணவர்கள் கல்வி பயில உருவாக்கப்பட்ட திட்டம் 'கல்வித் தொலைக்காட்சித் திட்டம்'. இந்த வலையொளித் திட்டத்திற்கு 3.4 கோடி பார்வையாளர்கள்.
- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மதிப்பீட்டுப்புலம் (Assessment Cell) உருவாக்கப்பட்டு 9,10,11 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்குத் தேர்வுகள் நடத்தப்பட்டு, மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுப் பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் குறைதீர் நடவடிக்கைகள்.
- 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் பயிற்சித் தாள்களுடன் கூடிய பாடவாரியான பயிற்சிப் புத்தகங்கள்.
- 555 ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு ரூ.1.21 கோடி செலவில் கதைகள் உருவாக்கம். 160 பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன்.
- இணையவழிக் கற்றல் செயல்பாட்டின்போது மாணாக்கரின் பாதுகாப்பு மற்றும் பாலியல் வன்முறைகளிலிருந்து தற்காத்தலுக்கான வழிமுறைகள் வெளியீடு.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ், 56,687 குழந்தைகள் சேர்க்கப்பட்டு ரூ.314.64 கோடி நிதி பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கற்போம் எழுதுவோம் என்கிற வயது வந்தோருக்கான புதிய எழுத்தறிவுத் திட்டம் ரூ.7.19 கோடியில் செயல்படுத்தப்பட்டு, 3.19 இலட்சம் நபர்கள் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயன்.
- 114 சிறந்த கற்போர் மையங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ், கேடயம் மற்றும் பதக்கங்களை உள்ளடக்கிய மாநில எழுத்தறிவு விருது.
- ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் 1,060 விரிவுரையாளர் பணியிடங்களுக்குக் கணினி வழியாகப் போட்டித் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் வெளியீடு.
- 2,207 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்களுக்குப் போட்டித் தேர்வு வாயிலாக நடவடிக்கை.
- 97 வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கான இணைய வழி தேர்வுகள் நடத்தப்பட்டு பணிநியமனம்.
- ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 2022ஆம் ஆண்டிற்கான உத்தேச ஆண்டுத் திட்டம் வெளியீடு.
- பொது நூலகங்களில் மூன்றாம் நிலை நூலகர் மற்றும் இளநிலை உதவியாளர் பணிக்குக் கருணை அடிப்படையில் 10 பணியாளர்கள் நியமனம்.
- பொது நூலகங்களுக்கு நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கிட நூலக வரி நிதி 6.5 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக உயர்வு.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 83 பணியாளர்கள், 551 மூன்றாம் நிலை நூலகர்கள், 353 ஊர்ப்புற நூலகர்களுக்கு அரசுப் பணியாளர்களுக்கான சலுகைகள் மற்றும் பணப்பயன்கள்.





- மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் அண்ணா நூலகத்தில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளில், நூல் கட்டுநர் மற்றும் நூல் கட்டும் உதவியாளர் பணியிடத்தில் 31 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் பணி நியமனம்.
- பொது நூலக இயக்ககத்தின் வாயிலாக மின்நூலகம் அமைக்கப்பட்டு 21,043 நூல்கள் மற்றும் 2,54,694 ஓலைச் சுவடி பக்கங்கள் மின்னுருவாக்கம் https://tamilnadupublic libraries.org என்ற இணையதளம் மூலம் மக்கள் இலவசமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வசதி.
- இணையதளம் வாயிலாக 7 இலட்சம் நூல்களின் விவரங்களுடன் பொது நூலகங்களுக்கான ஒருங்கிணைந்த நூற்பட்டியல் வெளியீடு.
- பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான தகவல்களை அறிய "உங்கள் நூலகம் உள்ளங்கையில்" என்ற திட்டத்தின்படி, வேலைவாய்ப்பு செய்தி, கைப்பேசி செயலி [TN Employment News (Mobile App) www.tnemployment.in என்ற இணையதளம் தொடக்கம்.
- பொது நூலகங்களுக்கு புதிய நூல்கள் கொள்முதல் செய்ய வெளிப்படைத் தன்மைக்கான நெறிமுறைகள் உருவாக்கும் குழு.
- தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 மற்றும் பொது நூலக விதிகள் 1950 திருத்தங்கள் மேற்கொள்ள உயர்மட்டக்குழு.
- பொது நூலகங்களுக்கு நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் கொள்முதல் செய்யும் மறுசீரமைப்புக் குழு.
- ரூ.114 கோடி மதிப்பில் சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் சர்வதேசத் தரத்திலான நவீன நூலகம்.
- ரூ.37.82 கோடி மதிப்பில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம் புனரமைப்பு.
- 18 வயதிற்குட்பட்ட குழந்தை எழுத்தாளர்களில் ஆண்டுதோறும் மூன்று சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் "கவிமணி விருது".
- ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் "செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்" அமைக்கும் பணிகள்.
- ரூ.6.5 கோடியில் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்குப் புத்தகங்கள்.
- ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் மயிலாடுதுறை, சீர்காழியில் முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் நினைவாக இணைய வசதியுடன் கூடிய நினைவு நூலகம்.
- ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் இராமநாதபுரம் அபிராமபுரத்தில் செந்நாப்புலவர் ஆர்.கார்மேகனார் பெயரில் நூலகக் கட்டடம்.
- ரூ.3.19 கோடி செலவில் கன்னிமாரா பொது நூலகத்தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்.
- திருவள்ளூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 10 பகுதிநேர புதிய நூலகங்கள்.

❖ ❖ ❖



சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

மாண்புமிகு சுற்றுச்சூழல்- காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

திரு. சிவ.வீ.மெய்யநாதன்

அவர்கள்

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்

- தமிழ்நாடு பசுமை இயக்கம் உருவாக்கம்.
- தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் உருவாக்கம்.
- தமிழ்நாடு ஈர நில இயக்கம் உருவாக்கம்.
- இலாப நோக்கமற்ற தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் மேற்சொன்ன மூன்று இயக்கங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டு உருவாக்கம்.
- பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் "சூழலியல் பூங்கா".
- பிளாஸ்டிக் பைகளைத் தவிர்ப்பதற்காக மக்கள் இயக்கத்தின் ஒரு பகுதியாக "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு இயக்கம் துவக்கம்.
- ரூ.3.80 கோடி மதிப்பில் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தில் காலநிலை ஸ்டுடியோ மீண்டும் துவக்கம்.
- கோவளம் கடற்கரைக்கு 23.09.2021 அன்று "நீலக் கொடி சான்றிதழ்" அங்கீகாரம்.
- தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம்,



505 சுற்றுச்சூழலுக்கு அனுமதி மற்றும் குறிப்பு விதிமுறைகள்.

- எளிதாக வணிகம் செய்வதற்கான கொள்கையின்கீழ் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், ஒவ்வொரு ஆண்டும் உரிமம் புதுப்பிக்கப்படுவதற்குப் பதிலாக, தற்பொழுது சிவப்பு, ஆரஞ்சு, பச்சை வகைத் தொழில்களுக்கு முறையே 5/10/14 ஆண்டுகள் என இயக்குவதற்கான இசைவாணை புதுப்பிப்பதற்கான காலம் நீட்டிப்பு.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகத் தேங்காய் நார் / உமி மூலப்பொருட்களாகக் கொண்டு மாற்றுப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள், ஆரஞ்சு வகையின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- அனைத்துத்துறை அலுவலகங்களிலும், மாவட்ட அலுவலகங்களிலும் செயல்பாடுகள் வெளிப்படையாக அமைய ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதியன்று "நேரடி கலந்தாய்வு அமர்வு".
- ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை மூலம் பெறப்பட்ட ரூ.920.52 கோடியில் "காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)" எனும் புதிய திட்டத்தினை 2022–2023 முதல் 2029–2030 வரையிலான 8 ஆண்டு காலத்தில் செயல்படுத்துதல்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

- முதலமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கான பரிசுத்தொகை ரூ.1 இலட்சமாக உயர்வு.
- போலந்து, ராக்லோவ் நகரில் உலக வில்வித்தை இளைஞர் வாகையர் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற செல்வி எஸ்.ரிது வர்ஷினி அவர்களுக்கு ரூ.6 இலட்சம் நிதி.
- ஜப்பான் டோக்கியோவில் மாற்றுத்திறனாளர்களுக்கான பாராலிம்பிக் 2020 போட்டிகளில் தடகள விளையாட்டில் உயரம் தாண்டுதலில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு. டி. மாரியப்பன் அவர்களுக்கு ரூ.2 கோடி நிதி.
- 2020ஆம் ஆண்டுக்கான ஃபிடே உலக சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற திரு. ஆனந்த் விஸ்வநாதன், திரு. வி. ஆர். அரவிந்த் சிதம்பரம், திரு. ஆர்.பிரக்ஞானந்தா மற்றும் செல்வி ஆர்.வைஷாலி, அணித் தலைவர் மற்றும் பயிற்சியாளர் திரு. ஸ்ரீநாத் நாராயணன் ஆகியோருக்கு ரூ.92 இலட்சம் நிதி.
- 2021ஆம் ஆண்டுக்கான ஃபிடே உலக சதுரங்க ஆன்லைன் குழு வாகையர் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற திரு. ஆனந்த் விஸ்வநாதன், திரு. பா.அதிபன், திரு. ஆர்.பிரக்ஞானந்தா, செல்வி ஆர். வைஷாலி, செல்வி பா.சவிதா ஸ்ரீ மற்றும் ஆண்கள் அணியின் பயிற்சியாளர் திரு. ஸ்ரீநாத் நாராயணன் மற்றும் பெண்கள் அணியின் பயிற்சியாளர் திரு. மோ.ஷ்யாம் சுந்தர் ஆகியோருக்கு ரூ.57.50 இலட்சம் நிதி.
- கஜகஸ்தான், அஸ்தானா நகரில் நடைபெற்ற ஃபிடே உலக சதுரங்க குழு வாகையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. பா.அதிபன் அவர்களுக்கு ரூ.20 இலட்சம் நிதி.
- 2019 ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. ப.இனியன் அவர்களுக்கு ரூ.5 இலட்சம் நிதி.
- 2019 ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் மகளிர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி ஸ்ரீஜா சேஷாத்திரி அவர்களுக்கு ரூ.5 இலட்சம் நிதி.
- 2020 ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் மகளிர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி வி.வர்ஷினி மற்றும் செல்வி பி.வி.நந்திதா ஆகியோருக்கு தலா ரூ.5 இலட்சம் நிதி.
- 2020 ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற திரு. விஎஸ்.ரத்னவேல், திரு. மு.பிரனேஷ் ஆகியோருக்கு தலா ரூ.3 இலட்சம் நிதி.
- 2021ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் மகளிர் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி பா.சவிதா ஸ்ரீ அவர்களுக்கு ரூ.3 இலட்சம் நிதி.
- 2019ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம், 2022ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வன் எச்.பரத் சுப்ரமணியம், அவர்களுக்கு ரூ.8 இலட்சம் நிதி.



- 2015 (மற்றும்) 2019ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் அபுதாபியில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் உலக கோடைக்கால விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.3.90 கோடி சிறப்பு நிதி.
- டாக்காவில் நடைபெற்ற தெற்காசியக் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற செல்வி என். ஹர்ஷா அவர்களுக்கு ரூ.8 இலட்சம் நிதி.
- 2018ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம், 2021ஆம் ஆண்டிற்கான சதுரங்க விளையாட்டில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வன் எஸ். அர்ஜுன் கல்யாண் அவர்களுக்கு ரூ.8 இலட்சம் நிதி.
- கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் 25 வெண்கலப்பதக்கம் வென்ற செல்வி நிவேதிதா வி நாயர் அவர்களுக்கு ரூ.2 இலட்சம் நிதி.
- தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை திட்டத்தின்கீழ், விளையாட்டு வீரர்களுக்கு ரூ.83.69 இலட்சம் உதவித்தொகை.
- பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், விளையாட்டு வீரர்களுக்கு ரூ. 1.40 கோடி நிதி.
- 2022ஆம் ஆண்டிற்கான ஸ்காட்லாந்தில் கிளாஸ்கோவில் றுளுகு உலக ஸ்குவாஷ் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற திருவாளர்கள் தீபிகா, பல்லிக்கல் கார்த்திக், சவுரவ் கோஷல் மற்றும் ஜோஷ்னா சின்னப்பா ஆகியோர்களுக்கு ரூ.3 கோடி ஊக்கத் தொகை.
- ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற 2020 ஒலிம்பிக் போட்டியில் தடகளப் பிரிவில் கலந்துகொண்ட செல்வி எஸ். தனலெட்சுமி மற்றும் செல்வி வி.சுபா ஆகியோர்களுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலும், 2020 பாராலிம்பிக் உயரம் தாண்டும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற திரு. ட்டி. மாரியப்பன் அவர்களுக்குத் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதங்கள் குழுமத்திலும் பணி நியமனம்.
- தமிழ்நாட்டின் பாரம்பரிய தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்பம் விளையாட்டு 3 சதவிகித விளையாட்டு இட ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.
- வேலூர் மாவட்டம், காட்பாடியில் ரூ.16.45 கோடி மதிப்பீட்டில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகம்.
- ரூ.7.94 கோடி மதிப்பீட்டில் சென்னை ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் பெண்களுக்கான புதிய விளையாட்டு விடுதி.
- கிருஷ்ணகிரி, ஓசூர் விளையாட்டரங்கில் ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் கூடைப்பந்து ஆடுகளம், கையுந்துபந்து மைதானம், இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம், நடைபாதை மற்றும் உடற்பயிற்சிக் கூடம்.
- வேலூர் மாவட்டம், காட்பாடியில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.37 இலட்சத்தில் கூடுதல் வசதிகள்.
- ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.3 கோடி, வெள்ளிப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.2 கோடி,



வெண்கலப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.1 கோடி ஊக்கத்தொகையாக உயர்வு.

❖ டோக்கியோ ஒலிம்பிக், பாராலிம்பிக் 2020 போட்டிகளில் கலந்து கொண்டுள்ள தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.55 இலட்சம் சிறப்பு ஊக்கத்தொகை.

❖ செல்வி சி.ஏ. பவானி தேவிக்கு டோக்கியோ ஒலிம்பிக் 2021இல் இந்தியா சார்பாகக் கலந்துகொள்ள ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை.

❖ தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தில்,

- ரூ.13.33 கோடி செலவில் இறகுப்பந்து பயிற்சிக் கூடம்.
- ரூ.12.60 கோடி செலவில் மேசைப்பந்து பயிற்சிக்கூடம் அமைப்பு.
- ரூ.14.59 கோடி செலவில் 400 மாணவர்கள் தங்கிப் பயிலும் விடுதி.
- ரூ.13.12 கோடி செலவில் முதன்மை உயிர் இந்திரவியல் ஆய்வகம்.
- ரூ.1.60 கோடி செலவில் பாரம்பரிய களரிப்பயட்டு மற்றும் சிலம்பம் பயிற்சி மையம்.
- ரூ.51.72 இலட்சத்தில் உணவுக்கூடம் மற்றும் சமையலறைக்கூடம்.
- ரூ.73 இலட்சத்தில் 210 இருசக்கர வாகனங்கள், 25 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம்.

❖ சென்னையில் 44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் நடத்த ரூ.92.13 கோடி ஒப்பளிப்பு மற்றும் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு.

❖ ❖ ❖

“விளையாடுபவர்களை விளையாட்டுக்காரர்கள் என்று சொல்வதில்லை, அவர்களை ‘விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள்’ என்று தான் சொல்கிறோம். இந்த வீரர்களால், வீராங்கனைகளால் நாட்டுக்குப் பெருமை. நாளைய தலைமுறைக்கு ஒரு வலிமை.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு

மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்

திரு. சி.வி.கணேசன் அவர்கள்

- 11 நிறுவனங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் பேச்சு வார்த்தையின் மூலம் விலக்கிக்கொள்ளப்பட்டு, 5,364 தொழிலாளர்களின் உரிமை மற்றும் பணி பாதுகாக்கப்பட்டது.
- ஒரு நிறுவனத்தின் கதவடைப்பு பேச்சு வார்த்தையின் மூலம் விலக்கிக்கொள்ளப்பட்டு, 140 தொழிலாளர்களின் உரிமை மற்றும் பணி பாதுகாக்கப்பட்டது .
- 2,616 தொழிற்தாவாக்கள் முடிக்கப்பட்டு அவற்றுள் 979 வழக்குகள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.
- பாட்டா இந்தியா லிட், ஓசூர் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, 102 பாட்டா இந்தியா லிமிடெட் தொழிலாளர்கள் பயன்.
- காஞ்சிபுரம் மாவட்டம் பாக்ஸ்கான் Hon Hai டெக்னாலஜி இந்தியா மெகா டெவலப்மெண்ட் பிரைவேட் லிட் நிறுவனத்தில் பணிபுரியும் பெண் ஒப்பந்த தொழிலாளர்கள் தங்கிய விடுதியில் போதுமான வசதிகள் குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றிட உறுதியளிக்கப்பட்டதன் பேரில், போராட்டம் விலக்கிக்



கொள்ளப்பட்டு, உற்பத்தி தொடங்கப்பட்டு, 3,931 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

- அனல்மின் நிலையத்தில் பணிபுரியும் சுமார் 2,012 ஒப்பந்தத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகள் 14.02.2022 அன்று பேச்சுவார்த்தையின் மூலம் சுமுகத் தீர்வு.
- கடை மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இருக்கை வசதி விடுதி ஏற்படுத்தித் தர தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) சட்டத்தில் திருத்தங்கள்.
- 5 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டு, 6 தொழில்களுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
- அனைத்து மாவட்டங்களிலும் 37,948 ஆய்வுகள் வாயிலாக, 311 குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு 311 குழந்தைகள் குழந்தை நலக் குழுவினரிடமும், பெற்றோர்களிடமும் ஒப்படைப்பு.
- 245 மீட்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களுக்கு ரூ.49.40 இலட்சம் நிவாரணத் தொகை.
- கோவிட்–19, 2ஆம் அலை ஊரடங்கு காலத்தில் வேலையிழந்த மற்றும் குடும்ப அட்டை இல்லாத 1,29,444 வெளிமாநில தொழிலாளர்களுக்கு ரூ.6.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் 15 கிலோ அரிசி, 1 கிலோ சமையல் எண்ணெய் மற்றும் 1 கிலோ பருப்பு அடங்கிய உணவுப் பொருள் தொகுப்பு.
- சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் 42,125 ஆய்வுகளும், 3,123 வழக்குகளில் குற்றங்கள் தீர்வு காணப்பட்டு நீதிமன்றம் மற்றும் இணக்க கட்டணமாக ரூ.29.59 இலட்சம், முத்திரைக் கட்டணமாக ரூ.59.71 கோடி, உரிமம் வழங்கியதற்கான கட்டணம் ரூ.44.75 இலட்சம் வசூல்.
- 11,083 நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்டு, 909 வழக்குகளில் குற்றங்கள் தீர்வு செய்த வகையில் நீதிமன்றம் மற்றும் இணக்கக் கட்டணமாக ரூ.47.58 இலட்சம், பதிவுக் கட்டணமாக ரூ.4.99 இலட்சம் வசூல்.
- அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியத்தில் 10,17,481 தொழிலாளர்கள் புதியதாகப் பதிவு. 1,85,660 பயனாளிகளுக்கு ரூ.247.49 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்.
- தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் திருத்தியமைப்பு.
- தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் அறிமுகம்..
- செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதியதாகத் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகங்கள் உருவாக்கம்.
- தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் என்பதைத் தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் எனப் பெயர் மாற்றம்.
- 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை படிக்கும் கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,000 கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அறிமுகம்.
- கட்டுமானத் தொழிலாளர்களின் 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ஆண்டிற்கு ரூ.2,400 ஆக உயர்வு.
- கட்டுமானத் தொழிலாளர்களின் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வரும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ஆண்டிற்கு ரூ.3,000 ஆக உயர்வு.
- கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கும், விடுதியில் தங்கிப் படிப்பதற்கும் கல்வி நலத்திட்ட உதவித்தொகை ஆண்டிற்கு ரூ.4,000 ஆக உயர்வு.
- தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர் இயற்கை மரணம் அடைந்தால் இயற்கை மரண உதவித் தொகை ரூ.50,000 ஆக உயர்வு.
- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் என்பதைத் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள்



பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் எனப் பெயர் மாற்றம்.

- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அறிமுகம்.
- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரிய தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கும், விடுதியில் தங்கிப் படிப்பதற்கும் கல்வி உதவித்தொகை ஆண்டிற்கு ரூ.4,000ஆக உயர்வு.
- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரிய ஓட்டுநர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், விபத்து மரண உதவித்தொகை, ரூ.2 இலட்சம் ஆகவும், இயற்கை மரண உதவித்தொகை, ரூ.50,000ஆகவும் உயர்வு.
- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 85,000 ஓட்டுநர்களுக்குப் பாதுகாப்பு பெட்டகம்.
- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகையாக, ரூ.1,000 வழங்கும் திட்டம் அறிமுகம்.
- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களின் தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், அன்னாரது குடும்பத்திற்கு விபத்து மரண உதவித் தொகை, ரூ.1.25 இலட்சம் ஆக உயர்வு. மேலும், இயற்கை மரண உதவித்தொகை, ரூ.30,000ஆக உயர்வு.
- கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு "தமிழ்நாடு கட்டுமான கழகம்" என்ற பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டு 1,095 கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த 72,47,890 அமைப்புசாரா தொழிலாளர்கள் இஷ்ரம் இணைய முகப்பில் பதிவு செய்துள்ளனர்.
- CSC மூலம் eSHRAM போர்ட்டலில் அமைப்புசாரா தொழிலாளர்களை பதிவு செய்வதில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் 3ஆவது இடம் பெற்றதற்கான விருது.



தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

- 1,677 தொழிற்சாலைகள் புதியதாகப் பதிவு.
- கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளின்கீழ், 1,271 கட்டுமான நிறுவனங்கள் புதியதாகப் பதிவு.
- 8,545 தொழிற்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 1,307 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, ரூ.1.22 கோடி அபராதத் தொகை விதிப்பு.
- தீபாவளி பண்டிகை காலங்களில் பட்டாசு உற்பத்தி அதிகமான அளவில் மேற்கொள்ளப்படுவதால் பாதுகாப்பு உறுதி செய்ய விருதுநகர் மாவட்டத்தில் 780 குழுக்கள் ஆய்வு.
- பாதுகாப்பான முறையில் பணிபுரிவதன் முக்கியத்துவம் குறித்து தொழிலாளர் மற்றும் தொழிற்சாலை நிருவாகத்தினருக்கு பட்டாசுத் தொழிற்சாலைகளின் வளாகங்களிலேயே 495 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 18,559 தொழிலாளர்கள் பயன். பிரச்சாரக் குழுக்கள் மூலம் 92 பாதுகாப்பு பிரச்சாரங்கள், முகாம்கள் நடத்தப்பட்டு, 4,162 தொழிலாளர்கள் பயன்.
- தொழிற்சாலைகளில் 7,624 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.40,000 அபராதத் தொகையாக நீதிமன்றத்தில் விதிக்கப்பட்டது. 21 குழந்தைகள் மற்றும் வளர்இனம் பருவம் தொழிலாளர்கள் மீட்பு.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

- வேலைவாய்ப்பு முகாம்களில் வாயிலாக 844 மாற்றுத்திறனாளிகள் உட்பட 71,989 நபர்களுக்கு பணிநியமனம்.
- தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையத்தில் 47,640 வேலை நாடுநர்கள் பதிவு செய்ததில் 748 வேலையளிக்கும் நிறுவனங்களால் 9,608 நபர்கள் பணிநியமனம்.
- தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக நடத்தப்பட்ட 465 போட்டித் தேர்வுக்கான பயிற்சிகளில், பயிற்சிபெற்ற 598 நபர்கள் தேர்ச்சி.
- மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் 1,67,758 வேலை நாடுநர்கள் பதிவு.
- 2014 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பதிவினை புதுப்பிக்க வழங்கப்பட்ட சிறப்புச் சலுகையின் அடிப்படையில் 7,67,469 பதிவர்கள் பயன்.
- வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் 55,342 பதிவுதாரர்களுக்கு ரூ.27.48 கோடி உதவித்தொகை. 14,420 மாற்றுத்திறனாளி பதிவுதாரர்களுக்கு ரூ.14.42 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் உதவியுடன் நெய்வேலியில் புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் துவக்கம். நான்கு தொழிற் பிரிவுகளில் 104 மாணவர்களுக்குப் பயிற்சி.
- ரூ.960 இலட்சம் செலவில் சிவகங்கை, காரைக்குடி மற்றும் திருச்சி அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டடங்கள்.
- தென்காசி, செங்கல்பட்டு, திருவாரூர் மற்றும் இராணிப்பேட்டையில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள்.

❖ ஆன்லைன் வகுப்புகள், மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மெய்நிகர் வகுப்பறைகள், பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் பயோ–மெட்ரிக் வருகைப்பதிவு மற்றும் அவர்களின் செயல்திறனைக் கண்காணிக்கத் தகவல் தொழில்நுட்ப கண்காணிப்பு பிரிவு உருவாக்கம்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

❖ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணைய முகப்பு மூலமாக அரசின் பல்வேறு துறைகளால் நடத்தப்படும் திறன் பயிற்சிகள் ஒருங்கிணைப்பு.

❖ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் இடையே தமிழ்நாட்டின் கல்வி மற்றும் கலாச்சார ஒத்துழைப்பை வலுப்படுத்த அறிவுசார் இலக்குகள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

❖ திறன்மேம்பாட்டுச் சூழலைத் தரப்படுத்தவும், வளர்ந்து வரும் தேவை மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் 12 துறை திறன் குழுமங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்.

❖ ஒவ்வொரு ஆண்டும் தமிழகம் முழுவதும் 5 இலட்சம் இளைஞர்களின் கல்வி, அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் தனித்திறமைகள் கண்டறியப்பட்டு அவர்களை மேம்படுத்த 'நான் முதல்வன்' திட்டம் தொடக்கம்.

❖ இந்தியத் திறன் போட்டிகளில் தமிழ்நாடு 23 பதக்கங்களை வென்று தேசிய அளவில் 5ஆவது இடத்தைப் பிடித்தது தமிழ்நாட்டிலிருந்து இந்தியத் திறன் போட்டிகள்–2021இல் தங்கப்பதக்கம் வென்ற 2 பேருக்கு தலா ரூ.1 இலட்சமும், வெள்ளிப் பதக்கம் வென்ற 8 பேருக்கு தலா ரூ.50,000மும், வெண்கலப் பதக்கம் வென்ற 8 பேருக்கும், சிறப்பு விருது பெற்ற 5 பேர்களுக்கும் தலா ரூ.25,000மும் வழங்கப்பட்டது.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

❖ ஈரோடு மாவட்டம், பவானி பகுதியில் 3,211 காப்பீடு நபர்கள் பயன்பெறும் வகையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் மருந்தகம் துவக்கம்.

❖ புதியதாகத் திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய பகுதிகளில் மண்டல நிருவாக மருத்துவ அலுவலகங்கள் துவக்கம்.

❖ கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் பகுதியில் 8,307 காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பயனடையும் வகையில் ரூ.2.16 கோடி செலவில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் மருந்தகம்.

❖ அயனாவரம், மதுரை, சிவகாசி, சேலம், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் ஆகிய 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகளில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.1.45 கோடி செலவில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவைகள் .

❖ தஞ்சாவூர் மாவட்டம் பூதலூரில் 2,853 காப்பீட்டு நபர்கள், பட்டுக்கோட்டையில் 2,079 காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காக புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருந்தகங்கள்.

❖ தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் காப்பீட்டாளர்களுக்கான மருத்துவ செலவீனத்தைத் திரும்பப் பெறுவதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ.12 கோடி ஒப்பளிப்பு.

❖ சேலம் மாவட்டம் ஏற்காடு பகுதியில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பயனடையும் வகையில் ரூ.84.22 இலட்சம் செலவில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருந்தகம்.

❖ ❖ ❖

"அறிவுத் திறத்தால் அனைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் வளர்த்தெடுக்கக் கூடிய திட்டம்தான் 'நான் முதல்வன்' திட்டம். வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, அந்த வேலைக்குத் தகுதியான இளைஞர்களை உருவாக்குவது என்கிற சக்கரச் சுழற்சியுடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



சென்னை, சாந்தோமில் கிறிஸ்துமஸ் பெருவிழாவில்
கேக் வெட்டியபோது – 20.12.2021



ரமலான் பண்டிகையை முன்னிட்டு சென்னை, கொளத்தூரில் இஸ்லாமியர்களுக்கு
நலத்திட்ட உதவியின்போது – 28.04.2022



மாண்புமிகு
தகவல் தொழில்நுட்பவியல்
துறை அமைச்சர்
திரு. த.மனோ தங்கராஜ்
அவர்கள்

தகவல் தொழில்நுட்பவியல் துறை

தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் வளர்ச்சி

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “Pan IIT Event Global Virtual Technology Summit 2021”இல் தமிழகத்திற்கான தொலைநோக்குத் திட்டத்தின் அவசியத்தை அடிக்கோடிட்டுக்காட்டினார்.

CONNECT 2021

- தமிழக அரசு சார்பில் எல்காட், Connect 2021இல் பங்கேற்று, தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகத்தின் திறனை வெளிப்படுத்தியது.
- MEPZ-SEZ சென்னையில் நடந்த விழாவில், ELCOSEZ சென்னை, சோழிங்கநல்லூர், அதிக வருடாந்திர ஏற்றுமதியில் முதலாவது இடத்தையும், வேலைவாய்ப்புகளில் இரண்டாவது இடத்தையும் பெற்றது.
- ELCOSEZ கோயம்புத்தூர், அதிக வருடாந்திர முதலீட்டில் முதலாவது இடத்தையும், வேலைவாய்ப்புகளில் இரண்டாவது இடத்தையும் பெற்றது.
- தொழில் துறை, தொடக்க நிலைத்தொழில் நிறுவனங்கள், கல்வித்துறை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும்



ஒரு முயற்சியாக "நுண்ணரங்கு 21" எனும் "தமிழ்நாட்டின் வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு பகுப்பாய்வின் பங்கு" பற்றிய ஒரு நாள் தேசிய கருத்தரங்கு.

தமிழ்நாடு தரவு மைய கொள்கை –2021

❖ தமிழகத்தில் தரவு மையம் சார்ந்த முதலீடுகளை ஊக்குவிக்க "தரவு மையக் கொள்கை–2021"

தமிழ்நாடு தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக் கொள்கை, 2022

❖ கண்ணாடி இழைவடம் மற்றும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைப்பதற்கு வழித்தட உரிமை.

❖ "தமிழ்நாடு தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக் கொள்கை, 2022" உருவாக்கம்.

❖ கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள குடிமக்கள் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பினை அமைப்பதற்கு விண்ணப்பித்தல், அங்கீகரித்தல் மற்றும் நிறுவுதல் ஆகியவை எளிமையாக்கப்பட்டது.

தமிழ்நாடு தரவுக் கொள்கை, 2022

❖ பொதுமக்களின் நன்மைக்காகத் தரவுகளை உபயோகிக்க "தமிழ்நாடு தரவுக் கொள்கை, 2022" உருவாக்கம்.

தரநிலை குறிப்புகள் பாகம் 1.0

❖ ஆன்லைன் பயன்பாடுகள் மற்றும், மொபைல் செயலிகள் மூலமாக வழங்கப்படும் அனைத்து அரசு சேவைகளின் தரவுகளின் தரநிலைகளை வகுத்து, தரநிலைக் குறிப்புகள் பாகம் 1.0 தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசுத் துறைகளால் பின்பற்றப்படுகிறது.

மின் அலுவலகத் திட்டம்

❖ தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் செயல்படுத்தப்படும் மின் அலுவலகத் திட்டம் வாயிலாக 61 துறைகளில் பணி செய்யும் 9,941 அலுவலர்களுக்குப் பயிற்சி.

இ–முன்னேற்றம்

❖ இ–முன்னேற்றம் வலைத்தளமானது, ரூ.100 கோடிக்கு அதிகமான செலவீனத்தில் கட்டப்பட்டு வரும் 200க்கும் மேற்பட்ட முக்கியக் கட்டுமான திட்டங்களைக் கண்காணிக்கத் தலைமைச் செயலாளர் தலைமையில், துறைத் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு உயர்மட்டக் குழு.

IT நண்பன்

❖ IT நண்பன் வலைத்தளம் வாயிலாகத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அதைச் சார்ந்த சேவை நிறுவனங்கள் சந்திக்கும் சவால்களை அரசிடம் நேரடியாகத் தெரிவித்துத் தீர்வு காண வழிவகை.

மாநில குடும்ப தரவுத்தளம்

❖ பல்வேறு துறைகளுக்கு இடையே தரவுகள் ஒருங்கிணைப்பு மூலம் ஏற்கெனவே உள்ள துறைக்கட்டமைப்புக்கு இது துணையாக அமையும்.

இருமொழி இணையதளங்கள்

❖ தமிழை முன்னிலைப்படுத்தும் விதமாக, இருமொழிகளில் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) தமிழ்நாடு அரசின் இணையதளங்கள்.

இ–பார்வை

❖ தேசிய மென்பொருள் நிறுவனங்களின் அமைப்பின் Game Changers விருதினை இ–பார்வை செயலி வென்றுள்ளது.

❖ டிஜிட்டல் இந்தியா மற்றும் மத்திய தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் அண்மையில் வெளியிட்ட 75@75 India's Journey reportஇல் சிறந்த 19 இந்தியச் செயற்கை நுண்ணறிவு திட்டங்களில், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அதிக எண்ணிக்கையில் (3) (இ–பார்வை, முக அடையாள வருகைப் பதிவேடு மற்றும் பயிர்களின் பூச்சி பாதிப்பைக் கண்டறியும் உழவன் கைப்பேசிச் செயலி) இடம் பெற்றுள்ளன.

சென்னை கணித மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

❖ தமிழ்நாடு முடிவுகள் எடுக்கும் ஆதரவு அமைப்பிற்குத் தேவையான தகுதிகளையும் பகுப்பாய்வு உட்கட்டமைப்பையும் உருவாக்கத் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையும், சென்னை கணித மையமும் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

முதலமைச்சர் தகவல் பலகை

❖ திட்டங்களைக் கண்காணித்து, உடனுக்குடன் முடிவுகளை எடுத்து தாமதங்களைத் தவிர்க்க முதலமைச்சர் தகவல் பலகை வழிவகை.

தரவுத் தூய்மை

❖ அரசு நிருவாகத்தை மேம்படுத்தி திறமையான, வெளிப்படையான மற்றும் தடையற்ற



சேவைகளைப் பொதுமக்கள் பெறுவதற்கு உத்திரவாதம் அளிக்கும் தரவுத் தூய்மை.

கல்விப்பிரிவு

- இத்தாலி, மொசாம்பிக், அமெரிக்கா, ஓமன் மற்றும் இந்தியா முதலான நாடுகளில் தமிழ் மொழியைக் கற்க 10 தொடர்பு மையங்கள் புதியதாகத் தொடக்கம்.
- பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என அனைவருக்கும் பயன்படும் வண்ணம் இணையவழி பன்னாட்டு மாநாட்டின் மூலம் பெறப்பட்ட சிறந்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பான "கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும்" என்ற நூல் வெளியீடு.
- தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குத் திருக்குறள் எனும் பொருண்மையைக் கொண்டு குறளோவியம் என்ற பெயரில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, அதில் 365 சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருக்குறள் குறளோவியம் தினசரி நாட்காட்டிப் புத்தகமாக வெளியீடு.

ஆய்வு மற்றும் உருவாக்கம்

- "கீழடி – விசைப்பலகை – (Keezhadi - Keyboard)" மற்றும் "தமிழி – ஒருங்குறி மாற்றி (Tamizhi - Unicode converter)" என்ற இரு மென்பொருட்கள் வெளியீடு.

பாரத்நெட் திட்டம்

- அனைத்து கிராமங்களுக்கும் 1 Gbps இணைப்பு வழங்கும் வகையில் தமிழ்நாடு இழை வலையமைப்புத் திட்டம் (பாரத்நெட்–II) எனும் உட்கட்டமைப்பு திட்டம்.
- தொகுப்பு A, C மற்றும் Dக்கான ஒப்பந்ததாரர்களுடன் முதன்மை சேவை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு களப்பணிகள் தொடக்கம்.

❖ ❖ ❖

"ஒரு மாநிலத்துக்கு மிகப்பெரிய முன்னேற்றங்களையும், முதலீடுகளையும் கொண்டு வருவதில் தகவல் தொழில்நுட்பத்துறைதான் முன்னணி வகிக்கிறது. தேவையையும், தொலைநோக்குப் பார்வையையும், அதன் மூலமாக வளர்ச்சியையும், வேலைவாய்ப்பையும் அதிகரிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



கனெக்ட் 2021 மாநாட்டில் கொள்கை விளக்கக் கையேடு மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்போது – 26.11.2021





சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

மாண்புமிகு
சுற்றுலாத்துறை அமைச்சர்
டாக்டர் **மா.மதிவேந்தன்**
அவர்கள்

சுற்றுலாத்துறை

- சுற்றுலா இடங்களை மேம்படுத்த, "சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம்" வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு.
- 300 சுற்றுலாத் தலங்களில் சர்வதேசத் தரத்திற்கு இணையான வசதிகளை ஏற்படுத்த, சுற்றுலா பெருந்திட்டம் தயாரிப்பு.
- கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட "சுற்றுலாத் துறையை மீட்டெடுக்கும் திட்டத்திற்குக் குழு" அமைப்பு.
- அணைப் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளச் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்குக் குழு.
- முதலியார் குப்பம் படகு குழாம் மற்றும் அருகில் உள்ள தீவுப் பகுதியை மேம்படுத்த ரூ.50 இலட்சம் நிதி.
- சுற்றுலா தொழில் புரியும் பல்வேறு தொழில் முனைபவர்களுக்கு 'மாநில சுற்றுலா விருதுகள்'.
- ரூ.10.22 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலை ஒளிரும் வகையில் 3D திட்ட வரைபட அமைப்பு.



- ரூ.1 கோடியில் கன்னியாகுமரி அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு இரசாயன கலவை பூச்சு.
- சுற்றுலாத் தலங்களின் மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள "தமிழ்நாடு ஆலோசனைக் குழுவை", "தமிழ்நாடு சுற்றுலா மேம்பாடு மற்றும் ஊக்குவித்தல் குழுவாக" மறுசீரமைப்பு.
- ரூ.2.23 கோடி செலவில் கொல்லிமலையில் சுற்றுச்சூழல் சாகசம் மற்றும் திறந்தவெளி முகாம்கள்.
- ரூ.2.91 கோடி செலவில் ஜவ்வாது மலையை முதன்மை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் பணிகள்.
- "75 ஆவது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவை" செயல்படுத்தும் முயற்சியில் எண்ணற்ற சுற்றுலா வளங்களைக் காட்சிப்படுத்தும் வகையில், பல்வேறு மின்னணு ஊடகங்களில் 75 விளம்பர காணொளிகள் காட்சிப்படுத்தப்பட்டது.
- AR / VR அடிப்படையிலான சிறு புத்தகங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்தும் வகையில் இணைப்பு.
- மும்பையில் நடைபெற்ற "OTM"ல் பங்கேற்பு.
- கிருஷ்ணகிரியில் நடைபெற்ற "75ஆவது சுதந்திர திருநாள் அமுத பெருவிழா (STAP)விற்கு தமிழ்நாடு சுற்றுலாத்துறை வழங்கப்பட்டது.
- சென்னையில் நடைபெற்ற "TTF" (பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சி)இல் பங்கேற்பு.
- திருவள்ளூரில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் பங்கேற்பு.
- தேனி மாவட்டத்தில் நடைபெற்ற மங்கல தேவி கண்ணகி கோவில் திருவிழாவில் பங்கேற்பு.
- மதுரையில் நடைபெற்ற சித்திரை சுற்றுலா திருவிழா–2022"இல் பங்கேற்பு.
- சிவகங்கையில் நடைபெற்ற புத்தகத் திருவிழா–2022இல் பங்கேற்பு.
- சென்னையில் நடைபெற்ற "வாவ் தமிழ்நாடு விருதுகள்–2021"இல் பங்கேற்பு.
- மிதிவண்டி யோகிகளுடன் இணைந்து பாரம்பரிய தலங்களில் மிதிவண்டி பயணம்.

உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா விழாக்களில் பங்கேற்றல்

- இணைய வழி வாயிலாக 2ஆவது மெய்நிகர் கூட்டத்தில் "பயணம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்" என்ற நிகழ்வில் பங்கேற்பு.
- புதுதில்லியில் நடைபெற்ற "7ஆவது சர்வதேச சுற்றுலா மற்றும் பயண விருது" விழாவில் பங்கேற்பு.
- மாமல்லபுரத்தில் நடைபெற்ற "newindia.travel-setting the stage for next normal" நிகழ்வில் பங்கேற்பு.
- கொல்கத்தாவில் நடைபெற்ற "பயணம் மற்றும் சுற்றுலா கண்காட்சியில்" பங்கேற்பு.
- சென்னையில் நடைபெற்ற "உடல்நலம் மற்றும் பாரம்பரிய மருத்துவம் தென்னிந்திய மாநாட்டில்" பங்கேற்பு.
- சென்னையில் நடைபெற்ற "இந்தியச் சர்வதேச பயண சந்தையில்" பங்கேற்பு.
- மெக்சிகோ லியோன்நகரில் நடைபெற்ற "சர்வதேச பலூன் திருவிழாவில்" பங்கேற்பு.
- புதுதில்லியில் நடைபெற்ற இந்தியா டுடே டூரிசம் கான்க்ளேவ் & விருதுகள் 2021இல் தமிழ்நாடு சுற்றுலாத்துறை மூன்று விருதுகளைப் பெற்றது. சிறந்த மலைத்தொடர் விருதை நீலகிரி மாவட்டம் குன்னூரும், இயற்கையான சாலைக்கான விருதை நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையும் பெற்றது.
- புதுதில்லியில் நடைபெற்ற "இந்தியச் சர்வதேச வர்த்தக கண்காட்சியில்" பங்கேற்பு.
- புனேயில் நடைபெற்ற "இந்தியச் சர்வதேச பயண சந்தையில்" பங்கேற்பு.
- ஜெய்ப்பூரில் நடைபெற்ற "இந்தியப் பயண சந்தையில்" பங்கேற்பு.
- துபாய் கண்காட்சியில் பங்கேற்று, மாநிலத்தின் சுற்றுலாத்தலங்கள் மற்றும் அனுபவங்களைக் கருத்துக்களின் வடிவமாக வீடியோக்களாகக் காட்சிப்படுத்தல்,
- கோவளத்தில் உள்ள சர்ப்டர்ப்–இல் நடைபெற்ற "கோவலாங் கிளாசிக் 2021" விழாவிற்கு நிதியுதவி.
- "வாவ் தமிழ்நாடு 2022" இணையவழி புகைப்படக் கண்காட்சிக்கு நிதியுதவி.
- உலக சுற்றுலா தின விழாவினை இணைய வழியில் கொண்டாட நிதி ஒதுக்கீடு.

- வேலூரில் நடைபெற்ற "75 ஆவது சுதந்திர திருநாள் அமுத பெருவிழாவிற்கு" நிதியுதவி.
- மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா கொண்டாட்டம்.
- துபாயில் நடைபெற்ற "உலக பொருட்காட்சி 2020"இல் பங்கேற்பு.
- குமாரபாளையத்தில் நடைபெற்ற "ஜல்லிக்கட்டு" திருவிழாவிற்கு நிதியுதவி.
- திருப்பத்தூர் மாவட்டம் பாச்சல் கிராமத்தில் நடைபெற்ற "குடியரசு தின விழாவிற்கு" நிதியுதவி.
- சென்னையில் நடைபெற்ற "கீழடி தொல்லியல் கண்காட்சிக்கு" நிதியுதவி.
- சென்னையில் நடைபெற்ற "சென்னை இரண்டு மாத புகைப்படக் கண்காட்சி 2021"க்கு நிதியுதவி.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

- ஓட்டல் தமிழ்நாடு இராணிப்பேட்டையில் ரூ.28.80 இலட்சம் மதிப்பீட்டில் 8 அறைகள்.
- ஓட்டல் தமிழ்நாடு மதுரை – II இல் ரூ.25.10 இலட்சம் மதிப்பீட்டில் மதுபானகூடம் மற்றும் கழிப்பிடம்.
- படகு குழாம் ஏற்காட்டில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் ஆகாயத் தாமரைகள் அப்புறப்படுத்துதல்.
- ஓட்டல் தமிழ்நாடு கோயம்புத்தூரில் ரூ.10.25 இலட்சம் மதிப்பீட்டில் 11 அறைகள்.
- படகு குழாம்பை காராவிற்கு ரூ.20.68 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு 4 இருக்கைகள் கொண்ட அதிவேக படகு.
- படகு குழாம் பைக்காராவிற்கு ரூ.34.55 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு 60 HP அவுட்போர்டு மோட்டர் (OBM) மற்றும் பத்து 9.9 HP அவுட்போர்டுமோட்டர் (OBM) வாங்கப்பட்டது.
- படகு குழாம் வாலாங்குளத்திற்கு ரூ.31.92 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வகையான படகுகள், அவுட்போர்டு மோட்டர் மற்றும் உயிர்காக்கும் உபகரணங்கள்.
- படகு குழாம் முட்டுக்காடு, முதலியார் குப்பம் மற்றும் கொடைக்கானலுக்கு ரூ.4.42 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வகையான படகுகள்.
- படகு குழாம் ஏற்காட்டிற்கு ரூ.9.68 இலட்சம் மதிப்பீட்டில் 2 மற்றும் 4 இருக்கைகள் கொண்ட பத்து மிதிபடகுகள்.
- 22 ஓட்டல்கள் மற்றும் அனைத்துச் சுற்றுலாக்களை ஆன்லைனில் பதிவு செய்யும் சேவை மூலம் ரூ.11.68 கோடி வருவாய்.
- ஆன்லைன் பயணதிரட்டிகள் (OTAs) மூலம் 2,032 முன்பதிவுகள் மற்றும் ரூ.70 இலட்சம் வருவாய் ஈட்டிப்பு.
- இக்கழகம் தனது இணையதளத்தை புதுப்பித்து, பயனாளிகளுக்கு எளிதில் பயன்படுத்த ஏதுவாக மாற்றியமைப்பு.
- இக்கழகம் தனது வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அனைத்து ஓட்டல்களில் ஒரு பின்னூட்ட செயல்முறை (Feedback mechanism) அமைப்பை நிறுவி, 540 வாடிக்கையாளர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டது.
- முப்பரிமாண தொழில்நுட்பங்களைக் கொண்டு தமிழகத்தில் உள்ள 5 யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலங்களுக்கு மெய்நிகர் (Virtual Reality) சுற்றுலாக்கள் உருவாக்கம்.
- இக்கழகம் தனது மின் ஆளுமை செயலை மேம்படுத்தப் புதிதாக Servers நிறுவி மேன்மைபடுத்தப்பட்டுள்ளது.
- இக்கழகம் தனது டிஜிட்டல் செயல்பாடுகளை முகநூல் பிரச்சாரத்தின் மூலம், சுற்றுலா நிகழ்வுகள் அனைத்தும் 46 இலட்சத்திற்கும் அதிகமான மக்களைச் சென்றடைந்துள்ளது.
- மதுரையிலிருந்து 5 புதிய சுற்றுலாக்கள் அறிமுகம்.
- 100 சதவிகிதம் திருப்பதி விரைவு தரிசன சேவையினை பயன்படுத்தி தினசரி திருப்பதி சுற்றுலா.
- சமூக ஊடகங்களான டிவிட்டர், முகநூல் ஆகியவற்றில் தொகுப்பு சுற்றுலா பற்றிய விளம்பரங்களை அதிக அளவில் இடம் பெற நடவடிக்கை.
- உலக சுற்றுலா தினம் 2021 அன்று, வரலாறு மற்றும் பாரம்பரியத்தை மையமாகக் கொண்டு பாரம்பரிய நடை பயணங்கள்.
- உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு ஆர்வமுள்ள மாற்றுத்திறனாளிகளின் புகைப்படத் திறனை மேம்படுத்தி மாநிலம் முழுவதும் பயணம் செய்ய ஊக்குவிக்க மாமல்லபுரத்தில் புகைப்படக் கலையை உள்ளடக்கிய சுற்றுலா.

❖ ❖ ❖



குடியரசு தின விழா அலங்கார ஊர்தியினை
மாவட்டங்களுக்கு அனுப்பி காட்சிப்படுத்த துவக்கி வைத்தபோது – 26.01.2022



குடியரசு தின விழா அலங்கார ஊர்தியினைப் பார்வையிடும்
மாணவ, மாணவியர்களுடன் செல்பி எடுத்துக்கொண்டபோது – 21.02.2022



மாண்புமிகு
ஆதிதிராவிடர் நலத்துறை
அமைச்சர்

திருமதி என்.கயல்விழி செல்வராஜ்

அவர்கள்

ஆதிதிராவிடர் நலன், மலைவாழ், பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

- வெளிநாடுகளில் உயர்கல்வி பயில விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் திட்டம் தற்போது 500 மாணவர்கள் TOEFL / IELTS / GRE / GMAT ஆகிய 4 தகுதித் தேர்வுகளில், தேர்ச்சி பெறுவதற்குப் பயிற்சி அளிக்கும் வகையிலும், தகுதித் தேர்வில் வெற்றி பெற்ற 10 மாணாக்கர் வெளிநாட்டில் உள்ள தாம் விரும்பும் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வியைத் தொடரவும் ஏதுவாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பெற்றோர் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.8 இலட்சமாக உயர்வு.
- முழுநேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் மறுசீரமைக்கப்பட்டு, ஊக்கத்தொகை ரூ.1,00,000 ஆகவும், பயன்பெறும் மாணாக்கர் எண்ணிக்கை 1,600 ஆகவும் உயர்வு.
- விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் சில்லறைச் செலவினம் இரு மடங்காக உயர்வு. பள்ளி மாணாக்கருக்கு ரூ.100 மற்றும் கல்லூரி மாணாக்கருக்கு ரூ.150 என உயர்த்தப்பட்டுள்ளது.





- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சட்டப் பூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களது முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் மாநில அளவிலான "தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம்" தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கம்.

- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோரைச் சமுதாயக் கண்ணோட்டத்துடன் அணுகி, முறையான நிவாரணம், வளமான எதிர்காலத்திற்கான உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வுப் பயிற்சிகள் "சமத்துவம் காண்போம்" என்கிற தலைப்பின்கீழ் காவல்துறை, வருவாய்த்துறை அலுவலர்களுக்கு வழங்க ஆணை. சாதி வேறுபாடற்ற மயானங்கள் பயன்பாட்டிலுள்ள 111 கிராமங்களுக்கு உட்கட்டமைப்பை மேம்படுத்த ஏதுவாக ஒரு கிராமத்திற்கு தலா ரூ.10 இலட்சம் அனுமதித்து அரசாணை.

- வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தீருதவித் தொகை குறைந்தபட்சம் ரூ.1இலட்சம் ஆகவும், அதிகபட்சம் ரூ.12 இலட்சம் ஆகவும் உயர்வு.

- ரூ.100 கோடி மதிப்பீட்டில், 150 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வகக் கட்டட கட்டுமானப் பணிகள்.

- ரூ.21.09 கோடியில் 39 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர்கள்.

- 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு, துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் மின் இணைப்பு பெறுவதற்கு 90 சதவிகிதம் மானியம் வழங்க ஏதுவாக ரூ.30.30 கோடி நிதியுதவி.

- ரூ.10.75 கோடி மதிப்பீட்டில், வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவியர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள்.

- ரூ.4 கோடி மதிப்பீட்டில், 13 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் சுற்றுச்சுவர்கள்.

- ரூ.4.50 கோடி மதிப்பீட்டில், 31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கழிப்பறைகள்.

- மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி ஒன்றிய அரசுத் திட்டத்திற்கு இணையாக உயர்வு.

- ரூ.2 கோடி மதிப்பீட்டில், விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மூன்று புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள்.



- விடுதி மாணாக்கருக்கு விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் பள்ளி மாணாக்கருக்கு ரூ.40 மற்றும் கல்லூரி மாணாக்கருக்கு ரூ.80 என இரண்டு மடங்காக உயர்வு.
- 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3 கோடி செலவில் நீர்ப்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்காக தலா ரூ.15,000 மானியம் வழங்க அனுமதி.
- 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.2 கோடி செலவில் புதிய மின் மோட்டார் வாங்க தலா ரூ.10,000 மானியம் வழங்க அனுமதி.
- ரூ.1.70 கோடி மதிப்பீட்டில், 5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் தோட்டக்கலை, வேளாண் காடுகள் (Agroforestry) நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள்.
- ரூ.2 கோடி மதிப்பீட்டில், 5,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த தொழில்முனைவோருக்குத் தொழில் மேலாண்மை பயிற்சிகள்.
- தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் ஏனைய நல வாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்வு.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 10,535 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு ரூ.328.50 கோடி வங்கி கடன். சிறுதொழில் தொடங்க ரூ.96.39 கோடி மானியம்.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில், ரூ.19.38 கோடி மதிப்பீட்டில், 443 வீடற்ற இருளர் இனப் பழங்குடியினருக்கு வீடுகள்.

❖ ❖ ❖



பருத்திப்பட்டு நரிக்குறவர் குடியிருப்பில் வரவேற்பு – 15.04.2022



பருத்திப்பட்டு நரிக்குறவர் வீட்டில் உணவருந்தல் – 15.04.2022